# திருமணமும் பிரிவினையும்

(நிக்கா‘ஹூம், ‘தலா:க்கும்)


“தாருல் இஸ்லாம்” ஆசிரியர்,

அல்ஹாஜ், பா. தாவூத்ஷா, பீ. ஏ.,

அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டது



ஷாஜஹான் புக் டெப்போ,

460, ஹைரோட், : : சென்னை–5

1951

*First Edition*—1951

விலை ரூ. 2—8—0

லாஹூர் மௌலானா மௌலவீ முஹம்மதலீ,
எம். ஏ., எல்எல். பீ., வரைந்துள்ள
"The Religion of Islam" என்னும்
ஆங்கில நூலின் ஒரு பகுதி

All Rights Reserved

M. I. P. PROJECT
Microfilmed

Kabeer Printing Works, Madras—5

بسم الله الرحمن الرحيم

## நூன்முகம்

இப் பூவுலகில் எத்தனையோ மொழிகள் பேசப்படுகின்றன; எத்தனையோ மொழிகள் எழுதப்படுகின்றன. அத்தனை பாஷைகள் அனுஷ்டானத்திலிருந்து வரும் ஒவ்வொரு நாட்டிலுமே முஸ்லிம்கள் வசித்துவருகிறார்கள். ஆனால், துரதிருஷ்டம் பிடித்த நந் தமிழ் நாட்டிலே வாழ்கிற கோடிக் கணக்கான முஸ்லிம்களைப் போன்று மிகவும் வருந்தத்தக்க வகையிலே மற்றை நாட்டு முஸ்லிம்கள் இருப்பார்க ளென்று எண்ண முடியாது. என்னெனின், வெவ்வேறு நாடுகளில் வசிக்கிற நம் முஸ்லிம் சகோதரர்கள் தங்கள் தங்கள் தாய் பாஷை எதுவோ அந்த மொழியில், பல அறிஞர்களால் வரையப்பட்டிருக்கும் இஸ்லா மார்க்க சம்பந்தமான நூல்களைப் படிக்க வழியிருக்கிறது; :குர்ஆனைத் தெரிந்துகொள்ள மொழிபெயர்ப்புக்க ளுள்ளன; மதவொழுக்க சம்பந்தமான சட்ட திட்டங்களைத் தெரிந்து நடக்க ஆராய்ச்சி நூல்கள் பரந்துள்ளன. ஆனால், நம் நாட்டிலுள்ள தமிழ் பேசும் முஸ்லிம்களுக்கு என்ன இருக்கிற தென்பதை நீங்கள் நன்கறிந்துகொண் டிருக்கிறீர்கள். தமிழ் நாட்டு முஸ்லிம்கள் வெறும் பெயரளவிலே முஸ்லிம்களாயிருப்பதற்கும், மதத்தின் ஏவல் என்ன? விலக்கல் என்ன? என்பதைத் தெரிந்து கொள்ள மார்க்கமே யில்லாமல் திணறி நிற்பதற்கும் இந்நாட்டிலே போதிய இஸ்லாமிய மார்க்க நூல்கள் — ஏன், சரியான தமிழ்மொழி பெயர்ப்புக் :குர்ஆனே கூட — இல்லாதிருப்ப தொன்றே காரணம் என்று சொல்வது மிகையாகாது.

சென்ற கால் நூற்றாண்டுக்கு முன்னே தமிழ்மட்டும் படிக்கத் தெரிந்த ஒரு முஸ்லிம் முக்கிய 'பர்லான கடமை யாகிய தொழுகையை எப்படி நிறைவேற்றிக் கொள்வ தென்று கூடத் தெரிந்து கொள்வதற்கு மார்க்கமில்லா திருந்தது என்பது மெய்யேயன்றோ? ஈமானை உறுதிப்படுத்துகிற கலிமாவின் அர்த்தமென்னவென்பதையுங் கூட அவர் அறிந்து கொள்வதற்கு வழியில்லா திருந்த தன்றோ? ஆனால், ஆண்டவன் உதவியைக் கொண்டு,

நந் தமிழ் நாட்டு முஸ்லிம்களுக்கு நல்ல அழகிய தமிழ் மொழியாகிய தாய் மொழியில் இஸ்லாத்தை எடுத்து விளக்கிக் காட்ட வேண்டுமென்னும் உறுதியை நாம் பெற்றோம். சிறுகச் சிறுக எம்மாலான வேலையையும் சென்ற முப்பதாண்டுகட்கு மேலாகவே, பொருளாதார இடையூற்றினூடேயும், எதிர்க் கக்ஷியினரின் அர்த்தமற்ற, மாற்சரிய மிக்க அசூயையினூடேயும் இத் தமிழ் நாட்டுக்கு ஆற்றிக்கொண்டேதான் வருகிறோம்; இப் பணியால் நந் தமிழ் முஸ்லிம் சோதரர்கள் முன்னைக் கிப்பொழுது நன்கு கண்திறந் திருக்கிறார்க ளென்பதையும் கண்டு வருகிறோம். எனினும், இந்த அணுக்குண்டு சகாப்தமாகிய இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நம் நாட்டில் எத்தனை முற்போக்கான முஸ்லிம் (தமிழ்) இலக்கியங்களும், இஸ்லாம் மத கிரந்தங்களும், ஆராய்ச்சி நூல்களும் மிகுந்திருக்க வேண்டுமோ அதில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட மக்களிடைப் பரத்தப்பட வில்லையே என்றுதான் கவலுறுகிறோம்.

நம் தமிழ் முஸ்லிம்களின் பரிதாப நிலைமையைப் பாருங்கள்! கட்டுக் கதைகளைப் படிக்கிறார்கள் ; காமத்தை யூக்கிவிடும் கயமையான கதைகளை ரசிக்கிறார்கள் ; அல்லது புளுகு மூட்டைகளான "கசசூலன்பிய்யா" போன்ற உதவாக்கரையான புஸ்தகங்களிலுள்ள வேடிக்கை விருத்தாந்தங்களைப் படித்து ருசிக்கிறார்கள். உண்மை இஸ்லாம் என்னவென்பதைத் தெரிந்துகொள்வதற்கோ, இஸ்லாம் என்றால் என்ன வென்பதைப் பிறருக்குத் தெரிவிக்க வேண்டுமே அதற்கென்ன செய்யலாம் என்று வழிதேடுவதற்கோ, அல்லது இஸ்லாத்தில் பிறந்த தானும், தான் மணந்து கொண்ட மனைவியும், பெற்ற பிள்ளையும் பின்பற்றுகிற மார்க்கத்தின் கடமை, வழிவகைகள், சட்ட திட்டங்கள் முதலியவை என்னவாகத்தா மிருக்கின்றன என்பதை அவசியம் தெரிந்துகொண்டு ஆக வேண்டுமே என்று கிஞ்சித்தேனும் கவலைப் படுவதற்கோ ஒரு சாதாரண முஸ்லிம் இன்று சிறிதாவது முற்படுவதாகக் கூற வழியில்லை. உதாரணமாக, ஒரு சாதாரண தமிழ் நாட்டு முஸ்லிமைப் பார்த்து, ஷஹாத'த் கலிமாவுக்கு என்ன தமிழர்த்தமென்று கேட்டுப் பாருங்கள் ; அநேகம் பேர்வழிகள் திருதிருவென்று விழிப்பதைத்தான் கண்டு கொள்வீர்கள். ஐங்காலத் தொழுகையிலும் திருப்பித் திருப்பி ஓதப்படுகிற "ஸூரெ 'பாத்தி'ஹா"வாகிய :குர்ஆனின் ஆரம்ப அத்தியாயத்துக்கு என்ன பொருள் என்று கேட்டுப் பாருங்கள். நூற்றுக் கணக்கான மக்கள் மௌனம் சாதிப்பதைக் காண்பீர்கள். வெகுதூரம் செல்வானேன்? எடுத்த எடுப்பில் சட்டென்று "அஸ்ஸலாமு அலைக்கும்!" என்று ஸலாம் சொல்லுகிற ஒரு முஸ்லிமின் கையைப் பிடித்துக் கொண்டு, "தம்பி, அதற்கு என்ன அர்த்தம்," என்று கேட்டுப் பாருங்கள்......அ'ப்ஸோஸ்!

இப்படிப்பட்ட பரிதாபகரமான நிலையில் நந் தமிழ் நாட்டு முஸ்லிம் சகோதரர்கள் வாழ்வதற்குக் காரணம் நாமாகவே இருக்கிறோம். ஏனென்றால், நம் மதத்தை, அதன் ஒழுங்கை, அதன் சட்ட திட்டங்களை என்னவென்று தெரிந்துகொள்ளவும், அப்படித் தெரிந்துகொண்டதைப் பிறருக்கு உபதேசிக்கவும் நம் நாட்டினர் இன்றும் போதுமான அபிருசியைப் பெற்றுக்கொள்ள வில்லை. ஏனென்றால், பொருளீட்டுவதற்கு என்னென்ன கல்வியைக் கற்றுக் கொண்டால் போதுமோ, அவ்வளவுடன் தன் பிள்ளை முழு ஈடேற்றத்தையும் பெற்றுவிட்டதாக ஒரு சாதாரணத் தமிழ் முஸ்லிம் தந்தை நினைக்கிறான். இஸ்லாத்தில் ஈடேற்றம் பெறுவதற்குத் தன் பிள்ளை :குர் ஆன் ஷரீஃப (ஓர் அர்த்தமும் தெரியாது, ஒன்றுமே புரிந்து கொள்ளாது) ஒரு முறை கிள்ளை போல் முற்றும் ஓதிவிட்டால், அதுவே போதும் என்று அவன் இருமாந்து விடுகிறான்.

வாலிப தசையை அச் சிறுவன் எட்டியதும், அவனுக்காக விவாகம் நடத்தப்படுகிறது. பெரிய பெரிய 'பிரியாணி' விருந்துகள் பரிமாறப் படுகின்றன; மிகமிக ஆடம்பரமான ஊர்வலம் எடுத்துச் செல்லப்படுகிறது; புஷ்பங்களினாலும், தோரணங்களினாலும் அலங்கரிக்கப் பட்டுள்ள திருமண மண்டபத்திலே மாப்பிள்ளை நா'ஜுக்காக அமர்த்தப்படுகிறார்; அங்கே வீற்றிருக்கும் :கா'ஜீயோ, பள்ளிவாசல் பேஷ் இமாமோ, அல்லது கல்யாணம் பண்ணிவைக்கும் "க'த்தீபோ" தம்முடைய டாம்பிகமான தொனியில் ஒருவருக்கும் விளங்காத மாதிரியில் "யா அய்யுஹன்னுஸாத்த:கூ..." என்று ஆரம்பித்து நெடுகவே ஓதிக் கொண்டு போகிறார். பிறகு கடைசியாக, "அல்லாஹும்ம அல்லி'பு பை'னஹுமா...!" என்று து'ஆ' ஓதத் தொடங்கியதும், எல்லாரும் "ஆமீன், ஆமீன்!" என்று கூறுகிறார்கள். அப்புறம் மற்றொரு பெரிய தடபுடலான விருந்து நடக்கிறது. பிறகு எல்லாரும் தத்தம் வீட்டுக்குப் போய் விடுகிறார்கள். 'இன்னாருக்கு விவாகம் நடந்து விட்டது' என்று விளம்பரமாகி விடுகிறது.

இப்படித் தினமொன்றுக்கு நம் நாட்டில் நடக்கிற பன்னூற்றுக் கணக்கான விவாகங்களில் என்ன நடந்தது? என்ன ஓதப்பட்டது? ஏன் ஓதப்பட்டது? என்னும் விவரங்கள் எத்தனை பேருக்கு, அல்லது அவ் விவாகமான மாப்பிள்ளை பெண்களுக்கேயும் தெரியுமென் றெண்ணுகின்றீர்கள்? 'ஏதோ இதுவுமொரு மர்மமான மூடுமந்திர ரகஸ்யம் போலும்!' என்று எண்ணுபவர் எத்தனை பேர்? "எல்லாம் பெரியவர்கள் வகுத்த திட்டம். இதை அப்படியே பின்பற்ற வேண்டியதுதான் நம்முடைய கடமை. ஏனென்று கேட்பதற்கோ, என்னவென்று கேட்பதற்கோ நமக்கு உரிமை ஏது?" என்று கருதுபவர் எத்தனைபேர்? அல்லது இவை

எல்லாமே ஒரு வேடிக்கை மிக்க பொழுது போக்குத் தமாஷா என்று நினைப்பவர் எத்தனை பேர்? அல்லது ஒரு ஹிந்துவின் விவாகத்தை ஸம்ஸ்கிருத மந்திரமோதி சாஸ்திரி யொருவர் நடத்துவது போலவும், ஒரு ரோமன் கத்தோலிக் கிறிஸ்தவனின் விவாகத்தை லத்தீன் மந்திரமோதிப் பாதிரி யொருவர் நடத்துவது போலவும், இந்த முஸ்லிமின் விவாகத்தை அரபு மந்திரமோதி, க'த்தீப்' சாஹிப் ஒருவர் நடத்தியிருக்கிறார் என்று தமக்குள்ளே முடிவு செய்துகொள்ளும் அறியாதவர்கள் எத்தனை பேர்?

இச் சிறு நூல் அத்தகைய அறியாத மக்களுக் கொரு கண் திறக்கும் கருவியாகவே அமைந்திருக்கிறது. இஸ்லாத்தின் விவாக பந்தம் என்பது ஒரு முதற்றர ஸிவில் ஒப்பந்தமாக இருக் கிற தென்பதை மிகவும் துலக்கமாய் விளக்குவிக்கும் தூண்டு கோலாகவே இது திகழ்கிறது. விவாகத்தால் பிணைக்கப்படும் ஒரு கணவனும் ஒரு மனைவியும் என்னென்ன சட்ட திட்டங் களுக்கு உட்பட்டுப் பிணைக்கப்படுகிறார்க ளென்பதை இச் சிறு நூல் விளக்கிக் காட்டுகிறது. அன்றியும், இஸ்லாத்தின் திருமணச் சட்டங்களை மிக நன்றாய்த் தெரிந்துகொண் டிருப்பதாகக் கூறிக் கொள்பவர்கள் கூட இந் நூலிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் மிகவு மிருக்கிறது.

அடுத்தபடியாக, ஒவ்வொரு முஸ்லிமுக்கும்— ஆணுக்கும் பெண்ணுக்கும் அந்த விவாகம் என்னென்ன ஏவல்களையும், விலக்கல்களையும் உண்டுபண்ணி வைக்கிற தென்பதும் விளக்க மாகக் கூறப்பட் டுள்ளது. எவ்வெச் சந்தர்ப்பத்தில் மட்டும் ஒருவன் ஏக காலத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியை மணக்கலா மென்பதைத் துலக்கிக் காண்பிப்பதுடன், இஸ்லாத் தின் தூய நாமத்துக்கு இழுக்கைத் தேடித்தருகிற "வெள்ளாட்டி" விஷயத்தையும் ஆதார பூர்வமாக அலசி விடுகிறது.

அப்பால், விவாகமான தம்பதிகள் தங்களுக்குள் ஒத்துப் போகாமலே இருந்துவிட்டால், அவர்களுடைய ஸிவில் ஒப்பந்தம் எவ்வெத் திட்டங்களுக் குட்பட்டுத் தறிக்கப்படுகிறது? என்னும் நுணுக்கமான விஷயம் அலசிக் காட்டப்பட் டுள்ளது. நம் முஸ்லிம்களுக் கிடையே திருமணத்தைப் பற்றி எவ்வளவு அறியாமை சூழ்ந்து கிடக்கிறதோ, அதனினும் மிகப் பெருத்த அளவுக்கே 'தலா:க்கைப் பற்றிய பேரறியாமை அவர்களிடைத் திகழ்ந்து வருகிறது. இந் நூலின் நோக்கம் அத்தகைய அறி யாமைகளை அடியுடன் அகற்றுவதாகவும், இஸ்லாத்தின் இனிய, பகுத்தறிவுக்குப் பொருத்தமான, எல்லாக் காலத்துக்கும், எல்லாத் தேசத்துக்கும், எல்லா ஜாதிக்கும், எல்லா இனத்துக்கும், எல்லாச் சூழ்நிலைக்கும் முற்ற முற்றப் பொருத்தமான வகையில் அமைந்து கிடக்கும் இஸ்லாத்தின் இயற்கைத் தன்மைகளை நன் கெடுத்துப் போதிப்பதாகவும் இருக்கின்றது. விவாக மென்பது

எப்படிப்பட்ட தென்னும் ஆழிய கருத்தையும், 'தலா:க் கென்பது எவருக்கு, எச் சந்தர்ப்பத்துக்கு, எவ்வெச் சட்ட திட்டத்துக்குக் கட்டுப்பட்ட இறுதிச் சஞ்சீவியாக இறைவனால் வேண்டா வெறுப் புடனே நிர்ணயிக்கப்பட் டிருக்கிற தென்னும் உண்மையையும் தக்க ஆதாரங்களுடனும், மேற்கோள்களுடனும் நாம் இனிது விளக்கிக் காட்டியுள்ளோம்.

இந் நூல், ஆங்கிலத்திலே லாஹூரேர் மௌலானா முஹம்மதலீ, எம். ஏ., எல்எல். பீ., வரைந்துள்ள, பெயர்போன பெரிய கிரந்தமாகிய "The Religion of Islam" என்னும் ஆதார பூர்வமான அழகிய கிரந்தத்திலுள்ள ஒரு சிறு பகுதியாகும். அந்த ஆங்கில நூலிலே இஸ்லாத்தின் சகல சட்ட திட்ட நுணுக் கங்களும் மிக அழகாகவும், பரிபூரணமாகவும், பிற மதத் தினர்க்கும் முஸ்லிம்களுக்கும் ஐயந்திரிபு மயக்கமின்றி நன்கு விளக்கித்துலக்கும் விதமாகவும் சாங்கோபாங்கமாக விஸ்தரிக்கப் பட் டுள்ளன. அப்பெரிய நூலை அப்படியே மொழி பெயர்த்துப் பிரம்மாண்டமான ஒரே கிரந்தமாகத் தமிழ் நாட்டிலே ஏக காலத் தில் வெளியிடுவதற்குப் போதிய முதலு மில்லை; மக்கள் வாங்கிப் படிக்கக்கூடிய விதத்தில் சிக்கனமாக அதற்கு விலை நிர்ணயிக் கவும் வழியில்லை. எனவே, சிறுகச் சிறுக இந்தத் "திருமண மும் பிரிவினையும்" என்னும் நூலைப்போல ஒவ்வொரு விஷயத் தையும் சிறு சிறு நூலாக (இறையருளைத் துணைக்கொண்டு) அச் சிட்டு வெளிப்படுத்தலா மென்று துணிந் திருக்கிறோம்.

இச் சிறு நூலை அச்சிடுதற்குப் பொருளுதவியாக எம் அன்ப ரும், இஸ்லாத்தில் இணையற்ற பற்றுக்கொண்டு தம்மாலான உதவியை ஆண்டவன் பாதையில் செலவிட்டு வருபவரும், திருவனந்தபுரத்தி லுள்ள "மரைக்காயர் லிமிட்டெட்" என்னும் மோட்டார்கார் கம்பெனியின் மானேஜிங் டைரக்டருமாகிய ஆலீ ஜனாப் அப்துல் மஜீத் மரைக்காயர், எம். எல். ஏ., (திருவாங்கூர்) அவர்கள் கொடுத்துதவிய ஓராயிரம் ரூபாய்க்காக எம் மட்டற்ற நன்றிவிசுவாசத்தை அன்னார்க்குத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். ஆண்டவன் இன்னோரன்ன விசுவாசிகளை நல்ல விதத்தில் தூண்டி விட்டு, இவர்கள் பெற்ற செல்வத்துக்கு இப்படிப்பட்ட நல்வழியில் செலவுநேரப் பேருதவி புரிவானாக!

வயது முதிர்ந்த பருவத்திலே எம் தந்தை அல்ஹாஜ் பா. தாவூத்ஷா, பீ. ஏ., அவர்கள் அல்லு பகல் அனவரதமும் அமர்ந்து, தங்கள் கைப்படவே இந்த நூல் முழுதையும் மொழி பெயர்த்து எழுதிமுடித் திருக்கிறார்கள். இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியின் முதல் வருடமாகிய இந்த 1951-ஆம் ஆண்டு பிறந்ததும், இந்நூல் வெளிவந் திருக்கிறது. இதனை யடுத்துத் தொடர்ச்சியாக அந்த Religion of Islam என்னும் முத

னூலின் மற்றப் பகுதிகளும் அடுத்தடுத்து வெளிவர இறைவனே இன்னருள் பாலிப்பானாக! ஆமீன்!

இப்படிப்பட்ட அழகிய மார்க்க நூல்களை வாங்கிப் படித்து நற்பயனடைய நம் நாட்டு முஸ்லிம் சகோதர சகோதரிகட்கும் அவன் நல்லுணர்ச்சியையும், தாராள நோக்கத்தையும் நல்கியருள்வானாக!

மிகவும் குறுகிய காலத்துக்குள் இந்த நூலை மிக்க அழகாகவும், கவர்ச்சியாகவும், அச்சிட்டுதவிய சென்னைக் கபீர் பிரிண்டிங் வொர்க்ஸ் அச்சகத்தினர்க்கு எம் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

சென்னை–5
15—1—1951

இங்ஙனம் :
N. B. அப்துல் ஜப்பார், B.A.
(பொறுப்பாசிரியர், "தாருல் இஸ்லாம்")

---

## பொருளடக்கம்


| அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|
| நூன்முகம் | | iii |
| 1. இஸ்லாத்தில் இல்லறம் | ... | 1 |
| 2. இஸ்லாத்தில் திருமணம் | | |
| பிரிவு 1.— திருமணத்தின் தாத்பரியம் | ... | 28 |
| பிரிவு 2.— சட்ட சங்கடங்கள் | ... | 32 |
| பிரிவு 3.— திருமணத்தின் தினுசும் சட்ட சம்மதமும் | ... | 46 |
| 3. ஒருதார மணமும் பலதாரங் கொள்ளலும் | | |
| பகுதி 1.— ஒருதார மணவினை | ... | 61 |
| பகுதி 2.— பலதாரங் கொள்ளல் | ... | 81 |
| 4. அடிமைகளை மணத்தல் | ... | 92 |
| 5. இஸ்லாத்தில் 'தலா:க்—திருமண முடிவு | ... | 113 |
| விஷய சூசிகை | ... | 147 |

بسم الله الرحمن الرحيم

لا إله إلا الله محمد رسول الله

# திருமணமும் பிரிவினையும்

## அத்தியாயம்—1

## இஸ்லாத்தில் இல்லறம்

*இல்லற வாழ்க்கையே இஸ்லாமிய நாகரிகத்துக்கு அடிப்படை.*

"இல்லற மல்லது நல்லற மன்று." நல்ல விதமாயமைந்துள்ள மக்கள் சமுதாயத்திற்குப் பொருளாதார நோக்கம் எத்துணை அத்தியாவசியமாயிருக்கிறதோ, அத்துணைப் பெரிய அவசியமாயே யிருந்துவருகிறது, ஆண்-பெண் சார்பாயுள்ள ஒழுக்கத்தை ஒழுங்குடனே தீர்த்து வைக்க வேண்டுவதும். "இல்லம்" என்பதே மானிட சமுதாயத்தின் அடிப்படை யளவைக்கோலா யிருக்கிறது; சாதாரண சந்தர்ப்பங்களில், மானிட இனத்தின் சுக சவுகரிய இன்ப வாழ்க்கையின் முடிவான எல்லை யென்பது தனி மனிதர்களின் இல்லற வாழ்க்கையின் சவுக்கிய சுகவாழ்வையே சார்ந்ததாயிருக்கிறது; இல் வாழ்க்கையின் இன்ப வாழ்க்கையே மனித சமுதாயத்தின் நல் வாழ்க்கையையும் நாகரிகத்தையும் அளந்து காட்டவல்ல அளவைக்கருவியா யிருந்து வருகிறது. "மருவிய காதல் மனையாளும் தானும், இருவராய்ப் பூண்டீர்ப்பின் அல்லால்— ஒருவரால், இல் வாழ்க்கை யென்னும் இயல்புடைய வான்சகடம், செல்லாது

தெற்றிற்று நின்று,'' என்ருங்கு, கணவனும் மனைவியும் கலந்தொருமித்து, காதலுடன் இனிதுநடத்துவதே இல்லற மென்னும் நல்லற மாதலின், அவர்கட்குரிய அந்தஸ்தும் அழகிய கூட்டரவும் இன்ன இன்ன வெனச் செவ்விதா யறிந் துணர்வதன்மீதே இல்லத்தின் சந்துஷ்டியும் ஸ்திர வாசமும் சார்ந்து நிற்கின்றன.

பெண்மணிகளின் உண்மையான உயர்வு இன்னதுதா னென்பதை அறிந்துணர ஆண்க ளினம் நெடு நெடுங் காலத்தையே எடுத்துக்கொண் டிருக்கிறது. மிகப்பெரு நெடுங்காலமாயே நாரிமணிகள் அடிமைகளாக, அவரவர் கணவரின் சொந்தச் சொத்தாக— அக் கணவருக்குச் சரி சமானமுள்ள உடன்கூட்டாளிகளாக வல்ல—நடத்தப்பட்டு வந்தார்கள். '' ஆள் '' எனப்படுதற் குரிய அந்தஸ்துடைய ஒருவர் தம் சொந்தச் சொத்தைத் தங் கைவயம் வைத்துக் கொண்டிருக்க அருகதை (உரிமை) வாய்ந்தவரா யிருத்தல் வேண்டும்; ஆனுல், பண்டைக்காலப் பெண்மணிகள் தங்கள் பெயரால் சொந்தச் சொத்து வைத்திருப்பதோ, வேறேதும் சொந்தத்தில் தங்கள் பெயரால் தொழில் நடத்து வதோ, கூடாத காரியமெனக் கடிதாய்க் கருதப்பட்டு வந்தது; எனவே, '' ஆள் '' என்று அழகுடன் அழைக்கப் படுதற்கே அந்தப் பெண்மணிகள் அருகதை பெற்றவர்களா யிருந்தது கிடையாது. அவள் மகளே யாயினும், மனைவி யே யாயினும், மாதாவே யாயினுங்கூட உரிமையென்பதை ஒருசிறிதும் எதிர்பார்ப்பது கனவிலும்கூடாது. மகளா யிருக்கும் பொழுது அவள் தந்தையின் சொந்தச் சொத்து; மனைவியா யிருக்குங்கால், கணவனுடைய சொந்தச் சொத்து; மாதாவா யிருக்க நேர்ந்தால், தனையனுடைய தனியுடைமை. மனித சமுதாயத்தின் சரிபாதி—இனி யொரு பாதியாகிய ஆண்களையெல்லாம் பெற்றுவளர்த்துப் பெயரிட்டுவிடும் அருமை மாதாக்களாகிய ஒருபாதியினம்— அவ்வாறு அடிமை யபலைகளாக நடாத்தப்பட்டு, மூலையிலே ஒதுக்கி முடக்கித் தள்ளப்பட்டுக் கிடந்தார்கள். பண்டைக் கால முதலே அவ் வனிதாமணிகள் அவ்வாறு இவ்வுலக இலவ்கிகப் பொருள்களைப் பெறவே அருகதை யற்றுக் கிடந்தக்கால், அவர்கள் எங்ஙனம் வைதிக, இல்லை, பார மார்த்திக ஆத்ம ஞானம் பெற அருகதை வாய்ந்தவர் களென மதிக்கப்பட் டிருத்தல் கூடும்? ஆண்கள் ஆத்ம

ஞானத் துறையில் அபிவிருத்தி யடையப் பெண்(பிசாசு)களை மணப்பதென்பதே ஒரு பெருந் தடையாய்க் கருதப் பட்டு வந்தது ; இந்திய ஹிந்து, பவுத்த, ஜைன மதங்களிருக்கட்டும் ; கிறிஸ்துமதங் கூட இப்படித்தான் பெண் மணிகளைக் குறித்து எண்ணி யிருக்கிறது. (பெண்கள் பேயினுங் கேடே !)

கிறிஸ்து மதத்தின் பிடி அம் மதத்தினரை விட்டுத் தளர்வடைந்து போகப் போக, ஆங்கெல்லாம் உலகாயத நாகரிகம் அபிவிருத்தி யடைய வடைய, அம் மதமாதர்கள் சென்ற நூற்றுண்டிலே தங்க ளுரிமைகளுக்காகக் கிளர்ச்சி செய்யத் துவக்கினுர்கள் ; இதில் அவர்கள் ஓரளவு வெற்றியும் பெற்றுர்கள். ஆனுல், இலவ்கிக வாழ்க்கையில் இத் தகைய வெற்றியைச் சிறிதே பெற்றிடினும், இதற்கு மாருக அவர்களுடைய இல்லற வாழ்க்கையிலும் இதற்குரிய குடும்ப ஒற்றுமையிலும் சந்துஷ்டி யென்பது எள்ளத் துணையும் இல்லாமலே ஒழிந்துபோய் மறைந்துவிட் டிருப்பது கண்கூடு. உலகாயத மென்பது (materialism) வந்து, மதப்பிடியை மனிதனுள்ளத்தி னின்று அறவே அறுத்து விட்ட தென்னலாம். இன்னம், ஆண்-பெண் கூட்டரவு சம்பந்தமாய் மிகவுங் கயமையான எண்ணங் களையே அது கொண்டு வந்து குடும்பத் துள்ளே புகுத்திவிட் டிருக்கிறது. இதனுல் விளைந்துள்ள பயன் யாது? ஐரோப்பாவான து மேலுமேலும் "சுதந்தரக் காதலின் பக்கல்" சாயத் துவக்கிக் கொண்ட தென்னலாம் ; திரு மணமென்பது வரவர வெறுத்து ஒதுக்கப்பட்டு விட்டது. இதற்குக் காரணம் அத்திருமணத்தில் இயற்கையா யமைந் துள்ள குற்றங்குறை யென்று கூறுதற் கில்லை ; ஆயின், "இல்லற" தர்மத்தை ஒழுங்குடன் நடத்த, விவாகம் புரிந்து கொள்ளும் சதிபதியிருவரும் மேற்கொள்ள வேண் டிய கடமைகள் (சுமைகள்) ஒருசில உண்டே யென்று கண்டு, திகில் கொண்டு விடுகிறுர்கள். உயிர் வாழ்க் கையைக் குறித்து உலகாயத (materialistic) நோக்கமே கொண்டு விடுவதால், மனிதன் சுயநய ஆசையே உருக் கொண்ட ஒரு மிருகமாய் மாறி விடுகிறுன். இவன் எல்லா வித அபிலாஷைகளையும் ஆண்டனுபவிக்க ஆர்வங் கொள் கிறுன் ; ஆனுல், உயிர்வாழ்க்கைக் குரிய ஒரு சில பொறுப் புக்களை மட்டும் ஏற்றுக் கொள்ள மறுத்து விடுகிறுன் ;

ஏனென்றால், இவன் இக் குவலயத்தே எக்கவலையு மற்று எதேச்சையாய்த் திரிய ஆசைப்படுகிறான் ; மீசை நனையாமலே கூழைக் குடிக்க விரும்புகிறான். இல்லற வாழ்க்கையில் விவாகமும் விளையாட்டும் நிறைய மலிந்து கிடப்பதே போல், சுகமும் துக்கமுங் கூட நிறைந்தே காணப்பட்டு வருகின்றன. குடும்ப வாழ்க்கை யென்பது கணவன்-மனைவியருக் கிடையேயுள்ள பரஸ்பரக்காதலைப் பலப்படுத்தி வைப்பதுடனே,— இதனால் இவர்களுடைய ஆனந்த பரவசம் அதிகரித்தே பெருக்கெடுத்து வருகிறது,— சதிபதிகளிருவரும் ஒருவர் சுக துக்கத்தை மற்றொருவர் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்றும் கட்டாயப் படுத்தி வைக்கிறது. ஆனால், " சுதந்தரக் காதல் " என்பது ஒருவனை முழுக்க முழுக்கச் சுயநயமிக்க உருவினனாகவே சமைத்து வைத்து விடுகிறது ; என்னெனின், " சுதந்தரக் காதல் " சுகத்தில், ஆனந்தத்தில் மட்டுமே ஒருவருடன் இனி யொருவரைக் கலந்துநின்று பங்குபெறச் செய்துவைத்து, ஏனைத் துக்க காலத்திலும் துயர வேளையிலும் ஒருவரை யொருவர் பொருட்படுத்தாது, சிறிதும் சிந்தனை செய்யாது, தனித் தனியே அவரவர் வழியே அவ் வாணையும் பெண்ணையும் எதேச்சையாய்ப் பிரிந்து போய்விடச் செய்து விடுகிறது. அப்பால் ஒற்றுமையே யில்லை ; ஒன்றுமே யில்லை.

இஸ்லாமிலே பெண்டுகள் எதேச்சா ஸ்திரீகளே.

இஸ்லாத்தின் சமுதாய ஏற்பாடு, ஆண்பால்-பெண்பால்களுக் கிடையே யுள்ள சம்பந்தா சம்பந்தத்தைச் சீர்திருத்தி, ஒருபுதிய புரட்சியையே கொண்டு வந்து புகுத்திவிட்ட தெனல் வேண்டும். பெண்மணிகள் சுயேச்சைப் "பேர்வழிகளே" யென்றும் சொந்தச் சொத்தைத் தங் கைவயம் சுயமே வைத்துக் கொள்ளவும், தாம் விரும்பியபடி அதனை வினியோகிக்கவும் சகல சட்ட உரிமையும் பெற்றுளாரென்றும் கூறுவது கொண்டு, இஸ்லாம் இவர்க ளந்தஸ்திற் குரிய அஸ்தி பாரத்தைப் பலப்படுத்தியே ஆரம்பித்த தெனல் வேண்டும். இவ்விஷயத்தில் பெண்பாலார் எல்லாக்காரியத்திலும் ஆண்பாலார்க்குச் சரிநிகர் சமானர்களாகவே யிருந்து வருகிறார்கள். பெண்கள் ஆண்களுக்குச் சொந்தமான பண்டங்களாய், இல்லை, பாண்டங்களாய் இருந்த காலம் மலையேறிப் போய், அவர்களுக்குச் சமமான உடன்கூட்டாளிக ளாகவே

இவர்கள் உயர்ந்து விட்டார்கள்; முஸ்லிம் ஆடவரைப் போலவே முஸ்லிம் பெண்டிரும் சொத்தைச் சம்பாதிக்கவும், அதை வைத்துக்கொண் டிருக்கவும், செலவு செய்யவும் அருகதை வாய்ந்துள்ளார்கள். இவ்வாறு செய்து, இஸ் லாம் மன்பதையின் சரிபாதியா யுள்ளவர்களின் இருப்பு விலங்கைத் தறித்துவிட் டிருக்கிறது; எனவே, இதற்கு முன்னே ஆடவரின் கீழே என்றென்றும் அடிமைகளாய்க் கிடந்துழன்ற பெண்டி ரெல்லாரும் அவ்வடிமைத் தளையி னின்று முற்றும் விடுபட்டு, எவ்வாற்ருனும் அவ் வாட வருக்கு நிகரான உயரிய உடன் அந்தஸ்திற்கே ஊக்கிவிடப் பட்டு விட்டார்கள். இஸ்லாத்திலே புருஷர்களே போல ஸ்திரீகளும் செல்வம் திரட்டலாம்; தங்களுக்குப் பிடித்த மான நல்ல தொழிலைச் செய்யலாம்; அதற்குக் கிடைக்கும் ஊதியத்தையும் (இலாபத்தையும்) தாமே பெற்றுக் கொள்ள லாம். இவ்வாறு புரட்சி யேற்பட்டு, மாதரெல்லாம் மானிட இனத்தில் எதேச்சா ஸ்திரீகளே யென்னும் தத்துவம் இற் றைக்குப் பதின்மூன்று நூற்ருண்டுகட்கு முன்னரே நன்கு நிலைநிறுத்தப் பட்டது. இதற்குரிய வேதவாக்கியம் இதுவாகும் :

"ஆடவர்கள் தாங்கள் சம்பாதிப்பதன் இலாபங்களைத் தாங்களே யடைவார்கள்; பெண்டிரும் தாங்கள் சம்பாதிப் பதன் இலாபங்களைத் தாங்களே யடைவார்கள்" (4 : 32).

எனவே, இஸ்லாமிய ஆண்களே போல இஸ்லாமிய பெண்களும் செல்வம் சேகரிக்கலாம்; அதனைத் தாங்களே தங்கள் கைவயத்தில் வைத்துக்கொண் டிருக்கலாம். இவ்வுரிமையில் ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கு மிடையில் இஸ்லாம் எத்தகைய வேற்றுமையையும் ஏற்படுத்தியிருக்க வில்லை. இருபாலாரும் சொத்தைத் தத்தம் பெயரால் வாங்கலாம், விற்கலாம், வினியோகிக்கலாம். பெண்பிள்ளை யொருத்தி தன் சொந்தச் சொத்தை ஒருவருக்கு இனமாய்த் தானங் கொடுத்தால், அதனைக் கணவனை யுள்ளிட்ட எந்த ஆடவனும் குறுக்கிட்டுத் தடுத்து நிறுத்த உரிமை பெற் றில்லை; இல்லை.

"ஆனால், அவர்கள் (அப் பெண்மணிகள்) தாங்களா கவே அதினின்று ஒரு பகுதியை உங்களுக்கு ஈய விரும் பினால், அதுகாலை நீங்கள் அதனைத் திருப்தியுடனும் நல்ல

விதக் களிப்புடனும் புசிக்கக் கடவீர்கள், '' என்பது எமது திருமறை (4 : 4).

இச்சீர்திருத்தமே ஒரு பேரற்புதமா யிருந்துவருங்கால், இவ்வள வுடனே இஸ்லாம் திருப்தி யடைந்து நின்றுவிட வில்லை; அப்பாலும் முன்னேறிச் சென்று, ஆண்களைப் போலவே பெண்களும் வாரிஸ் கிரம முறைப்படி இறந் தோரின் ஆஸ்தியி லிருந்தும் பாகம் பெறலா மென்றும் இம் மார்க்கம் அனுமதியளித் துள்ளது. அக்கால அரப் நாட்டிலே ஒருதலைப் பக்ஷமான ஒரு குறுகிய மனப்பான்மை அனுஷ்டானத்தில் இருந்து வந்தது : பெண்கள் போர்க் களம் சென்று எதிரியை வெருட்டி யடிக்கக் கூடிய மாதிரியில் இயற்கையாய்ச் சிருஷ்டிக்கப்பட் டிராமையால், ஆண்களே அவ்வாறு ஆங்குச் சென்று வீரத்துடனே பகைவர்களை வென்று தங்கள் பெண்டு பிள்ளைகளைத் தற்காத்து நிறுத்தவல்ல உடல் வலிவுடனே படைக்கப் பட்டுள்ள காரணத்தால், தாங்கள் மட்டுமே தாதையர் சொத்துக்கு வாரிஸ்களாய் வரக்கூடு மென்று வாதித்து வந்தார்கள். ஆயின், சொத்துச் சம்பாதித்துச் சொந்தத் தில் வைத்துக் கொள்ளும் விஷயத்தில் ஆண்களுக்குப் பெண்கள் சரிநிகர்சமானரே யென்னும் உயரிய சித்தாந் தத்துடனே அடிப்படையிட்டு ஆரம்பித்த இஸ்லாம் அதன் முடியையும் — சிகரத்தையும் — அக் கட்டுக்கோப்பின்மீது ஏற்றி வைத்துப் பூர்த்தி செய்யாது, அரை குறையாய் அக் கட்டிடத்தை அவலமே மொட்டையாய் விட்டுவிடு மென்று எண்ணி யிருக்கின்றீர்கள் ? ஒருகாலும் அவ்வாறு அரை குறையாய் இம்மார்க்கம் இடையிலே விட்டுவிட மாட்டாது ; மாட்டாது. எனவேதான், இஸ்லாம் வாரிஸ் கிரம உரிமையிலும் பெண்மணிகட்கும் வீதம் உண்டென்று சட்டமியற்றி யுள்ளது. ஆடவரைப் போலே பெண்டிரும் சொத்துச் சேகரிக்கலாம், அதனைச் சேமித்து வைக்கலாம், அச்சொத்தை இப்பெண்டுகள் தங்களிஷ்டம்போலே தானாதி விக்கிரய வினியோகங்களுக்குப் பாத்தியப் படுத்தலாம் என்று ஏற்பட்டுவிட்ட பிறகு, இவர்கட்கும் அவர்களைப் போலச் செத்தோர் சொத்தினின்று பாகம் பெறுவது நியாயமும் உரிமையுந்தா மென இயம்பி யிருப்பது சரி தானே ! இது நியாயமுங் கூடத்தானே ! இதற்குரிய பொதுவிதி இவ்வாறு எழுதப்பட் டிருக்கிறது :

" ஆடவர்கள், தாய்தந்தையரும் நெருங்கிய உறவினர்களும் விட்டுச்செல்வதி னின்று ஒரு பாகம் பெறுவார்கள்; பெண்டிரும், தாய் தந்தையரும் நெருங்கிய உறவினர்களும் விட்டுச்செல்வதி னின்று ஒரு பாகம் பெறுவார்கள்" (:குர். 4 : 7).

இவ்வாருக வெல்லாம் இஸ்லாம் மாதர்களின் இலவ்கிக வாழ்க்கையில் ஒரு நூதனக் கிளர்ச்சியையும் புரட்சியையும் உண்டு பண்ணி விட்டதுடன் வாளா நின்று விடாது, அப்பாலும் மேலே சென்று, இவர்களுடைய வைதிக வாழ்க்கையிலும் எதிர்பாராத புரட்சியை யெல்லாம் ஏற்படுத்தி விட்டிருப்பது கண்கூடே. எனவே, பாரமார்த்திக மென்னும் வைதிக (ஆன்மிக) வாழ்க்கையிலும் ஆடவருக்குப் பெண்டிர் சரிநிகர் சமானர்க ளென்றே இஸ்லாத்தின் திருமறை இயம்பிக்கொண் டிருக்கிறது :

" உங்களுள் ளிருந்து ஒரு காரிய மியற்றுவானின்—(அவன் அல்லது அவள்) ஆணே யாயினும் பெண்ணே யாயினும்— காரியத்தை, உங்களுள்ளே ஒருவர் இனியொருவரிலிருந்து உண்டாயிருத்தலினுல், நான் (ஆண்டவன்) வீணுக்கமாட்டேன்" (3 : 194).

" மேலும், எவரொருவர், ஆணே யாயினும் பெண்ணே யாயினும், சற்கருமங்களைப் புரிந்தும், அன்னவர் ஒரு நன்னம்பிக்கை கொண்டவரா யிருந்தும் வருகிருரோ, அப்படிப்பட்டவர்கள் உத்யானவனத் துள்ளே உற்சாகத்துடனே நுழைவார்கள்" (40 : 40; 4 : 124).

" எவரொருவர், ஆணே யாயினும் பெண்ணே யா யினும், சற்கருமங்களைப் புரிந்தும், அன்னவர் ஒரு நன்னம்பிக்கை கொண்டவரா யிருந்தும் வருகிருரோ, அப்படிப்பட்டவரை நாம் சந்துஷ்டியான வாழ்க்கையை வாழச் செய்வோம்" (16 : 97).

இஸ்லாத்தின் திருமணம் மனிதனை ஒழுக்கத்தில் உயரச்செய்யும் உபாயமா யிருக்கிறது.

மாதர்கள் ஆண்டவனிடத் திருந்து, மனிதனுக்கு ஆண்டவனுல் அருளப்படும் மிகமிகப் பெரிய உயரிய அருட் கொடையாகிய **வஹீ** யென்னும் ஞான விளக்கத்தைக் கூடப் பெறுகிருர்களென்று :குர்ஆன்ஷரீ'ப் கூறியிருக்கிறது (3 : 41 ; 28 : 7).

ஆகவே, ஆணும் பெண்ணும் இஸ்லாத்திலே திரு மண முடித்துக் கொள்வது அவர்களுடைய ஆத்மிக வாழ்க்கையைத் தடை செய்வதா யமைந்தில்லை யென்பது வெள்ளிடை விலங்கல்; அதற்கு மாருக மாந்தரின் ஆத்மிக வாழ்க்கையை ஊக்கிவிடத் தக்க ஒருயரிய உபாயமாக, உதவியாகவே இத் திருமணம் இம் மார்க்கத்தில் இருந்து வருகிறது. ஆணும் பெண்ணு மாகிய ஜோடிகளை ஆண்டவன் சிருஷ்டி செய்கிருன், அவர்களுள் ஒரு பாலார் இனி யொரு பாலாரிடத்துப் பரஸ்பர "மனச்சாந்தி"யைப் பெற்று மகிழ்தற் கென்றே (:குர். 30 : 21). "ஸ்திரீகள் உங்க (புருஷர்க)ளுக்கு உடுத்தாடையேபோ லிருக்கிருர்கள்; நீங்களும் அவர்களுக்கு உடுத்தாடையேபோ லிருக்கிறீர் கள்" (2 : 187).

கணவனுக்கும் மனைவிக்கும் இடையிலுள்ள பரஸ்பரக் காதல்— க்ஷணசித்தத்தால் உந்தியெழும் மிருக இச்சை யன்று, ஆனல் ஆயுளுள்ளமட்டும் அருது நீடித்து நிற்கும் ஆழிய அழகிய தெய்விகக் காதல்— என்பதும், இதன் பயனுல் விளையும் குழந்தை வேண்டுமென விழையும் புத்திரவாத்ஸல்யமும் சேர்ந்து, மனிதன் மனிதனை—அவன் மானிடனு யிருக்கும் காரணத்தாலே— நேசித்த லென்னும் அன்பை அபிவிருத்தி யடையச் செய்து, அதியுச்சத்தை எய்திவிடச் செய்துவிடுகின்றன; இதன் பயனுக, மனிதன், "தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன்"ஞய்ச் செய்யப் பட்டு, பரநலமே தன்னலமென்று கருதுதற்குரிய அழகிய அந்தஸ்திற்கு உயர்ந்துவிடுகிருன். ஆணெருவன் பெண் ணெருத்தியின்பால் கொள்ளும் அபிமானமும், பெண் ணெருத்தி ஆணெருவன்பால் கொள்ளும் ஆர்வமும் இருவருக் கிடையே ஏற்படும் திருமண முடிச் சென்னும் உச்சத்திலேதான் வந்து முடிவுறுவனவா யமைந்து கிடக் கின்றன ; இத்தகைய பரஸ்பரக் காதல் அப்பால் தங்கள் குழந்தைகளின்மாட்டு அன்பாகவும், அதன் பிறகு உற்ருர் உறவினர்பா லெல்லாம் அருளாகவும், அதற்கு மேலே இறுதியாய் உலகமாந்தர்மாட் டெல்லாம் சுயநயமற்ற பரநய அபிமானமாகவும், சரிநிகர் சகோதர வாஞ்சை யாகவும்— உயர்ந்தோங்கத் துவங்கிக்கொள்கிறது. ஆகவே, ஊழியத்திற்கும் உவப்பிற்கும் இல்லற வாழ்க்கையே பழகு தற்குரிய ஒருயரிய பயிற்சிக்கூடமா யிருந்து வருவது

கண்கூடு. வீட்டிலே ஒருவன் தன் குடும்ப மக்களுக்காகப் பெரிதும் பாடுபட்டு ஒத்துழைக்கிறான்; இவ் வரும்பாட்டிலே இவனுக்கோர் ஆனந்தம் உதிக்கிறது. எனவே, இவனது உழைப்பும் உவப்பும் அப்பாலே வீட்டிற்கு வெளியிலும் மெல்ல மெல்லச் செல்லத் தலைப்படுகின்றன. அந்த அபி விருத்தி செவ்விதாய்ப் புறக்கண்ணுக்குப் புலப்படுவதும் வெளிப்படையே.

ஆகையால், திருமணமென்பது தீ'னுல் இஸ்லாத்தில் மானிடனது ஒழுக்கத்தை உன்னதத்திலே உயர்த்திவிடத் தக்க ஒருபாய மென்றும், இற்றைநா ளுலகிலே இதுகாலைப் பெருமையுடன்புகழப்பட்டுவரும் இருபெருங் குணவிசேஷங் களெனக் கருதப்படும் உழைப்பையும் உள்ள உவப்பையும் உயர்ந்தோங்கச் செய்யக்கூடிய உயரிய உபகரணமென்றும் கருதப்பட்டு வருகிறது. எனவேதான், இஸ்லாமியர் சமுதாயத்தில் மணவாழ்க்கை யென்பது ஓரோர் ஆணும் பெண்ணும் இயற்கையாகவே மேற்கொண் டொழுக வேண்டிய ஒரு சர்வசாதாரணக் கடமையா யிருக்கிறது. :குர்ஆன்ஷரீ'பும் துறவறத்தைத் தடுத்து, இல்லறத்தையே எல்லார்க்கும் சி'பாரிஷ் செய்கின்றது: "இன்னம், உங்களுள்ளே ஒன்றியா யிருப்பவருக்கு (எல்லாம்) திரு மணம் முடித்து வையுங்கள்" (24 : 32) என்பது அவ்வேத வாக்காம். ஒரு சில யுவர்கள் த'ர்வேஷ்— சன்யாச— வாழ்க் கையில் சார்ந்துவிட நாட்டங் கொண்டு துறவிகளாய்ப் போய்விட விழைந்து நின்றதைக் கண்ட நபிகள் திலகம் (சல்அ'ம்) "நான் மணம் புரிந்துள்ளேன்; எனவே, எனது வழியைத் தவிர்த்து வேறேதேனுமொரு வழியைப் பின்பற்றி நடப்பவன் என்னினத்திலே சேர்ந்தவ னல்லன்," என்று கண்டித்தார்கள் (பு'க'ாரீ 67 : 1). அப்பா லொருமுறை இவ் வாறும் அறைந்திருக்கிறார்கள்: "ஏ இளங்காளையர்களாய வாலிப மனிதர்களே! உங்களுள்ளே எவ னொருவனுக்கு ஒரு மனைவியை வைத்துப் பராமரிக்கச் சக்தியிருக்கிறதோ, அவன் மணமுடித்துக் கொள்ளக் கடவன்; என்னெனின், இது பார்வைகளைக் கீழ்நோக்கிக் கவிழ்த்துக் கொள்ளவும் கற்புநிலையைக் காப்பாற்றிக் கொள்ளவும் தலைசிறந்த உபா யமா யிருக்கிறது" (பு'க'ாரீ. 67 : 2). இனி யொரு நபி நாயக வாக்கியத்தின்படி, "மணமுடித்துக் கொள்ளும் மனிதன் தனது மதபக்தியிலே சரிபாதியைப் பூர்த்திசெய்து கொண்டவ னாகிறான்."

இஸ்லாமிய சமுதாய ஷரீஅ'த் சித்தாந்த பிரகாரம் திருமண மென்பது ஒரு "ஸிவில்" ஒப்பந்தமாயே யிருந்து வருகிறது (:குர். 4 : 21.) இருசாக்ஷிகள் முன்னே ஓராணும் ஒரு பெண்ணும் தமக் குள்ளே கணவனும் மனைவியுமாய் ஒழுகுவதாக ஒத்துக்கொண்டு, பரஸ்பர ஒற்றுமையால் ஒப்பந்தத்துட் புகுவதுதான் இஸ்லாமிய திருமணம். இதனாலும் ஏற்படுவது யாது கருத்தோ? ஓராணும் ஒரு பெண்ணும் தமக்குள்ளே சரிசமத்துவமா யிருந்து அவ் வொப்பந்தத்தை மனமார ஏற்றுக்கொள் வதால், அவர்களில்லத்திலே சரிசமத்துவக் கூட்டாளியாய் விடுகிறார்கள்; அவ்விருவரும் சமநிலையிலே நின்று, அவ ரவருக்கு முரிய உரிமைகளைப் பெற்றுக் கடமைகளை நிறை வேற்ற வேண்டிய சரிபங்காளிகளா யிருக்கிறார்கள்.* மானிடவாழ்க்கைக் கட்டுக்கோப்புக்குக் குடும்ப மென்பதே அடிப்படையா யிருந்து வருகின்றமையால், இத் திருமண ஒப்பந்தம் ஏனைச்சாதாரண ஒப்பந்தங்களைப் போன்றதா யிருக்கவில்லை யென்பது சரதம். இவ் வொப்பந்தம் இரகசி யத்திலே இருட்டிலே எழுதப்படாமல், பகிரங்கமாகவே பிரகா சத்தில் பிரகடனப் படுத்தப்படுதல் வேண்டும்; களவொழுக் கம் (வியபிசாரம்) அல்லாத பகிரங்க விவாகமே இதுவென்று எண்பித்துக் காட்ட அந்தப் பிரகடனம் அத்தியாவசியமா யிருக்கிறது (:குர். 4 : 24; 5 : 5). எனவே, ஒவ்வொரு திருமண ஒப்பந்தமும் கூடியமட்டும் பகிரங்கமாய்ப் பிரகடனப் படுத்தப்படுதல் வேண்டும்; அவசியமானால், "த"ப்'பக்" கொண்டுங்கூடக் கொட்டி முழக்கிப் பகிரங் கப் படுத்தலாம்; இவ் வொப்பந்தம் ஒரு பகிரங்க ஸ்தலத்

* திருமண ஒப்பந்தத்தைப் பகிரங்கமா யேற்றுக் கொண்டு விட்ட பின்னர், எந்த மாப்பிள்ளையும், எந்தப் பெண்ணும் தன் மனைவியை அல்லது கணவனைப் பார்த்து, "உன்னை நான் காதலித்துக் கலியாணம் பண்ணிக் கொள்ள வில்லையே!" என்று குறும்புத்தனமாய்க் கூறுவது இஸ்லாத்திலே கூடாது. கணவன் உயர்ந்தவ னென்றும், மனைவி தாழ்ந்தவ ளென்றும் கொள்ள இஸ்லாம் இடமளித்திலது. எனவே, மாப்பிள்ளை வீட்டார் மேலாயவர்க ளென்றும், பெண்வீட்டார் கீழாயவர்க ளென்றும் கூறுவது கூடாது. இவ்வாறு உயர்வு தாழ்வு கற்பிப் பது இஸ்லா மன்று. ஆணும் பெண்ணும் ஒரே ந'ப்ஸினின்றே உண்டுபண்ணப்பட் டிருப்பதாகவே நந் திருமறை நவின்று கொண் டிருக்கிறது (4 : 1).

திலே நிறைவேற்றப் படுதல் வேண்டும்: "இத் திருமணத்தைப் பகிரங்கப் படுத்துங்கள்; மஸ்ஜிதி'லே இதனைச் செய்து முடியுங்கள்; மேலும், த''ப்ஃ'பக் கொட்டுங்கள் அதற்காக," என்பது ந. நா. வாக்கியம் (பு'க'ரீ).

திருமண மென்பது பகிரங்கமாய்ப் பிரகடனப்படுத்தப் படுவதுடனே, இவ் வொப்பந்தம் தொடங்கு முன்னே ஒரு சிறு மதபோத பிரசங்கத்தால் புனித கவுரவமும் இதற்கு அளிக்கப் படுகிறது. இதில் :குர்ஆன் ஷரீ'பிலிருந்து சிற்சில திருவாக்கியங்கள் (3: 101 ; 4 : 1; 33 : 70, 71) சேர்த்து ஓதப்படுகின்றன. இவற்றி லெல்லாம் கணவன்-மனைவிக் குரிய இனியகடமைகளும் அரியஉரிமைகளும் எடுத்தோதப் படுவதுடனே, எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு முக்கிய மத்திய விஷயமும் எடுத்தியம்பப் படுகிறது; அஃதாவது, எல்லாருக்கும் மேலாக **அல்லா(ஹ்) ஒருவன்** இருக்கிறு னென்றும், கணவனும் மனைவியும் தங்கள் கடமைகளிலும் உரிமைகளிலும் அந்த எல்லாம் வல்ல அல்லா(ஹ்)வுக்கே உத்தரங்கூறக் கட்டுப்பட்டுள்ளார்க ளென்றும் அறிவுறுத்தப் பெறுகிருர்கள். எனவே, இந்தத் திருமண ஒப்பந்தம் இலேசாய் மதிக்கப்படுவது கூடாததா யிருக்கிறது. திருமண தம்பதிகள் பெறும் ஒவ்வோர் உரிமையும், அவ்விருவரும் ஒருவருக் கொருவர் காட்ட்வேண்டிய கடமையும் ஆண்டவனுலே யிடப்பட்ட கட்டளைகளெனக் கொள்ளப் படுதல் வேண்டும். எனவே, விவாக மென்பது வெறுஞ் சிறு பிள்ளையின் "பொம்மைக் கலியாண" விளையாட் டன்று. இறைவனுடைய சட்டம் இங்குள்ள ஏனையெல்லா ஸர்க்கார் சட்டங்களினும் மிகவும் மேற்பட்டனவாயே யிருந்து வருகின்றன. இன்னம், திருமண வேளையிலே ஆண் பிள்ளை பெண் பிள்ளைக்கு ஒரு கலியாணக் கட்டணம்— **மஹ்ர்**— கொடுக்க வேண்டியவனு யிருக்கிருன்;* இவ்வாறு கொடுக்கப்படும் "மஹ்ர்" மனைவியை அதுகாலை ஒருவித சொத்துக்குச் சொந்தக்காரியாய்ச் செய்துவிடுவது கண் கூடு; இதனுல் விளக்கமாவது யாது? ஒரு மணமகள் இந்த மஹ்ரை ஏற்றுத் தன் மணமகனுக்கு மனைவியா யமைந்துவிடுவது கொண்டு, தனக்குள்ள தனித்தியங்கும்

---

* "மஹ்ரை"— "முலைவிலை", அல்லது "உழுகூலி" என்று இயம்பத்துணிவது அறியாமையே யாகும். (பா. தா.)

உரிமையை ஒரு சிறிதும் இழந்துவிடாது, தன் கணவனுடனே தானுமொரு சரியான சமக்கூட்டாளியா யுயர்ந்தெழுந்து விடுகிருள்.

இஸ்லாத்தில் மனைவிக்குரிய தனித்தியங்கும் தன்மை.

இஸ்லாமிய சமுதாயத்தில் ஒரு பெண் ஓர் ஆணை மணப்பதால், தனக்குரிய தனித்தன்மையை இழந்து விடுவது கிடையாது.* இஸ்லாத்தில், மனைவியாகிறவள் தனக்கு அதற்கு முன்னேயிருந்த அனைத் துரிமைகளுடனே இப்பால் புதிய பல உரிமைகளையும் பெற்றுக் கொண்டு விடுகிருள்; இவற்றுடனே புதிய பொறுப்புக்களையும் பெற்று விடுகிருள்: "அவர்கள் (மனைவிமார்) ஒரு நீதமான முறையிலே தாங்கள் (செலுத்தவேண்டிய) கடமைகளைப் போன்ற உரிமைகளைப் பெற்றுக்கொண் டிருக்கிருர்கள்" (: குர். 2 : 228). இதற்கு வேண்டிய விரிவான பொதுவிதி 'ஹதீ':து ஷரீ'பிலே காணப்படாநின்றது: "உங்களுள்ளே ஓரொருவரும் ஓர் ஆட்சிக் குரியவரே; மேலும், ஓரொருவரும் தமது பாதுகாவலில் ஒப்படைக்கப் பட்டவர்களைக் குறித்து வினவப் பெறுவார்; அரச ஞெருவன் ஓர் ஆட்சிக் குரியவனே; இன்னம், ஆடவ ஞெருவன் தன்வீட்டு மக்கள்மீது ஆட்சி புரியக் கூடியவனே; மேலும் பெண்பிள்ளையும் தன் கணவனது இல்லத்தின் மீதும், அவனுடைய குழந்தைகள் மீதும் ஆட்சிசெலுத்தக் கூடியவளே" (பு'க'ா. 67 : 91). மானிட இனமென்னும் மாபெருங் குழுவிலே 'இல்லம்' என்பதே ஆரம்ப அளவைத்திட்டமா யமைந்து கிடக்கிற தென்ருேம். விரிவான மானிட சமுதாயத்திலே முடிவான அதிகாரம் ஒரு தலைவரிடத்தே— அவரது கைவயமே— இருந்துவருவதே போன்று, சிறிதாய இல்லத்திலும் முடிவான அதிகாரம் ஒரு தலைமனித னிடத்தேதான் இருந்து வருதல் வேண்டும். குடும்பத்தலைவன் "தன் வீட்டு மக்கள்மீது ஆட்சிபுரியக் கூடியவ"ஞ யிருக்கிருனென்று வருணிக்கப்பட்டுள்ளான்; அப்பால் அவனுடைய

---

* லூயியை மேரி மணந்து கொண்டால், அம் மேரி மிஸஸ் லூயியாக மாறிவிடுவாள்; ஆனால், ஆ'யிஷா அ'ப்'து'ல்லாவை மணந்தால், மிஸஸ் அ'ப்'து'ல்லாவாக மாறிவிட மாட்டாள். (பா. தா.)

இல்லக் கிழத்தியோ, " தன் கணவனது இல்லத்தின்மீதும், அவனுடைய குழந்தைகள் மீதும் ஆட்சி செலுத்தக் கூடியவ "ளா யிருக்கிருளென்று விவரிக்கப்பட்டுள்ளாள். ஆகையால், அவரவ ரில்லமும் ஒரு சிறு அரசாங்கமே போலத்தான் இருந்துவருகிறது ; அச் சிற்றரசாங்கத்திலே ஆட்சி செலுத்தக்கூடிய அரச தம்பதிகள் அவ் வில்லக் கிழவனும் இல்லக் கிழத்தியுமாகவே யிருந்துவருகிருர்கள். இவ்விரு அதிகாரிகளுள்ளும் ஒருவருக்கு இனியொருவர் மீது ஆணைசெலுத்த அதிகாரம் இருந்தாலல்லது, அக் குடும்பபார ராஜ்யம் இனிது நடைபெற மாட்டாது. ஒரே இல்லத்தி னுள்ளே இரட்டையாட்சி யென்பது அச்சிறு அரசாங்கத்தைக் குழப்பத்திலே கொணர்ந்து குலைத்து விடுவது சரதம்.* எனவே தான், குடும்பத் தலைவனுக்கு மேலான அதிகாரம் அளிக்கப்பட் டிருப்பது குறித்துக் :குர்ஆன்ஷரீ'ப் இவ்வாறு சமாதானம் கூறியிருக்கிறது : "ஆடவர்களே பெண்டிரின் போஷகர்களா யிருக்கிருர்கள்; என்னெனின், அல்லா(ஹ்) அவர்களுள்ளே சிலரை வேறு சிலர் மீது மிகைத்துநிற்கச் செய்துவிட் டிருக்கிருன் ; இன்னம், என்னெனின், அன்னவர்கள் தங்கள் சொத்தி லிருந்து (குடும்பத்துக்குச்) செலவு செய்கிருர்கள் " (4 : 34). எனவே, கணவன் மனைவியைச் சம்ரக்ஷணம் செய் கிருன்; ஆதலால், அவனே குடும்பகாரியங்க ளனைத்தையும் முடிவாய்க் கவனிக்க வேண்டியவனு யிருந்துவருகிருன் ; ஆகவே, அவசியமான பொழுது அவனே அவள்மீதும் முடிவான அதிகாரம் செலுத்தவேண்டியவனுய் விடுகிருன். ஒரு குடும்ப பாரத்தைச் சுமக்க வேண்டிய பொறுப்பு முழுதும் அக் கணவன் மீதே சுமத்தப்பட் டிருப்பதால், அவனே அக் குடும்பத்துக் குரிய முடிவான தலைவனுகவும் இருக்கவேண்டியவனு யிருக்கிருன்.

---

* ஒரு குடும்பகாரியத்திலே மூத்த மகன்கள், மூத்த மகள் கள் ஆதிய அனைவரும் ஆலோசனை கூறலாம். எல்லார் யோசனையையுங் கேட்டுக் குடும்பத்தலைவன், அல்லது தலைவி ஒரு முடிவான தீர்மானத்தைக் கூறுங்கால், அக்குடும்ப ஒற்றுமை யைக் கருதி, அனைவரும் அத் தீர்மானத்துக்கு அடங்கி நடப்பதே சாலச் சிறந்த முறையாகும். இன்றேல், இரண்டுங் கெட்ட வாழ்க்கைதான். (பா. தா.)

எனவே, ஒரு குடும்பத்தில் கணவனும் மனைவியும் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் வெவ்வேறு யிருப்பது வெள்ளிடை விலங்கலே : அவரவரது மேனியின் இயற்கை யமைப்பிற் கேற்ற கடமையே அவரவருக்கும் அளிக்கப் பட் டிருக்கிறது. ஆண்கள் பெண்களைவிடத் தேகதிடத் திலும் சரீரக் கட்டிலும் மிகைத்தவர்களா யிருக்கிறார்கள் ; ஆடவன் அதிக கடினமான சிரமங்களையும், மிக அபாய மான காரியங்களையும் சமாளிக்கக் கூடியவனா யிருக்கிறான்; ஆயின், பெண்மணியோ, அன்பிலும் அபிமானத்திலும் ஆண்களை மிகமிக மிகைத்து நிற்கிறாள் ; கரிசனம் காட்டு வதில் கட்டழகியே கரைகடந்தவளா யிருக்கின்றாள். இயற்கை யென்பது, படைப்பினத்தை அபிவிருத்தி செய்ய வேண்டு மென்னும் தன துயரிய நன்னோக்கத்தால், மானிடப் பெண்பாலிடத்தும், மற்றுமுள்ள படைப்பினங் களின் பெண்ணினத்தி னிடத்தும், ஆண்களிடத்தில் அமைந்து கிடப்பதைவிட அதிகமான அன்பையே— அளவற்ற கரிசனத்தையே— அமைத்து வைத்திருக்கிறது. ஆகவே, மன்பதையின் நன்மையின் பொருட்டும் அதன் அபிவிருத்தியின் பொருட்டும் சிருஷ்டித்தொழி லென்னப் படும் அம் முக்கிய அலுவலில் கணவனும் மனைவியும் செய்து முடிக்கவேண்டிய வேலைகள் வெவ்வேறு யிருப்பது வெளிப்படை ; இதுவே இயற்கையின் நோக்கமாகவும் இருந்துவருகிறது. ஆடவன் தனக்குரிய சரீரபலத்தால் உயிர் வாழ்க்கையின் கஷ்டங்க ளனைத்தையும் சகித்துக் கொள்ளுதற்கு வேண்டிய உடல்வலு வுடையவனா யிருக் கிறான் ; பெண்மணியோ, தன்மாட்டுள்ள அன்பின் மிகுதி யால் குழந்தைகளைக் கரிசனத்துடனே கண்காணித்துப் போற்றிப் பராமரிக்கும் அருகதை பெற்றவளா யிருக்கிறாள். ஆதலால், குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்புக் கணவனிடத்தும், குழந்தைகளைப் பக்ஷத்துடன் வளர்த்துப் பயிரேற்ற வேண்டிய பொறுப்பு மனைவியிடத்தும் ஒப்படைக் கப்பட் டிருப்பது இயற்கை நியதியேயாம். எனவேதான், இவ் விருவருள் அவரவர் ஆற்ற வேண்டிய கடமைக்குத் தக்கவாறே அவரவருக்கும் அதிகாரம் அளிக்கப்பட் டிருக் கிறது.

மீக் கூறியவாறு பாகுபாடு செய்திருப்பது பொது விதியே யாம். இதனால் நாரிமணிகள் வேறு தொழில்

செய்யக் கூடாதெனத் தடையுத்தர வொன்றும் விதிக் கப்பெற் றில்லே. குடும்ப காரியங்களைக் கவனிக்க வேண்டிய சிக்கனக் காரியகர்த் தர்க ளாகவும், குழந்தைகளை இனிதுற வளர்க்க வேண்டிய இல்லத் தரசிகளாகவும் வீடடங்கியிருப்பதே பெண்மணிகளுக் குரிய பெரும்பான்மையான இயற்கை யலுவலா யிருப்பினும், முஸ்லிம்களின் ஜாதீய தொண்டிலும் இம் மெல்லிநல்லார் அப்பொழு தப்பொழுது தங்களுக்குரிய பங்கை முழுதும் பாகித்துவந்தே யிருக்கிறுர்கள். குடும்ப அலுவலும் குழந்தை களைப் பராமரித்தலும் அம்முஸ்லிம் மாதரை மஸ்ஜித்'ஜமா அ'த் தொழுகைக்குச் செல்ல வொட்டாது தடை செய்து நிறுத்திவிட வில்லே (பு'க'ா. 10:162). அக் கடமைகள் அவர் களை ''ஸிப்பாஹீ''களுடன் சேர்ந்து போர்க்களம் புக்குப் பற்பல தொண்டுகளைப் புரிவதினின்றும் தடுத்து நிறுத்த வில்லே: போர் புரிவோருக்குப் போனகமும் பானகமும் கொடுத்துதவுதல் (பு'க'ா. 56 : 66), பிணிவாய்ப் பட்டோரை யும் போர்க்களக் காயம் பட்டவர்களையும் கவனித்துச் சிகிச்சை செய்தல் (பு'க'ா. 56 : 67), காய முண்டவர்களை யும் வீரசுவர்க்கம் புக்கவர்களையும் போர்க்களத்தி னின்று அப்பால் சுமந்து செல்லுதல் (பு'க'ா. 56 : 68) போன்ற பற் பல அலுவல்களைக் கவனிப்பார்கள். இன்னம், பெண்மணி தான் விரும்பும் எந்த ('ஹலாலான) வேலேயும் செய்யலாம். கணவனுடன் கலந்து மனேவி கழனி வேலே செய்யலாம் (பு'க'ா. 67 : 108); பெண்மணிகள் வியாபாரம் செய்யலாம் (பு'க'ா. 11 : 40) இவர்கள் ஆண்களுக்கு விற்கலாம்; ஆண்களிடத் திருந்து வாங்கலாம்; இவ்வாறே ஆண்களும் பெண்களிடத் திருந்து வாங்கலாம்; அவர்களுக்கு விற்க லாம் (பு'க'ா. 34 : 67). இவ்வண்ணமாயே குடும்ப காரியங் களில் ஆண்கள் பெண்களுக்கு உதவி புரியலாம். இவ்வாறு நபிகளுைதர் தங்கள் வீட்டுப் பெண்மணிகட்குக் குடும்ப காரியங்களில் உதவி புரிந்தே வந்தார்கள்: பால் கறப்பார் கள்; வீடு பெருக்குவார்கள்.

ஆனல், ஆணுக்குப் பெண் தாழ்ந் தவ ளல்லள்.

இஸ்லாமிய சமுதாய சட்டத்திலே, மனேவியரை மிக்க நல்ல முறையிலும் அதிக பக்ஷத்துடனும் நடத்திவர வேண்டு மென்று மிக்க அழுத்தந் திருத்தத்துடனே வலி யுறுத்தப்பெற் றிருக்கிறது. ''நல்ல நேயப் பான்மையிலே

அவர்களை (நும் மனைவியரை) வைத்துக் கொள்ளுங்கள்,'' என்றும், "அவர்களைப் பக்ஷத்துடனே நடத்துங்கள்,'' என்றும் நந்திருமறை மடக்கி மடக்கிக் கூறிக்கொண்டிருக் கிறது—(2 : 229, 231; 4 : 19). ஒருவன் தன் மனைவியை வெறுக்கும் பொழுதும் அவளைப் பக்ஷத்துடனேயே பாராட்டி நடத்தவேண்டுமென்று :குர்ஆன் ஷரீ'ப் கூறியிருக்கிறது : "ஒரு பொருளை, அதிலே ஆண்டவன் அதிகமான நன்மையைப் பொதித்து வைத்திருக்க, நீங்கள் வெறுத்திடு தல் கூடும்'' (4 : 19). இவ்வண்ணமாயே 'ஹதீ':துஷரீ'பும் மனைவியரைப் பக்ஷத்துடனே வைத்து நடத்துமாறு வற் புறுத்தியே கட்டளை யிடுகின்றது. இவ்வாறு ஒரு பெயர் போன நபி நாயக வாக்கியம் காணப்படாநின்றது : "உங் களுள்ளே மகா சிலாக்கிய மானவர், தம் மனைவியை நடத்துவதில் மிகவும் நல்லவரா யிருப்பவரே யாவார்'' (மிஷ் காத் 13 : 11). நபிபெருமானார் (சல்அ'ம்) தங்கள் இறுதி 'ஹஜ்ஜின் பொழுது செய்த இதோபதேசத்திலும் பெண் மணிகளை ஆண்கள் அதிக பக்ஷத்துடனேயே நடத்திவர வேண்டும் என்று நன்கு வற்புறுத்தி யுள்ளார்கள் : "ஏ என் ஜனங்களே! உங்கள் மனைவியர்மீது உங்களுக்குச் சில உரிமைகளுண்டு ; அவ்வாறே உங்கள் மீதும் உங்கள் மனைவியருக்குச் சில உரிமைக ளுண்டு......அவர்கள் உங் கள் கைவயம் ஒப்படைக்கப்பட் டுள்ள அல்லா(ஹ்)வின் அமானத்தா யிருக்கிறார்கள். ஆகையால், நீங்கள் அவர் களை எல்லாவித நல்ல மாதிரியுடனும் நடத்திவருதல் வேண்டும்'' (முஸ்லிம் 15 : 19).

:தலா:க் கென்னும் விவாக விமோசனம்.

இஸ்லாமிய ஷரீஅ'த் பிரகாரம் விவாகமென்பது ஒரு சொந்தப் பரஸ்பர ஸிவில் ஒப்பந்தமே யாயினும், இதனால் ஏற்படும் உரிமைகளும் கடமைகளும், இதன்பால் அதிகமான மதப் பரிசுத்தத்தை வைத்தற்கு வேண்டிய அத்துணைப் பெரிய முக்கியத்துவத்தை மானிடஇன நன்மையி னிமித்தம் பெற்றுக் கொண்டே யிருப்பது கண் கூடு. திருமண ஒப்பந்தம் இல்லற வாழ்க்கைக்கு எத்துணைப் பெரிய நல்லற மார்க்கமா யிருப்பினும், இதன் வைதிகப் பரிசுத்தமும் எத்துணை மட்டும் அதிகமான புனித கவுரவத்தைப் பெற்றுக்கொண் டிருப்பினும், அவசியம்— தடுக்கமுடியா அவசியம்— நேருங்கால், இக்

கட் டில்லாது இந்த முடிச்சு அவிழ்த்து விடப்படத்தக்க தாகவே யிருந்துவர வேண்டுமென்றே இஸ்லாம் இயம்பிக் கொண் டிருக்கிறது. தேவன் போட்ட முடிச்சை, புரோகிதர் மந்திரித்துக் கட்டிய தாலியை மனிதன் அவிழ்க்கக் கூடா தென இஸ்லாமிய சட்டம் தடையுத்தரவை ஏற்படுத்தி யிருக்க வில்லை. இஸ்லாத்துக்கு முன்னே மனிதன் விவாக விமோசன விஷயத்தில் ஒருகால் ஒரு கோடிக்கு, அல்லது இனியொருகால் மறுகோடிக்கே ஓடிக்கொண் டிருந்தான்; ஹிந்துமத சட்டப்படி புரோகிதர் போடும் திருமண முடிச்சை அப்பால் எவராலும் தறிப்பது முடியாது. "கல் லென்றாலும் கணவன், புல் லென்றாலும் புருடனே!" யூதமத சட்டப்படி சர்வ 'தலா:க் குரிமையும் புருஷனுக்கே சொந்தம்; இவ் வுரிமையை அவன் தன் மனம்போலே உபயோகிக்கலாம். கிறிஸ்துமதச் சட்டப்படி, கணவனோ மனைவியோ, கற்பொழுக்கத்தில் தவறிழைத்தா லன்றித் 'தலா:க் கொடுப்பதோ, கேட்பதோ கூடாது; மேலும், விவாக விமோசனம் பெற்ற கணவனோ மனைவியோ தமக்குள்ளே மறுமணம் புரிந்துகொள்வதுங் கூடாது. இவ்விரு கடைக் கோடிகட்கும் ஒதுங்கி ஓடிவிடாது, இஸ்லாம் நடுமைய ஸ்தானத்திலே நிலைத்துநிற்கிறது. அவசியமான சந்தர்ப் பங்களில் இஸ்லாம் 'தலா:க் குரிமையை இருபாலார்க்குமே சமமா யளித்திருக்கிறது; இது சட்டப்படி நியாயமே யாயி னும், அல்லா(ஹ்)வின் பார்வையில் 'தலா:க் கென்பது ஒரு வெறுக்கத்தக்க விஷயமாகவே இருந்து வருகிறது. வாழ்க் கையில் அபிப்பிராயபேதம் அதிகங் கொண்டுவிட்ட கண வனையும் மனைவியையும் சமரசப்படுத்தி, சமாதானம் செய்து வைக்க எல்லா ஏற்பாடுகளையும் எடுத்துக்கொள்ள வேண் டு மென்றே எமது திருமறை இயம்பிக்கொண் டிருக் கிறது. போதுமான காரண மிருப்பின், 'தலா:க் கோரலா மென்னும் உரிமையை மனைவிக் களித்துள்ள இஸ்லாமிய சட்டம், கணவனுக் குள்ள அவ் வுரிமையை மட்டுப்படுத்தி யும் வைத்திருக்கிறது.

:குர்ஆன்ஷரீ'பின் பிரகாரம் 'தலா:க்குக்கு அடிப்படை யாயுள்ள தத்துவம், ஒரு புருஷனும் அவனுடைய பெண் ஜாதியும் இனியொருகாலும் கணவனும்மனைவியுமாய் ஒத்து வாழ முடியாதென்ற முடிவான தீர்மானம் செய்துகொண்டு விடுவதாயே யிருக்கிறது. உண்மையிலே திருமண மென்

பதே ஒருவனும் ஒருத்தியும் கணவனும் மனைவியுமாய் ஒத்துவாழ்வதாக ஒப்புக்கொண் டிருக்கும் ஒரு ஸிவில் ஒப்பந்தமா யிருக்கிறது; அவ் வொப்பந்தப்படி அவ்விருவருள்ளே ஒருவரால் இனியொருவருடன் ஒத்துவாழ இயலவில்லையாயின், அப்பால் அவ் வொப்பந்தத்தை நல்ல முறையிலே ரத்து செய்து, இருவரையும் சுமுகமாய்ப் பிரித்துவிடுவதுதானே சரியான ‘பசலாகும்? தவளை தண்ணீருக்கிழுக்க, ஓணான் வேலிக்கிழுக்க, இரண்டையும் ஒன்றாய்ப் பிணைத்து மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிபோட்டு வைப்பதால் யாது பயன் விளைந்திடுதல் கூடும்? எனினும், இத்தகைய ‘தலா:க்கில் ஒரு முக்கிய வெறுப்பே யிருந்து வருகிறது; என்னெனின், “எல்லா ‘ஹலாலான — சட்டபூர்வமாய் அனுமதிக்கப்பட்டுள்ள— காரியங்களிலும் ‘தலா:க்கே அல்லா(ஹ்)வுக்கு அளவற்ற அதிருப்தியை அளிக்கவல்லதா யிருக்கிற” தென்று நபிகள் திலகம் (சல்) நவின்றருளி யுள்ளார்கள் (அபூ’த’ா. 13 : 3). கணவன் மனைவியர் இருவருள்ளே ஒருவருக்கு மற்றவருடன் ஒத்துவாழ இயலாமற் போய்விடுங்கால், அவர் இவ் விஷயத்தை மட்டும் நன்கு ஞாபகத்தில் பதியவைத்துக் கொள்ளுதல் வேண்டும். “ஒரு பொருளை, அதிலே ஆண்டவன் அதிகமான நன்மையைப் பொதித்து வைத்திருக்க, நீங்கள் வெறுத்திடுதல் கூடும்” (4 : 19). இன்னம், நம்மாற் கூடியவரை பிணக்குக்கொண்டு பிளவுபட்டு நிற்கும் தம்பதிகளை ஒன்றுசேர்த்து வைக்கப் பாடுபடவேண்டுமென்றும் கட்டளை யிடப்பெற் றுள்ளோம்: “இன்னம், அவ்விருவருக் கிடையே பிளவு நேருமென நீங்கள் அஞ்சுவீர்களேல், அவனுடைய ஜனங்களினின்று ஒரு நீதிமானையும், அவளுடைய ஜனங்களினின்று ஒரு நீதிமானையும் நியமித் தனுப்புங்கள்; அவ்விருவரும் (அத் தம்பதிகளுக் கிடையே) இணக்கத்தை விழைவார்க ளாயின், ஆண்டவனும் அவர்களுக் கிடையே இணக்கத்தை ஏற்படுத்தி வைப்பான்” (4 : 35). இம் மாதிரியான சற்போதங்களெல்லாம் மலிந்து கிடப்பதனாலேதான், முஸ்லிம்கள் இல்லறத்திலுள்ள தொல்லைகள் பலவற்றையும் அதிலுள்ள சுகபோகங்களுடனே ஒருமிக்கச் சுமந்துநிற்கத் துணிந்தெழுந்துவிடுகிறார்கள். இல்வாழ்க்கை யென்பது முள்நிறைந்த ஓரழகிய ரோஜாச் செடியே. எனவேதான், எம் முஸ்லிம்கள் தங்களாற் கூடியமட்டும் அந்த அழகிய ரோஜாப் புஷ்பத்தைக்

கசக்கி முகராமலும், அந்தச் செடியிலுள்ள முட்களைக் கண்டு அச்சங் கொள்ளாமலும் காலங்கடத்தி வருகின்றனர்கள். இறுதியாக வேறுவழியின்றிப் பிளவுபட்டுப் போய் விடுங்காலேதான் 'தலா:க்கின்பக்கல் இவர்கள் நாட்டத்தைச் செலுத்தத் தலைப்படுகிறார்கள். இப்படிப் பட்ட காரணங்களினாலேயே இஸ்லாமிய நாடுகளில் 'தலா:க்கென்பது அருமையாகவே— கிறிஸ்தவ நாடுகளுடன் ஒப்புநோக்குங்கால், மிகமிக அரிதாகவே— காணப்பட்டு வருகிறது; அவர்களுடைய மேனாடுகளி லெல்லாம் இஸ்லாமிய திருமணச் சட்டம் போன்ற நல்ல நடைமுறைச் சட்டங்கள் இல்லாமையால், 'தலா:க் கென்னும் விவாகவிமோசனம் முகடுமுட்டிப்போய் நிற்கிறது.*

ஐரோப்பிய மேனாடுகளின் கற்பும், பல தாரமணமும், சமூக பிரச்சினைகளும்.

இஸ்லாமிய சமுதாய சட்டம், மன்பதையின் நன்மையின் பொருட்டு, கற்பொழுக்கத்தின்மீது கண்ணியமான நன்மதிப்பையே கொண்டு நிற்கின்றது; பெண்மணிகளின் கற்பென்பது அவர்களது கிரீடத்தின் மீதுள்ள "கோஹெ நூரா" யிருந்து வருகிறது. எனவேதான், இஸ்லாம் இவர்களது கற்பைக் காக்க ஒருசில ஏற்பாடுகளை அழுத்தமாக இயற்றிவைத்துள்ளது; இவை குறித்து எதிர் மதவாதிகள் என்ன (குறை) சொல்லுவதா யிருப்பினும், இத்தரணியிலுள்ள ஏனை நாடுகளின் சமூகாசார வாழ்க்கையுடன் இஸ்லாமிய சமுதாய வாழ்க்கை நிலையை ஒப்புநோக்கி மேற்போக்காய்ப் பார்ப்பவருங் கூட முஸ்லிம் நாடுகளிலுள்ள பெண்களின் கற்பொழுக்கம் ஏனைநாட்டு ஸ்திரீகளின் கற்பு நிலையைக் காட்டினும் பன்னூறு மடங்கு மேம்பட்டே நிற்பதைக் கண்டுணர்வார்கள். பொதுமகளிராய்க் கற்பின்றிக் களவொழுக்கத்தில் ஆழ்ந்து தாழ்ந்து

---

* சமீபத்தில், அமெரிக்காவின் ஒரூரிலே ஒரு மனைவி 'தலா:க் வாங்கிய அதிசயத்தைக் கேளுங்கள்: மின்சார விளக்கேற்றும் "ஸ்விட்சைத்" தட்டினால் அது தேய்ந்து போகுமென்றும், ஆகையால், விளக்கேற்றவும் அணைக்கவும் விளக்கின் பல்புகளையே மாட்டவும் கழற்றவும் வேண்டுமென்றும் கூறினான் கணவன். இந்தத் தொல்லை பொறுக்கமாட்டாது அவன் மனைவி விவாகவிமோசனங் கோரிக் கோர்ட்டிலே பெற்றும் விட்டாள் தனக்குரிய 'தலா:க்கை. (பா. தா.)

போய் அடிமட்டத்திலே மூழ்கிக்கிடப்ப தென்பது மேனுடு களில் லஜ்ஜையற்ற ஒரு சர்வசாதாரணக் காட்சியாய்ப் புலப்படாநின்றது ; இந்தியாவிலுங்கூட இவ் விழிதொழில் கோவிலுக்குப் "பொட்டுக் கட்டுதல்" என்னும் ஒரு மாகொடிய பழக்கத்தால் "தேவரடியார்" என்னும் மங்கல வழக்கைக் கொண்டு மறைமுகமாய், இல்லை, பகிரங்க மாயே அனுமதிக்கப்பட்டுக் கிடக்கின்றது. இஸ்லாத்துக்கு முன்னே அரப்நாட்டிலும் வியபிசார மென்பது ('ஜினு) கவுரவமாகவே பகிரங்கத்தில் கொண்டாடப்பட்டு வந்தது ; ஆயின், தீ'னுலிஸ்லாம் வந்து கற்பழிக்கும் களவொழுக் கத்தை எத்துணை வன்மையாய்க் கண்டித் தொழித்த தெனின், இஸ்லாம் நுழைந்துள்ள எந்த நாட்டிலுமே என்றென்றும் பகிரங்கவியபிசார மென்பது அடியுடனே ஆணிவேருடன் கல்லி யெறியப்பட்டுவிட்ட தெனலே வேண்டும். மேலே கூறியவாறு இக்குவலய முழுதுமே கற்பென்பது காசுக்கு விற்கப்படும் "கடைச்செம்பீர"மாக இழிந்து கிடப்பதற்கு எத்தனையோ காரணங்க ளுள: அவற் றுள்ளே முக்கியமாயது, அம் மக்களெல்லாம் கட்டுக்கடங் காக் காமலாகிரி கொண்ட காளைகளாய்த் திரிவதும், கற் பென்பதிலே அவர்கள் வைத்துள்ள மிகவும் இழிவான எளிய மதிப்புமே யாகும். இன்னம், அந்நாடுகளில் ஆண் களைவிடப் பெண்களின் எண்ணிக்கை மிகைத்து நிற்பதும், பலதாரமணம் கூடாதென்னும் கட்டுப்பாடும் கரைகடந்த தொல்லையை விளைத்துவருகின்றன ; முன்னமே யிருந்த பெண் பெருக்கத்தை மகாயுத்தங்கள் தோன்றி— இவ் வியாதியே ஐரோப்பாவைப் பற்றியுள்ள நித்திய தொத்து நோயா யிருந்து வருகிறது— மேலும் பன்மடங்காய்ப் பெருக்கிவிட் டிருக்கின்றன. எனவே, இவ்வாருய பெண் பெருக்கத்தை என்செய்வ தென்பதே ஐரோப்பாவி லுள்ள ஒழுக்கம் போதிக்கவல்ல உயர்தரப் பேராசிரியர்களின் மூளையை யெல்லாம் மிகமிகக் குழப்பிக்கொண் டிருக்கிறது. இயற்கை யென்பது மக்களினத்திலே தனது "மாரன் தொழிலைச்" செய்துகொண்டுதா னிருக்கும். வெளியில் புத்தகவேதாந்தம் போதிக்கலாம் ; ஆனல், அவரவ ருள்ளத் துள்ளேயும் "மதனும், ரதியும்" தங்கள் புஷ்பக்கணைகளை மிருதுவாய் விட்டுத் துளைத்துக் கொண்டே யிருப்பது சரதம் ; இஃது இயற்கையே. எனவே, உரிய காலத்தில் தக்கஏற்பாடு எடுத்துக்கொள்ளப்படா விடின், ஏற்கெனவே

அவ்வைரோப்பிய நாடுகளில் பெண்மணிகளின் கற்பின்மீது கறைபடியச் செய்துள்ள வியபிசார மென்னும் புற்று நோய் அதிசீக்கிரத்திலே ஆங்குள்ள சமுதாய வாழ்க்கை யின் அடிப்படையையே அரித்தெறிந்து விடுமென்பது சத்தியம் ; சத்தியமே.

இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தே அம் முஸ்லிம் சமு தாயத்துக்கு இத்தகைய இக்கட்டொன்று வந்து சம்பவிக்க லாயிற்று : அச்சிறு முஸ்லிம் சமூகத்தை வாட்கொண்டே வெட்டி வீழ்த்திவிடுவ தென்னும் மாகொடிய வேகத்துடனே அவ்வேழை முஸ்லிம்கள் மீது பன்முறை படையெடுத்து வந்த மக்கத்து மறமாக்களையும், அவர்தங்கள் துணைவர்களை யும் எதிர்த்துநின்று தற்காப்பி னிமித்தமே போர்புரிந்த அம் முஸ்லிம்களுள் ளிருந்து அநேக ஆண்கள் வீரசுவர்க் கம் புக்கு மறைந்து விட்டமையால், பற்பல இல்லங்களில் விதவைகளும் அனாதைக் குழந்தைகளுமே யன்றி, வேறெவ ருமே புருஷர் காணப்படாது போய்விட்டனர். அதுகாலை, இதனால் விளையக்கூடிய தீயபயன் யாதாய்ப்போய் முடியு மென்பதை இஸ்லாம் மிக நன்றாய் முன்னறிந்து கொண்டு விட்டது. விதவைகளுக்கும் அனாதைகளுக்கும் வயிற்றுப் பசியைத் தணிக்க முதலிலே உதவி புரிதல் வேண்டும் ; அப்பா லொரு பசியும்— ஸ்தூல சரீரத்திற்குரிய ஓரியற் கைத்தினவும்— தணிக்கப்படல் வேண்டும். ஆண்கள் பெண்களை விழைவதும், பெண்கள் ஆண்களை விழைவதும் இயற்கையே ; இவ் வியற்கைக் காமஇச்சையைத் தணிக்கத் தக்க உபாய மொன்றைத் தேடாவிடின், அப்பால் மானிட இனம் எங்கே சென்று சேரு மென்பது எல்லார்க்கும் தெரிந்த ஒருண்மையே யாகும். எனவேதான், இஸ்லாம் இவ் விக்கட்டைத் தவிர்க்க ஒரு கட்டுப்பாடான பலதார மணத்தை அனுமதிக்க லாயிற்று. :குர்ஆனெ கரீமில் பல தார மணத்தை அனுமதிக்கும் ஆயத் மீக்கூறிய சூழ்நிலை களையெல்லாம் செவ்வனம் கவனத்தில் வைத்துக்கொண்டே யிருக்கிறது: "(விதவைகளையும்) அனாதைகளையும் குறித்து நீங்கள் பக்ஷபாதமில்லாது நடக்க முடியாதென அஞ்சுவீர் களாயின், (அதுகாலை) உங்களுக்கு (உளம் பிடித்த) நல்ல வர்களாய்த் தோன்றும் அத்தகைய மாதர்களை மணமுடித் துக் கொள்ளுங்கள்" (4 : 3). ஆண்களுக்கு மிருக இச்சை மிகுந்து கிடந்த காரணத்தால் பலதார மணம் இஸ்லாத்திலே

அனுமதிக்கப்பட வில்லை ;* ஆனால், ஆதரவற்ற விதவை களும் அனாதைக் குழந்தைகளும் அதிகரித்து விட்டமை யால், அவர்கட்கு "இல்ல" மொன்றை ஏற்படுத்த வேண்டு வதே முக்கிய நோக்கமா யிருந்திருக்கிறது. என்னெனின், இஸ்லாமார்க்கம் மாந்தரின் ஒழுக்கத்தை— முக்கியமாக, சதி-பதியொழுக்கத்தை— முதன்மையாய் மதித்து வருவது கண்கூடு ; இத்தகை யொழுக்கமே இம் மார்க்கத்தில் உயி ரினும் சிறந்ததாய் ஓம்பப்பட்டு வருகிறது. பெண்மணி களின் ஆத்மாக்களுக்காக ஒருசிறிதும் கவலை கொள்ளாது, அவர்களுக் கோர் இல்லத்தை ஏற்படுத்தாது, அன்னவர் களின் கற்புக்கொரு கவசத்தைத் தையாரிக்காது, மனுஷிக ளென்னும் முறையிலே அவர்கள் பரிபக்குவ பரிபூரண அந் தஸ்தை யடைதற்கு வேண்டிய உபாயத்தை உதவியளிக் காது, அன்னவர்களின் "குக்ஷியுபாதை"யை— வயிற்றுப் பசியைத் தீர்த்தற்காக ஏதோ ஒருசிறிது ஆகார மளிப்பது மட்டுமே போதுமான தென்று தீர்மானிப்பது போதாது ; போதாது. மானிடர்க்கு வயிற்றுப்பசி ஒன்றுதானா அவசிய மா யிருக்கிறது ? இந்த ஆகத்தைக் காக்கும் ஆகாராதிகளை விட உயிரினும் சிறந்த ஒழுக்கத்தைக் காக்கும் உபாயமல் லவோ மிகவுஞ் சிறந்த மாணிக்கமா யிருக்கிறது ? உயிரைக் காக்க உபாயந் தேடுவது மிக எளிதே ; ஏனெனின், இது ஸ்தூல தேக சம்பந்தமுள்ள உலகாயதப் பொருளா யிருக் கிறது ; ஆயின், இவ்வுலகாயத பண்டிதன் பெண்களின் உயிரைக் குறித்தோ ஒழுக்கத்தைக் குறித்தோ ஒரு சிறிதும் கவலை கொள்வது கிடையாது; பெண்கள் தங்கள் பசிப்பிணி யைப் போக்கிக்கொள்ள, கேவலம் உதரஉபாதையைத் தணித் துக்கொள்ளத் தங்கள் கற்பை ஒருசில அணுக்களுக்கே விற்ப தா யிருப்பினும், அவன் அணுத்துணையும் அது குறித்துக் கவலை கொள்ள மாட்டான். இது வீண் வாய்ப்பேச் சென் றும், மிகைபடக் கூறப்பட்ட அதிசயோக்தி யென்றும் எண்ணி விடற்க ; நவீன (உலகாயத) நாகரிகம் நிரம்பித் ததும்பி வழிந்தோடும் இற்றைநாள் நவநகரங்களில் காணப் படும் காட்சி இதுவாயே யிருந்துவருகிறது ; ஆங்கெல்லாம்

---

* "ஆளப்பட்டவன் ஆயிரம் பெண்டுகளை ஆள்வான் ; அதனைக் கேட்க அகமுடையா (ஆம்படையா) னுக்கு அதிகார மில்லை," என்னும் இந்துப் பழமொழி இஸ்லாத்திலே யில்லை யென் றறிக. (பா. தா.)

பெண்ணினம் ஒரு வேளை ஆகாரத்துக்கேயும், அல்லது ஓரிரவு உறங்க இடங் கிடைத்தற்கேயும் தங்கள் கற்பை, உயிரினு முயரிய அரிய கற்பை ஒரு சில ஷில்லிங்குக்காக விற்று வருகிறார்கள். இது மேனாடுகளில் அன்றாடம் எங்குங் காணப்படும் சர்வ சாதாரணக் காட்சியாயே யிருந்துவருகிறது.

இவ்வாறு பெண்மணிகள் ஒழுக்கத்திலே இழிநிலை யடைவதை இஸ்லாம் விட்டுவைக்க விரும்புவதில்லை. இவர்களுடைய ஆத்மாக்களைக் கவனிப்பதே இம் மார்க்கத்தின் முக்கிய முதல் நோக்கமா யிருந்துவருகிறது. எனவேதான், இவர்களது கற்பைக் காப்பதிலே இது கண்ணுங் கருத்துமா யிருந்துவருகிறது; இதற்கு வேண்டிய ஏற்பாட்டை இயற்றி வைப்பதும் இம் மார்க்கத்தின் முதல் இலக்ஷியமே யாம். ஆதலினால்தான், நபிகள்திலகம்(சல்) அல்லா(ஹ்)வின் அனுமதி கொண்டு, தங்களுக்கு முன்னே சென்றுபோன தீர்க்கதரிசிகள் அனுமதித் திருந்தாற் போன்றே, ஒரு கட்டுத் திட்டத்துக்கு உட்பட்டுள்ள பல தார மணத்தை அனுமதித் துள்ளார்கள். விதவைகளுக்கு வயிற்றுச் சாப்பாட்டுக்காக வேறெத்தனையோ வழிகளைக் கண்டுபிடித்து விடலாம்; ஆயின், அவர்கட்கொரு கவுரவமான இல்லத்தை ஏற்படுத்திக் கொடுக்க, அவர்களுடைய கற்பைக் காப்பாற்றி வைக்க வேறெத்தகைய கண்ணியமான முறையையும் கண்டுபிடிப்பது சாலாது; சாலாது. சமுதாய வாழ்க்கைக்கும் நாகரிக நல்லொழுக்கத்துக்கும் உறைவிடமாய அன்பும் ஆதரவும் போன்ற நல்லவிதப் பண்பாடுகளெல்லாம் முளைத்தெழுதற் குரிய இல்லிடமாகிய மூலஸ்தானம் குடும்ப வாழ்க்கையாகவே யிருந்து வருகிறது; இத்தகைய மகிழ்ச்சிக்குரிய இனிய குடும்ப வாழ்க்கையின் மீதே இஸ்லாம் தனக்குரிய நாகரிகத்தை நிலைநாட்டியிருக்கிறது. எனவே, எங்கேனும் எப்பொழுதேனும் ஏகதார மண மென்பது எந்த ஓர் ஆண்பிள்ளைக் கேனும் இனிய வாழ்க்கையா யில்லாது போய்விடுமாயின், அங்கு அப்பொழுது ஒரு கட்டுத்திட்டத்துக் குட்பட்ட பலதார மணத்துக்கு இஸ்லாம் இடமளித்து, அநாத விதவைகளுக்கும் ஓர் இல்லற வாழ்க்கையின் இன்பத்தையூட்ட முன்வந்து உதவி புரிகின்றது. ஏனென்றால், "இல்லற மல்லது நல்லற மன்றே!" பல தார மணம் புரியும் மாப்பிள்ளை தன் மனைவி

யருக் கிடையே வேற்றுமை சிறிதும் பாராட்டக் கூடா தென ஆண்டவன் ஆணையிட் டுள்ளான்; இவ்வாறு ஒருவனால் நடக்க வியலாதுபோய், முதல் தாரத்தின் இன்ப சுகத்திலே பாதியையே இரண்டாந்தாரம் அனுபவிப்பதா யிருப்பினும், இவ்விதவைக்கு இல்லற மென்பதே இல்லா திருப்பதைவிட ஒரு பாதி இல்லற மேனும் கிடைப்பது மேலன்றோ? மாம னென்பானே இல்லா திருப்பினும் மூக்கறுந்தவ னேனும் ஒரு மாமனாயிருப்பது மேலன்றோ?*

இல்லற மென்பதே இல்லாதிருப்ப தென்பதன் தாத் பரியமென்ன? இந்த விதவைக்கு இருக்க இடமில்லாமலும், உடுக்க உடையில்லாமலும், உண்ண உணவில்லாமலும், படுக்கப் பாயில்லாமலும் ஆதரிப்பாரற்று அபலையாய்த் திரிவதோடு, அன்பு ஆதரவு என்னப்படும் — ஆண்டவ னளித்துள்ள— இருபெருங் குணங்களையும் அபிவிருத்தி யடையச் செய்யக்கூடிய தருணங்க ளெல்லாமும் பறிக்கப் பட்டு, வெறு மரமாய்த் தனித்துத் ''தேரோடு நின்று தெருவோ டலைந்து'' பரிதபித்துத் திரிவதோடு போய் விடாது, கற்பென்னும் மாசற்ற சற்குணத்திற்கும் 100-க்கு 99 ''கேஸ்''களில் உலைவைப்பதா யிருக்கிறது; இவ்வாறு கற்பொழுக்கம் குன்றிக் களவொழுக்கம் மிகுந்து வருவதே மானிட நாகரிகத்தை அழித்து ஒழிக்கும் அரிப்புப் புற்று நோயா யிருந்து வருகிறது. சாதாரண வாழ்க்கையில் ஏகதாரமணமே இல்வாழ்க்கைக்குரிய நியதியாயிருக்கிறது; ஆனால், அசாதாரண காரணங்களால் ஆண்களைவிடப் பெண்கள் பெருகிவிடுங்கால், ஏகதார விரதமென்பது ஒரு சிறிது முறிக்கப்பட வேண்டுவதாய் வந்து, சமுதாய சங்கடமும் மூண்டுவிடுகிறது. அதுபொழுது ஒரு கட்டுப் பாடுள்ள பலதார மணத்தாலேதான் சங்கடத்தைச் சமாளிப்பது சாத்தியமாகும்; நாரிமணிகளின் கற்பும் காப்பாற்றப்படும். மகாயுத்தத்துக்கு முன்பே ஐரோப் பாவில் ஆண்களைவிடப் பெண்கள் பெருகிக் கிடந்தனர்.

---

* ஆண்கள் மடிந்து பெண்கள் பெருக்கெடுத்து விடுங்கால், ஆணினத்தை 'ஹலாலான முறையிலே அபிவிருத்தியடையச் செய்ய விதவா விவாகமும், பலதாரமணமும் அத்தியாவசியமா யிருப்பது கண்கூடு; விதவா விவாகமும், பலதார மணமும் இல்லாத ஜாதியினர் கால அடைவிலே நசித்து நாசமாய்ப் போய்விடுவர். (பா. தா.)

அம் மக்கள் ஏகதார விரதமே சரியெனக் கொண்டு (இயேசுவின் உபதேசம் இப்படிப் போதித்திலது) நின்ற படியால், அதிகமான பெண்களை என்செய்வ தென விழித்துக்கொண் டிருந்தனர்; அந் நெருக்கடியிலே மகா யுத்தம் வந்து மூண்டு கொண்டது; யுத்த மென்றாலே ஆடவர் மடியவும் பெண்டிர் பெருகவும் ஏதுவுண்டாவது இயற்கை. எனவே, இப்பால் அம் மேனாடுகளி லெல்லாம் பெண்களின் தொகை மிகவுமதிகமாய்ப் பெருக்கெடுத்து விட்டது. இவர்கட் கெல்லாம் பசிப்பிணியைச் சிறிதே போக்க வழி கண்டுபிடிக்கப்பட்டு வருகிறது; இஸ்லாமும் ஸ்திரீகளுக்கு எத்தகைய கவுரவஹானியில்லாத் தொழிலை யும் அனுமதித் துள்ளது. ஆனால், உண்மைச் சங்கடம் இதுவன்றே! வயிற்றுப் பசிக்கு உணவளிப்பது மட்டும் போதாதே! இவர்கட் கெல்லாம் கண்ணியமான இல்லற வாழ்க்கை யொன்றை ஏற்படுத்திக் கொடுப்ப தெப்படி? அதுதானே பரமசங்கடமா யிருந்துவருகிறது! இஸ்லாத் திலே பலதாரமண மென்பது பொதுக் கட்டாய விதியன்று; அத்தியாவசியத்தி னிமித்தம் மேற்கொள்ளப் படவேண்டிய விலக்கு விதியாகவே சித்தாந்தத்திலும் அனுஷ்டானத் திலும் இஃது — (பலதாரமணம்) இருந்து வருகிறது; இத்தகைய விலக்குவிதியே இற்றைநா ளுலகின் மானிட நாகரிகத்தை நாசமடைய விடாது நல்ல விதமாய்க் காப்பாற்றி உயர்த்தி வைக்கும் கண்ணிய முறையா யிருந்து வருகிறது. பலதார மணத்தை 'ஒருவிதத் தீமை' யென்றே வைத்துக்கொள்வ தாயினும், ஒருவகைக் கட்டுப்பாடுள்ள பலதாரமணமா, அல்லது கட்டுத்திட்ட மொன்று மில்லாத பொது வியபிசாரமா, எது மானிட சமுதாயத்தை ஒழுக்க இழுக்கிலும் அதலபாதல மென்னும் "ஹாவியா"வி னுள்ளும் இழுத்துச் செல்லக்கூடியதா யிருக்கிறதென்றும் ஐரோப்பிய சீர்திருத்தவாதிகள் சிந்தித் துப் பார்க்கட்டும். "ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்," என்றார் வள்ளுவரும்.

இனியொரு வகையாலும் இஸ்லாம் மானிட சமுதா யத்தை முன்னேற்றமடையச் செய்யவல்லதா யிருக்கிறது; இருபாலாரும் — வேற்று ஆண்களும், வேற்றுப் பெண் களும் — ஏகபோகமாய்க் கலந்துறவாடுவதை இம்மார்க்கம் தடுத்துவிட் டிருக்கிறது; "சுதந்தரக் காதல்" என்னும்

அலுவல்கள் வரையறுக்கப் படுவதன் நோக்கம்.

களவொழுக்கம் இல்லா தொழிந்தால்தான் குடும்பத்தில் கலகமில்லாமலும், கணவனும் மனைவியும் குழந்தைகளும் க்ஷேமமாகவும் மன மகிழ்ச்சியுடன் ஒத்து வாழ்தல் சாத்திய மாகும். களவொழுக்க மென்னப்படும் கள்ளக்காதலைத் தடுப்பதற்குக் கணவனும் மனைவியும் கூடியமட்டும் குடும்ப வேலைகளைப் பாகித்துக் கொள்ளல் அத்தியாவசிய மாகும்: ஆண்பிள்ளைகள் தங்கள் குடும்பங்களைப் போஷித்துப் பராமரிக்கும் காரியத்தையும், பெண்பிள்ளைகள் குடும்பத்தை ஒழுங் குடனே சிக்கனமாக நடாத்திக் குழந்தைகளையும் நல்ல விதமாய்ப் பழக்கிப் பயிரேற்றும் தொழிலையும் முறையே மேற்போட்டுக் கொள்ளல் வேண்டும். இவ்வாறே ஒரொரு குடும்பத்திலும் நடைபெற்று வந்தால், அயல் ஆண்களும் அன்னியப் பெண்களும் எவ்விதத் தட்டுத் தடங்கலு மில்லாது ஒருவரோ டொருவர் அவரவர் மனம் போலே எதேச்சையாய்க் கலந்துறவாடுவது அநேகமாய்த் தடுக்கப் பட்டுப் போய்விடுதல் கூடும். இதனால் பெண்மணிகள் அடுப்பங்கரையி (அடுக்களையி) னுள்ளே அடைத்துவைக்கப் படவே வேண்டுமென்ப தில்லை; இவர்கள் தங்கள் அவசிய ''ஜோலி''யி னிமித்தம் வெளியே சென்றுவரலாம் (பு'க'ா. 65—33 : 8).

மீக்கூறிய வாறு ஆண் பெண் அலுவல்க ளெல்லாம் இன்ன இன்னவை யென வரையறுக்கப் படின், அந்த அந்த வேலையும் அவரவர் கையால் திறம்பட நடத்தப் பெறும்; இதுமட்டுமா? மனித சமுதாயத்தின் ஒழுக்க உயர்வும் இழுக்கடையாது உச்சத்திலே எட்டியிருக்கும். அன்னிய ஆடவரும் அன்னிய பெண்டிரும் எதேச்சை யாய்க் கலப்பதைத் தடுக்க இனியொரு நல்ல வழி, அவரவர் குடும்பத்திலே அயலவர் அனுவசியமாய்த் தலையிடா திருப்பதேயாம்; ஒருவர் வீட்டினுள்ளே இனி யொருவர் உடையவர் உத்தரவின்றி உள்ளே பிரவேசிக்கக் கூடாதென்று இஸ்லாத்தில் கடுமையான தடையுத்தரவு ஏற்படுத்தப்பட் டிருக்கிறது (:குர். 24 : 27). ஓரில்லத்தி லுள்ள பெண்மணிகட்குத் தொந்தரை கொடாது வெளியி லிருந்தபடியே கோரிச் சென்ற காரியத்தை நிறைவேற்றிக் கொள்வதா யிருப்பின், அவ் வில்லத்தி னுள்ளே நுழைய

அனுமதி கோரவேண்டிய அவசியமே இல்லையென் றுணர்க (33 : 53).

அன்னிய ஆண்பெண்களை அவர்கள் மனம்போலே எதேச்சையாய்க் கலக்கவிடாது தடைசெய்து நிறுத்த இஸ்லாம் இனியோருபாயமும் எடுத்துக் கூறியிருக்கிறது : பொதுக்கூட்டங்களுக்குச் செல்லுங்கால், அல்லது அயல் ஆண்களும் அயல் பெண்களும் பொதுவாய்க் கலக்க நேருங்கால், அப்படிப்பட்ட வேளைகளில் பெண்மணிகள் மிக்க ஒழுங்கான முறையிலே உடையுடுத்துச் செல்ல வேண்டும். மிக்க ஒழுங்கான முறையிலே உடையுடுத்துவ தென்பது, முகத்தையும் இருகைம்மணிக் கட்டுக்களுக்கு வெளியிலுள்ள கரங்களின் முற்பகுதிகளையும் தவிர்த்து, உடலின் ஏனைப்பாகங்களை யெல்லாம் ஆடை கொண்டு மூடிக் கொள்வதா யிருக்கிறது (:குர்ஆன் 24 : 30, 31); (ஆபூ'த'ாவூத்' 31 : 30). பெண்மணிகள் வீட்டைவிட்டு வெளியே செல்ல நேருங்கால், தங்கள் அலங்காரங்களை (சிங்காரிப்புக்களை) வெளிக்காட்டா திருக்கக் கடவார்கள் (33 : 33); மேலும், ஆடவர்கண்டு மோகிக்கத் தக்கவாறு தங்கள் உடலுறுப்புக்களைத் திறந்துகொண்டு, அல்லது பகட்டிக்கொண்டு செல்வதும் கூடாது (24 : 31). இன்னம், இருபாலாரும் எதிர்பாலார் முன்னே அடக்க ஒடுக்கத் துடனேயே ஒழுகிக் கொள்ளுதல் அவசியமாகும்; ஆண்கள் பெண்கள் முன்னும், பெண்கள் ஆண்கள் முன்னும் முறைத்துப்பாராமல் முகந்தரையிற் கவிழ்த்தவர்களாய்க் குனிந்துசெல்லல் வேண்டும் :

"ஈமான் கொண்டுள்ள ஆடவர்கட்கு, அவர்கள் தங்கள் பார்வைகளைக் கவிழ்த்துக் கொண்டும், தங்கள் மர்மஸ்தானங்களைத் தற்காத்துக்கொண்டும் நடக்கவேண்டு மென்று நீர் கூறக் கடவீர்; அஃது அவர்கட்குப் பரிசுத்த உபாயமா யிருக்கிறது.

"இன்னம், ஈமான் கொண்டுள்ள பெண்டிர்கட்கு, அவர்கள் தங்கள் பார்வைகளைக் கவிழ்த்துக் கொண்டும், தங்கள் மர்மஸ்தானங்களைத் தற்காத்துக் கொண்டும், தங்கள் அலங்காரங்களை— அவற்றினின்று (வழக்கமாய்) வெளித் தோன்றுவதைத் தவிர்த்து, வெளிப்படுத்திக்காட்டா மலும் நடக்கவேண்டு மென்றும், அவர்கள் தங்கள் தலை

முக்காட்டுச் சேலையைத் தங்கள் மார்பின்மீது (புடைப்புத் தெரியாது) இழுத்து (இறக்கி) விட்டுக்கொள்ள வேண்டுமென்றும் நீர் கூறக்கடவீர் '' (24 : 30, 31).

மேற்கூறிய பொதுவிதியான நிபந்தனைக் குட்பட்டு நாரிமணிகள் தங்களுக்குக் கவுரவமாயுள்ள எத்தகைய கண்ணிய ('ஹலாலான) வேலையையும் செய்ய அவசியமான வேளைகளில் அத்தியாவசியமான இடங்களுக்குச் செல்லலாம். ''பு'ர்க'ா'' வென்பது கவுரவக் குடும்ப ஸ்திரீகட்கு ஏற்பட்டுள்ள அந்தஸ் தடையாளமா யிருக்கிறதே யன்றி, இத்தகைய இந்திய பு'ர்க'ா :குர்ஆன்மஜீத்'ாலும் 'ஹதீ':து ஷரீ'பாலும் வற்புறுத்தப் பெறும் வேதக் கட்டளையா யில்லை. பண்டை நாட்களில் பெண்மணிகள் மஸ்ஜிது'க்குச் சென்று இமாம் - ஜமாஅ'த் துடனே சேர்ந்து தொழுது வந்தார்கள்; அதுகாலை அவர்கள் பு'ர்க'ா அணிந்து செல்லவில்லை. இன்னம், 'ஹஜ்ஜு'டைய காலத்தில் பெண்மணிகள் முகத்தை மூடும் பு'ர்க'ாவை அணிவதி னின்றும் தடுக்கப்பட்டே யிருக்கிறார்கள். [இஸ்லாத்தின் **ஹிஜாப்'** வேறு; இந்தியாவில் காணப்படும் **பு'ர்'**காவே வேறு யிருக்கிறது. பா. தா.]

அத்தியாயம்—2

# இஸ்லாத்தில் திருமணம்

## பிரிவு 1.— திருமணத்தின் தாத்பரியம்

மானிட நாகரிகத்துக்கு உண்மையிலே அடிப்படையா யிருந்து வருவது திருமணமே யாம். அரபில் இது **நி(க்)கா'ஹ்** என்று அழைக்கப்படுகிறது; இதன் அசல் கருத்து **அ':க்த்'** (பிணைத்தல்) என்பதாகும். இஸ்லாத்தில் திருமணம் ஒரு பரிசுத்த (ஸிவில்,) ஒப்பந்தமா யிருக்கிறது. வேறு தக்க காரணம் இருந்தாலன்றி, ஒவ்வொரு முஸ்லிம் ஆணும் பெண்ணும் மணந்துகொண்டே இல்லத்தில் வாழவேண்டும். ''மேலும், உங்களுள்ளே ஒன்றியா யிருப்பவர்களையும், உங்கள் ஆணடிமைகளிலும் பெண்ணடிமைகளிலும் தகுதியா யிருப்பவர்களையும் மணமுடித்து வைக்கக் கடவீர்கள்; அவர்கள் (பணத்) தேவையுள்ளவர்களா யிருப்பின்,

திருமணத்தின் அவசியம்.

அல்லா(ஹ்) தன் கடாக்ஷத்தினின்று தேவையை விட்டு அன்னவர்களை வெளியேற்றி வைப்பான்.* இன்னமும், அல்லா(ஹ்) விசாலக் கொடை கொடுப்பவனுக, அறிந்தவனுக இருக்கிருன். இன்னம், (தங்களுக்குரிய) ஜோடியைப் பெற்றுக்கொள்ள இயலாதவர்கள், அல்லா(ஹ்) தனது கடாக்ஷத்தினின்று தேவையைவிட்டு அன்னவர்களை வெளியேற்றி வைக்குமட்டும் கற்பொழுக்கத்திலே (தங்களை) இருத்திக்கொள்ளக் கடவார்கள்,'' என்பது :குர்ஆனின் கட்டளை (24 : 32, 33). இனி யொரு திருவாக்கியத்திலே திருமணத்தா லேற்படும் உறவு முறைக்கு உதிரக்கலப்பாலுண்டாய உறவுமுறைக் கொத்த முக்கியத்துவமே அளிக்கப்பெற் றுள்ளது: '' இன்னம், மனிதனை(ச் சுக்கில)த் தண்ணீரிலிருந்து சிருஷ்டித் திருப்பவன் அன்னவனே யாவான்; அப்பா லவன் அவனுக்கு உதிரக்கலப்பா லாய உறவு முறையையும் திருமணத்தா லேற்படும் உறவுமுறையையும் உண்டுபண்ணி வைத்துளான் '' (25 : 54).

'ஹதீ':து ஷரீ'பும் மனிதர்கள் பிரமசாரிகளாய் உயிர்வாழக் கூடாதென்றே உபதேசித்துக் கொண் டிருக்கின்றது. அக்கால முஸ்லிம்களுள் ஒரு சிலர் பகலெல்லாம் நோன்பு நோற்றலே அவசிய மென்றும், இரவெல்லாம் (தாங்கள் மணம்புரிந்து கொள்ளாமலே யிருந்து) ஆண்டவனுக்கு ஓயாது வணக்கம் புரிந்துவருவதே தேவை யென்றும் தீர்மானித்திருந்த செய்தி கேட்டு, நபிகட்டிலகம் (சல்) இவ்வாறு கூறினுர்கள்: '' நான் நோன்பு நோற்கிறேன்; அதனைத் திறக்கிறேன். நான் வணக்கம் புரிகிறேன்; தூங்கவும் தூங்குகிறேன். மேலும், மணங்களும் பல புரிந்துள்ளேன். எனவே, எவனேனும் எனது 'ஸுன்னத்'தை—என்வழியை—யல்லது, வேறு வழியினைக் கடைப்பிடிக்க நாடுவனுயின், அ(ப்படிப்பட்ட)வன் என்னி

---

*ஏழையென்னுங் காரணத்தால் எவரும் மணமுடிக்கா திருக்கத் தேவை யில்லை. என்னெனின், அல்லா(ஹ்) சொல்லுகிருன், அன்னவன் '' தன் கடாக்ஷத்தினின்று (பணத்) தேவையை விட்டு அன்னவர்களை வெளியேற்றி வைப்பேன் '' என்று. திருமண மென்று கூறிப் பிச்சையெடுத்துப் பணந்திரட்டத் தேவை யில்லை. நபி பெருமான் (சல்) ஒருமுறை ஒரு கரும்பொன் (இரும்பு) மோதிரங்கூட இல்லாத ஒரு மனிதனுக்கு மணமுடித்து வைத்தார்கள் (பு'க'ா. 67 : 16).

னத்தைப் பின்பற்றியவ னுகான் " (பு' க'ா . 67 : 1). இனி யொரு ந. நா. வாக்கியமும் விவாகத்தை இவ்வாறு வலி யுறுத்தி யிருப்பது நோக்குக : " ஏ இளங்காளைக் கூட்டத் தினர்காள் ! ஒரு மனைவியை ஆதரிக்க உங்களுள்ளே எவ னொருவனுக்கு வழிவகை யிருக்கிறதோ, அவன் மணம் புரிந்துகொண்டே தீரவேண்டும் ; என்னெனின், இது— (இக்கல்யாணம்) பார்வைகளைக் கீழ்நோக்கிக் கவிழ்த்துக் கொள்ளவும், கற்பினைத் தற்காத்துக் கொள்ளவும் சரியான உபாயமா யிருக்கிறது. இன்னம், மணமுடித்துக் கொள்ள வழிவகையில்லா ஒருவன் நோன்பு நோற்கக் கடவன் ; என் னெனின், இது விதையடிப்பதே போன்ற வேலையைச் செய் யும்" (பு'க'ா. 67 : 2). பிரம்மசரிய வாழ்க்கை— 'தப'த்துல் — அறவே கூடாதென்று நபிபெருமானுல் கண்டிக்கப்பட் டுள்ளது (பு'க'ா. 67 : 8). இனி யொரு 'ஹதீ':து, " மணமுடித்துக் கொள்ளும் மனிதன் தனது சமய (மத)த் திலே சரிபாதியைப் பரிபூரணமாக்கியவனு யிருக்கிறுன் " (மிஷ்காத் 13 : 1–iii) என்று கூறியுள்ளது ; இன்ன மொரு 'ஹதீ':து, " திருமண சம்பந்தங்கள் வேறெதனைக் காட்டினும் நட்பினை அபிவிருத்தியடையச் செய்து வைக் கின்றன " (ஷை) என்று எடுத்தோதியுள்ளது.

ஒரேசத்தான ஈரியற்கைகள் ஒன்று யிணை வதே திருமண மாம்.

:குர்ஆன் ஷரீ'ப் திருப்பித் திருப்பி, ஆணும் பெண்ணு மாய இணை (ஜோடி) ஒன்று இனியொன்றி லிருந்தே தோன்றியிருக்கிற தென்று விளக்கிக் கூறி யிருக்கிறது : " ஏ மானிடர்காள் ! ஒரே ஜீவ னிலிருந்தே உங்களைப் படைத்து, அதன் இணையையும் அதே சத்தினின்றே சிருஷ் டித்து, அவர்களிருவரி னின்றுமே அநேக ஆண்களையும் பெண்களையும் பரத்தி வைத் திருப்பவனுகிய உங்கள் ரக்ஷகனுக்குச் செலுத்த வேண்டிய உங்களுடைய கடமையிலே சர்வ ஜாக்ரதையா யிருந்து கொள்ளுங்கள் " (:குர். 4 : 1). " ஒரே ஜீவனிலிருந்தே உங்களைப் படைத்து, அதினின்றுமே அவனுடைய இணை — (ஜோடி)யையும், அவன் அவள்பால் சார்ந்துநிற்கும் பொருட்டு, உண்டுபண்ணி யிருப்பவன் அவனேதான் " (7 : 189). " இன்னம், அல்லா(ஹ்) உங்களி னின்றே— **மின் அன்'புஸி(க்)கும்**— உங்களுக்காக (உங்கள்) மனைவி யரை உண்டுபண்ணி யுள்ளான் ; மேலும், உங்கள் மனைவி

யரிடத்திருந்து உங்களுக்குக் குமாரர்களையும் குமாரிகளை யும் கொடுத்துள்ளான்'' (16 : 72). "இன்னம், அன்ன வனுடைய அடையாளங்களி லொன்று, உங்களினின்றே— மின்அன்'புஸி(க்)கும்— உங்களுக்காக, நீங்கள் அவர்களி டத்தில் மனச்சாந்தியைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு, ஜோடிகளை அவன் சிருஷ்டித்திருப்பதே யாகும்'' (30 : 21). "வானங்களையும் பூமியையும் நூதனமாக உற்பத்தி செய் திருப்பவன்! அவன் உங்களினின்றே உங்களுக்காக ஜோடி களைச் (சிருஷ்டி) செய்துளான்......அதைக் கொண்டு உங் களைப் பல்கச் செய்து'' (42 : 11). எனவே, :குர்ஆன் ஷரீ 'பின் பிரகாரம் திருமணமென்பது, தங்கள் சத்திலே சாராம் சத்திலே ஒரே மாதிரியா யிருக்கும் ஈராத்மாக்கள் ஒன்று சேர்ந்து இணைவதா யிருக்கிறது என்பது மிகத் தெளிவு.

*திருமணத்தின் வாயிலாய் மானிட இனப் பெருக்கம்.*

மீக்கூறிய ஆயாத்களைக் கூர்ந்து கவனிக்கின், மானிட இனப்பெருக்கம் திருமணத்தின் ஒரு முக்கிய நோக்கமா யிருந்து வருவது அறியக் கிடக்கும். மானிடனல்லாத ஏனைப்பிராணிகளிடத்துக் காணப்படுவதே போன்று, இம்மனிதனிடத் தும், மணமில்லாமலே இனவிருத்தியைச் செய்து கொள்ள இயலாதா? என்று சிலர் குயுக்தியான கடாவினை விடுக்கத் துணியலாம். அஃதா வது, ஒரு மனிதனை ஒருத்தியின் கழுத்திலே கட்டிப்பிணைக் காமலே ஜனுபி விருத்தியைப் பெருக்க முடியாதா? என்று வினவுவர். பெருக்கலாம்; தாராளமாய்ப் பெருக்கலாம். மனித னென்பான் அப்பொழுது இம் **மனித இனத்திலே** யில்லாது, ஏனை மிருகங்களின் இனத்திற்கு இழிந்திடுதல் வேண்டும்; அதுகாலை வனவிலங்குகளுக்கும் இவனுக்கு முள்ள உயர்வு தாழ் வெல்லாம் கல்லி யெறியப்பட்டுப் போதல் வேண்டும்; நாகரிகம், சமுதாய வாழ்க்கை, ஒரு வனுக்குத் தன்னுடைய கடமைகளிலும் ஏனையவர்களுக் குரிய உரிமைகளிலும் கவனம் செலுத்தல், அவரவ ருடைமை அவரவருக்கே உரித்தாய தென்னும் ஆசாரக் கட்டுப் போன்றனவை யெல்லாம் அதுபொழுது இல்லா தொழிந்திடுதலே வேண்டும். நாகரிகம், சமுதாயக்கட்டு, சொந்தச் சொத்து என்பனவெல்லாம் இல்லாதொழிந்து போய் விடுங்கால், இந்நானிலத்தில் "மனிதன்'' என்பான் இல்லாது போய், எங்குப் பார்த்தாலும் இருகால் மிருகங்

களே மல்கிக் காணப்படும். அதுகாலை அந்த நாற்கால் மிருகங்களால் விளையக்கூடிய தீமையினும் மாகொடிய — பெரும் பெரும்— தீமைகளே இந்த இருகால் மிருகங்களால் விளைந்திடுதல் சரதமே யாம். மானிட இனத்தின் அடிப்படை யுண்மை யளவைக்கருவியா யுள்ள குடும்பம், நாகரிகமென்னும் நல்லொழுக்கத்தை ஒழுங்குடனே இறுகப் பிணைத்து வைத்திருக்கும் முதற்பிணிப்பாகிய குடும்பம் சரியான மணவாழ்க்கையின் மீதே சார்ந்து நிற்பது வெளிப்படை. திருமண மின்றேல், ஒரு குடும்பமு மில்லை; குடும்ப மின்றேல், மானிட நாகரிக மில்லை. எவ்வாறெனின்: திருமண மில்லை யெனின், குடும்பமே யில்லை ; குடும்பம் இல்லையெனின், சொந்த மனைவி மக்களே யில்லை ; சொந்த மனைவி மக்கள் இல்லா விட்டால், உறவின் முறையினர் இல்லாமலே ஒழிந்து போய் விடுவர் ; உறவென்பது இல்லா தொழிந்து போகுங்கால், மானிட இனத்தவர் ஒருவருடனொருவர் ஒன்றித்துவாழ இடம் — இன்றியமையா அவசியம்— ஏற்படமாட்டாது. அப்பால் சமுதாயமேது? சர்வ நாகரிகம் ஏது? எனவே, திருமண மென்பதே குடும்பக் கூட்டரவையும், அதன் வாயிலாய் உலக நாகரிகத்தையும் உண்டுபண்ணி வைக்கின்றது என்றறியக் கடவீர்கள்.

## பிரிவு 2.— சட்ட சங்கடங்கள்

இஸ்லாத்துக்கு முற்பட்டுள்ள காலத்தில் தாற்காலிக திருமண மென்பது அரபிகளின் அனுஷ்டானத்திலே (அ'மலில்) இருந்து வந்தது. அதனை முத்ஆ' (“ஒன்றைக் கொண்டு இலாப மடைதல்”, அல்லது “அதனை அனுபவித்தல்”) என்று அவர்கள் அழைத்து வந்தார்கள். இந்த முத்ஆ' மணத்தை யன்றி, அக்காலத்தில் இன்னம் நான்கு வித ஆண்-பெண் கூட்டுறவுகளும் அந் நாட்டிலே அனுஷ்டிக்கப்பட்டு வரலாயின : (பு'க'ா. 67 : 37). இவற்றுள்ளே முந்தியது, ஒரு கணவனும் மனைவியும் நிரந்தரக் கல்யாணம் நிகழ்த்திக் கொள்வது; இதுவே சிற்சில சீர்திருத்தங்களுடனே இஸ்லாத்தின் திருமணமாய் மாறிவிட் டிருக்கிறது. இரண்டாவது வகை, இஸ்திப்'ல'ாஃ'—(இது பி'ல்'ஃ' என்பதிலிருந்து தோன்றியுள்ளது) ; “ஒரு வியாபாரம் செய்யப் போதுமாயுள்ள

தாற்காலிக திருமணம் தடுக்கப் பட்டுள்ளது.

பொருள் ; இது செல்வத்தின் ஒரு பகுதி, அல்லது பெரும் பகுதியா யிருக்கும்,'' என்பது அதன் அசல் தாத்பரியமாம் —(மு. ரு.). இத்திருமண விவரம் இவ்வாருகுமென இமாம் பு'க'ரீயும், மற்றும் பல பேராசிரியர்களும் இயம்பியுள்ள தாவது : '' ஒரு கணவன் தன் மனைவியைப் பார்த்து, ' நீ இன்னுனை அழைத்து, அவனுடனே வீடுகூடக் கடவாய்,' என்று கூறுவான் ; அப்பால் அக்கணவன் அவளைவிட்டு விலகி நிற்பான் ; அவள் அச் சோரநாயகனைக் கொண்டு கர்ப்பதான மடைந்துவிட்டா ளென்பதைத் தெள்ளத் தெளியும் வரை அவளை அந்தச் சொந்தக் கணவன் கையாலும் தீண்டான் '' (பு'க'ா. 67 : 37; நிஹாயா). இதுவேதான் ஹிந்துமத சீர்திருத்தவாதிக ளெனத் தங்களைப் பெருமையுடனே அழைத்துக் கொள்ளும் ஆரியசமாஜிகளின் '' நியோகம் '' என்பதா யிருக்கிறது. மூன்ருவது விதம் இது வாகும் : அஃதாவது, ஒரு நங்கை பத்துப் பேருக்குக் குறைவான எண்ணிக்கையுள்ள புருடர் களுடனே வியபிசாரம் புரிவாள் ; அவள் அவர்களால் கர்ப்பமுற்றுக் குழந்தையையும் பெற்றுவிட்ட பின்னர்த் தன் சோர நாயகர்களை யெல்லாம் வரவழைத்து, '' உங்களுள்ளே இன்னுன்தான் இச் சிசுவின் தந்தை,'' என்று சொல்லுவாள். அவன் அவளது சொல்லுக்குக் கட்டுப்பட்டு, அக்குழந்தைக்குத் தந்தையா யிருத்தற்குரிய சுமைகளைச் சுயமே ஏற்றுக்கொண்டு விடுவான். நான்கா வதாகப் பொது (விலை) மகளிரும் இருப்பர் ; இவர்கள்பால் எல்லாரும் அண்மலாம். அத்தகைய வேசி யொருத்தி ஒரு குழந்தையை ஈன்று விடுங்கால், அவள் :காஇ'ப்— அடையாளம் கண்டுபிடிப்பவன்— என்பானிடம் போய்த் தெரிவிப்பாள் ; அவன் அச்சிசுவின் அங்க அடையாளம் எவனுடைய அடையாளங்களை நிகர்த்துநிற்கிற தெனக் கண்டு பிடித்துக் கூறுவான் ; அந்தக் :காஇ'பின் தீர்ப்பே முடிவானது ; இதற்கு எல்லாரும் கட்டுப்படுவார்கள். இந்த இறுதி மூன்றுவித '' மணமும் '' ஏதோ ஒருவகையில் சட்ட பூர்வமாய் அனுமதியளிக்கப் பெற்றுள்ள வியபிசாரமா ('ஜிஞவா)கவே இருந்துவந் திருக்கின்றன. இவற்றிலே ஏதொன்றையும் இஸ்லாம் ஏற்கவில்லை; எந்தக் காலத்திலும் எத்தகைய உண்மை முஸ்லிமும் இம் மூன்றி லொன்றை மேற்கொண் டொழுகியது கிடையாது.

தாற்காலிக திருமணம் என்பதன் நிலைமையே வேரு யிருக்கிறது; இந்த முத்ஆ' வழக்கம் இஸ்லாத்திஞல் சிறுகச் சிறுகச் சீர்திருத்தம் செய்யப்பட்டு விட்டது. ஆயின், இதுபொழுது சமீபகாலமாக மேஞடுகளில் இத் தாற்காலிக திருமணம் பரீக்ஷார்த்தமாகக் கைக்கொள்ளப் பட் டுள்ளது; கிறிஸ்துமதக் கல்யாணச் சட்டத்தின் கடுமையை விட்டுத் தப்பிப் பிழைக்கவே இந்தச் சூழ்ச்சி யுள்ளே அந்த மக்கள் நுழைந் துள்ளார்கள். இஸ்லாமோ, கல்யாணத்தில் தாற்காலிக மென்பதை இதுகாலே அங்கீகரித் தில்லே யென்பது வெள்ளிடை விலங்கலே. என்னெனின், ஆண்-பெண் சம்பந்தத்தில் ஒரு விதத் தளர்ச்சியான கட்டுப்பாட்டையே இந்தத் தாற்காலிக திரு மண மென்பது கொண்டுவந்து நுழைக்கவல்லதா யிருப் பது தெளியக் கிடக்கின்றது. "என்றைக் கிருந்தாலும் இவளே— இந்த முத்ஆ'வை— விட்டுப் பிரியத்தான் போகி ருேமே" யென்னும் இலேசான எண்ணத்தால் அந்தத் தந்தை தான் பெற்ற குழந்தைகளேப் பராமரித்துப் பாது காப்பதிலே அலக்ஷிய புத்தியுள்ளவஞகவே யிருந்துவரு வான். ஆகவே, அவன் தன் மக்களேயும் அவர்களின் அருமை மாதாவையும் சந்தியிலே அலேயவிட்டு, அடையாளம் கண்டுபிடிக்க இயலாத இடத்திற்குச் சொல்லாமலே ஓடிப்போய் விடலாம். தாற்காலிக மல்லாத நிரந்தர கல் யாணத்திலும் விவாக விமோசனம் நேர்வதுண்டு; மானிட இயற்கை இருந்துவரு நிலேயிலே கட்டியதாலியைக் கணவ னிருக்கையிலேயே கத்தரித்து விடவேண்டிய அவசரம் அடிக்கடி நிகழலாம்; ஆஞல், இதற்குரிய நேரான, ஒழுங் கான வழி 'தலா:க்கேயல்லது, தாற்காலிக திருமணமன்று. திருமணத்திலே ஒருமுறை "தாற்காலிகம்" என்பதைக் கொணர்ந்து நுழைத்து விடுவோ மாயின், அக்கணமே அந்த மணத்துக் குரிய அழகிய பரிசுத்த முழுவதும் அடிபட்டுப் போய்விடுகிறது; அவ் விவாகத்திஞல் விளே யக் கூடிய கடமைகளும் உரிமைகளு மெல்லாம் அலக்ஷிய மாய்க் கைகழுவி விடப்பட்டு விடுவது கண்கூடு. இஸ்லாத் தின் திருமணத்திலே கணவனும் மனேவியும் ஏற்றுக் கொள்ளும் கடமைகளேயும் உரிமைகளேயுங் கொண்டே :குர்ஆன் மஜீத்' இதற்கு இத்துணேப் பெரிய மகிமையை யும் மனப்பூர்வமான சட்ட அங்கீகாரத்தையும் அளித்து வைத் திருக்கிறது. எனவேதான், தாற்காலிக திருமணம்

நந் திருமறையின் கருத்துக்கு நேர்முரண்பட்டுள்ள தென நாம் நன்குணர வேண்டியவர்களா யிருக்கிறோம். இன்னம், ஆண் பெண் இருபாலாரும் நிரந்தரத் திருமணத்தா லேற்படும் கடமைகளையும் உரிமைகளையும் உள்ளவாறு உணர்ந்து கொண்டே அம் மணவினையுள் நுழைவதனால் தான் அஃது **இ'ஹ்சான்**— கல்யாணம்— என்றழைக்கப் பட்டு வருகிறது. அவ்வாறு அக் கடமைகளை யேற்றுக் கொள்ளாது, வெறு மிருக இச்சைக் கென்றே ஓராணும் ஒரு பெண்ணும் ஒன்றுகூடுவது **ஸி'பா'ஹ்** (வியபிசாரம்) என் றழைக்கப்படுகிறது; ஸி'பாெ'ஹன்பது **ஸி'ப்'ஹ்**— (தண்ணீரை, அல்லது இரத்தத்தைக் கொட்டுதல், அல்லது சிந்துதல்) என்பதி லிருந்து பிறந் திருக்கிறது. [:குர் ஆனெகரீம் **இ'ஹ்சானை** அனுமதித்தும், **ஸி'பாை'ஹத்** தடுத்துவிட்டும் இருக்கிறது.]

முத்ஆ' அடியுடனே தடுக்கப்பட்ட காலங் குறித்து 'ஹதீ':துகளில் சிறிது குழப்பமே காணப்படாநின்றது. முத்ஆ'வின் சார்பாயுள்ள அத்தியாயத்திற்கு இமாம் பு'க'ாரீ இவ்வாறு தலையங்கம் கொடுத்துள்ளார்: "முத்ஆ'வை நபிகளுயகர் இறுதியாய்த் தடுத்துவிட்டது." இத் தலைப்பின் கீழே இந்தப் பெரிய இமாம் முதலில் ஒரு 'ஹதீ'ை:த வரைந்து வைத்துள்ளார்; அஃது அ'லீ (றலி) அவர்களால் இப்'னு அ'ப்'ப'ாஸுக்கு (றலி) அறையப்பட்டதாகும்: கை'ப'ர் படையெடுப்பின் காலத்தில் முத்ஆ'வையும், வீட்டுக் கழுதைகளின் இறைச்சியைப் புசிப்பதையும் நபி பெருமான் (சல்) தடுத்து விட்டார்கள் என்பதே அந்த ந. நா. வாக்கியம் (பு'க'ா. 67 : 32); அப்பால் அவ்விஷயம் இவ்வாறு தொடர்ந்து செல்கிறது: முத்ஆ' செய்துகொள்ளலா மென்று (ஆதியிலே) அனுமதிக்கப் பட் டிருந்தது, சங்கட காலத்திலும் பெண்மணிகள் மிகவும் அருகிக் காணப்பட்ட பொழுதுந் தானேயென்று வினவப் பட்டக்கால், இப்'னு அ'ப்'ப'ாஸ் ஆமென்று விடை கொடுத் தார் (ஷை). இனி 3-ஆவது 'ஹதீ':து ஸல்மா இப்'னு அக்வஃ' என்பவரால் கூறப்பட்டிருக்கிறது: இவர்கள் ஒரு படையெடுப்பி லிருந்தபொழுது நபிகள் திலகத்தின் தூதுவ ரொருவன் வந்து, இன்னுரெல்லாம் தாற்காலிக திருமணம் புரிந்துகொள்ள அனுமதி யளிக்கப்பெற் றுள்ளார்களென்று கூறினன் என்பது அந்த ந. நா. வா. இதன் இறுதியிலே

இமாம் பு'க'ரீ, " இது ரத்து செய்யப்பட்டு விட்ட" தென நபிகட் டிலகத்தின் செய்தியைக் கூறி, "அ'லீ (றலி) செவ்வனம் விளக்கஞ்செய்து விட்டார்கள்," என்று எழுதி வைத்துள்ளார் (ஷெ). ஸப்'ராவினல் கூறப்பட்டுள்ள இரு 'ஹதீ':துகளை அபூ'த'ரவூத்' எடுத்தெழுதி யுள்ளார் : இவற்றுள் முந்தியது, நபி பெருமானர் தங்களிறுதி 'ஹஜ்ஜின் ஆண்டிலே (ஹி. 10) முத்ஆ'வைத் தடைசெய்து விட்டார்க ளென்று தெரிவிக்கின்றது ; இரண்டாவது 'ஹதீ'ஃதோ, வெறுமையாய் முத்ஆ'வை அப் பெருமானர் தடுத்துவிட்டார்க ளென்று கூறிக்கொண் டிருக்கிறது (அபூ'த'ா. 12 : 13). இவ்விரண்டிலும் முத்ஆ' எப்பொழு தேனும் அனுமதிக்கப்பட் டிருந்ததென ஏதும் கூறப் பட் டில்லை. "முஸ்லிம்" கிரந்தத்திலே, ஒன்றுக்கொன்று மாருயுள்ள அநேக 'ஹதீ':துகள் காணப்பட்டு வருகின்றன. சிற்சில அவசர சந்தர்ப்பங்களில் முத்ஆ' அனுமதிக்கப் பட் டிருப்பினும், இறுதியிலே அது தடுக்கப்பட்டு விட்ட தென்றே இக் கிரந்தாசிரியரும் ஒத்துக்கொண் டுள்ளார் (முஸ். 16 : 3).

இதன் சார்பாயுள்ள 'ஹதீ':துகளை யெல்லாம் அலசிச் சீர்தூக்கிப் பார்க்கு மிடத்து, பற்பல சந்தர்ப்பங்களில் முத்ஆ'ப்பழக்கம் தடுக்கப்பட் டுள்ளதென்னும் உண்மையே வெளியாகின்றது. அ'லீ (றலி)யின் கூற்றுப்படி, முதன் முதலாக, முத்ஆ' கை'ப'ர் படையெழுச்சியின் காலத்திலே தடுக்கப்பட் டிருக்கிறது ; இரண்டாவதாக, அல் :கல'ா என் றழைக்கப்படும் உ'ம்ருவின் சமயத்திலே தடுக்கப் பட் டுள்ளது; மூன்ருவதாக, மக்கமாநகர் பிடிபட்டபொழுது தடைசெய்யப்பட் டுள்ளது ; நான்காவதாக, அவ்த்தாஸ் படையெடுப்பின் பொழுதும், ஐந்தாவதாகத் தபூ'க் படை யெழுச்சியின் பொழுதும், ஆருவதாக, நபிகளுைதரின் இறுதி 'ஹஜ்ஜின் பொழுதும் தடுக்கப்பட் டிருக்கிறது. எனவே, ஹி. 7-ஆவ தாண்டின் தொடக்கத்திலே நடை பெற்ற கை'ப'ர் படையெடுப்பின் போதுதான் முதன் முதலாக முத்ஆ' தடைசெய்யப்பட் டுள்ளதென்பது தெளிய வரும். உ'ம்ரு (அல் :கல'ா)வும் அதே 7-ஆவதாண்டிலேயே நடைபெற்றிருக்கிறது. ஏனைச் சம்பவங்களெல்லாம் ஹி. 8, 9,10-இலேதான் நடைபெற் றுள்ளன. இமாம் பு'க'ரீ இயம்பி யிருப்பதே போன்று,— இந்த 'ஹதீ':து இந்த

இமாமால் நான்கு முறை மடக்கி மடக்கி நவிலப்பட்டுள்ளது— 'ஹ'ஜ்ரத் அ'லீ (றலி) அவர்களது ஆதாரத்தைக் கொண்டு ஹி. 7-இலே முத்ஆ' தடைசெய்யப்பட் டிருக்க, அதற் கப்பாலே அஃது அனுமதியளிக்கப்பட் டிருத்தல் சாத்திய மில்லை. ஆனாலும், ஹி. 8-இலே அந்த முத்ஆ' அனுமதிக்கப்பட்ட தென்று ஒருசில செய்திகள் அறிவித்துக்கொண் டிருக்கின்றன ; இதில் ஏதோ தவறிருக்க வேண்டு மென்பதுதான் புலனாகின்றது. இவ்வாறு காணப்படுவதற்குக் காரணங் கூற முற்படுகிறவர்கள், இறுதியாக அப்பழக்கம் நிறுத்தப்படு முன்னே ஹி. 7-இல் தற்கால சாந்தியாய் நிறுத்தப்பட் டிருக்கலாம் என்று யுக்திவாதம் கூறுகிறார்கள். இது புத்திக்குப் பொருந்தா திருப்பதுடன் கூட, இஸ்லாத்தினால் கொண்டு வந்து நுழைக்கப்பட்ட சீர்திருத்த சரித்திரத்துக்கும் நேர்மாறாகவே யிருந்துவருகின்றது. அரப் நாட்டிலே யிருந்துவந்த தீமைகளை நபிகள் திலகம் தங்களுக்கு ஆண்டவனிடத் திருந்து வ'ஹீ வந்த பின்னரே தடுத்து நிறுத்துவது வழக்கமா யிருந்தது. எனவே, ஒருமுறை இறைவனது கட்டளை வந்து, நபி பெருமான்(சல்அ'ம்) அந்த முத்ஆ'வைத் தடுத்துவிட்ட பின்னர், எவ்வாறு அக் கொடிய பழக்கத்துக்குத் தாங்களாகவே அப்பால் அனுமதியளித்திருத்தல் கூடும்? இவ்வாறு செய்வது அம்மகானுக்கு அழகாமோ? இதில் ஏதோ, பின்னால் கூறிய ராவீயின் கூற்றிலே தவறிருத்தல் வேண்டும். அல்லது கை'ப'ருக்குப் பிறகும் ஒரு சில முஸ்லிம்கள் முத்ஆ'வை விடாதே அனுஷ்டித்திருத்தல் கூடும் ; ஆகவே, அக் கொடிய மாபெருந் தீமையை யொழிக்க நபிபெருமான் (சல் அ'ம்) அடிக்கடி மடக்கி மடக்கி வற்புறுத்திக் கூறி யிருத்தல் வேண்டும். அல்லது அனைவர்க்கும் அம் முதலுத்தரவு (ஹி. 7-இன் கட்டளை) எட்டாது போயிருத்தல் கூடும்.

எஃது எவ்வா றிருப்பினும், அவ்த்தாஸ் யுத்தகாலத்தில் (ஹி. 8-இலே) முத்ஆ' செய்து கொள்வது கூடுமென்று நபிகநாயகர் (சல்அ'ம்) அனுமதி கொடுத்தார்க ளென்று கூறுவதில் ஏதோ தவறிருப்பதாயே அறியக் கிடக்கின்றது. என்னெனின், அன்றுவரை நபிபெருமானால் முத்ஆ' தடுக்கப்பட்டுவிட்ட தென்னும் விஷயமறியா திருந்த ஒரு ச'ஹாபி'யால் அது கூடுமென்று கூறப்பட் டிருத்தல் வேண்டும். இன்றேல், கை'ப'ரின்பொழுதே முத்ஆ' கூடா

தென்று கட்டளையிட்டிருந்த நபிகட்டிலகம் எவ்வாறு பிறகு அவ்த்தாஸின்பொழுது அதனை அனுமதித்திருத்தல் கூடும்? இஃது எம் பெருமானாருக்கு ஏற்றசெய்கை யன்றே! நபி பெருமானார்(சல்) மடக்கிமடக்கித்தடைசெய்திருந்தும், ஒரு சிலர் 'ஹ'ஜ்ரத் உ'மரின் (றலி) காலம் வரைகூட முத்ஆ' கூடுமென்றே கொண்டு நின்றார்கள்; ஆதலினால், அந்த இரண்டாவது க'லீ'பா ஓர் அரசாங்க அறிக்கை வாயிலாய்த் தாற்காலிக திருமணம் இஸ்லாத்தினால் தடுக்கப்பட்டுள்ள தென்று பிரகடனப் படுத்த வேண்டிய அவசரத்துக் குள்ளாயவ ராயினார்கள் (முஸ்லிம் 16 : 3). இனி யொரு காரியமும் கவனிக்கப் படுதல் வேண்டும்: முத்ஆ' செய்துகொள்ளலா மென்பாருங்கூட, அஃது இல்':திரார் என்பதையே சார்ந்துநிற்கிற தென்றும், அவசியத்துள் சிக்கிவிடுங்கால் விலக்கப்பட்ட ('ஹராமான) ஆகாரங் களை உட்கொள்வதே போன்ற அந்தஸ்திலேயே அஃதிருந்து வருகிற தென்றும் கூறியுள்ளார்கள் (பு'க'ா. 67 : 32; முஸ். 16 : 3). நிர்ப்பந்தத்தின் கீழே முத்ஆ' செய்து கொள்ளலா மென்று கூறுவது, கட்டாயத்தின் கீழே 'ஹராமான ஆகாரங்களைப் புசிப்பது போன்ற (தடுக்கமுடியாத)தென்று கூறுவதே போன்றதன் றென்பது வெளிப்படை; என்னெனின், முத்ஆ' :குர்ஆன்மஜீதி'ன் கொள்கைக்கும், நபி பெருமானது வெளிப்படையான கட்டளைக்கும் நேர் முரணாகவே யிருந்துவருவது கண்கூடு. அக்'ப'ாரீ ஷீஆ'க்க ளென்னும் ஒரு பிரிவினரைத் தவிர்த்து, ஏனை எல்லா ஸுன்னீகளும், ஷீஆ'க்களும் தாற்காலிக திருமணத்தைச் சட்டவிரோத மென்றே கொண்டுள்ளார்கள்; அக்'ப'ாரீ களுங்கூட முத்ஆ'வை ஒரு கண்ணியமுள்ள காரியமாய்க் கருதியிருக்க வில்லை.*

---

* சையித்' அமீரலீ தமது "முஹம்மடன் லா" என்னும் நூலில் இவ்வாறு எழுதுகிறார்: "தகப்பனற்ற ஒரு கன்னிகையை முத்ஆ' முறைப்படி மணப்பது உண்மையிலே தடுக்கப்பட்டிராமற் போயினும், மகா சகிக்கமுடியாத செயலென்றே கருதப்பட்டு வருகிறது......இதற்குக் காரணம், அப்படிப்பட்ட திருமணம் அவளுக்கு விரோதமான செய்கையாகவே யிருந்துவருவது தா னாகும்; இக் காரியத்தில் அவளுக்குத் தந்தையின், அல்லது 'கார்டிய'னின் 'புத்திமதி' இல்லையல்லவா? ஆதலால், அவள் தாற்காலிக கூட்டரவுக்கு இழிவுறுமாறு வற்புறுத்தப் படுவது கூடாது."

மணமுடிக்கத் தகாத ('ஹராமான) வர்கள்.

" உங்கள் (சொந்தத்) தாய்மார்களும், உங்கள் (சொந்தப்) புத்திரிகளும், உங்கள் (சொந்தச்) சகோதரிகளும், உங்கள் (தந்தைவழி) அத்தைமார்களும், (உங்கள் தாய்வழிச் சிறிய) பெரிய அன்னைமார்களும், (உங்கள்) சகோதரர் புத்திரிகளும், (உங்கள்) சகோதரிகளின் புத்திரிகளும், உங்களுக்குப் பாலூட்டிய உங்கள் (போஷகத்) தாய்மார்களும், பால்குடி முறையாலேற்பட்ட உங்கள் சகோதரிகளும், உங்கள் மனைவிமாரின் மாதாக்களும், உங்கள் மனைவிமாருள் எவர்களுடனே நீங்கள் வீடுகூடியிருக்கின்றீர்களோ, அப்படிப்பட்ட பெண்கள்பாலிருந்து (வேறு புருஷருக்குப்) பிறந்து, உங்கள் பாதுகாப்பிலேயிருந்துவரும் உங்கள் (வளர்ப்புக்) குமாரிகளும்,— ஆனால், அவர்களுடனே நீங்கள் வீடுகூடவில்லை யாயின், (அன்னவர்களின் அக்குமாரிகளை மணந்துகொள்வது) உங்கள்மீது குற்றமில்லை ;— உங்கள் முதுகந் தண்டிலிருந்து உண்டாய உங்கள் சொந்த மைந்தர்களின் மனைவியரும், இரு சகோதரிகளை நீங்கள் ஏககாலத்தில் மனைவியரா யேற்றுக் கொள்வதும், இதற்கு முன்னே சென்றுபோனதை யன்றி, — உங்கள் வலக்கரங்கள் உடைமையாக்கிக் கொண்டவர்களைத் தவிர்த்து, எல்லா மணமுடிக்கப் பெற்றுள்ள (மாங்கல்யப்) பெண்டுகளும் உங்களுக்கு (விவாகத்தினின்று) விலக்கப்பட் டிருக்கிறார்கள் " (:குர். 4 : 23, 24).

இஸ்லாத்திலே திருமணத்துக்குத் தகாதவர்களெனத் தடுக்கப்பட்டிருப்பவர்கள் மூவகையினராவார்கள் : முதலாவதாக, (a) உதிரக் கலப்புள்ள உறவினராவர் ; உதாரணமாக, பெற்றதாய், பெற்ற பெண், உடன்பிறந்த சகோதரிகள், சகோதரி சகோதரர் குமாரிகள், தந்தையுடன் பிறந்த அத்தைமார், தாயுடன் பிறந்த சிற்றன்னை பேரன்னைமார் ஆவார்கள் ; இரண்டாவதாக, (b) பால்குடி முறையா லேற்பட்ட புதிய சம்பந்தமுள்ளவர்கள் ; உதாரணமாக, பால் கொடுத்த போஷகத் தாய், அவள் வயிற்றுப் பெண் ஆகியோராவர் ; மூன்றாவதாக, (c) பந்துத்துவத்தா லேற்பட்ட உறவினர்கள் ; உதாரணமாக, மனைவியின் மாதா, மனைவியின் (முன்கணவருக்குப் பிறந்துள்ள) மகள், மகனுடைய மனைவி ஆகியவர்களா யிருக்கிறார்கள். 'பி : க் ஹ் சட்டத்தில் இந்த 'ஹராமான உறவு முறைகளில் ஒருசில விரித்

துக் கூறப்பட் டிருக்கின்றன ; "ஹிதா'யா "வி லேயே விவரிக்கப்பட் டுள்ளவற்றைக் காண்க :

1. தாய்மார் என்பவர், தந்தை வழியிலும் தாய்வழி யிலும் முந்திய மாதாக்களாக— தந்தையின் தாய், தாயின் தாய் போன்றவர்களாக— இருப்பவர்களை யெல்லாம் உள் ளடக்கிக்கொண் டுள்ளார்.

2. புத்திரிகள் என்பவர்கள், மகன் வயிற்றுப் பெண், மகள்வயிற்றுப் பெண், இன்னம் இந்தச் சந்ததியில் தோன் றும் எல்லாப் பெண்கள் ஆகிய அனைவரையும் உள் ளடக்கிக்கொண் டுள்ளார்கள்.

3. தந்தையின் சகோதரிகளிலும், தாயின் சகோதரி களிலும் இவர்கள் வயிற்றுப் பெண்கள் சேரமாட்டார்கள் ; ஆனால், பாட்டனுடைய சகோதரிகளும், பாட்டியுடைய சகோதரிகளும் சேர்வார்கள்.

மேலே கூறப்பட்டுள்ள 'ஹராமானவர்களில் இரண் டாவது (b) வகையிலேதான் பால்கொடுத்த தாய்மார்களும், அவர்கள் பெற்ற பெண்களும் சேர்வார்கள். பால்குடி முறையா லேற்பட்ட தாய்மாரையும், பால்குடி முறைச் சோதரிகளையும் மட்டுமே :குர்ஆன் ஷரீ'ப் கூறியுள்ளது ; ஆயின், நாயகத்தின் 'ஹதீ':து அதனை நன்கு விளக்கி விட் டிருக்கிறது : உதிரக் கலப்பு முறையால் 'ஹராமாக்கப் பட்டுள்ள உறவினரைப் போன்றவர்க ளெல்லாம் பால்குடி முறையிலும் 'ஹராமாக்கப்பட்டே யிருக்கிறார்கள் (பு'க'ா. 67 : 21). [இப் பொதுவிதிக்கு 21 விலக்கு விதிகள் உண் டென்று "து'ர்ருல்முக்'தாரில்" காணப்படுவதாக அமீரலீ அறைந்துள்ளார்.] எனவேதான், ஹ'ப்ஸாவுக்குப் பால் கொடுத்த தாயின் கணவனுடைய தம்பி :குர்ஆன்மஜீ'தின் பிரகாரம் 'ஹராமான (விலக்கப்பட்ட) உற வென்றே தடுக்கப்பட்டு விட்டார் ; இன்னம், ஹம்'ஜா(றலி) நபிபெரு மானுக்குச் சிறிய தந்தையா யிருந்துங்கூட, இருவரும் பால்குடி முறையால் சோதரர்களா யிருந்துவந்தமையால், அந்த ஹம்'ஜாவின் புத்திரி நபி பெருமானுக்கு 'ஹராமாய் விட்டார் (பு'க'ா. 67 : 21). உதிரக் கலப்புள்ள உறவு முறை யிலே பந்துக்களா யிருப்பவர்கள், பால்குடி முறையிலே முற்றும் அன்னியர்களா யிருக்க நேரலாம் ; இவ் வன்னி யருக் கிடையே விவாக சம்பந்தம் தடுக்கப்பட்டதா யிராது ;

எடுத்துக்காட்டாக, என் தம்பியைப் பெற்ற தாய் என்னைப் பெற்ற தாயா யிருக்கலாம்; அல்லது என் மாற்றுந் தாயா யிருக்கலாம். எவ்வாறாயினும், இவ் விருவரும் எனக்கு 'ஹராமே யாவர்; ஆயின், என்னுடன் பால்குடித்த ஒரு சகோதரனுடைய தாய் எனக்கு முற்றிலும் அன்னியமாய ஒரு பெண்பிள்ளையா யிருக்கலாம்; அதுகாலை எனக்கவள் தடுக்கப்பட்டவ ளாகாள்.

ரல'ாஆ' (பால் கொடுப்பது) என்பது யாதா யிருக்கிறது? என்பதிலே சிறுசிறு கொள்கை வேற்றுமை காணப் படாநின்றது; :குர்ஆன் ஷரீ'பின் பிரகாரம் ஒரு குழந்தை ஈராண்டுகள் மட்டும் பால்குடிப்பாட்டப் படலாம் (2 : 233). இதிலே எவருக்கும் அபிப்பிராயபேத மென்பது கிடையாது. ஒரு சிசு பசியா யிருக்கும்பொழுது பால்கொடுக்கப்பட்டா லல்லது ஏனை வேளைகளில் அது பால்கொடுக்கப் பட்டதா யெண்ணப்படுவது கூடாதென நபிபெருமான் (சல்) நவின் றருளியுள்ளார்கள் (பு'க'ா. 67 : 22). ஆயின், இமாம் அபூ' 'ஹனீ'பா (ரஹ்) அவர்களது அபிப்பிராயப் படி ஒரே முறையே ஒரு குழந்தைக்குப் பால் கொடுப்பதே ரல'ாஆ' வுக்குப் போதுமானதா யிருக்கிறது; ஷா'பி'' இமாம் (ரஹ்) நான்கு முறை பால்கொடுப்பதே அக் கணக்குக்குத் தேவை யென்று கூறியுள்ளார்கள்; ஷீஆ'க்களோ, ஒரு குழந்தைக்கு அல்லு பகல் 60 நாழிகையேனும் பால்கொடுத்தால் மட்டுமே ரல'ாஆ' ஏற்படுமென்று எண்ணியிருக்கிறார்கள்.

இனி விலக்கப் பட்டவர்களின் மூன்றாவது (c) வகையிலே பந்துத்துவத்தா லேற்பட்ட உறவினர் சேர்க்கப்பட்டுள்ளார்; இதிலும் 'பி:க்ஹ் சட்டம் உதிரக் கலப்பைப் போலே விளக்கம் கூறியிருக்கிறது. எனவே, மனைவியின் மாதா வென்பவள், அவளுடைய மாதாவையும், அவளுடைய மாதாவையும் உள்ளடக்கிக் கொள்ளுவாள்; இவ்வாறே மனைவியின் மக ளென்பாள், அவளுடைய மகளையும், அவளுடைய மகளையும் உள்ளடக்கிக் கொள்ளுவாள். *

* மனைவியின் மாதா எப்பொழுதுமே 'ஹராமாம்; ஆனால், மனைவியின் (முதற் புருஷன்) மகள் எப்பொழுதுமே 'ஹராமா யில்லை; இம் மனைவியுடன் இக்கணவன் வீடுகூடவில்லை யாயின், அப்பொழுது அம்மகள் இவனுக்கு 'ஹலாலே யாவாள் (:குர். 4;23).

மகனுடைய மனைவி * என்பாள், மகனுடைய மகனுடைய மனைவியையும் உள்ளடக்கிக் கொள்ளுகிறாள். மாற்றுந் தாய்கள் முதல் தாரத்தின் குமாரர்களுக்கு 'ஹராமென்றே தடுக்கப்பட் டுள்ளார்கள்: "இன்னம் உங்கள் தந்தைமார் மணந்துள்ள மாதர்களை நீங்கள் மணம் புரியாதீர்கள்," என்பது :குர்ஆன் (4 : 22). 'பி:க்ஹில் இவ்வாறு ஒரு விஷயம் காணப்படுகிறது : ஒருவன் ஒருத்தியைச் சட்ட விரோதமான முறையால் புணர்ந்துவிடுகிறான்; மனைவியின் உறவினர் இன்னாரின்னார் 'ஹராமென்று கொள்ளக்கூடிய கணக்கெடுக்கும் காரியத்தில் முற்கூறியவளும்— அந்தச் சட்ட விரோதமாய்ப் புணர்ந்தவளும்— ஒரு மனைவியே போலத்தான் கணிக்கப்பட்டு விடுகிறாள்.

இன்னம், திருமணத்துக்கு 'ஹராமாக்கப்பட் டுள்ள பெண்மணிகளுள் நான்காவதாகவும் ஒருவகை காணப்படு கிறது; அஃதாவது, ஏககாலத்தில் இரு சகோதரிகளை ஒரு சேர மணப்பதா யிருக்கிறது. இன்னம், எவரெவரையெல் லாம் ஒருமிக்கச் சேர்த்து மணப்பது கூடாதென 'ஹதீ' :துஷரீ'ப் விளக்கிக் காண்பிக்கின்றது : ஒரு பெண்ணையும் அவளுடைய அத்தையையும் ஒன்று சேர்த்து மணப்பதும், அந் நங்கையையும் அவளுடைய சிற்றன்னையையும் ஒன்று சேர்த்து முடிப்பதும் தடுக்கப்பட் டுள்ளன (பு'க'ா. 67 : 27, 28). 'பி:க்ஹ் இன்னம் இதனை விரிவடையச் செய்துள்ளது : ஒரு பெண்ணையும், அவளுடைய சகோ தரன் மகளையும், அல்லது சகோதரி மகளையும் ஒன்றாய்ச் சேர்த்து மணப்பது தகாது. ஹித'ாயாவில் இதுகுறித்து ஒரு சட்டம் கூறப்பட் டுள்ளது: எப்படிப்பட்ட இரு பெண் மணிகளை ஒருசேர மணப்பது கூடாது? எனின், அவ்விரு வருள்ளே ஒருத்தியை ஆணாக மாற்றினால், அவ்விருவரும் மணந்துகொள்வது 'ஹராமா யிருத்தல் வேண்டும்.

---

* மகனென்பான் ஒருவனுடைய விந்திலிருந்து உற்பத்தி யானவனையே குறிப்பான். எத்துணைப் பிரியத்துடனே கரிசனம் காட்டினும், வளர்ப்பு மகன் இஸ்லாத்திலே சொந்தப் புத்திரனாக மாட்டான். இஸ்லாம் ஸ்வீகாரம் எடுப்பதை அங்கீகரித்த தில்லை யென் றறியக்கடவீர்கள்.

முஸ்லிம்-முஸ்லிமல்லாதார் கலப்பு மணம்.

:குர்ஆன் ஷரீ'பால் தடுக்கப்பட் டுள்ள இனி யோர் இறுதியான தடைமுறை ஷிர்க்கா (இறைவனுக்கு இணை வைப்பதா) யிருக்கிறது: "மேலும், இணை வைத்துப் பூஜிக்கும்— விக்ரஹாராதனை புரியும்—ஸ்திரீகளை [அல்முஷ்ரி(க்)காத்தை] அவர்கள் ஈமான் கொள்ளும்வரை மணந்து கொள்ளாதீர்கள்; இன்னம், நிச்சயமாக, ஒரு மூமினை பெண் ஒரு முஷ்ரிக்கான பெண்ணைப் பார்க்கினும், இ(ப் பின்ன)வள் உங்களுக்குப் பிரியமுள்ளவளா யிருப்பினும், மேலானவளே யாவாள்; மேலும், (மூமினை பெண்களை) முஷ்ரிக்கான ஆண்களுக்கு அவர்கள் ஈமான் கொள்ளும் வரை மணமுடித்துக் கொடாதீர்கள்; இன்னம், நிச்சயமாக, ஒரு மூமினை அடிமை ஒரு முஷ்ரிக்கான ஆணைப் பார்க்கினும், இ(ப் பின்ன)வன் உங்களுக்குப் பிரியமுள்ளவனு யிருப்பினும், மேலானவனே யாவான்" (2:221). இவ்வாயத்துடனே இனியோராயத்தையும்— அஃதாவது, வேதத்தையுடைய பெண்களை மணப்பதற்குரிய திருவாக்கியத்தையும்— சேர்த்தே ஓதுதல் வேண்டும்: "இன்று எல்லாப் பரிசுத்த (நல்ல) வஸ்துக்களும் உங்களுக்கு அனுமதிக்கப் பட் டுள்ளன; இன்னம், வேதங் கொடுக்கப்பெற்ற மனிதர்களின் ஆகாரம் உங்களுக்குச் சட்டப்படி ('ஹலால்) ஆகக் கூடியதே; மேலும், உங்களாகாரம் அவர்களுக்கும்('ஹலால்) ஆகக் கூடியதே; இன்னம், மூமினை ஸ்திரீகளுள் ளிருந்து கற்புள்ளவர்களும், உங்களுக்கு முன்னே வேதங்கொடுக்கப் பெற்றவர்களி னின்றுள்ள கற்புள்ளவர்களும், நீங்கள் அவர்களை வியபிசாரம் புரியாமலும், இரகசியத்தில் அவர்களை வைப்பாக வைத்துக் கொள்ளாமலும், நீங்கள் அவர்களுக்கு அவர்கட் குரிய மஹ்ர்களைக் கொடுத்து விடுங்கால், அன்னவர்களைக் கல்யாணம் செய்து கொள்ள (உங்களுக்கு அனுமதிக்கப் பட்டவர்களே)" — (5 : 5). எனவே, இதுபொழுது விளக்கமாவது யாது? விக்கிரகத் தொழும்புள்ள பெண்களையும் ஆண்களையும் மூமினை ஆண்களும் பெண்களும் மணப்பது கூடாது; ஆனல், அல்லா(ஹ்)வின் வேதங்களை யளிக்கப்பெற் றுள்ள அஹ்லெ கி(த்)தாப்'களை — அன்னவர்களின் பெண்மணிகளை முஸ்லிம் ஆடவர்கள் மணந்து கொள்ளலாம். இத் தரணியிலுள்ள சகல ஜாதியார்களுக்கும் ஆண்டவனருள் ('வஹீ) அனுப்பப்பட் டுள்ளதென நம் :குர்ஆன் மஜீத்' வெளிப்

படையாய்க் கூறிக்கொண் டிருக்கிறபடியால் (35 : 24)— ஆனால், அரப்ஜாதியினர் மட்டுமே இதற்கு முன்னே அத்தகைய அருட்பிரசாதத்தை அருளப் பெறாது இருந்துவந்தமையால் (32:3; 36:6) அரப் கு'ப்'பார்களுடனே மட்டுமே திருமணத் தொடர்பு வைத்துக்கொள்ளக் கூடா தென்பதும், இவ்வுலகின் வேறெந்த ஜாதியின ராயினும், அன்னவர் ஆண்டவ னருளிய வேதத்தைப் பின்பற்றுவதா யிருப்பின், அவர்களுடைய பெண்மணிகளை நாம் மணந்து கொள்ளலா மென்பதும் தெற்றெனப் புலப்படக் கிடக்கின்றன. எனவே, இறைவனருளிய வேதத்தைப் பின்பற்றுவதாய்க் கூறிக்கொண்டு, விக்கிரகத் தொழும்பும் புரியாதவரை, கிறிஸ்தவர்கள், யூதர்கள், பார்ஸீகள், பவுத்தர்கள், ஹிந்துக்கள் (இவர்களுடனே ஜைனர்களும், சீக்கியர்களும் சேர்த்தே கணிக்கப்படுவார்கள்) ஆகியவர்களின் அணங்கியரை முஸ்லிம்கள் மணந்து கொள்ளலாம். கிறிஸ்தவர்கள் இயேசுவை (ஈ'ஸாவை) ஒரு கடவுளென்றும், கடவுட்குமாரனென்றும் ஒத்துக்கொண்டு வணங்கிடினும்,— இது :குர்ஆன் ஷரீ'பால் ஷிர்க்கென்றே கொள்ளப்பட் டுள்ளது ;* இவர்கள் முஷ்ரி(க்)கீன்களுடன் சேர்த்துஎண்ணப்படாது, **அஹ்லெ கி(த்)தாப்'**க ளென்றே கணிக்கப்பட் டுள்ளார்கள். எனவே, முற்காலத்தில் ஆண்டவ னருளிய ஆகமங்களை அவலம்பித்து வந்திருப்பினும், பிற்காலத்தில் விக்கிரக வணக்கத்துள்ளே வீழ்ந்துகிடக்கும் ஜாதியினர் இக் குவலயத்திலே அநேக ருளர். கிறிஸ்தவர், பவுத்தர், ஜைனர், பார்ஸீகள், ஹிந்துக்கள், கன்'பூஷியர், தயோ மதத்தவர், ஷிண்ட்டோ சமயத்தவர் ஆகிய அனைவரும் இப்படிப்பட்டவர்களே. எனவே, இந்த மதமங்கையரை — இவர்கள் விக்கிரக வணக்கத்தைவிட்டு விலகியிருப்பின் — எம் முஸ்லிம்கள் மணந்து கொள்ளலாம். 'பி:க்ஹ் கிரந்தங்களில் யூதர்களும், கிறிஸ்தவர்களும் ஆகிய இருசமயத்தவரே **அஹ்லெ கி(த்)தாப்'**க ளெனக் கொள்ளப்பட் டுள்ளார்கள். இது, சட்டகலாவல்லுநர்கள் "அஹ்லெகி(த்)தாப்" என்

---

* அக் காலத்தில் "கத்தோலிக்" கிறிஸ்து மதம் மட்டுமே யிருந்து வந்தது. இந்தக் கத்தோலிக் கிறிஸ்தவர்கள் அன்று முதல் இன்று வரையுங் கூட உருவ வழிபாட்டில் (விக்கிரகத் தொழும்பில்) முழுக்க முழுக்க மூழ்கிப்போயே யிருந்து வருகிறார்கள். (பா. தா.)

பதற்குக் கொண்டுள்ள குறுகிய வியாக்யானமே யாகும். சாபி'யீன்கள் ஹித'ாயாவில் அஹ்லெ கி(த்)தாப்' என்று அழைக்கப்பட் டிருக்குங்கால், மஜ`ூஸீ (பார்ஸீ)கள் அவ் வாறு அந்த இனத்தில் சேர்க்கப்படா திருப்பது ஆச்சரியந் தான்: "இன்னம், சேபி'ய மங்கையரை (சாபி'யாத்தை) அன்னவர்கள் ஒரு மதத்தை யேற்று, ஒரு (கடவுளருளிய) வேதத்தையும் பின்பற்றி யொழுகுவரேல், மணந்துகொள் வது கூடும்; என்னெனின், அன்னவர்கள் அஹ்லெ கி(த்) தாபி'லே சேர்ந்தவர்களா யிருக்கிறார்கள்." "ஒரு மதத்தை யேற்று, ஒரு (கடவுளருளிய) வேதத்தையும் பின்பற்றி யொழு"கிவருங் காரணத்தால் சேபி யர்கள் "அஹ்லெகி(த்) தாப்" களாய்க் கருதப்படும் பொழுது, அவ்வாறே ஒரு சமயத் தை யேற்று, ஒரு (கடவுளருளிய) வேதத்தையும் பின்பற்றி யொழுகும் பார்ஸீகளும், ஹிந்துக்களும் ஏன் "அஹ்லெ கி(த்)தாப்"க ளெனக் கணிக்கப்படுவது கூடாது?

:குர்ஆன் ஷரீ'ப், ஒரு முஸ்லிம் ஆண் ஓர் "அஹ்லெ கி(த்)தாப்" பெண்ணை மணந்துகொள்ளலா மென்று அனு மதியளித் திருக்கிறது; ஆனால், ஒரு முஸ்லிம் பெண் ஓர் "அஹ்லெ கி(த்)தாப்" ஆணை மணந்து கொள்வது கூடு மென்றோ கூடாதென்றோ :குர்ஆன்மஜீத்' வெளிப்படையாய் விளக்கிச் சொல்ல வில்லை. ஆயினும், முற்கூறியது ஆகு மென்று அனுமதியளித்து, பிற்கூறியதைப் பேசாது விட் டிருப்பதி லிருந்து, இது செய்வது— ஒரு முஸ்லிம் பெண் ஓர் "அஹ்லெ கி(த்)தாப்" ஆணை மணப்பது— ஆகாதென் பது தெற்றெனப் புலப்படுவது கண்கூடு. எனவே, ஒரு முஸ்லிம் பெண் ஒரு யூதனை, ஒரு கிறிஸ்தவனை, ஒரு பார் ஸீயை, ஒரு ஹிந்துவை, ஒருசீனனை, ஓர் ஐரோப்பியனை, ஒரு ஜப்பானியனை, ஒரு பவுத்தனை, ஒரு ஜைனனை, ஒரு சீக்கியனை (அல்லது வேறெந்த முஸ்லி மல்லாதவனையும்) மணப்பது கூடாதென் றறிக. *

இனி, ஒரு சில வேளைகளில் சட்ட அனுமதியுள்ள திருமணங்களும் சட்டவிரோதமாய் மாறிவிடக்கூடு மென்

* முஸ்லிம் பெண்கள் வேதக்கார ஆண்களை மணப்பது தகா தென்று :குர்ஆன் மஜீதி'ல் வெளிப்படையாய் விளக்கப்பட் டிராமையால், நம் பெண்மணிகள் அவ் வேதக்கார ஆண்களை மணந்து கொள்ளலா மென இக்கால மக்கள் ஒருசிலர் உறுத்திக் கூறுவர். (பா. தா.)

பது எவ்வாறெனப் பார்ப்போம்; மணம் புரிதற் கென்று வகுக்கப்பட்டுள்ள சிற்சில சட்ட நியதிகளை மீறிவிட்டால், அத் திருமணம் செல்லாதாகி விடுகின்றது: எடுத்துக்காட் டாகத் ‛தலா:க் சொல்லப் பெற்ற பெண்ணும், விதவையும் இ'த்'த'ா இருத்தல் வேண்டும்; இந்த இ'த்'த'ாவின் எல்லை (தவணை) தாண்டுமுன்னே, அப்படிப்பட்ட பெண்ணை மணப் பது கூடாது. இ'த்'த'ா கழிந்துவிட்டாலும், மூன்று முறை ‛தலா:க் கூறப்பெற்ற மனைவியும் அந்தத் ‛தலா:க் கூறிய கணவனும் மறுமணம் புரிந்து கொள்வது கூடாதாகும். கர்ப்பிணி யொருத்தி தாலி வாங்கியோ ‛தலா:க் வாங்கியோ போய்விட்டால், அவள் பிரசவ காலம் வரை இ'த்'த'ா இருத் தல் வேண்டும் (:குர். 65:4); இதற்கு முன்னே இவள் மறு மண முடித்துக்கொள்வது கூடாத காரிய மாகும். ஆனால், வியபிசாரத்தால் ஒருத்தி கர்ப்பமுற்று, அவளைக் கெடுத்த சோர நாயகனுக்கோ, வேறு கணவனுக்கோ நி(க்)கா'ஹ் முடிப்பதா யிருப்பின், பிரசவகாலம் வரை காத்திருக்கத் தேவையில்லை யென்று இமாம் அபூ' 'ஹனீ'பாவும், இமாம் மு'ஹம்மது'ம் இயம்பியுள்ளார்கள்; வேறு கணவனுக்கு மண முடிக்கப் படுங்கால், இவன் அவளுடனே பிரசவ காலம் வரை வீடு கூடுவது கூடாது (ஹித'ா. I, பக். 293). ஆயின், ஏனை இமாம்களும், இமாம் அபூ'யூஸு'ஃபும் இக் கல்யாணம் செல்லாதென்றே எழுதியிருக்கிறார்கள். ஷீ ஆ'க்களோ, இமாம் அபூ' 'ஹனீ'பாவின் சட்டத்தையே பின்பற்றி யுள்ளார்கள்.

## பிரிவு 3.— திருமணத்தின் தினுசும் சட்ட சம்மதமும்

திருமணத் திற்கு முன்னே.

இஸ்லாத்தில் விவாகமென்பது ஒரு "ஸிவில் ஒப்பந் த"மா யிருந்து வருவதால், அதில் கலந்து கொள்ளும் இரு வரும், ஒருவரை யொருவர் தமதாயுளுக் குரிய உயிர்த்தோழியாகவோ உயிர்த்தோழ னாகவோ தேர்ந்தெடுத்துக் கொள்ளு முன்னே, உள்ளத் திருப்தி யடைந்து கொள்ள வேண்டுவது அத்தியாவசிய மாகவே யிருந்து வருகிறது. "எண்ணித் துணிக கருமம் துணிந்தபின், எண்ணுவம் என்ப(து) இழுக்கு" என்பவாகலின், முன்னமே மனத் திருப்தி யடை

வது வேண்டத்தக்க தொன்றும் : "உங்களுக்கு மனமுவப் புள்ளவர்களாகக் (மாத்தாப'லக்கும்) காணப்படும் அத்தன் மைத்தாய மாதர்களை மணந்து கொள்ளுங்கள்" (4 :3) என்று எமது திருமறை விளக்கமாகத் துலக்கி யுள்ளது. நபிகள் திலகமும் (சல்) இவ்வாறு கட்டளையிட் டுள்ளார்க ளென்று ஒரு செய்தி கூறிக்கொண் டிருக்கிறது : " உங்க ளுள்ளே ஒருவன் ஒரு பெண்ணின்பால் திருமணச் சார்பா யுள்ள செய்தியை விடுக்குங்கால், அதுகாலை அவனுற் கூடு மாயின், அவளை மணக்குமாறு அவனை வசீகரிப்பது எது வென்று பார்க்கட்டும்"— (அபூ'த'ாவூத்' 12 : 18). இவ் வத்தியாயத்திற்குத் தொடக்கத்திலே, " ஒரு மனிதன் தான் மணக்க விழையும் பெண்ணைப் பார்த்தல் வேண்டும்" என்று தலையங்கம் பொறிக்கப்பட் டிருக் கிறது. பு'க'ாரீயிலும், "திருமணத்திற்கு முன்னே பெண்ணைப் பார்ப்பது" என்றோர் அத்தியாயம் தலையங்க மிடப்பெற் றுள்ளது— (பு'க'ா. 67 : 36). "முஸ்லிம்" கிரந்தத்திலும், "ஒரு பெண்ணை மணக்க விழையும் ஒரு மனிதனை அவளுடைய கைகளையும் முகத்தையும் பார்க்க அழைப்பது' என்றோர் அத்தியாயம் காணப்படாநின்றது (முஸ். 16 : 12). இவ் வத்தியாயத்தில் இவ்வாறு ஒரு செய்தி பொறிக்கப்பட் டிருக்கிறது : ஒரு மனிதன் நபிகள் பெருமா னிடம் வந்து, அன்சார்க ளுள்ளிருந்து ஒரு பெண்ணைத் தான் மணக்கப் போவதாகக் கூறினுன் ; அதுபொழுது நபிகட்டிலகம் அவனை நோக்கி, "நீ அவளைப் பார்த்திருக் கிருயா ?" என்று வினவினுர்கள் ; இதற் கவன் இல்லை யென்று விடை யளித்ததன் மேல், " அப்படியானுல், நீ அவளைப் போய்ப் பார்க்கக் கடவாய் ; ஏனென்ருல், (ஒரு சில) அன்சார்களின் கண்களில் குறையொன்று காணப் படுகிறது," என்று எம்பெருமானுர் (சல்) இயம்பி யனுப்பி னுர்கள். இனியொரு 'ஹதீ':திலே இவ்வாறு ஒரு செய்தி காணப்படுகிறது: மு'கீரா இப்'னு ஷு'ஃ'ப'ா ஒரு நங் கையை மணந்துகொள்ள நாடினுர் ; அச் செய்தி கேட்டு, நபிகளுதர் (சல்) அவர் அப்பெண்ணைப் பார்த்ததுண்டா ? என வினவினுர்கள் ; இதற்கவர் இல்லையெனச் சொன்ன தன் மேல், அவளைப் போய்ப் பார்த்துவிட்டு வருமாறு நபி கள் பிரான் நன்கு கட்டளையிட் டனுப்பினுர்கள் ; என்னெ னின், " அன்னவர்கட் கிடையே அஃது அதிகமான காதலையும் ஒற்றுமையையும் உண்டு பண்ணப் போதியதா

யிருக்கும்,'' என்ருர்கள் (மிஷ். 13:2–ii). ஒருவன் மணக்க விழையும் பெண்ணைப்பார்க்கலா மென்னும் அபிப்பிராயத்தில்(இஸ்தி'ஹ்ப'ராப்')அநேகமா யெல்லாச் சட்டகலாசாஸ்திரிகளும் ஒத்தே நிற்கிருர்கள். கல்யாண மென்பது ஓராணுக்கும் ஒரு பெண்ணுக்கும் பரஸ்பர நல்லபிப்பிராயத்தின் மீதே நடைபெறுவதா யிருக்கிற படியாலும், மாப்பிள்ளை தான் மணக்கவிரும்பும் நங்கையைப்பார்த்து உளத்திருப்தி யடைய வேண்டுமென்று வற்புறுத்தப்படுகிற படியாலும், அதே விதமாகவே அந்தப் பெண்ணும் தன் சம்மதத்தைத் தெரிவிக்குமுன்னே அந்த மாப்பிள்ளையைப் பார்த்து உளத் திருப்தி யடையும் உரிமையைப் பெற்றிருக்கிரு ளென்பது தெளியக் கிடக்கின்றது. திருமண ஒப்பந்தம் நிறைவேற மாப்பிள்ளையும் பெண்ணும் பரஸ்பர மனத்திருப்தியைத் தெரிவித்தல் வேண்டும்; இவ் விருவரும் இவ் விஷயத்தில் ஒத்துநிற்றல் அவசியமேயெனக் :குர்ஆன்ஷ ரீ'பும் கூறி வற்புறுத்தி யிருக்கிறது: ''அவ் விருவரும் தமக்குள்ளே சட்ட முறைப்படி ஒத்துவிடுங்காலே, அவர்கள் தங்கள் கணவர்களை மணப்பதைத் தடை செய்யாதீர்கள்'' (2 :232). எனினும், இக் காரியத்தில் ஒரு ஜாதியாரின் பழக்க வழக்கமே இதுகாலைப் பிரதானமா யிருந்துவருகிறது; எனவே, ஒரு மாப்பிள்ளை ஒரு பெண்ணை நேரே பார்த்துத் திருப்தி யடையலாம்; அல்லது, இந்நாட்டி லிருந்துவரும் வழக்கத்திற் கேற்க, வேறு நம் பெண்மணிகள் மூலமாய் அந்தப் பெண்ணின் இலக்ஷணங்களை—குணங் குறிகளை—த் தெரிந்துகொள்ளலாம். அ'ஹ்மத்' ஷ¬க்ரீயென்பார் (அ'ப்'து'ல் :காதி'றின் அந்நஹ்ர் பக். 218-இ லிருந்து எடுத்தெழுதி) ''அவளைப் பார்க்கக்கூடிய காலம் நிச்சயார்த்தத்துக்கு முந்தியிருத்தல் வேண்டும்......அந்தப் பெண் அந்த மாப்பிள்ளையை மணக்கநாடிஞல், அவனை அவள் பார்க்கலாம்; ஏனெனின், அவன்பாலுள்ள ஏதும் அவளுக்குப் பிரீதியை யளிக்குமாயின், அவள்பாலுள்ள ஏதுங்கூட அவனுக்குப் பிரீதியை யளிக்கக்கூடும்......நி(க்)கா'ஹ¬க்குப் பின்னே அவனேனும் அவளேனும் கழிவிரக்கம்—பச்சாத்தாபம்— கொள்ளா திருப்பான் வேண்டி, அவனுக்குரிய, அல்லது அவளுக்குரிய காதலியை, அல்லது காதலனை— அவளுடைய, அல்லது அவனுடைய அங்க அடையாள அழகுகளைக் கண்டறியும் பொருட்டு, அவனேனும் அவளேனும் விழையுந்தொறும் விழையுந்தொறும்

அவ் விருவரும் ஒருவரை யொருவர் கடைக்கண்ணுல் ஜாடையாய்ப் பார்த்துக் கொள்ளலாம்,'' என்று வரைந்துளார் (அ'ஹ்மத்' ஷ⁻க்ரீயின் ''திருமண சம்பந்தமாகவும் 'தலா:க் சம்பந்தமாகவு முள்ள முஹம்மடன் லா''—பக். 43).

ஒரு மாப்பிள்ளை ஒரு பெண்ணைக் குறித்து விசாரித்து, அல்லது நேரிலே பார்த்துத் திருப்தியடைந்து விடுங்கால், அவன் அன்னவ ளிடத்திலோ, அல்லது அவளுடைய பெற்ரே ரிடத்திலோ வேறு கார்டிய னிடத்திலோ அன்னுளைத் தனக்குத் தர முடியுமா வென்று கேட்பான்; மாப்பிள்ளைக் காக அவனுடைய உறவினரும் சென்று பெண் கேட்கலாம். ஒரு பெண்ணை ஒருவன் கேட்குங்கால், அவன் அவளை வேண்டாமென்று கை விட்டபின்னர், அல்லது அவள் அவனை வேண்டாமென்று விலக்கிவிட்ட பின்னரே இனியொருவன் அவளை விவாகத்துக்கு வரிக்கலாம்; அதற்கு முன்னே போட்டிபோட முடுகா திருப்பாளுக (பு'க'ா. 67 : 46). ஒரு மாப்பிள்ளை ஒரு பெண்ணைக் கேட்பதேபோல, ஒரு பெண்ணும் ஒரு மாப்பிள்ளையைக் கோரலாம் (பு'க'ா. 67 : 33); ஒரு மனிதன் தன் மகளுக்காக, அல்லது உடன்பிறந்தாளுக்காக ஒரு வரனைத் தேடலாம் (பு'க'ா. 67 : 34). [ஆனல், மாப்பிள்ளை ''கைக்கூலி''—''எதிர்ஜாமீன்''—''வரதக்ஷிணை'' கேட்க இஸ்லாத்திலே இடமில்லை. பெண்ணுக்கே ஆண் அதிகம் கொடுக்கக் கட்டுப்பட் டுள்ளான்.] இந் நாட்டு முஸ்லிம்க ளிடத்து மாப்பிள்ளை வீட்டாரே முன்னேறிப் பெண்கேட்பது பெரும்பான்மையான பழக்கமா யிருந்துவருகிறது. பெண் வீட்டாரும் இணங்கிவிட்டால், பிறகு நிச்சயார்த்தம்— பரிசம்— நடைபெறுகிறது; அப்பால் நி(க்)கா'ஹ⁻க்கு முன்னே சிறிது தவணை கழிகிறது. இவ் விடைக் காலத்திலே இருதிறத்தினரும் திருமணத்துக்குத் தையார் செய்கின்றனர்; இருதிறத்தாருக் கிடையிலே ஏதேனும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டுவிட்டால், அந்தப் பரிசம் முறிக்கப்பட்டு விடும். இது 'தலா:க் கொடுப்பது போன்றதன்று; என்னெனின், நி(க்)கா'ஹ் முடிந்தபின்னரே மாப்பிள்ளையும் பெண்ணும் கணவனும் மனைவியு மாகிருர்கள் என்பதனு லென்க. பரிசமென்பது திருமண மன்று.

திருமணத்திற்குக் கோரிக்கை.

இஸ்லாம் மார்க்கத்தில் திருமணத்துக் கென்று ஒரு குறிப்பிட்ட வயது நிர்ணயிக்கப்பட் டில்லை; இஸ்லாம் உலக

மத மாதலின், தேசா தேசங்களின் சீதோஷ்ண நிலைமை யின் மாறுபாட்டிற்கு ஏற்றாற்போலே பெண்மணிகளின் திரு மண வயதும் வேறுபட்டிருக்கு மென்பது தெளிவு. ஆயினும், :குர்ஆன்ஷரீ'ப் விவாக வயதைக் குறித்து ஒன்றுமட்டும் குறிப் பாகக் கூறுதிருக்க வில்லை : பெண்ணின் ''மேஜர்'' பருவத் தையே அவளுக் குரிய திருமணவய தென்றும் அத்தெய்வத் திருமறை கருதி யிருக்கிறது : '' மேலும், அனுதைகளே, அவர்கள் நி(க்)கா'ஹின் (பருவகால) வயதை எட்டுமட்டும் பரீக்ஷித்துப் பாருங்கள் ; அதுபொழுது அவர்க ளிடத்தே அறிவின் முதிர்ச்சியை நீங்கள் காண்பீர்களேல், அவர்கள் மாட்டே அவர்களுடைய ஆஸ்தியை ஒப்படைத்து விடுங் கள் ; மேலும், அவர்கள் பூரண பருவத்தை எட்டிவிடுவார் களே யென்று எதிர்பார்த்து, அளவுகடந்தும் அவசரமாக வும் அதனை விழுங்காதீர்கள் ''—(4:6). ஆகவே, திருமண வயதும் அறிவின் முதிர்ச்சியும், பரிபூரண பருவத்துடனே, அஃதாவது, முழு '' மேஜர் '' பருவத்துடனே, ஒன்றுய் வைத்துக் கணிக்கப்பட் டிருப்பது கண்கூடு. திருமண மென்பது ஒரு ஸிவில்ஒப்பந்த மாதலின், இதற்கு முன்னே :குர்ஆன், 'ஹதீ': துகளின் ஆதாரத்தைக் கொண்டு எடுத் தோதப்பட் டிருப்பதேபோல, அவ் வொப்பந்தத்தில் சம்பந்தப் பட்டுள்ள ஆண் பெண்ணின் முழு விருப்பத்தையே அது முற்றும் சார்ந்துநிற்கிற தென்பது வெளிப்படை ; இன்னம், அன்னவர்களே தங்கள் ஆயுட்கால ஆழிய ஒப்பந்தத்திற்கு அனுமதியளிக்க வேண்டியவர்களாகவும் இருந்து வருகிறுர் கள். எனவே, இவ்விருவரின் ஆண்-பெண் கூட்டரவுச் சார் பாயுள்ள விருப்பு வெறுப்புக்குரிய அபிப்பிராயத்தை வெளி யிட்டுத் தெரிவித்தற் கேற்ற வயதாகிய '' மேஜர் '' பருவமே விவாகத்திற்கும் உரியவயதா யிருந்துவருதல் கூடுமென்பது வெள்ளிடை விலங்கலா யிருக்கிறது. ஒரு பெண்ணே யாயி னும், ஓராணே யாயினும், ருதுவெனப்படும் '' புஷ்பவதி '' யான பருவத்தை (ஆண் அதற்கேற்ற கௌமார பருவத்தை) அடைந்து விட்ட பின்னரே யல்லது, முன்னுலே ஆண்-பெண்கூட்டரவென்னப்படும் ஸிவில் ஒப்பந்தம் இன்னதுதா னென அறியமாட்டா ராதலின், அந்தப் பருவத்துக்கு முன்னே, பின்னுல் தன் கணவனுக அல்லது மனைவியாக வாய்க்கப் போகிறவன் (அல்லது போகிறவள்) சரியான மெய்க்காதலுள்ள விரும்பத் தக்க ஜோடி தானு வென்பதைத்

திருமணப் பருவம்.

தம் பால்ய பருவத்திலே உணர்ந்து ஊகிக்கப் போதிய திறன்பெற மாட்டா ராதலின், ''பருவ''மடையு முன்னே அம் ''மரப்பாச்சி''களுக்குப் ''பொம்மைத் தாலி'' கட்டி முடிப்பது ஒரு விரும்பத்தக்க செய்கை யன்றும்.

ஆனால், 'பி:க்ஹில் ''மைனர் திருமணம்'' அனுமதிக் கப்பட் டிருப்பது மெய்யே யாம்; என்னெனின், சாதாரணக் ''காண்ட்ராக்ட்'' (ஒப்பந்தங்)களுக் குள்ள பொது விதியைப் பின்பற்றி, இத் திருமண ஒப்பந்தமும் ''மைனர்'' சார்பாக அந்த ''மைனரின் கார்டியனால்'' நிறைவேற்றி வைக்கப்படலா மென்று 'பி:க்ஹ் சட்டம் கூறுகின்றது. ஆனாலும், மதீனாவில் விவாக சம்பந்த விஷயங்க ளெல்லாம் ஆண்டவனால் தன் திருத்தூதருக்கு விளக்கப்பட்ட பின்னர், நபிகள் திலகத்தால் எந்தவோர் ஆண், பெண் மைனருக்கும் அவனுடைய, அல்லது அவ ளுடைய ''கார்டிய''னது அனுமதி மட்டுங் கொண்டே மணமுடித்து வைக்கப்பட்டது கிடையாது. ஆயின், நபி பெருமான் (சல்அ'ம்) ஆ'யிஷா பிராட்டியை (றலி) அவரது ஒன்பதாவது வயதிலே நி(க்)கா'ஹ் செய்து கொண்ட சம்பவம், ''மைனர்''கள் தங்கள் ''கார்டியன்''களால் மணமுடித்துக் கொடுக்கப்படலா மென்பதற்கு வேண்டிய மேற்கோளா யெடுத்துக் காட்டப்பட்டு வருகிறது. இதில் இருநுணுக்கங்கள் கூர்ந்து கவனிக்கப்படல் வேண்டும்: முத லாவதாக, ஆ'யிஷா பிராட்டியின் நி(க்)கா'ஹ் என்பது ஒரு வெறு நிச்சயார்த்தம் போலவேதான் இருந்துவந்தது; என் னெனின், அப் பெண்கள்நாயகம் பருவவயதை எய்தட்டு மெனவே அப்பால் ஐந்தாண்டுகள் வரை வீடு கூடும் வைபவம் ஒற்றிவைக்கப்பட்டு விட்டது.* இரண்டாவதாக, ஆ'யிஷாவின் (றலி) நி(க்)கா'ஹ் மக்காவிலே, மதீனாவில் திருமணச்சார்பாயுள்ள சட்டங்கள் ஆண்டவனால் அறிவிக் கப்பெறு முன்னே, நடைபெற்றுவிட்டது. எனவே, இவரது 9-ஆம் பிராயத்திலே நடைபெற்ற நி(க்)கா'ஹ், ''மைனர்'' களின் திருமணத்தை ஆதரிக்க ஒரு மேற்கோளாய்க் கொள்ளல் கூடாதென் றறிக. விவாக வயதும் ''மேஜர்''

---

* பீ' பீ' ஆ'யிஷாவின் (றலி) விவாகவயதும், வீடுகூடிய வைபவமும் எம்மால் வெளியிடப்பட் டுள்ள ''அபூ'ப'க்ர் சித்'தீ':க் (றலி)'' சரிதையிலே விரிவாய் விளக்கப்பட் டுள்ளன காண்க.

பருவமும் ஒன்றே யென்று கூறும் :குர். 4-ஆவது அத்தியாயம் மதீனுவிலே அருளப்பட்ட பின்னர், நபி பெருமான் காலத்திலே "மைனர்" எவரும் தம் "கார்டியன்"களால் மணமுடித்துக் கொடுக்கப்பட்டா ரென்று கூற எத்தகைய நம்பத்தக்க 'ஹதீ':தும் எங்குமே காணப்படவில்லை. "ஒரு மனிதன் தன் மைனர்க் குழந்தைகளை மணமுடித்துக் கொடுத்தல்" (பு'க'ா. 67 : 39) என்று தலையங்க மிடப்பட்டுள்ள அத்தியாய மொன்றில் இரண்டு காரணங்கள் கூறப்பட் டுள்ளன: ஒன்று, ஆ'யிஷாபிராட்டி நி(க்)கா'ஹ் செய்துவைக்கப்பட்ட சம்பவம்; இது குறித்து மேலே விவாதிக்கப்பட்டுவிட்டது. இரண்டு,:குர்ஆன்ஷரீ'பிலுள்ள ஓராயத்(65:4); இவ்விஷயம் அடுத்துவரும் "பாரா" விலே விவாதிக்கப்படுவது காண்க. வேறு 'ஹதீ':து கிரந்தங்களில் காணப்படும் அத்தியாயங்கள் (முஸ்லிம். 16 : 10; அபூ'த'ா. 12: 33) வெறும் ஆ'யிஷாவின் (றலி) நி(க்)கா'ஹ் மட்டுமே ஆதாரமாக எடுத்தெழுதி யுள்ளன.

:குர்ஆன் மஜீதி'லே மாதவிடாயில்லாப் பெண்களின் ':தலா:க்குக் குரிய திருவாக்கிய மொன்று காணப்படா நின்றது: "இன்னம், உங்கள் மாதர்க ளுள்ளே மாதவிடாய் நின்றுபோய் விட்டவர்கள் குறித் தென்ருலோ, உங்களுக்கு ஐயமிருக்குமேல், (இ'த்'த'ாவுக்குக்) குறிக்கப்பட்டுள்ள காலம் மூன்று மாதங்களாம்; இன்னம், தங்கள் மாதவிடாயைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் குறித்துங்கூட (அப்படித்தான்)" (65 : 4). இவ் வாயத்தில் "தங்கள் மாதவிடாயைப் பெற்றுக்கொள்ளாதவர்கள்" என்று வருணிக்கப்பட் டிருப்பது "மைனர்க் கன்னிகைகளைக்" குறிக்கு மென்றே கொள்வது கூடாது; என்னெனின், ஒரு சில யுவதிகள் வயதில் "மேஜர்" பருவத்தை எய்திய பின்னரும் 'புஷ்பவதி' யாகாமலே மலடா யிருப்பது வழக்கம். அத்தகைய அசாதாரணப் பெண்களைக் குறித்தே அவ் வாயத் கூறிக்கொண் டிருக்கிறது. எவ்வாற்ருனும் :குர்ஆன்ஷரீ'பிலேனும் சரியான 'ஹதீ':து ஷரீ'பிலேனும் மைனர்ப்பெண்கள் மணமுடித்துக் கொடுக்கப்பட்டதாக வாவது, ':தலா:க் கூறப்பெற்றதாக வாவது ஏதேனுமோர் ஆதாரமும் காணப்படவே யில்லை யென்பது சரதம். ஆயின், ஒரு மைனர்ச் சிறுமியை அவளுக்குரிய சட்ட பூர்வமான "கார்டியன்" கல்யாணம் பண்ணிக் கொடுத்தால், அது செல்லத்தக்கதே யென்றுதான் 'பி:க்ஹ் சட்டம் காணக் கிடக்கின்றது. இவ்

விஷயம் இனி மேலேவரும் "விவாகத்தில் கார்டியன் நுழைதல்" என்னும் பாராவிலே இன்னம் நன்ருக ஆராயப் பெறுவது காண்க.

:குர்ஆன் ஷரீ'பிலே திருமணம் மீ:தா:க் (உடன் படிக்கை யொப்பந்தம்) என்று அழைக்கப்பட் டிருக்கிறது; இது கணவனுக்கும் மனைவிக்கும் இடையிலேற்படும் உடன்படிக்கை யொப்பந்தமா யிருந்து வருகிறது: "மேலும், உங்களுள்ளே ஒருவர் ஏற்கெனவே இனி யொருவர்பால் அண்மி (வீடுகூடி) யிருக்குங்கால், இன்னம் அன்னவர்கள் உங்களுடனே ஒருறுதியான உடன்படிக்கை யொப்பந்தத்தைச் (மீ:தா:க்கன் :கலீள'ன்) செய்து கொண் டிருக்குங்கால், நீங்கள் எவ்வாறு அதனை (மஹ்ரை) எடுத்துக்கொள்ளுதல் கூடும்?" (4 : 21). திருமண ஒப்பந்தம், கணவனும் மனைவியும் இருசாக்ஷிகள் முன்னே தங்கள் பரஸ்பர உடன்பாட்டு அபிப்பிராயத்தை அறிவிப்பதனுல் பூர்த்தியாய் விடுகிறது; இஃதொன்றே அவ் விவாகத்துக் குரிய ஒரே முக்கிய அம்சமா யிருந்துவருகிறது. இந்தப் பரஸ்பர ஒப்பந்த உடன்பாடு 'பி:க்ஹில் ஈஜாப்' (உறுதிப் படுத்தல், அல்லது பிரகடனப் படுத்தல்) என்றும், :கபூ'ல் (ஏற்றுக் கொள்ளல், அல்லது ஒப்புங் கூறல்) என்றும் சொல்லப்படுகிறது. இரு சாக்ஷிகள் முன்னே ஒரு மாப்பிள்ளையும் பெண்ணும் தாங்களிருவரும் கணவனும் மனைவியுமாய் வாழ்க்கைப்படச் சம்மதிப்பதாகத் தங்கள் பரஸ்பர உடன்பாட்டைத் தெரிவித்துவிட்டால், அந்தத் திருமணம் நிறைவேறி விடுகிறது. அப்பாலே, "எனக்கு விருப்பமேயில்லாது வெறுமனே கட்டாயத்திற் காகத்தான் ஒப்புக் கொண்டேன்," என்று மாப்பிள்ளையேனும் பெண்ணேனும் கூறத் துணிவது கூடாதே யாகும். இவ்வளவே யன்றி, வேறு "தாலிகட்டுவது" என்ப தொன்றும் (அல்லது கரிய மணி கட்டுவ தென்பதும்) இஸ்லாத்திலே யில்லையென் றறியக்கடவீர்கள். * எனினும், நபிகள் திலகம் (சல்அ'ம்)

திருமண ஒப்பந்தத் திற்கு முக்கிய அம்சங்கள்.

* இற்றை நாளில் நம் நாட்டு முஸ்லிம் விவாகங்களில் காணப் படும் ஏனையெல்லாச்சடங்குகளும் இஸ்லாத்திலேயில்லாத (ஏனைச் சமயவாதிகளிடத்திருந்து எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள) சாங்கியங் களா யிருக்கின்றன. இவை பி'த்'அ'த்தும், ஷிர்க்குமாயே காணக் கிடக்கின்றன. (பா. தா.)

திருமண ஒப்பந்தத்துக்கு முன்னே, அதற் கொரு புனிதப் பெருமையை யளித்திடுவான் வேண்டி, ஒரு சிறு குத்ப'ா (இஸ்லாமிய இதோபதேசம்) புரிவார்கள்; இஃது அவர்களது பெரு வழக்கா யிருந்துவந்தது. :குர்ஆன் ஷரீ'பிலே கூறப்பட் டுள்ளாங்கு, மஹ்ரென்னும் ஒருதொகையும் மணப்பெண்ணுக்குக் கொடுபடல் வேண்டும். இந்த மஹ்ர் கொடுபடா விட்டாலும், மஹ்ர்த் தொகை இத்துணையென்று நிர்ணயிக்கப் படா விட்டாலும், திருமணம் நிறைவேறிவிடும். **ஹித'ாயாவில்** விளக்கப்பட் டிருப்பதேபோல, மணமகன் **:கபி'ல்(த்)து**— ''ஏற்றுக் **கொண்டேன்**''— என்று இறந்தகால வினை முற்றால் ஒப்புக்கொள்ளுகிறான்; அல்லது, '**ஜவ்வஜ்து**— ''என் கூட்டாளியாக, வாழ்க்கைத் துணைவியாக எடுத்துக் **கொண்டேன்**''— என்றேனும் கூறுகிறான். இன்ன வார்த்தைகளே, அல்லது இன்னவித வாய்பாடேதான் சொல்லப் படவேண்டு மென்பது ஒரு கட்டாய நிபந்தனையா யில்லை; இன்னம், மாப்பிள்ளை பெண் இருவரில் இன்னாரே முன்னே கூற .வேண்டும், இன்னாரே பின்னால் ஒப்புக் கொள்ள வேண்டும் என்றொரு நிபந்தனைகூட இல்லை. மணமகனும் மணமகளும் தத்தம் பரஸ்பர உடன்பாட்டைத் தெரிவித்தலே திருமண மென்றோம்; எனவே, **ஈஜாபு'ம் :கபூ'லும்** ஒரே சமயத்திலே நிகழ்வுறலாம். ஆனால், வழக்கமாக, க'(த்)தீப்' (குத்ப'ாவை ஓதும் பெரியார்) பெண்ணை முதலில் கேட்பார்; பிறகு மாப்பிள்ளையைப் பார்த்து, ''ஒப்புக் கொண்டாயா?'' என்று கேட்பார். *

திருமணத்தின் அடுத்த அம்சம் மஹ்ரென்னும் கல்யாணக் கட்டணமா யிருக்கிறது. :குர்ஆன் ஷரீ'பிலே

---

* இந் நாட்டில் பெண்ணை முதலில், ''இன்னார் மகன் இன்னாருக்கு நீ இத்தனை ரூபாய் மஹ்ருக்கு மனைவியாக வாழ்க்கைப் படுகிறாயா?'' என்று கேட்பார்கள். பிறகு மாப்பிள்ளையைப் பார்த்து, '' இன்னார் மகள் இன்னாளை இத்தனை ரூபாய் மஹ்ருக்கு நீ மனைவியாக ஏற்றுக் கொள்கிறையா?'' என்று கேட்பார்கள். இருவரும் சரிசொல்லி விட்டால், திருமணம் முடிவுற்று விடுகிறது. பிறகு வாழ்த்துக் கூறப்படும். பெண், மாப்பிள்ளை இருவரின் பரஸ்பர ஒப்பமே அத்தியாவசியமா யிருக்கிறது நி(க்)கா'ஹ் நிறைவேற.

பொதுவாய் வழங்கப்பட் டுள்ள வார்த்தை **அஜ்ர்**— மண மகளுக் களிக்கப்படும் நன்கொடை, அல் லது சம்மானம்— என்பதாயே காணப் படாநின்றது. உண்மையிலே அஜ்ரென் பது, "எதில் இலாபம் மிகுந்து, நஷ்டமே யில்லா திருக்கிறதோ, அதுவாகவே இருந்துவருகிறது"(மு.ரு.). **சது':காத்** என்னும் வார்த்தை யும் ஒருமுறை நந் திருமறையில் மஹ்ரைக் குறிக்க வழங்கப் பட் டுள்ளது (4 : 4); **சுத':க், சித':க்** கென்னும் சொற் களும் வெவ்வேறிடத்தில் அந்த மஹ்ரையே சுட்டிக் காட்டு கின்றன. இவற்றின் மூலப்பதம் **சத':க** (அவன் மெய்யனு யிருந்தான்) என்னும் வினைச்சொல்லா யிருக்கிறது; ஒரு காரியத்தைச் செய்கிறவன் அதைக்கொண்டு உண்மை யை நாடுவானுயின், அத்தகைய கட்டாயக்காரியம் **சத':கா** (பெயர்ச் சொல்) என்று அழைக்கப்படுகிறது (மு. ரு.). ஒரு சில இடங்களில் :குர்ஆன் ஷரீ'ப் **'பரீல'ா** என்னுஞ் சொல்லேயும் மஹ்ரைக் குறிக்க வழங்கியுள்ளது; இதன் பொருள், "கடமை யாக்கப்பட்டது, அல்லது ஒரு குறிப் பிடப்பட்ட பாகம்" என்பதா யிருக்கிறது. ஆயின், **மஹ்ர்** என்னுஞ் சொல் நபிபெருமானின் 'ஹதீ':துகளில் காணக் கிடக்கின்றது. :குர்ஆன் மஜீதி'ன் கூற்றுப்படி திருமண ஒப்பந்தம் நிறைவேறும் பொழுது கணவனுல் மனைவிக்கு "இனுமா" யளிக்கப்படும் சம்மானத் தொகையே மஹ் ரென்று வழங்கப்பட்டு வருகிறது: "மேலும், (புதுப்) பெண் களுக்கு அவர்களுக்குரிய மஹ்ரை இனுங் கொடையாகக் கொடுத்து விடுங்கள்" (4 : 4). மணத்தின் காலத்தில் மஹ் ரைக் கணவன் தன் மனைவிக்குக் கொடுத்து விட வேண்டு மென்பதனுல், அவன் அவளது சுதந்தரத்தை அங்கீகரித்தவனுய் விடுகிறுன்; என்னெனின், அம் மண மங்கை அதற்கு முன்னே "வெறும் அநாமதேயப் பேர்வழி"யா யிருந் திருப்பினும், அத் திருமணத்துக் கிப்பாலே ஒரு சொத்துக்குரிய முதலாளியாய் உயர்ந்து விடு கிருள். கல்யாண காலத்திலே அம் மணப்பெண்ணுக் குரிய மஹ்ரைக் கொடுத்துவிட வேண்டுவது அம் மணமகனுக்கு ஏற்பட்டுள்ள ஒரு முக்கிய கடமையாயே யிருந்துவருகிறது: "இன்னம், இவர்களையன்றி, எல்லாப் பெண்மணிகளும், நீங்கள் வியபிசாரம் புரியாமல் அவர்களை விவாகத்தில் வரித்துக்கொண்டு, உங்கள் சொத்தைக்கொண்டு அன்ன

"மஹ்ர்" என்னும் திருமணக் கட்டணம்.

வர்களைத் தேடுவீர்களேல், உங்களுக்கு 'ஹலாலானவர் களே. ஆகவே, (மணமுடிப்பது கொண்டு) எவர்களைக் கொண்டு நீங்கள் இலாபமடைகிறீர்களோ அவர்கள் குறித் தென்றுலோ, ஏற்படுத்தப்பட் டுள்ளபடி அவர்கள் மஹ்ரை அன்னவர்கள்பாலே அளித்துவிடக் கடவீர்கள்'' (4 : 24). அடிமைப்பெண்ணை மணப்பதா யிருப்பினும், அவளுக்குங் கூட மஹ்ர் கொடுத்தே முடிக்க வேண்டும்: ''ஆகையால், அவர்களுடைய எஜமானர்களின் அனுமதி பெற்று, அன்ன வர்களையும் மணக்கக் கடவீர்கள்; அவர்கட் குரிய மஹ்ர் களையும் நீதத்துடனே அவர்கட்கு அளித்துவிடக் கடவீர் கள்'' (4 : 25). ஒரு முஸ்லிம் முஸ்லி மல்லாத ஒரு நங்கையை மணக்க நேருங்காலும், அவளுக்கும் மஹ்ர் கொடுத்தே தீரவேண்டும்: ''இன்னம், மூமினை ஸ்திரீக ளுள்ளிருந்து கற்புள்ளவர்களும், உங்களுக்கு முன்னே வேதங் கொடுக்கப்பெற்றவர்களி னின்றுள்ள கற்புள்ளவர் களும், நீங்கள் (அவர்களுடன்) வியபிசாரம் புரியாமலும், இரகசியத்தில் அவர்களை வைப்பாக வைத்துக் கொள்ளா மலும், நீங்கள் அவர்களுக்கு அவர்கட்குரிய மஹ்ர்களைக் கொடுத்து விடுங்கால், அன்னவர்களைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள (உங்களுக்கு அனுமதிக்கப் பட்டவர் களே.)'' — (5 : 5).

மீக் கூறியவற்றிலிருந்து தெரியக்கிடப்பது, மஹ்ரை மணமுடிக்கும் பொழுதே மாப்பிள்ளை பெண்ணிடத்துக் கொடுத்துவிட வேண்டு மென்றே :குர்ஆன்ஷரீ'ப் வற் புறுத்துவதாயே யிருக்கிறது என்பதுதா னுகும். 'ஹதீ':து களைக் கூர்ந்து நோக்கினும், இதே கருத்துத்தான் தொனிக் கின்றது. மஹ்ர் ஒரு சிறு தொகையே யாயினும், அது திருமண வேளையிலே கொடுபட்டு விடப்படல் வேண்டும் (பு'க'ா. 67 : 51,52; அபூ'த'ா. 12 : 29, 30, 31). ஒரு சில அவசர அசந்தர்ப்பங்களில், மஹ்ர்த் தொகை குறிப்பிடப் படாவிடினும், திருமணம் நிறைவேறிவிடும் ; ஆனாலும், அத்தொகை கொடுபடவேண்டுவது அவசியமே யாதலின், அப்பாலேனும் அந்த மஹ்ர் கொடுபட்டே முடிதல் வேண்டும். :தலா:க்கைக் குறித்துக் கூறுங்கால், :குர்ஆன்ஷரீ'ப் இவ் வாறு இயம்பிக்கொண் டிருக்கிறது: ''நீங்கள் அவர்களை— (நும்மனைவியரை)த் தீண்டாமலோ, அல்லது அவர்களுக்கு மஹ்ரை நிர்ணயிக்காமலோ இருந்துவருங்கால், அவர்கட்கு

நீங்கள் ':தலா:க் கொடுத்து விடுவீர்களேல், உங்கள் மீது குற்ற மில்லை'' (2 : 236). இதனால், மஹ்ர் குறிக்கப் படாமலே மணமுடிக்கப்பட்டு விட்டால், அது சட்டப்படி செல்லத்தக்கதே யென்பது தெளிவாகின்ற தன்றோ? மஹ்ர் நிர்ணயிக்கப் படாவிடினும், அத் திருமணம் செல்லத் தக்கதே யென்பது 'ஹதீ':து ஷரீ'பாலும் விளக்கமாய் விடுகிறது (அபூ'த'ா. 12 : 31). ஆயின், அந்த மஹ்ர் திருமண வேளையிலே கொடுபடா விடினும், பிறகேனும் கொடுபட்டே யாகவேண்டும். விவாக முகூர்த்த வேளையில் மஹ்ர்த் தொகை நிச்சயிக்கப்பட வில்லையாயின், பிறகு பெண்ணின் அந்தஸ்திற்கும் மாப்பிள்ளையின் நிலைமைக்கும் தக்கவாறு அத்தொகை நிர்ணயிக்கப்படல் வேண்டும். கணவனது நிலைமைக்குத் தக்கவாறே அந்த மஹ்ர்த் தொகை கணிக்கப்பட வேண்டுமென்று :குர்ஆன் ஷரீ'பும் கூறியிருப்பதை நோக்க: ''தனவந்தன் தன்செல்வத்துக்குத் தக்கவாறும், தரித்திரத்திலிருப்பவன் தன் செல்வத்துக்குத் தக்கவாறும் (மஹ்ர் கொடுக்கக் கடவன்) — (2 : 236). ஒரு 'ஹதீ':தில் இவ்வாறு ஒரு செய்தி காணக் கிடக்கிறது: ஒரு பெண்ணின் கணவன் மஹ்ரை நிர்ணயிக்கு முன்னும், அவளுடனே மணவாழ்க்கை நிகழ்த்து முன்னும் மரண மடைந்து போய்விட்டான்; ஆகவே, அவளது ''கேஸ்'' அ'ப்'து'ல்லாஹிப்'னு மஸ்ஊ'தி'டம் ம'பசலுக்கு எடுத்துச் செல்லப்பட்டது; அவளது அந்தஸ்தைப் போன்ற அந்தஸ்தி லிருப்பவர்களின்— அத்தகைய பெண்களின்— மஹ்ரைப் போன்ற மஹ்ர்த் தொகையே கொடுபட வேண்டு மென்று அவர் தீர்ப்புக் கூறினர்; இஃதப்பாலே, இப்படிப்பட்ட ஒரு வியாஜ்யத்தில் நபிகள் திலகத்தால் அளிக்கப்பட்ட தீர்ப்பை முற்றும் ஒத்திருந்ததாயே காணப்பட்டது (அபூ'த'ா. 12 : 31). 'பி:க்ஹில் இது மஹ்ர் மி:த்ல் (அவளைப் போன்ற அந்தஸ்தி லிருப்பவர்களுக்குரிய மஹ்ர்) என்று அழைக்கப் படுகிறது; இது, ''வழக்கமான மஹ்ர்'' என்றும் கூறப் படுவ துண்டு. இந்த மஹ்ர் அந்தப் பெண்ணின் சகோதரி களின் மஹ்ரைக் கொண்டும், அத்தைமாரின் மஹ்ரைக் கொண்டும், சிறிய பெரிய தந்தையருடைய குமாரிகளின் மஹ்ரைக் கொண்டும் நிர்ணயிக்கப்படும் (ஹித'ா. I, பக். 304); அஃதாவது, அப்பெண்ணின் தந்தைவழியி லுள்ள வர்களின் அந்தஸ்தைக் கொண்டே அவளுடைய அந்தஸ் தும் நிச்சயிக்கப்படுவதா யிருக்கிறது. எனவே, மண

முடிக்கும் நேரத்திலே மஹ்ர்த் தொகை நிர்ணயிக்கப்படா விடினும், அப்பாலே மீக்கூறிய முறைப்படி அத் தொகை நிச்சயிக்கப் பட்டு, அப் பெண்ணின்பால் கொடுபடல் வேண்டும். இவ்வாறு அத்தொகை அந்தக் கணவனது ஆயுளுக்குள்ளே கொடுபடாவிடின், அவன் இறந்தபிறகு அவனது ஆஸ்தியிலிருந்து அந்த மஹ்ர் ஒரு முதற்கடனே போல் கொடுபடல் வேண்டும். :குர்ஆன் கூற்றுப்படி மஹ்ரென்பது மணத்தின் வேளையிலேயே கொடுபடல் வேண்டும்; தடுக்கமுடியாத வேறு சில சூழ்நிலைகளிலேயே மஹ்ர் பின்னால் கொடுக்கப்பட ஒற்றிப் போடப்படலாம். எனவேதான், இமாம் மாலிக், மணவறையிலேயே மஹ்ர் கொடுபட வேண்டுமெனக் கண்டித்துக் கூறியுள்ளார்; ஆயின், 'ஹன'பீ சட்டப் பிரகாரம் மஹ்ர் ஓர் ஒப்புக்கொண்ட கடனே போலத்தான் பெரும்பாலும் கருதப் பட்டுவருகிறது.

இஸ்லாத்தில் மஹ்ருக்கு ஓர் எல்லையும் ஏற்படுத்தப் பட் டில்லை. :குர்ஆனை கரீமைக் கூர்ந்துநோக்கு மிடத்து, மஹ்ர் எத்துணைப் பெரிய மகா தொகையாகவும் இருக்கலா மென்பது ஏற்படக் கிடக்கின்றது: "இன்னம், நீங்கள் அன்னவர்களில் ஒருத்திக்கு ஒரு பொற் குவட்டையே கொடுத்திருப்பினும்," என்பது ஓராயத் (4 : 20).* ஆகவே, அவ் வாரணங்குகட்கு அளிக்கப்படும் மஹ்ருக்குக் குறைந்த பக்ஷத் தொகையும், கூடுதலான எல்லையும் இன்னதின்ன தென ஒன்றும் வரையறுக்கப்பட் டில்லையென்பது தெளிவு. நபி பெருமானும் வெவ்வேறு பிராட்டிமாருக்கு வெவ்வேருய தொகையையே மஹ்ராகக் கொடுத்துள்ளார்கள். அபூ'ஸுப்'ப் யான்குமாரி உம்மு'ஹபீ'ப'ா ஹப'ஷா (அபிஸீனியா) நாட்டி லிருந்தக்கால், அங்கிருந்த படியே நபி பெருமான் பேருக்கு மணமுடிக்கப் பட்டக்கால், அந்நாட்டு நஜ்ஜாஷீ மன்னர் அப் பெருமானார் சார்பாக அம்மங்கைக்கு 4,000 தி'ர்ஹம் மஹ்ராகக் கொடுத்தார்; ஏனைப் பிராட்டியருக் கெல்லாம் 500 தி'ர்ஹம் விகிதமே மஹ்ர் கொடுக்கப்பட்டது (அபூ'த'ா.

---

*ஒருமுறை உ'மர் (றலி) தமதாட்சிக்காலத்தில் பெண்களுக் குரிய மஹ்ரின் முடிவான எல்லையை நிர்ணயிக்க ஒரு சபை கூட்டினார்கள்; அதுபொழுது ஒரு வயோதிக (மதீனா) மாது இவ்வாயத்தை எடுத்துக்காட்டியமையால், அம்முயற்சியை அந்த 2-ஆவது க'லீ'பா அடியுடன் கைவிட்டு விட்டார்கள். (பா. தா.)

17 : 28). ஆனாலும், நபிகட் டிலகத்தின் திருக்குமாரி ‘பா(த்)திமா (றலி) அவர்கட்கு 400 தி’ர்ஹமே மஹ்ராக நிர்ணயிக்கப் பட்டது. ஒரு ‘ஹதீ’:தில் காணப்படுவதே போல, ஒரு பெண்ணுக்கு ஓர் இரும்பு மோதிரமே மஹ்ரா யளிக்கப்பட்டது (பு’க’ா. 67 : 52). அதுவு மில்லாத ஒரு முஸ்லிம் மஹ்ருக்காகத் தம் மனைவிக்குக் :குர்ஆன்பாடம் ஓதிக் கொடுக்குமாறு கட்டளை யிடப்பெற்றார் (பு’க’ா. 67 : 51). இனியொரு ‘ஹதீ’:தின் பிரகாரம் இரண்டுள்ளங் கை நிறைய மாவேனும், பேரீச்சங் கனியேனும் போது மென்று கொள்ளப்பட் டுள்ளது (அபூ’த’ா. 12 : 29). திருமணம் முடிவுற்றபிறகு கணவனும் மனைவியும் தங்களுக் குள்ளே மனமொப்பினால், அம் மணமகளின் மஹ்ர்த் தொகை கூட்டப்படலாம்; குறைக்கவும் படலாம். இவ் விஷயம் :குர்ஆன் ஷரீ‘பிலே விளக்கமாயே துலக்கப்பட் டிருக்கிறது: “ஆகவே, (மண முடிப்பது கொண்டு) எவர் களைக்கொண்டு நீங்கள் இலாப மடைகிறீர்களோ அவர்கள் குறித்தென்றாலோ, நிர்ணயிக்கப்பட் டுள்ளபடி அவர்கள் மஹ்ரை அன்னவர்கள்பாலே அளித்துவிடக் கடவீர்கள்; மேலும், மஹ்ரினின்று நிர்ணயிக்கப்பட் டுள்ள தொகைக் கப்பாலே நீங்கள் (இருவீரும்) பரஸ்பரம் எது குறித்து ஒத்துப் போகிறீர்களோ, அது குறித்து உங்கள்மீது குற்ற மில்லை” (4 : 24).

இந்தியாவின் மஹ்ர்.

இந்திய நாட்டிலே மஹ்ரென்பது, மாப்பிள்ளை தன் மனைவியை எளிதினில் ‘தலா:க் சொல்லி விலக்கமுடியாத வாறு தடுத்துநிறுத்தும் ஒரு பெருந் தடைக் கல்லாகவே பெரும்பாலும் கருதப்பட்டுவரு கிறது; ஆதலினால், அவனால் ஒருகாலும் சுமக்க முடியாத அத்துணைப் பெரிய, அனாவசியப் பெரும் பாறாங்கல்லே அவனது சிரமேற் சுமத்தப்பட்டு விடுகிறது. இதனைப் பெண்வீட்டார் இ‘‘ஜ்’ஜத் (கவுரவம்) என்று வெளியிலே கூறுவர். இஃது இஸ்லாத்தினால் கருதப்பட் டுள்ள மஹ்ரின் தத்துவத்தையே அடியுடன் புரட்டிவிடுவதா யிருக்கிறது. என்னெனின், மஹ்ரென்பது மாப்பிள்ளையை அப்பா லிப்பால் அசைய வொட்டாது தடுத்து நிறுத்தும் நங்கூர மன்று. இத்தொகை மணமாகும் வேளையிலே பெண்ணினிடத்துக் கொடுபடல் வேண்டும்; இன்றேல், அம் மணவினைக்கு அப்பா லுடனே அம் மாப்பிள்ளையால்

கொடுபடல் வேண்டுமே; இதற்கு அவனால் சக்தியிருக்க இயலாதவாறு அத்துணைப் பெரிய பளுவான தொகையை அவன் தலைமேல் ''சிட்டுக்குருவியின் சிரசின்மீது பனங் காயைச் சுமத்துவதே'' போல், சுமத்தி வைத்தால், அவன் என் செய்வான்? பாவம்! மஹ்ரை நிர்ணயிக்குங் கால், இஸ்லாத்தின் உண்மை நோக்கம் உள்ளத்திலே கொள்ளப் பட்டால், அனுவசியப் பெருந் தொகையைச் சுமத்தும் அக் கொடிய பழக்கம் தானே தடைபட்டு நின்றுவிடும். பிற்காலத்தில் தோன்றிய சட்டகலா சாஸ்திரிகள் மஹ்ரை இரு சரி கூறுகளாகப் பிரித்துள்ளார்கள்; ஒரு பாதியை முஅ'ஜ்ஜல் (துரிதப்படுத்தப்படுவது) என்று கூறுகிறார்கள்; இதனை மனைவி கேட்டவுடனே கொடுத்து விடல் வேண்டும். இனி யொரு பாதியை மு'அஜ்ஜல் (ஒரு காலம் வரை ஒற்றி வைக்கப்படுவது) என்று அழைக்கிறார்கள்; இது கணவன் இறந்த பிறகு, அல்லது :தலா:க் சொல்லப்பட்ட பிறகு கொடுபடும்.

ஷி:கார் திருமணம்.

இஸ்லாத்துக்கு முன்னே அந்த அஞ்ஞான அரபிகளிடத்து ஷி:கார் என்றழைக்கப்பட்ட ஒருவகைத் திருமணம் நடை முறையில் இருந்துவந்தது; இதிலே, ஒருவன் தன் சகோதரியை, அல்லது தன் குமாரியை, அல்லது தன் பாதுகாவலி லுள்ள ஒரு நங்கையை இனி யொருவனுக்கு மணக்கக் கொடுத்து, அவனுடைய சோதரியை, அல்லது குமாரியை, அல்லது அவனது பாதுகாவலி லுள்ள ஒரு நங்கையைத் தான் மணந்துகொள்வான்; இருவரும் தத்தம் மனைவிக்கு மஹ்ர் கொடுக்க மாட்டார். இத்தகைய கெட்ட வழக்கம் நபிகளுயகரால் (சல்) விளக்கமாயே தடுக்கப்பட்டுள்ளது; ஏனென்றால், இந்த ஷி:காரால் அந்த இரு மனைவியரும் தங்களுக்குரிய சொந்த மஹ்ர்களை இழந்து விடுகிறார்கள் (பு'க'ா. 67 : 29). மனைவிக்கு மஹ்ர்மீ துள்ள உரிமை எப்பொழுதுமே எவராலும் பறிக்கப்படக் கூடாத புனித முடையதாயே யிருந்துவருகிறது; அந்த மஹ்ர்த் தொகை அவளுக்கே சொந்தமானது; அதனைப் பறித்துக் கொள்ள எந்த ஒரு ''கார்டிய''னுக்கும்— கணவனுக்கேயுங் கூட— அதிகார மில்லை. அத் தொகை அவள் கையிலே கொடுபட்டு விடப்படல் வேண்டும். கணவன் இறந்து விட்டாலுங் கூட, இந்த மஹ்ர் அவனுக்குள்ள முக்கிய கடனேபோல் முதலில் கொடுபடல் வேண்டும்.

## அத்தியாயம் — 3

# ஒருதார மணமும் பலதாரங் கொள்ளலும்

## பகுதி 1.— ஒருதார மணவினை

மணவினை பிரகடனப் படுத்தப்படல்.

எவ்வெவ் விடத்திலெல்லாம் எந்திருமறை மணவினையைக் குறித்துக் கூறியிருக்கின்றதோ, அவ்வவ் விடத்திலெல்லாம் களவொழுக்கத்துக் குரிய கள்ளப் புணர்ச்சியை('ஜிநாவை)க் கண்டித்தே விட்டிருக்கிறது ; இஸ்லாத்திலே " காந்தர்வ விவாகம் " என்னப்படுவது கடுமையாயே கண்டிக்கப்பட் டுள்ளது : " வியபிசாரம் புரியாமலும், அவர்களை (அப்பெண்மணிகளை) இரகசியத்தில் வைப்பாக வைத்துக் கொள்ளாமலும் அன்னவர்களை விவாகத்திலே வரித்துக்கொண்டு " என்னும் திருவாக்கியம் மடக்கி மடக்கி வருவது காண்க (4 : 24, 25 ; 5 : 5). எனவே, திருட்டுத்தனமாய் அந்தகாரத்தில் அல்லது அந்தரங்கத்தில் 'ஜிநா செய்யாமலும், இரகசியத்தில் "வைப்" பாக வைத்துக் கொள்ளாமலும், இருத்தற் குரிய பகிரங்க அடையாளம், அந்தக் கல்யாணத்தைப் பொதுஜனப் பிரகடனப் படுத்துவதாயே யிருந்துவருகிறது. ஓராணும் பெண்ணும் தனிமையிலே கணவனும் மனைவியுமா யிருப்பதென்று சம்மதித்து, சாக்ஷிகளின் முன்னே பகிரங்கமாக ஒத்துக் கொள்ளாது வீடுகூடுவது இஸ்லாமிய (ஷரீஅ'த்) மணவினையாக மாட்டாது. ஆதலால், இஸ்லாமிய (ஷரீஅ'த்) திருமணம் நடைபெறுவது பொது மக்கள் திரள் கூடியிருக்கும் இடமாக— முஸ்லிம்களின் மஸ்ஜித'ாகக் கூடவே இருப்பது மெத்த உத்தமமாம். மணவினையைப் பகிரங்கப் படுத்துவான் வேண்டி 'வட்டப்பறை' யாகிய த''ப்ஃ'பக்கூடக் கொட்டி முழக்கலா மென்று கூற 'ஹதீ' :தின் ஆதாரங்களும் பல காணப்பட்டே வருகின்றன (திர்மி. 9:6; நஸா. 26:72; இப்'னுமா. 9:19 ; முஸ்னத்' IV, பக். 5, 77). இந் நோக்கத்துடனேதான் கல்யாண காலத்தில் சில பாட்டுக்களும் அனுமதிக்கப்பட் டுள்ளன ; அத்தகைய ஒரு திருமணத்தின் பொழுது நபி பெருமான் திருமுன்பினிலே

பெண்கள் து''ப்ஃப*யடித்துப் (ல'ரப'ல் து''ப்) பாட்டுக் களும் பாடினார்கள் (பு'க'ா. 67 : 49). இதன் சார்பாயுள்ள 'ஹதீ:துகளை எல்லோரும் அறிந்துகொள்ளக் கடவார்கள்: "திருமணத்தைப் பகிரங்கப் படுத்துங்கள்; மேலும் அதனை மஸ்ஜித்'களிலே நடத்துங்கள் ; அதற்காக வாத்தியமும் வாசியுங்கள்." "சட்டபூர்வ மானதும், சட்ட விரோத மானதுமாய (கல்யாணமும், கள்ளப்புணர்ச்சியு மான) கூட்டரவுக் கிடையிலுள்ள வேறுபாடு, பகிரங்கப் பிரகடன மும், வாத்தியகோஷமு மாயே யிருந்து வருகிறது." "அன்சார்களுள்ளிருந்து ஒரு பெண்ணை ஆ'யிஷாபிராட்டி வளர்த்துவந்தார் ; அப் பெண்ணை அந்தப் பிராட்டி மண முடித்துக் கொடுத்தார். நபிகள் திலகம் வந்து, 'அந்தச் சிறுநங்கையை அவளுடைய கணவனின் இல்லத்துக்கு நீ அனுப்பிவிட்டாயா?' என்று வினவினார்கள் ; அதற்கு ஆமென்ற விடை கிடைத்தவுடன், 'அவளுடன் கூடப் பாடக்கூடியவர்களைச் சேர்த்தனுப்பினையா?' என்று நபி பெருமான் (சல்அ'ம்) நயமாய்க் கேட்டார்கள் ; அதற்கு ஆ'யிஷா (றலி) இல்லை என்று பதில் கூறினார்கள். அப் பொழுது நம்பெருமானார் (சல்) 'அன்சார்கள் பாட்டை விரும்பும் ஜனங்களல்லவா! ஆகவே, அவளுடனே இப்படி யும் அப்படியும் பாடக்கூடிய ஒருத்தியை நீ அனுப்பி யிருந்தால், அது நன்று யிருந்திருக்கும்,' என்று கூறினார் கள்" (மிஷ்காத் 13:4-ii). இவ்வாறு திருமணம் பகிரங்கப் படுத்தப்பட வேண்டுவதா யிருந்துவருங்கால், சாக்ஷிகளும் (ஸிவில் ஒப்பந்தமென்னு முறையிலே) தேவைப்படுகின்றன ரென்பது சொல்லாமலே விளங்கக் கிடக்கின்றது.

நி(க்)கா'ஹில் கு'த்ப'ா.

மணவினைக்குமுன்னே— அஃது ஆரம்பமாகுமுன்னே — ஒரு மதப்பிரசங்கம் (கு'த்ப'ா) புரியப்படுவதும் அதனை நன்கு விளம்பரப் படுத்தற்குதவும் ஒருபாய மாயே யிருந்துவருகிறது. இவ் வுபதேசம் நந் தாய்மொழியாந் தமிழிலே செய்யப்படு மேல், அதனால் இருவித நன்மை யுண்டாவது திண்ணம் : ஒன்று, அத்திருமணத்துக்கு ஒரு புனிதத் தன்மை உண்டா

---

*து''ப் என்பதே அதிக அங்கீகாரம் பெற்றுள்ளது; ஆனால், இக்காலத்தில் அது த'ப்' என்றே வழங்கப்படுகிறது. இஃது எத்தகைய "வட்டப்பறை" யென்பதை இந் நாட்டிலே அனை வரும் அறிவர்.

வது கண்கூடாம்; இரண்டு, கணவன் - மனைவியர் இருவர் கடமைகளும் உரிமைகளும் இன்ன இன்னவை யென அத்தம்பதிகளே யன்றி, ஏனையவர்களும் நன்குணர்ந்து கொள்ளலாம். இந்த கு'த்ப'ாவை அரபிலேதான் ஓதவேண்டு மென்பது ஒன்றும் கட்டாயச் சட்டமில்லை. மாப்பிள்ளை, பெண்ணுக் குரிய பந்து மித்திரர்கள் ஒன்றுதிரண்ட பின்னர் ஒரு பெரியார், அல்லது க'ஃதீப்' சா'ஹிப்' அந்த இதோபதேசத்தைச் செய்வார். இப்'னு மஸ்ஊ'த்' (றலி) என்பவரால் கூறப்பட்டுள்ள, நபிகள் திலகத்தின் (சல்) கு'ஃத்ப'ாவின் தொடக்கத்திலே 'தஷஹ்ஹுத்' ஓதப் படுகிறது; அப்பால், :குர்ஆன் ஷரீ'பிலிருந்து மூன்று ஆயாத்கள் ஒப்பிக்கப்படும். 'தஷஹ்ஹுத்' என்பது அசலில் "சாக்ஷியங் கூறல்" என்று பொருள்படும்; இஸ்லாத்தில் 'தஷஹ்ஹுத்' என்பது, "இறைவன் ஏகனே யென்றும், நபி மு'ஹம்மத்' (சல்) அவனுடைய அடியவரும் தூதுவருமா யிருக்கிரு ரென்றும் அறுதியிட்டு உறுதி கூறுவதா" யிருக்கிறது. நி(க்)கா'ஹுக்கு முன்னே சொல்லப்படும் 'தஷஹ்ஹுத்' இவ்வாறு யிருக்கிறது.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ
شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّاٰتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا
مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْ فَلَا هَادِيَ لَهٗ وَاَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ
اِلَّا اللّٰهُ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

I அல்'ஹம்து' லில்லாஹி ந'ஹ்மது'ஹு வநஸ்த ஈ'னுஹு வநஸ்தஃக்'பிருஹு வநஊ''துபி'ல்லாஹி மின் ஷுரூரி அன்'புஸினா வ மின் ஸய்யிஆ(த்)தி அஃ'மாலினா ம(ன்)ய்யஹ்தி' ஹில்லாஹு 'பலாமுலி' ல்லலஹு வம(ன்)ய்யுல்'லில் 'பலாஹாதி'யலஹு வஅஷ்ஹது' அன்லாஇலாஹ இல்லல்லாஹு வ அஷ் ஹது' அன்ன மு'ஹம்மத'ன் அ'ப்'து'ஹு வ ரஸுலுஹு.

[" எல்லாப் புகழும் அல்லா(ஹ்)வுக்கே! நாங்கள் அவனைப் புகழ்கிறோம்; மேலும், அவனிடத்தே நாங்கள்

உதவி தேடுகிறோம்; மேலும், அவனிடத்தே நாங்கள் பாதுகாவலைத் தேடுகிறோம்; இன்னம், நாங்கள் எங்களாத்மாக்களின் விஷமங்களை விட்டும், எங்கள் செயல்களின் தீமையை விட்டும் அல்லா(ஹ்)வைக் கொண்டே தஞ்சந்தேடுகிறோம். எவனை அல்லா(ஹ்) நேர்வழியில் நடாத்துகிறானோ, அவனை அப்பால் ஒருவனாலும் வழிதவறச் செய்வது சாலாது; இன்னம், எவனை [அல்லா(ஹ்)] தவறிய வழியி லிருக்கக் காண்கிறானோ, அவனை அப்பால் ஒருவனாலும் நேர்வழியிலே கொணர்வது சாலாது. இன்னம், அல்லா(ஹ்) ஒருவனையன்றி, வணக்கத்திற் குரிய ஆண்டவன் வேறெவனுமே இல்லையென்று யான் அறுதியிட்டு உறுதி கூறுகிறேன்; மேலும், மு'ஹம்மத்' (சல்) அவனுடைய அடியாரென்றும் அவனுடைய தூதரென்றும் யான் அறுதியிட்டு உறுதி கூறுகிறேன்.'']

'தஷஹ்ஹுத்' கூறியபின்னர் நபிகள் திலகம் :குர்ஆன் ஷரீ'பிலிருந்து 3 : 101; 4 : 1; 33 : 70, 71 ஆகிய ஆயாத்களை ஓதுவார்கள். (மிஷ் 13 : 4—ii)

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللّٰهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا
وَأَنْتُمْ مُسْلِمُونَ ۝

II யா அய்யுஹல்ல'தீன ஆமனுத்த:குல்லாஹ 'ஹ:க்:க 'து:கா'தி ஹீ வலா 'த்மூத்(து)ன்ன இல்லா வ அன்'தும் முஸ்லிமூன். (3:101)

يَاأَيُّهَا النَّاسُ اتَّقُوا رَبَّكُمُ الَّذِي خَلَقَكُمْ مِنْ نَفْسٍ
وَاحِدَةٍ وَخَلَقَ مِنْهَا زَوْجَهَا وَبَثَّ مِنْهُمَا رِجَالًا كَثِيرًا
وَنِسَاءً وَاتَّقُوا اللّٰهَ الَّذِي تَسَاءَلُونَ بِهِ وَالْأَرْحَامَ
إِنَّ اللّٰهَ كَانَ عَلَيْكُمْ رَقِيبًا ۝

III யா அய்யுஹன்னா ஸுத்த:கூ ரப்'ப'(க்)குமுல்ல'தீ க'ல:க(க்)கும் மின்ன'ப்ஸி(ன்)வ் வா'ஹித'

**(த்)·தி (ன்) வ் வக’ல:க மின்ஹா ‘ஜவ்ஜஹா வ ப’:த்:த மின்ஹு⁻மா ரிஜாலன் க:தீர(ன்)வ் வ நிஸா‘அ(ன்)வ் வத்த:குல்லா ஹல்ல‘தீ ·தஸா‘அலூன பி’ஹீ வல் அர்‘ஹாம் இன்னல்லாஹ கான அ’லை(க்)கும் ர:கீப’ா.** (4:1)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ وَقُولُوا قَوْلًا سَدِيدًا ۝ يُصْلِحْ
لَكُمْ أَعْمَالَكُمْ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ ۗ وَمَن يُطِعِ اللَّهَ وَرَسُولَهُ
فَقَدْ فَازَ فَوْزًا عَظِيمًا ۝

IV **யா அய்யுஹல்ல‘தீன ஆமனுத்த:குல்லாஹ வ:கூலூ :கவ்லன் ஸதீ’த’(ன்)ய் யுஸ்’லி‘ஹ் ல(க்)கும் அஃ’மால(க்)கும் வ ய:க்‘பிர்ல(க்)கும் ‘துனூப’(க்)கும் வம(ன்)ய் யு:திஇ’ல்லாஹ வ ரஸூ⁻லஹு⁻ ‘ப:கத்’ ‘பா‘ஜ ‘பவ்‘ஜன் அ’ளீ’மா.** (33:70,71).

இம் மூன்று ஆயாத்தும் பொதுவாக மனிதனுக் குரிய கடமைகளை நினைப்பூட்டுவனவாயே யிருந்துவருகின்றன. நடு ஆயத் (4 : 1) பெண்மணிகள்பால் ஆண்கள் நடந்து கொள்ள வேண்டிய கடமைகளை வற்புறுத்திக் கூறி யுள்ளது. அம் மூன்று ஆயாத்தின் பொழிப்பும் இதன் கீழே தரப்பட்டுள்ளது ; கவனிப்பீர்களாக :

“ஏ ஈமான் கொண்டவர்காள் ! நீங்கள் அல்லா(ஹ்) வின்பால் நுங்கள் கடமையில், அவன்மாட்டுக் காட்ட வேண்டிய ஜாக்ரதையுடன் சர்வ ஜாக்ரதையா யிருந்து கொள்ளக் கடவீர்கள் ; நீங்கள் முஸ்லிம்களா யிருந்தா லல்லது, மரணமடைந்து போகாதீர்கள்” (3 : 101).

“ஏ மானிடர்காள் ! நீங்கள் உங்கள் ரக்ஷகன்பால் உங்கள் கடமையில் சர்வ ஜாக்ரதையா யிருந்துகொள்ளுங் கள் ; அவன் உங்களை ஒரே ஜீவனி லிருந்தே உண்டு பண்ணினான் ; அதி னின்றே அதன் ஜோடியையும் சிருஷ்டித் துள்ளான் ; இன்னம், இவ் விரண்டி னின்று அநேக ஆடவர்களையும் பெண்டிரையும் அன்னவன் பரத்தி யுள்ளான். மேலும், எவனைக் கொண்டு நீங்கள்

ஒருவரிடத்தொருவர் உங்கள் உரிமைகளைக் கேட்கிறீர்களோ அவனிடத்தும், (உங்கள்) உறவின் பந்தத்தி னிடத்தும் உங்கள் கடமையில் ஜாக்ரதையா யிருந்துகொள்ளுங்கள் ; நிச்சயமாக, அல்லா(ஹ்) உங்கள்மீது காவலாளனு யிருக்கிறுன் '' (4 : 1).

" ஏ ஈமான் கொண்டவர்காள்! நீங்கள் அல்லா(ஹ்) வின்பால் நுங்கள் கடமையில் சர்வஜாக்ரதையா யிருந்து கொள்ளக் கடவீர்கள் ; மேலும், சரியான சொல்லையே சொல்லக் கடவீர்கள். அவன் உங்கள் செய்கைகளை உங்களுக்கு ஒழுங்குசெய்து வைப்பான் ; மேலும், உங்கள் குற்றங்களை உங்களுக்கு மன்னித்து விடுவான். இன்னம், எவனொருவன் அல்லா(ஹ்)வுக்கும் அவனுடைய தூதருக்கும் வழிபட்டு நடக்கிறுனே, அவன் திண்ணமாயே ஒரு மகத்தான சித்தியைப் பெற்றுக் கொள்ளுகிறுன் '' (33 : 70, 71).

மேற்கொண்டு கூறப்படும் சொற்பொழி வெல்லாம் மீக் கூறிய ஆயாத்களைச் சார்ந்தே தொடர்ந்து நிற்றல் வேண்டும்; அஃதாவது, பொதுவாகக் கணவன்-மனைவியின் பரஸ்பர உரிமைகளையும் கடமைகளையுமே விளக்கிக் காண்பிப்பதா யிருந்திடுதல் வேண்டும். அப்பால் **ஈஜாபு'ம் :கபூ'லும்** நடைபெற்று, இருவரும் — மாப்பிள்ளையும் பெண்ணும்— கணவனும் மனைவியுமாய்விடுகிறுர்கள். அக் கூட்டத்திலேயே மஹ்ரும் இவ்வள வென்னும் விஷயம் அறிவிக்கப்படுகிறது. இக் காலத்தில் இந்நாட்டில் ஓரொரு திருமணமும் ஒரு " கடுத்தப் புத்தகத் "தில் பதிவு செய்யப் பட்டு, மாப்பிள்ளை, பெண், சாக்ஷிகள், க'(த்)தீப்' ஆகிய வர்கள் கையெழுத்தும் இட்டுவைப்பது வழக்கமா யிருக்கிறது. இந்தியாவில் பெண்ணின் சம்மதத்தைத் தந்தையேனும், வேறு "கார்டிய" னேனும் கேட்டு வந்து, அவரே வக்கீலா யிருந்து, அப்பெண்ணை மணமுடித்து வைப்பது வழக்கம். இவ்வாறு மணவினை முடிவுற்றவுடனே, வாழ்த்தும் ஆசியும் கூறப்படுகின்றன. கூட்டத்தின ரனைவரும் ஆண்டவனிடத்து ஆசீர்வாத து'ஆ'வும் கேட்பார்கள். கூட்டம் கலையு முன்னே கற்கண்டும் பேரீச்சங்கனியும் வாரியிறைக்கப்படும். ஒரு 'ஹதீ':தில், **பா'ர(க்)கல்லாஹுலக்க**— " உனக்கு அல்லா(ஹ்) தன் ஆசியைச் சொரி

யட்டும்!'' என்னும் பிரார்த்தனை காணப்படுகிறது (பு'கா. 67 : 57); இனியொரு 'ஹதீ':தில், ''(உங்கள் கூட்டரவில்) அல்லா(ஹ்) தன் ஆசிகளைச் சொரியட்டும்! மேலும், அவன் உங்களை ஆசீர்வதித்து, உங்களிருவீரையும் நன்மையில் இணைத்து வைக்கட்டும்!'' என்னும் து'ஆ' காணப்படுகிறது (திர்மி. 9 : 6).

திருமணக் கடுத்தம்.

இதுகாறும் கூறியவற்றி லிருந்து, கல்யாண ஸிவில் ஒப்பந்தத்துக்குச் சாக்ஷியம் அத்தியாவசியம் என்னும் உண்மை நன்கு புலனாயிருக்கு மென்றே யாம் எண்ணுகிறோம். சாதாரண ஒப்பந்தத்திற்கும், வியாபார விஷயத்திற்குங்கூடச் சாக்ஷியம் தேவையென்று நம் :குர்ஆன்ஷரீ'ப் கூறிவிட்டிருக்கிறது (2 : 282). திருமண ஒப்பந்த மென்பது ஏனையெல்லாவித ஒப்பந்தங்களை விட மிகவும் உயரிய புனிதமுள்ளதாகவும், ஓராணையும் ஒரு பெண்ணையும் உள்ள நாள் உள்ளமட்டும் உயிருடனுயிர் ஒன்றித்துப்போய்விடுமாறும் செய்துவிடக்கூடிய உடன்படிக்கையொப்பந்தமா யிருந்து வருவது சரதம்; இந்த ஒப்பந்தத்தைப் போல அத்துணை யதிகமாய் அத் தம்பதிகளை உயிருள்ள காலமட்டும் ஒன்றாய்ப் பாதிக்கக்கூடியது வேறெந்த ஒப்பந்தமாகவும் இல்லை யென்பதும் கண்கூடு. இன்னம், ':தலா:க்கால் விவாகவிமோசனம் ஏற்படுங்காலத்தும் சாக்ஷிகள் ஆ'ஜிரா யிருக்க வேண்டு மென்று :குர்ஆனெகரீம் கூறிக்கொண்டிருக்கிறது (65 : 2). எனவேதான், 'ஹன'பீ சட்டம், கல்யாணத்துக்குச் சாக்ஷிகள் அத்தியாவசிய மென வற்புறுத்திக் கூறி, ஒரு திருமணத்திற்கு இரு சாக்ஷிகளேனும் குறைந்தபக்ஷம் இல்லாவிடின், அவ்விவாக உடன்படிக்கை செல்லா தென்று சொல்லிவிட் டிருக்கிறது (ஹிதா'ா. I, பக். 286). பித்தலாட்டம், பொய், புனைசுருட்டுக்கு இட மில்லாமலும், மறந்து ஐயங்கொள்ள வழியில்லாமலும் இருக்க, ஒவ்வொரு திருமணமும் ஊர் ஜமாஅ'த்தினர் வசத்திலுள்ள திருமணப் பதிவுப்புத்தகத்தில் பட்டவர்த்தனமாய் வரைந்து வைக்கப்படுவது இஸ்லாமிய சட்டத்துக்கு முற்றும் பொருத்தமுள்ளதாயே யிருந்துவருவது வெள்ளிடை விலங்கலே யாம். இதைத்தான் ''கடுத்தம்'' என்றும் கூறுவர். இஃது இக் காலத்துக்கு மெத்த அவசியமேயாம்.

நி (க்) கா'ஹ் முடிவுற்ற பின்பு பெண் மாப்பிள்ளை வீட்டுக்கு அழைத்தேகப் படுவாள்; அப்பால் அந்த மாப்பிள்ளை "வலீமா" (திருமண) விருந்து நடத்துவார்.* இதுவும் அத்திருமணத்தைப் பகிரங்கப்படுத்துதற் குரிய ஒரு முக்கிய பிரகடனமா யிருக்கிறது. ஆதலினாற்றான், நபிகட் டிலகமும் அந்த வலீமா விருந்தைக் குறித்து அதிகம் சிலாகித்து வற்புறுத்தி யுள்ளார்கள். அ'ப்'து'ர்ர'ஹ்மான் இப்'னு அ'வ்'ப் சார்பாக இவ்வாறு ஒரு செய்தி காணப் படாநின்றது: அவர்மீது சு'ப்ரா (ஒரு வித வர்ணம்) அடையாளம் காணப்பட்டதைப் பார்த்து, நபிபிரான் (சல்) என்ன விசேடமென விசாரித்தார்கள்; இதற்கு, அவருக்கு மணமுடிக்கப்பட் டிருப்பதாய் விடையளிக்கப் பட்டது. அதுகேட்டு, நபிகளுநாதர் அவருக்காகப் பிரார்த்தனை புரிந்து, ஒரேஆட்டை யறுப்பதாயிருப்பினும், ஒரு வலீமா விருந்தை யளிக்குமாறு அவருக்குஅறிவுறுத்தினார்கள் (பு'க'ா. 34 : 1; 67 : 7, 57). கை'ப'ரிலிருந்து திரும்பி வருகையில், ச'பிய்யாவுடனே நபி பெருமானுக்கு இடைவழியில் திருமண மாயிற்று; அதற் கென்று ஒரு வலீமா விருந்து நடைபெற்றது: எல்லாத் தோழர்களிடத்துமிருந்த எல்லா வறுத்த வாற்கோதுமை மாவையும் நபிகளுநாயகர் தங்கள் கூடாரத்துக்குக் கொணருமாறு கட்டளையிட்டார்கள். அவ்வாறே அனைவரும் கொண்டு வந்தார்கள்; எல்லோரும் சேர்ந்து வலீமாவிருந் துண்டார்கள் (பு'க'ா. 8 : 12). இஃதொரு வழிப்பிரயாணத்திலே நடைபெற்ற வலீமா வாகும்; எனினும், எத்துணைப் பெரிய முக்கியத்துவம் இந்த வலீமா விருந்துக்கு அளிக்கப்படுகிறதென்பது இதனால் நன்கு விளங்கக்கிடக்கின்றது. இன்னம், அன்னவர்கள் 'ஜய்னபை' மணந்த பொழுதும் தங்கள் தோழர்களை ஒரு வலீமா விருந்துக்கு அழைத்தார்கள்; அதற் கென்று ஒரே ஆடே அறுக்கப்பட் டிருந்தும், அப்பெருமானார் அளித்த வலீமா விருந்துகளி லெல்லாம் அஃ

"வலீமா" என்னும் திருமண விருந்து.

---

*நந் தமிழ்நாட்டிலே திருமணம் நிறைவேறியவுடன் பெண் வீட்டார் நடத்தும் விருந்தை "வலீமா" என் றழைக்கிறார்கள். இஃதன்று "வலீமா"; மாப்பிள்ளை தன்வீட்டுக்குப் பெண்ணை அழைத்துவந்த பிறகு செய்விக்கும் விருந்தே "வலீமா" வாகும். (பா. தா.)

தொன்றே அனைவர்க்கும் போதுமான போஜனத்தை யளித்துப் பெருமகிழ்ச்சியையும் ஊட்டக்கூடியதா யிருந்ததென்பர் (முஸ். 16 : 15). இமாம் பு'க'ாரீ பற்பல இடங்களில் வலீமாவைக் குறித்துச் சில்லறையாய்ச் செப்பியிருப்பினும், குறிப்பாக அநேக அத்தியாயங்களை இதற்கென்றே ஒதுக்கியும் வைத்துள்ளார்கள். அவற்றிலிருந்து ஒருசில அத்தியாயத் தலையங்கங்களை மட்டுமே இங்கே யாம் எடுத்தெழுதுகின்றோம்: "வலீமா அவசியமானதே" (பு'க'ா. 67 : 68). "விருந்தினரை உபசரிக்க ஒரே ஆடறுப்பினும், வலீமா (அவசியமே)" (பு'க'ா. 67 : 69). "ஓ ராட்டைப் பார்க்கினும் குறைவானதைக் கொண்டு வலீமா விருந்தளிப்பவன்" (பு'க'ா. 67 : 71). "வலீமா விருந்துக்கு அழைக்கப்படுவதை அங்கீகரிப்பதன் அவசியம்" (பு'க'ா. 67 : 72).

விவாகத்தில் "கார்டியன்" நுழைதல்.

மீக்கூறியவா றெல்லாம் வரையப்பட்டதி லிருந்து, இஸ்லாமிய ஷரீஅ'த்தின் பிரகாரம் திருமண மென்பது, ஓராணும் ஒரு பெண்ணும் என்றுமே கணவனும் மனைவியுமாய் ஒன்றித்து வாழ்வதென ஒருவரை யொருவர் செவ்வனம் உணர்ந்தறிந்து ஒத்துக்கொண்டும், அத்திருமணம் முடிந்த பின்னர் இருவருக்கும் என்னென்ன புதிய உரிமைகளும் கடமைகளும் வந்தடையுமென்பதை நன்குணர்ந்து கொண்டும் விட்ட பின்னால், தங்கள் பரஸ்பர நல்லபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதாயே இருந்துவருகிற தென்பது தெளியப்பட்டுவிட் டிருக்குமென்பது சரதமேயாம்; எனவே, இவ் வொப்பந்தத்தின் தன்மையை உற்றுநோக்கு மிடத்து, அத் திருமண உடன்படிக்கையில் கையெழுத்திடும் இரு திறத்தினரும்— மாப்பிள்ளையும் பெண்ணும்—பருவகாலத்தையும் பகுத்தறிவையும் பெற்றிருத்தல் அத்தியாவசியமென்பது வெள்ளிடை விலங்கலாய்த் தெள்ளிதிற் புலப்படக்கிடப்பது கண்கூடே. இதன் சார்பாயுள்ள :குர்ஆன் ஆயத் இதற்கு முன்பே எடுத்துக் காட்டப்பட் டுள்ளது ; **'பி:க்ஹ்** சட்டமும் இவ்வுரிமையை ஏற்றுக்கொண்டே யிருக்கிறது. **'ப(த்)தாவா ஆ'லம்கீரீ**யில் இவ்வாறு காணப்படுகிறது : "திருமண ஒப்பந்தம் செல்லுபடியாவதற்கு அத்தியாவசியமாயுள்ள நிபந்தனைகளில், அவ்வொப்பந்த சம்பந்தமாயுள்ள நபர்களின் பகுத்துணர்வு (**அ':க்ல்**) பருவமடைதல் (**பு'லூ:கா**) சுயேச்சை (**ஹுர்ரிய்யா**) என்பன சேர்ந்துள்ளன"

('பத். ஆ'லம். II. பக். 1). எனினும், பகுத்துணர்வு பக்குவமடைந்துள்ள மைனருக்கும், அவ்வுணர்வு பக்குவமடையாத மைனருக்கும் இடையிலே வேறுபாடு செய்யப்பட்டே வருகிறது: இந்த இரண்டாவது மைனர்—பகுத்துணர்வு பக்குவமடையாச் சிறு பிள்ளையின்— திருமணம் செல்லத்தக்கதன்றென்பது சொல்லாமலே விளங்கக்கிடக்கிறது; ஆனால், முதற்றரமைனர்— பகுத்துணர்வில் பக்குவத்தை அடையப்பெற்றுள்ள மைனரின்—திருமணம், அந்த மைனருக்குரிய கார்டியன் சம்மதங் கொடுத்தால், "செல்லுமதி" யுள்ளதாக ஆய்விடுதல் கூடும். ஆயின், மேஜர் பருவத்தையடைந்துள்ள ஆண்கள் சார்பாய் ஆராயுமிடத்து, இவர்கள் தங்கள் கார்டியன் சம்மதமின்றியே தங்கள் சொந்த சம்மதத்தை யளித்துவிடுவார்க ளாயினும், அத்திருமணம் செல்லத்தக்கதே யென்று கொள்ளுவதில் அபிப்பிராயபேதம் ஒன்றுமே யில்லை யென்றுணர்க; ஆனால், மேஜரான பெண்கள் தங்கள் தந்தையர், அல்லது கார்டியன்களின் அபிப்பிராய மின்றித் தாங்களே சம்மதங் கொடுத்துவிட்டால், அத்திருமணம் செல்லக் கூடியது தானா? என்பதில் ஒரு சிறிது அபிப்பிராயபேதமே இருந்து வருகிறது: 'ஹன'பீ சட்டப் பிரகாரம் இத்தகைய விவாகம் முற்றும் செல்லத்தக்கதே யாகும்; இதில் சிறிதும் ஐய மில்லை: "மேஜர் பருவத்தை யடைந்து, பகுத்தறிவிலும் பக்குவ மடைந்துள்ள ஒரு சுதந்தர ஸ்திரீயின் திருமண ஒப்பந்தம், அவள் (அதற்கு முன்னே) கல்யாண மாகாத கன்னிப்பெண்ணா யிருப்பினும், அல்லது முன்னமே கல்யாணமா யிருப்பினும், அவளது சொந்த சம்மதத்தின்மீது, அந்தச் சம்மதம் அவளுடைய கார்டியன் சம்மதத்தால் உறுதிப்படுத்தப் படாமற் போயினுங்கூடப் பூர்த்தியடைந்து விடுகிறது" (ஹித'ா. I, பக். 293), ஷீஆ'க்களின் சட்டமும் இதே கருத்தைத் தான் முழுதும் தழுவி நிற்கின்றது. மாலிக், ஷா'பிஈ' இமாம்கள் வேறுவித அபிப்பிராயம் கொண்டுள்ளார்கள்; அஃதாவது, மீக்கூறிய "பெரிய மனுஷி" யான பெண்களுக்கும் கார்டியன் சம்மதமும் அவசியமா யிருக்கிறது. இமாம் பு'க'ாரீயும் இதே அபிப்பிராயமே கொண்டு நிற்பதால், இவரது கிரந்தத்தின் ஓரத்தியாயம், "கார்டியன் சம்மத மிருந்தாலன்றிக் கல்யாணம் கூடாதென்று கூறுகிறவர்" என்று தலையங்க மிடப்பெற் றிருக்கிறது (பு'க'ா. 67 : 37). எனினும், இந்த இமாமே இனியோர் அத்தி

யாயத்திற்கு, "தந்தையே யாயினும், வேறெந்த 'கார்டியனே' யாயினும், ஒரு (கல்யாணமாகாத) கன்னிப் பெண்ணை, அல்லது அதற்கு முன்னே அவளது சம்மதமின்றியே கட்டிக்கொடுக்கப்பட் டிருந்த பெண்ணைத் திருமண முடித்து வைப்பது தகாது," என்று தலையங்கம் கொடுத்துள்ளார் (பு'க'ா. 67 : 42). அதே யிடத்தில் இந்த இமாம், "கார்டியன்" என்பவர் "அரசராக" வும் இருக்கலாம் என்று அதன் தாத்பரியத்தை விரித்துக் கூறியுள்ளார் (பு'க'ா. 67 : 41). இத் தலையங்கத்தின் கீழே இவர் ஒரு செய்தியை வரைந்துவைத் திருக்கிறார் : ஒரு நாள் ஒரு பெண் நபிபெருமா னிடம் வந்து, தானொரு மாப்பிள்ளைக்கு வாழ்க்கைப்பட வேண்டுமென்று கூறினாள்; அக்கணமே அப் பெருமானார் (சல்) அந் நங்கையை அம் மாப்பிள்ளைக்கு மணமுடித்து வைத்தார்கள் ; அம் மனிதன் அவளுக்கு மஹ்ரொன்றும் கொடுக்கவியலாத அத்துணை ஏழையா யிருந்தும், அந்தக் கல்யாணத்தை அவ்வாறு நிறைவேற்றி முடித்தார்கள். ஆனால், அதுகாலை அவளுக்கு "இயற்கை கார்டியன்"—(தகப்பன், அல்லது வேறு நெருங்கிய உறவினர்) இருந்தாரா, இல்லையா வென்று ஒன்றும் புலனாக வில்லை.

ஒரு சில சட்ட நிபுணர்கள், கார்டியன் சம்மதம் அவசிய மென்பதற்கு ஆதாரமாகச் சிற்சில :குர்ஆன் ஆயாத்களை மேற்கோளாய்க் கூறுவதுண்டு ; ஆனால், அத் திருவாக்கியங்கள் கார்டியன் அவசியமேயென்பதை வெளிப்படையாய்க் கூறக் காணோம். "இன்னம், நீங்கள் பெண்டுகளுக்குத் :தலா:க்கூறி, அவர்களும் தங்கள் இ'த்'த'ாவுக்குரிய காலத்தை முடித்து விடுங்கால், அவர்கள்—(அக் கணவனும் மனைவியும்) தங்களுக்குள்ளே ஒரு சட்டபூர்வமான முறையிலே இணங்கிவிடும் பொழுது, அவர்கள் (அத்தகைய பெண்மணிகள்) தங்கள் கணவர்களை மணந்து கொள்வதினின்று நீங்கள் தடைசெய்யாதீர்கள்" (2 : 232). இவ்வாயத்தில், அந்தத் :தலா:க் வாங்கிய பெண்கள் தங்கள் கணவர்களை மணந்து கொள்ள வொட்டாது தடை செய்யக் கூடாதென்று அறிவுறுத்தப் பெறுகிறவர்கள் "கார்டியன்" களே யென்று அவர்கள் கூறுகிறார்கள் ; இதனால் கல்யாணத்துக்கு "கார்டியன்" சம்மதம் அவசியமேயென்று கருதியுள்ளார்கள் போலும் ! இவ்வாறு அவர்கள் விவா

திப்பது தவருன வாதமாயே யிருக்கிறது ; என்னெனின், இவ் வாயத்தில், ஒரு :தய்யிப'ா—(அஃதாவது, புருஷன் ருசியைப் பார்த்தறிந் துள்ளவள்) விஷயத்தில், அவள் தன் சொந்த இச்சையின்மீது தன்சொந்தக் கணவனை மீட்டும் மணந்து கொள்ளுங் காரியத்தில் கார்டியன்கள் தலையிடக் கூடா தென்றே தடுக்கப்பெற் றிருக்கிருர்கள் ; இதனுல் கார்டியன் சம்மதம் தேவையில்லை யென்பதே மிக்க உறுதிப் படுகின்றது. இனியோ ராயத்தையும் அவர்கள் எடுத்துக் காட்டுகிருர்கள், கார்டியன் சம்மதம் அவசியமென்பதற்கு ஆதாரமாக: "மேலும், நீங்கள் மூமினை ஸ்திரீகளை விக்கிரகத் தொழும்பர்களுக்கு, அவர்கள் ஈமான் கொள்கிற மட்டில், மணமுடித்துக் கொடாதீர்கள்" (2 : 221). இவ் வாயத்தில் "நீங்கள்" எனப் பட்டவர்கள் "கார்டியன் களே" என்று எவ்வாறு கருத்துக் கொள்ளல் சாலும்? :குர்ஆன் மஜீதி'ல் அநேக இடங்களில் கூறப்பட்டிருப்பதே போல இங்கும் "நீங்கள்" என்னுஞ் சொல் பொது ஜனங்களாய சகல முஸ்லிம்களையும் ஆண்டவன் சேர்த்து விளித்து அறிவுறுத்தி யிருப்பதாகவே இதன் தாத்பரியம் கொள்ளக் கிடக்கிறது என்றுங் கூறலாம்.

இமாம் பு'க'ாரீ எழுதியுள்ள நபி நாயக மவர்களின் 'ஹதீ':துகளில் முதலாவது ந. நா. வாக்கியம், நால்வகைத் திருமணங்களைக் குறித்து ஆ'யிஷா (றலி) விவரித்துள்ள விஷயத்தைக் கூறுவதாயே யமைந்து கிடக்கிறது ; அவற் றுள்ளே முதலாவது— இஃதொன்றே இஸ்லாத்திஞல் அனு மதிக்கப்பட்டதா யிருக்கிறது— இவ்வாருய்க் காணப்படா நின்றது: "ஒருமனிதன் இனியொருவன் பாதுகாப்பிலுள்ள ஒரு பெண்ணை, அல்லது அவன் மகளைத் தனக்குக் கொடுக்கும்படி கேட்கிருன் ; அப்பால் அவளுக் கொரு மஹ்ரை நிர்ணயிக்கிருன் ; பிறகு அவளை மணமுடித்துக் கொள்ளுகிருன்." இது பெரும்பாலான பொதுவழக்கத்தை விளக்கிக் காண்பிக்கிற தன்றி, ஒரு பருவமடைந்துள்ள பெண் கார்டியன் சம்மத மில்லாது தன் சொந்த சம்ம தத்தை மட்டுங்கொண்டு ஒரு மாப்பிள்ளைக்கு வாழ்க்கைப் படக் கூடாதென்று கூறவில்லை யென்பது மிகத்தெளிவே. இரண்டாவது 'ஹதீ':தும் ஆ'யிஷா பிராட்டியார் கூறிய தாயே யிருக்கிறது ; இஃது ஒரு கார்டியன் தன்வய முள்ள ஓர் அநாதப் பெண்ணைத் தானே மணந்து கொள்வதை

விளக்குவதா யிருக்கிறது; இஃது ஆ'யிஷா (றலி) :குர்ஆன் மஜீதி'லுள்ள ஒராயத்துக்குத் தாமே செய்துகொண்டுள்ள ஒரு சொந்த வியாக்கியானமாயே காணப்படாநின்றது; ஆயின், அஃதொரு மெய்யாகவே நடைபெற்ற எந்தவொரு திருமணச் சம்பவத்தையும் சுட்டிக் காட்டுவதா யில்லை. மூன்ருவது வாக்கியம், 'ஹ'ஜ்ரத் உ'மர் (றலி) தங்கள் விதவையாய்விட்ட குமாரி'ஹ'ப்ஸாவை 'ஹ'ஜ்ரத் அபூ'ப'க்ர் (றலி) அவர்கட்குக் கொடுப்பதாய்க் கூறியது. இதிலிருந்தும், ஒரு மேஜரான பெண் தன்கார்டியன் சம்மதமில்லாது தானே மணந்து கொள்ளும் உரிமையைப் பறிக்கக் கொடுத்து விட்டா ளென்று முடிவுகட்ட இடமில்லை யென்பது வெளிப்படை. உ'மர் (றலி) அவர்களது செயலிலிருந்து, தந்தை தன் புதல்வியின் திருமணத்துக்காக வரன்தேடலா மென்னும் உரிமையையே உணர்த்துவதாய்க் காணப்படாநின்றது.

மேற் கூறப்பட்டவற்றிற்கு மாருய், :குர்ஆன்ஷரீ'பும், 'ஹதீ':துஷரீ'பும், ஒரு பருவமடைந்த பெண் தன் சொந்த சம்மதத்தின்மீது தான் விழையும் ஒரு மாப்பிள்ளைக்குத் தானே வாழ்க்கைப்படலா மென்னும் உரிமையை அங்கீகரித்தே நிற்கின்றன. மேலே கூறப்பட்ட ஆயத் (2 : 232) "அவர்கள் ஒரு சட்ட பூர்வமான முறையிலே......மணந்து கொள்வதினின்று நீங்கள் தடை செய்யாதீர்கள்," என்று மிக்க வெளிப்படையாயே கூறிவிட் டிருக்கிறது. இஃதொரு :தலா:க் வாங்கிய நங்கையைக் குறித்துக் கூறுவதா யிருக்கிறது. ஆனல், ஒரு கைம்பெண்ணைக் குறித்து நம் :குர்ஆனெ கரீம், "ஆயின், அவர்கள் தாமே புறப்பட்டுச் செல்வதா யிருப்பின், அன்னவர்கள் தாங்களாகவே சட்ட பூர்வமான ('ஹலாலான) செயல்களி லிருந்து செய்யுங் காரியத்துக்காக உங்கள்மீது குற்ற மொன்றும் இல்லை" (2 : 240) என்று இயம்பி யிருக்கின்றது; இதனல் ஒரு விதவை தானே வேறொருவனை மணந்து கொள்ளும் உரிமை பெற்றுள்ளா ளென்னும் விஷயம் விளங்கக் கிடக்கின்றது. இவ்விரு ஆயாத்தும் :தய்யிப'ாவின் (:தலா:க் வாங்கிய, அல்லது தாலிவாங்கிய மங்கையின்) சுய உரிமையை அங்கீகரித் திருப்பது வெள்ளிடை விலங்கலே. இவ்விரு வகையினரும் தாமே தமது சம்மதங் கொண்டு மறுமணம் புரிந்து கொள்ளலாம்; இதனைத் தடைசெய்ய— அவர்கள்

சுயமே சம்மதித்து ஒரு கணவனை வரித்துக் கொள்வதைத் தடுத்து நிறுத்த— எத்தகைய கார்டியனுக்கும் எப்படிப் பட்ட அதிகாரமும் இல்லையென் றறிக; இஃதொரு 'ஹதீ':துக்கும் மெத்தப் பொருத்த முள்ளதாயே யிருந்து வருகிறது: "**அல் அய்யிம்** (விதவையும் விவாக விமோசனம் பெற்றவளும்) தங்கள் கார்டியனைவிடத் தாங்களே தங்களைத் (திருமணம் செய்து கொள்வது கொண்டு) தியாகம் புரிந்துகொள்ளப் பெரிய உரிமை பெற்றுள்ளார்" (அபூ'த'ா.12 : 25); இனியொரு 'ஹதீ':தில் இவ்வாறு காணப் படாநின்றது: "**:தய்யிப'ா**வின் விஷயத்தில் (தலையிட) கார்டியன் உரிமைபெற் றில்லை" (ஷ).

மீக்கூறிய :குர்ஆன் ஆயாத்களி லிருந்தும் 'ஹதீ':துகளி லிருந்தும், ':தலா:க் வாங்கிய பெண்களும் தாலிவாங்கிய பெண்களும் தங்கள் மறுமணத்துக் குரிய மாப்பிள்ளைகளைத் தாங்களே தேர்ந்தெடுத்துக் கொள்வதிலே முழுச் சுதந்தரமும் பெற்றிருக்கிறார்க ளென்பது வெள்ளிடை விலங்கலே யாம். இதே சுதந்தரம் மேஜரான கன்னிப் பெண்களுக்கும் இருக்கிறதா? என்பது இப்பொழுதுள்ள வினவாகும்; இருக்கிற தென்றே இமாம் அபூ''ஹனீ'பா (ரஹ்) இயம்பிவிட் டிருக்கிறார்கள். இதற்கு இவர்கள் கூறும் காரணம் இதுவாகும்: மேஜர் பருவத்தை யடைந் துள்ள ஒரு பெண்மணி தன் சொத்தை வேறு கார்டியனைக் கலக்காமலே வினியோகிக்க (விற்கவுங் கூட) உரிமை பெற்றுள்ளா ளாதலின், அதே மாதிரியில் அவள் தனதுடலை யும் (உள்ளத்தையும் தான் விரும்பிய எவனுக்கேனும்) அர்ப்பணம் செய்யும் உரிமையும் பெற்றிருக்கிறாள். ஆனால், மணமாகாத கன்னிகைக்கு இயற்கையாகவே மடமும் நாணமும் மிக்கிருக்கு மாதலின், இன்னம் இவளுக்கு ஆடவர்களைப் பற்றியும் வேறு வீடுகூடும் விஷயாதிகளைப் பற்றியும் ':தலா:க் வாங்கியவளுக்கும் தாலி வாங்கியவளுக்கும் இருப்பதே போன்ற அதிகமான அனுபவம் இருக்கமாட்டா தாதலின், இவள் தன் கணவனைத் தேர்ந்தெடுக்கும் காரியத்தில் தகப்பனது அல்லது கார்டியனது மேற்பார்வைக்குக் கட்டுப்பட் டிருப்பது உலக அனுபவத்தில் நியாயமாகவே புலப்படக் கிடக்கிறது; இவன் அவளுக்குரிய மஹ்ர் முதலிய காரியங்களை ஒழுங்குடனே நிறைவேற்றி வைப்பான்; மேலும், அயோக்கியப் போக்கிரி

களால் அவள் ஏமாற்றப்பெற்றுத் தவறிய தீய வழியிலே கொண்டுய்க்கப் படாமலும் தடுத்துப் பாதுகாத்து வைப்பான். என்ன இருந்தாலும், இறுதியிலே திருமண முடிச்சுக்கு (அவ் வொப்பந்தத்துக்கு) அவளது சம்மதமே யன்றி, அவனது சம்மதம் தேவைப்படுவது கிடையாது. தந்தை அல்லது கார்டியன் பொறுப்பு அப் பெண்ணின் நிலையைப் பாதுகாத்துவைக்க அவசியமா யிருக்கலாம்; ஆனாலும், திருமண ஒப்பந்தம் நிறைவேறுவதும் நிறைவேருமற் போவதும் அவளுடைய சுயசம்மதத்தைத் தான் முற்ற முற்றச் சார்ந்துநிற்பதா யிருந்துவருகிறது. எனவே தான், இமாம் அபூ''ஹனீ'பாவின் (ரஹ்) அபிப்பிராயமே :குர் ஆன் மஜீதி'ல் காணக் கிடக்கும் கல்யாண சம்பந்தமான கருத்தின் சாரத்துக்கு முற்றமுற்றப் பொருத்தமா யிருந்து வருகிறது என்கின்ரும். அந்த இமாம் இவ்வாறு கூறுகின்ருர் : '' திருமணத்துக் குரிய உரிமை அவளுடையதே ; அது (திருமணம் புரிவதென்பது) வ(க்):கா'ஹா (நாணமற்ற தன்மை) என்பதனல் ஏற்பட்டுவிட்ட தென எவரும் (குறை)கூரு திருக்கவே கார்டியன் என்பானெருவன் வேண்டப்படுகிருன் '' (ஹித'ா. I, பக். 294); மேலுமவர் வரைகின்ருர் : '' ஒரு கார்டியன், ஒரு மேஜரா யுள்ள கன்னிகையை அவனது விருப்பத்திற் கிணங்க (ஒரு மாப்பிள்ளைக்கு வாழ்க்கைப்பட) வேண்டுமென்று வற்புறுத்துவது சட்ட விரோதமா யிருக்கிறது (ஷே). 'ஹதீ':தும் இவ் வபிப்பிராயத்தைத் தழுவியே நிற்கிறது. எவ்வாறெனின், நபிகள் திலகமும் (சல்) '' விதவையும், விவாக விமோசனம் பெற்றவளும் அவளவள் அனுமதி பெறும் வரை (மறு) மணம் புரியப்படுவது கூடாது ; கன்னிப் பெண்ணும் அவளது அனுமதி பெறும் வரை மணம் புரிவிக்கப்படுவது கூடாது '' (பு'க'ா. 67 : 42) என்று திருவாய் மலர்ந்தருளி யுள்ளார்கள். '' பு'க'ாரீ''யில் அடுத்துள்ள அத்தியாயம் இவ்வாறு தலையங்கம் இடப்பெற் றிருக்கிறது : '' ஒரு மனிதன் தன் குமாரியை மணமுடித்துக் கொடுத்து, அவளதனை விழையவில்லை யாயின், அந்தத் திருமணம் ரத்து செய்யப்படும் '' (பு'க'ா. 67 : 43). இவ்வாறு முடிக்கப்பட்ட ஒரு திருமணத்தை நபி பெருமானர் (சல்) ரத்துசெய்து விட்டார்க ளென ஒரு 'ஹதீ':தும் கூறிக்கொண் டிருக்கிறதென்று மேற்கோள் காட்டப்பட் டுள்ளது.

சட்ட நிபுணர்களும் மைனர்களின் கல்யாணங் குறித்துக் கூறியிருக்கிறார்கள். 'ஹன'பீ சட்டப்பிரகாரம், "மைனர் சிறுவன், அல்லது சிறுமியின் திருமணம், அச்சிறுமி கல்யாணமாகாத கன்னிகையே யாயினும் அல்லது :தய்யிப'ாவே யாயினும், கார்டியன் (மட்டும்) **அசப'ாத்தி** னின்று— (தந்தைவழி பந்துக்களி னின்று) ஒருவனு யிருப்பின், சட்டப்படி செல்லத்தக்கதே யாகும்" (ஹித'ா. I, பக். 295). கார்டியன் தகப்பனு யிருந்தால் மட்டுமே இத்திருமணம் செல்லத்தக்கதென மாலிக் இமாம் அபிப்பிராயங் கூறியுள்ளார்; இமாம் ஷா'பிஈ' (ரஹ்) அந்த கார்டியன் தகப்பனுக, அல்லது தகப்பனுடைய தகப்பனு கவே இருக்கவேண்டு மென்று கூறுகிறார்கள் (ஷெ). 'ஹன'பீ சட்டத்தில் இனியொரு நிபந்தனையும் காணக் கிடக்கின்றது: அஃதாவது, ஒரு மைனர் தந்தையாகிய, அல்லது தந்தையின் தந்தையாகிய கார்டியனுலன்றி வேறு கார்டியனுல் கல்யாணம் பண்ணிவைக்கப்பட்டால், அந்த மைனர் மேஜர் பருவத்தை யடைந்தவுடனே தன் திரு மணத்தை ரத்து செய்து விடலாம். ஆனல், முன்னமே கூறப்பட்டுள்ள ஒரு 'ஹதீ':தின் பிரகாரம், தந்தையால் தன் குமாரியின் விருப்பத்துக்கு மாருய்ச் செய்து வைக்கப் பட்ட விவாகம்— அந்தப் பெண் மேஜராயிருந்தமையால்— தனக்குஅந்தத் திருமணம் பிடிக்கவில்லை யென்று கூறி, நபிபெருமானைக் கொண்டு அதனை ரத்துசெய்து கொண்டு விட்டாள்; அதே உதாரணத்தைப் பின்பற்றி, மைனர் சிறுமியும், தன் தந்தையினுலே மணமுடித்துக் கொடுக்கப் பட் டிருந்தாலும், மேஜர் பருவத்தை யடைந்தவுடனே, தனக்கந்தத் திருமணம் பிடிக்கவில்லை யாயின், ரத்து செய்து விடலாம். ஆயின், 'ஹன'பீ இமாம் இதற்கு இடங்கொடுத்தன ரில்லை. இமாம் பு'க'ாரீ ஒரு **:தய்யிப'ா** வின் (விதவை அல்லது விவாக விமோசனம் பெற்றவளின்) விஷயத்தை மட்டுமே எடுத்துக்காட்டி யுள்ளார். ஆனல், இனியொரு 'ஹதீ':து இப்'னு அ'ப்'ப'ாஸின் (றலி) வாயி லாய் வந்துள்ளது இவ்வாறு காணப்படாநின்றது: "ஒரு கன்னிப் பெண் நபி பெருமானிடம் நண்ணி, தன்னைத் தன் தந்தை தன்னுடைய அபிப்பிராயத்துக்கு மாருய் மணமுடித்துக் கொடுத்து விட்டதாய்க் கூறினுள்; அது கேட்டு, நபிகளுதர் அவளுக்கு அத் திருமணத்தை ரத்து செய்துவிட அனுமதியளித்து விட்டார்கள் (அபூ'த'ா.

12 : 25). இன்னம், ஒரு :தய்யிப'ாவின் உதாரணத்தையும் அவர் எடுத்துக் கூறுகிருர் (அபூ'த'ா. 12 : 27).

**அக்'பா'உ** என்னுஞ் சொல் கு'ப்'உ — (ஒரே அந்தஸ்து, அல்லது ஒரே மாதிரி) என்பதன் பன்மையா யிருக்கிறது. எடுத்துக்காட்டாக, அரபி கள் அரபிகளின் **அக்'பா'உ**களா யிருக் கிருர்கள் ; :குறைஷிகள் :குறைஷிகளின் **அக்'பா'உ**களா யிருக்கிருர்கள். ஆகவே, ஒரு கோத்திரத்து, அல்லது ஒரு குலத்து மக்கள் தங்களுக் குள்ளே **அக்'பா'உ**களே யாவார்கள் ; இவ்வாறே ஓரினத்து மக்கள் அவர்களுக் குள்ளே **அக்'பா'உ**களே யாவர். திருமணவினை **அக்'பா'உ**களுக் குள்ளேதான் நடைபெற வேண்டுமென்று கூறக் :குர்ஆன் ஷரீ'பிலேனும் 'ஹதீ':து ஷரீ'பிலேனும் ஆதார மொன்றும் காணப்பட வில்லை. ஆனுலும், பெரும்பான்மை முஸ்லிம் கள் தங்கள் **அக்'பா'உ**க் குள்ளேயே சம்பந்தம் செய்து கொள்ள விழைகின்ருர்கள் ; இவ்விருப்பம் வேறு விஷயம்.* இஸ்லாம் தோன்றி, எல்லா வருணுசிரமங்களையும்— ஜாதி பேதம், நிற வேறுபாடு, குலப் பாகுபாடு, கோத்திர உயர்வு தாழ்வு, குடும்ப இறுமாப்பு ஆதிய பேதாபேதங்க ளனைத்தை யும்— தகர்த்து நிரவல் செய்துவிட்ட தன்றே! ஆகவே, **அக்'பா'உ**க் குள்ளேயே திருமணம் நிகழ்வுற வேண்டு மென்னுங் கொள்கையினை இம்மார்க்கம் ஏற்றுநிற்கவில்லை யென்பது வெள்ளிடை விலங்கலேயாம். கோத்திர உயர்வு தாழ்வுகளையும் குலப் பாகுபாடுகளையும் :குர்ஆன் ஷரீ'ப் அல்லா(ஹ்)வின் திருமுன்பினிலே ஆதரித்து நிற்கவில்லை யென்பது தெளிவு: "ஏ மானிடர்காள்! நாம் நுங்களை ஒரே ஆணிலிருந்தும் ஒரே பெண்ணிலிருந்துமே படைத்திருக் கிறோம் ; மேலும், நீங்கள் ஒருவரை யொருவர் அறிந் துணர்வான் வேண்டி நுங்களைக் கோத்திரங்க ளாகவும்

அக்'பா'உக் குள்ளே திரு மணத் தொடர்பு.

---

* இஸ்லாத்தில் ஜாதிவித்தியாசம் இல்லாவிடினும், திரு மணச்சார்பாயுள்ள சம்பந்தம் செய்யப் புகுமிடத்து, சமுதாய அந்தஸ்து சமூகசமநிலை முதலியவற்றைக் கவனித்தே கல்யாணம் செய்ய வேண்டுவது இந் நாட்டிலே இதுகாலை அவசியமா யிருக் கிறது. இன்றேல், தவளை தண்ணீருக் கிழுக்க, ஓணன் வேலிக் கிழுக்கும் கதையாகத்தான் அக்கணவன்-மனைவி வாழ்க்கை எப் பொழுதுமே யிருந்துகொண் டிருக்கும். (பா. தா.)

குடும்பங்க ளாகவும் ஆக்கிவைத்துள்ளோம்; அல்லா(ஹ்)வி னிடத்தே நுங்களுள் கண்ணியமுள்ளவர் நுங்களுள்ளே தங் கடமையில் சர்வஜாக்ரதையா யிருப்பவரே யாவார்'' (49 : 13). "மூமினனவர்க ளெல்லாரும் சோதரர்களே," (49 : 10) என்றுகூறி, நம் :குர்ஆன் மஜீத்' எத்தேயத்தவரே யாயினும், எக்குலத்தவரே யாயினும், எல்லாரும் தங்களுக் குள்ளே எத்தகைய சம்பந்தத்தையும் ஏற்படுத்திக் கொள்ளத் தக்கவர்களே யென்று தீர்மானம் செய்துவிட் டிருக்கிறது. இன்னம், "மூமினை ஆடவரும் மூமினை பெண்டிரும் ஒருவருக் கொருவர் நேயர் (அவ்லியாக்)க ளாகவே யிருக்கிருர்கள்'' (9 : 71). இவ் வாயாத்தின் கருத் துக்களை நபி பெருமானர் (சல்) இவ்வாறு விளக்கியுள் ளார்கள்: "சன்மார்க்க ஒழுக்கத்தில் உயர்வு பெற்ற லன்றி, அரபிகளும் அஜமி (அரபியல்லாதவர்)கள் மீது உயர்வு பெற்றில்லை; அஜமிகளும் அரபிகள் மீது உயர்வு பெற்றில்லை; வெள்ளையனும் கறுப்பன் மீது மேன்மை பெற்றில்லை; கறுப்பனும் வெள்ளையன் மீது மேன்மை பெற்றில்லை.'' (:குர். 49 : 13ம் பார்க்க.)

திருமணத் தொடர்பை ஏற்படுத்துங்கால், :குர்ஆனெ கரீம் இன்ன இன்ன உறவினர்களை மணந்துகொள்ளக் கூடாதெனப் பொதுப்படையாய்க் கூறிவிட்டு, அதற்கு மேலே, "இதுவன்றி, ஏனையெல்லாப் பெண்மணிகளும் உங்களுக்கு 'ஹலாலானவர்களே'' (4 : 24) என்றுதான் கூறி யிருக்கிறது. அப்பாலும் சென்று, அத்திருமறை நம் முஸ்லிம்கள் முஸ்லிமல்லாத பெண்களைக்கூட மணமுடித் துக்கொள்ளலா மென்று அனுமதி யளித்துள்ளது: "இன் னம், மூமினை பெண்மணிகளி லிருந்து கற்புள்ளவர் களும், உங்களுக்கு முன்னே வேதத்தை யருளப்பெற்றவர் (பெண்டிர்)களி லிருந்து கற்புள்ளவர்களும் உங்களுக்கு 'ஹலாலான வர்களே'' (5 : 5). நபிகள் திலகம் (சல்அ'ம்) தங்கள் சொந்த மாமி (அத்தை) மகளாகிய அழகிய 'ஜய்னபை'— ஓர் உயர்குலமாய :குறைஷிகுல உன்னத நங்கையை— ஒரு விடுதலை யடைந்திருந்த 'ஜய்தெ'ன்ப வருக்குத் திருமணம் முடித்து வைத்தார்கள்; இன்னம், பி'லால் என்னப்பட்ட ஒரு 'ஹப'ஷீ— நீகிரோவரு— க்கு அ'ப்'து'ர்ர'ஹ்மான் பி'ன் அ'வ்'பின் சகோதரியை மண முடித்து வைத்தார்கள். அக்கால முஸ்லிம்க ளிடத்து இவ்வாறு நடைபெற்ற கலப்பு மணம் இன்னம் எத்தனையோ

உண்டு. இனியொரு 'ஹதீ':தில் இவ்வாறு ஒரு செய்தி காணக் கிடக்கிறது : நபி பெருமானார் (சல்) ஒரு முறை அபூ' ஹிந் தென்னும் ஒரு மனிதனுக்கு ப'னீ ப'யால்' என்னப்பட்ட ஒரு கோத்திரத்தின் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்க ஸி'பாரிஷ் செய்தார்கள் ; ப'னீப'யால்' களுக்கு அபூ'ஹிந்து ஒரு விடுதலையடைந்த அடிமையின் **(மவ்லா)** அந்தஸ்திலே யிருந்தார் ; மேலும், இம் மனிதன் **ஹஜாமத்—** (இரத்தங்குத்தி யெடுத்தல்) வேலைசெய்கிற வனு யிருந்தான். நபிகட் டிலகம் அந்த ப'னீப'யால்'களை நோக்கி, " ஏ ப'னீப'யால்'! நீங்கள் (உங்கள் புத்திரிகளை) அபூ'ஹிந்துவுக்கு மணமுடித்துக் கொடுங்கள் ; மேலும், அவனுடைய குமாரிகளை நீங்கள் மணந்து கொள்ளுங்கள் " (அபூ'த'ா. 12 : 26) என்று அறிவுறுத்தினர்கள். இவ் வெடுத்துக் காட்டெல்லாம், **அக்'பா'உக்** குள்ளேயே மணமுடிப்ப தென்னும் குறுகிய கொள்கையினைப் பிசைந் தெறிந்து விடுவது கண்கூடு. எனினும், சட்டகலா பண்டிதர்கள் **அக்'பா'உக்** குள்ளேயே மண முடிப்பதை அங்கீகரித்து வற்புறுத்தியு முள்ளார்கள். இக் காரியத்தில் இமாம் மாலிக் மட்டும் வேறுபட்ட கருத்தைக் கொண்டுள் ளார்கள் : **க'பா'ஆ** (சமத்துவம்) என்பது சமய (மத)த் தாலேயே ஏற்படுகிற தென்று இப்பெரியார் கூறுகின்றர் ; அஃதாவது, சகல சமத்துவமும் எல்லா முஸ்லிம்களுக்கும் (இஸ்லாத்தில்) ஒன்றுபோலவே யிருந்துவருகிறது. பெரும் பான்மையான சட்ட நிபுணர்கள் 4 காரியங்களில் சமத்து வத்தை வற்புறுத்துகிருர்கள் : அவை, சமயம் (மதம்), சுயேச்சை, பிறப்பு, தொழில் என்பனவாம். இமாம் ஷா'பிஈ' (ரஹ்) **அக்'பா'உக்** குள்ளே செய்யப்படாத திருமணத்தைச் சட்ட விரோத ('ஹரா)மான தெனத் தம் மால் தீர்ப்பளிக்க முடியாதெனக் கூறிவிட்டார்கள். மணப் பெண்ணும், அவளுடைய கார்டியனும் சம்மதங் கொடுத் தால், மீக் கூறிய சிறுதடை தானே நீங்கிவிடுகிறது. என் னெனின், சகல முஸ்லிம்களும் சகோதரர்களே யல்லவா ? " எல்லாரும் ஓர் குலம் ; எல்லாரும் ஓரினம்."

மணவினைக் காலத்தில், சட்டவிரோத மல்லாத நிபந் தனைகளை விதிப்பதும், அவற்றினை எதிர்த்தர'ப்'பார் ஏற் பதும் நியதியேயாம் ; அப்பால் அவ்விரு சாராரும் அந்த நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பதும் அவசியமே

யாகும். இது குறித்து நபிபெருமான் (சல்) இவ்வாறு நவின்றருளி யுள்ளார்கள்: "நீங்கள் நிறைவேற்றக்கூடிய சகலவித நிபந்தனைகளுள்ளும் அவ்வாறு நிறைவேற்றப்படவேண்டிய முதன்மையானவை, ஆண்-பெண் கூட்டரவைச் சட்ட பூர்வமானதாகச் செய்துவைக்கும் நிபந்தனைகளாகவே யிருந்து வருகின்றன" (பு'க'ா. 67 : 53; அபூ'த'ா. 12 : 40). இனியொரு செய்தியும் காணப்படாது போக வில்லை: நபிபெருமானுர் (சல்) தங்கள் மருகரொருவரை (அதுகாலை இஸ்லாத்தைத் தழுவாதிருந்த அவரை)க் குறித்து இவ்வாறு சிறப்பித்துக் கூறியுள்ளார்கள்: "அவர் என்னிடம் பேசியக்கால், மெய்யையே பேசினுர்; அவர் என்னிடத்து வாக்குறுதி செய்துகொடுத்தக்கால், அவ்வுறுதி மொழிகளை நிறைவேற்றியே முடித்தார்" (பு'க'ா. 67 : 53).

திருமணக் காலத்தில் விதிக்கப்படும் நிபந்தனைகள்.

சட்டவிரோதமான நிபந்தனைகளென்பன, இஸ்லாமிய சட்டத்துக்கு, அல்லது பொதுமக்களொழுக்கத்துக்கு மாறுபட நிற்பனவேயாம்; எடுத்துக் காட்டாக, ஒழுக்க இழுக்குள்ள இடங்களுக்கு அடிக்கடி போய்வர மனைவிக்கு உரிமையிருக்க வேண்டுமென்பதும், அவள் மஹ்ருக்கோ ஜீவனும்சத்துக்கோ உரியுவளாகாளென்பதும், கணவனும் மனைவியும் ஒருவர் சொத்திலிருந்து இனியொருவர் பாகம் பெறக்கூடாதென்பதும் போன்றவற்றை எடுத்துக் கூறலாம். இப்படி ஏதேனும் சட்ட விரோதக் "கண்டிஷன்" ஏற்படுத்தப் பட்டால், அந்தக் "கண்டிஷன்" மட்டுமே ரத்தாய்விடு மன்றி, அதனுல் நி(க்)கா'ஹ் ரத்தாய்விட மாட்டாது. சட்ட பூர்வமான நிபந்தனைகட்கு உதாரணங்களாவன: மனைவி தன் கணவன்வீட்டை விட்டு வெளியேற வேண்டு மென்று கட்டாயப் படுத்துவது கூடாதென்பதும் (அபூ'த'ா. 12 : 40), முதல்தாரம் உயிருடனிருக்கு மட்டும் அவள் கணவன் மறுதாரம் செய்து கொள்வது கூடாதென்பதும், கணவனும் மனைவியும் அல்லது கணவனேனும் மனைவியேனும் ஒரு குறிப்பிட்ட இடத்திலே வசிக்கவேண்டு மென்பதும், மஹ்ரிலிருந்து ஒரு பகுதி உடனே கொடுபடவேண்டு மென்றும் மிகுதித் தொகை 'தலா:க்குக்குப் பின்னே, அல்லது அக் கணவன் இறந்த பிறகு கொடுக்கப்படு மென்றும் ஏற்பாடு செய்து கொள்வதும், கணவன் மனைவிக்கு ஓரொரு மாதமும் ஒரு

குறிப்பிட்ட தொகை சம்ரக்ஷணத்துக்காகக் கொடுத்துவர வேண்டு மென்பதும், மனைவியின் உறவினர் அவள்பால் வந்துபோவதைக் கணவன் தடுப்பது கூடா தென்பதும், ஒரு குறிப்பிட்ட காரணத்துக்காக, அல்லது ஏதேனு மொரு நியாயமான காரணத்துக்காக மனைவி கணவன்பால் :தலா:க் கேட்க உரிமை பெற்றுள்ளாள் என்பதும், இன்னம் இவைபோன்ற ஏனையவைகளுமாம்—(அமீரலீ).

## பகுதி 2.— பலதாரங் கொள்ளல்

இஸ்லாம் மார்க்கம் பொதுப்படையாய் ஏகதார மணத்தையே இல்வாழ்க்கைக்குரிய இயற்கை விதியென ஏற்றுக்கொண் டிருக்கிறது. ஆனால், சிற்சில சங்கட சமயங்களில் எமது மார்க்கம் ஆடவனுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரை அனுமதித் திருக்கிறது; ஆயின், ஒரு மனைவிக்கு ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட கணவரை மணக்க இஸ்லாம் இடந்தர வில்லை. இதனால்தான் ஒருவனுடைய "கட்டிய மனைவியை,"— கணவனிருக்குங்கால்,— இனி யொருவன் மனைவியாய் வரிக்க இஸ்லாம் இடமளிப்ப தில்லை—(:குர். 4 : 24.) குழந்தைகளைப் பெறுவதையும், அவர்களைப் பிராமரித்துப் பரிபாலித்துப் பயிரேற்று வதையும் ஒருவன் ஊன்றிப் பார்ப்பனேல், கணவனுக்கு மட்டும் பலதாரமண உரிமை— மனைவிக் கில்லாத வகையில்— அளிக்கப்பட் டிருப்பதன் அந்தரங்கத் தாத் பரியம் நன்கு விளங்காது போய்விட மாட்டாது. இயற்கை யென்பது ஆடவருக்கும் பெண்டிருக்கும் ஏற் படுத்தி வைத்திருக்கும் குடும்ப பரிபாலன முறைமையின் நியதியின்படி நோட்டமிட்டுப் பார்க்குங்கால், ஒருவன் ஒரே காலத்தில் ஒருத்திக்கு மேற்பட்டுள்ள பெண்டு களிடத்துப் பிள்ளைகளைப் பெறமுடியு மென்பதும், ஆனால், அவளோ, அவனொருவனுக்கு மேற்பட்ட ஆடவர்களுடன் கூடி அவ்வாறு (தந்தை இன்னானென் றறியப்படக்கூடிய) குழந்தைகளைப் பெறமுடியா தென்பதும் செவ்விதிற் புல னாகாது போய்விட மாட்டா. ஆகவே, பலதாரமண மென் பது சமுதாய சிக்கல் பலவற்றை நீக்கி, இதற்கு நன்மை புரியவல்லதா யிருக்க, பலபுருஷ விவாக மென்பதோ, சமு

தாயத்தில் பற்பல சிக்கல்களை முளைக்க வைப்பதுடன், தகப்பன் இன்னுனென் றறியமுடியாத எண்ணிறந்த தறுதலைகளையும் தோற்றுவித்து விடுமென்பது தெளிவு. *

---

* ஜார்ஜ் பெர்னுர்ட்ஷாவுக்கு மேனுட்டுக் கிறிஸ்தவர் கோட்பாடாகிய (மனிதன் சிருஷ்டித்துள்ள) ஏகதார விரதத்திலே சிறிதும் நம்பிக்கை கிடையாது. அவசியத்தினிமித்தம் ஒருவன் ஒருத்திக்கு மேலே மணந்து கொள்ளத்தான் வேண்டும் என்று அவர் உறுதி பூண்டு நின்றுர். எனவே, ஒரு புருஷன் சிற்சில சூழ்நிலைகளில் ஒரு சில வரைதுறைகட்குக் கட்டுப்பட்டு ஏக காலத்திலே நான்கு தாரங்கள் வரை மணந்து கொள்ளலா மென்னும் இஸ்லாமிய அனுமதிச் சட்டத்தை அவர் பாராட்ட லாயினுர். அதனைப் பொருத ஒரு கிறிஸ்தவர் ஷாவை எதிர்த்து, இஸ்லாத்தைத் தூஷித்து, திருமண விஷயத்தில் இவ்வாறு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலே வேற்றுமை பாராட்டும் இஸ்லாத்தை எவ்வாறு சிலாகிக்கலாம்? என்று எழுதி, இறுதியிலே, "இஸ்லாத்தின் போதனைப்படி ஏக காலத்தில் ஒருவன் நான்கு தாரங்களை மணக்கலாம்; ஆனுல், ஒருத்தி நான்கு புருடர்களை மணக்கலாகாது... இஸ்லாம் நேர்மையுள்ளதா யிருக்குமேல், மனுஷனுக்கும் மனுஷிக்கும் இடையிலே வேற்றுமை பாராட்டாத மதமாயிருக்குமேல், அவனுக் களித்த விவாக உரிமையை அவளுக்கும் அளித்திருக்க வேண்டுமல்லவா? எனவே, ஏன் இஸ்லாம் பெண்களுக்கு மட்டும் ஏககாலத்தில் நால்வரை மணக்க அனுமதியளிக்கவில்லை யென்பதற்கு உம்மால் சமாதானம் கூற முடியுமா?" என்று கோபத்துடனே வினவினுர்.

அதைப் படித்த ஷா ஒரு போஸ்ட் கார்டிலே வரைந்தனுப்பிய சமாதானம் இதுவேயாம்: "நுமது நீண்ட கடிதம் கிடைத்தது. ஒரு புருடன் ஏககாலத்தில் நான்கு மனைவியரை மணந்து கொண்டால், அதன் விளைவாக அந் நால்வரும் கருவுற்று விடுவார்கள்; ஆனுல், ஒரு பெண் ஏககாலத்தில் நான்கு புருடருக்கு வாழ்க்கைப் பட்டால், அதன் விளைவு கர்ப்பச்சிதைவாகவே (abortion) போய் முடியும்"

இதுகாலை இங்கிலாந்தில் பலதாரமண மசோதா வொன்று தையாரிக்கப்பட் டுள்ளது. கூடிய சீக்கிரம் அது சட்டமாய் விடக் கூடுமென்று அனைவராலும் ஆவலுடனே எதிர்பார்க்கப் பட்டு வருகிறது. அச்சட்டப்படி ஒவ்வொருவனும் இவ்விரண்டு மனைவியரை மணந்தேயாதல் வேண்டும். (பா. தா.)

பலதாரமண மென்பது ஒருசில சங்கட சமயங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய புறநடை யென்பது மட்டும் புறக்கணிக்கப் படுவது கூடாது. :குர்ஆன் மஜீதி'ல் இவ்வாறே விளக்கமாய்த் துலக்கப்பட் டிருக்கிறது :

பலதார மண மென்பது ஒரு விலக்கு விதியே.

وَإِنْ خِفْتُمْ أَلَّا تُقْسِطُوا فِي الْيَتٰمٰى فَانْكِحُوا مَا طَابَ لَكُمْ مِّنَ النِّسَاءِ مَثْنٰى وَثُلٰثَ وَرُبٰعَ ۚ فَإِنْ خِفْتُمْ أَلَّا تَعْدِلُوا فَوَاحِدَةً أَوْ مَا مَلَكَتْ أَيْمَانُكُمْ ۚ ذٰلِكَ أَدْنٰى أَلَّا تَعُولُوا ۝

"இன்னம், அநாதைகளின்பால் நீதத்துடனே நடக்க முடியாதென நீங்கள் அஞ்சுவீர்க ளேல், அதுகாலை நுங்களுக்கு நல்லவர்களாய்த் தோன்றும் அத்தகைய (நேர்த்தியான) மாதர்களை இவ்விரண்டாக, மும்மூன்ருக, நந்நான்காக மணந்து கொள்ளுங்கள்; ஆயின், (அவர்களுக் கிடையே) நீங்கள் நீதிவழங்க மாட்டீர்களென்று அஞ்சுவீர்களேல், அதுபொழுது ஒருத்தியைமட்டுமே (மணந்து கொள்ளக் கடவீர்கள்)..." (4 : 3). பலதாரமணங் குறித்துப் பேசும் :குர்ஆன் திருவாக்கியம் இஃ தொன்ருயே யிருந்துவருகிறது; இவ் வாயத்தின் போக்கைக் கூர்ந்து கவனிக்குமிடத்து, பலதாரமணம் ஒரு கட்டாயச் சட்டமா யில்லாது, ஓரனுமதிச் சட்டமாயே, அதுவும் இரு நிபந்தனைகளுக் குட்பட்டே யிருந்துவருவது நன்கு புலப்படும். நாம் இவ் வாயத்தின் உட்கருத்தை ஊடுருவி ஆராயப் புகுமுன்னே, அநாதைகள் விஷயம் ஃபசல் செய்யப்பட நேருங்காலேதான், அதுவும் அவர்கட்கு நீதி வழங்கப்பட மாட்டாதென அஞ்சப்படும் பொழுதேதான் பலதாரமணம் அனுமதிக்கப்பட் டுள்ள தென்னும் உண்மை நன்குணரப்படல் வேண்டும்; இதில் எவ்வித ஐயமும் இருப்பது கூடாது. இந் நிபந்தனை சமுதாயத்தின் நன்மைக்கென்றே ஏற்படுத்தப்பட் டிருக்கிற

தல்லது, அவரவரின் மிருக (வெற்றுப் புணர்ச்சி) இச்சைகளை நிறைவேற்றிக் கொள்ளுதற்காகவன்று என்பது தெள்ளிதிற் புலனுகாது போய்விட மாட்டாது. "ஆள ஆண்மைத்திற மிருக்கிறது," அல்லது "ஷவ்கு' கேட்கிறது", என்பதற்காக நான்கு தாரம் ஆடவனுக்கு அனுமதிக்கப்பட் டில்லையென்பது அறிஞருக்கு நன்கு புலனுதல் கூடும்.

இவ்வாயத்துக்கு (4 : 3) வழக்கமாய்க் கொள்ளப்பட்டு வரும் வியாக்கியானம், **பு'க'ாரீயில்** காணக்கிடக்கும் **'ஹ'ஜ்ரத் ஆயி'ஷா** பிராட்டியின் அபிப்பிராயத்தையே தழுவிநிற்பதா யிருக்கிறது: "இவள் தன் கார்டியன் பராமரிப்பிலுள்ள ஓர் அநாதப் பெண்; அவனது சொத்தி லும் அவனுடன் கூட்டாளி. இவளுடைய சொத்தும் சவுந்தரியமும் அவனை வசீகரிக்கின்றன; ஆகவே, இவ ளுடைய கார்டியன், இவளுக்குரிய மஹ்ர்விஷயத்தில் நியதியுடனே நடந்து கொள்ளாது, இவளை மணக்க விழைகிறுன்; இவளுக்கு இனியொரு மனிதன் கொடுக்கக் கூடியதை— மஹ்ரை— இல்லாம லாக்கிவிடும் அநீதிதான் (இவ னிழைப்பது). ஆதலினுல், அவர்கள்—(அத்தகைய கார்டியன்கள்) அவர்கட்கு — அவ்வனுதைகட்கு — நீதி செலுத்தியும், அவர்களது வழக்கத்திற் கேற்க அவர்கட் குரிய மஹ்ர்களை அவர்களுக்கு அளித்தும் விட்டாலல்லது, அவர்களை மணப்பதினின்று தடுக்கப்பட்டு விட்டார்கள். ஆகையால், அவர்கள் தங்களுக்கு நேர்த்தியாய்த் தோன்றும் வேறு மாதர்களை மணந்து கொள்ளுமாறு கட்டளையிடப்பெற்று விட்டார்கள்" (பு'க'ா. 65, ஸூரு 4, அத்தி. 1). இந்த வியாக்கியானத்தைக் கூர்ந்து நோக்குங் கால், அந்த ஆயத்தில் (4 : 3) அநேகஞ் சொற்களும் வாக்கியங்களும் ஆதாரம் ஒருசிறிது மில்லாது நுழைக்கப் பட் டிருப்பது விளங்கக் கிடக்கும்; இவ்வாறு விஸ்தார விரிவுரை வியாக்யானம் செய்ய நபி பெருமான் (சல்) அனுமதியும் அணுத்துணையும் காணப்பட வில்லை. இனி யொரு காரணத்தைக் கொண்டும் 'ஹ'ஜ்ரத் ஆ'யிஷா (றலி) அவர்களது வியாக்யானம் கொள்ளத்தக்கதா யில்லை. இந்த 4-ஆவது அத்தியாயத்தின் 127-ஆவது ஆயத் நிச்சய மாகவே இந்த 4 : 3-ஆவது ஆயத்தின் விளக்கமா யிருந்து வருகிறது; இதற்கு வியாக்கியானம் செய்யுங்கால், அதே

ஆ'யிஷா பிராட்டியார் இவ்வாறு விளக்கங் கூறியுள்ளார் : ''இவனோர் அநாதப் பெண்ணைப் பராமரிக்கும் மனிதனா யிருக்கிறான் ; அவளுக் கிவன் கார்டியன் ; அவளது சொத்தில் பாகம்பெற வேண்டியவனாயு மிருக்கிறான் ; ஆகையால், இவனுடைய சொத்திலே, பேரீச்சமரங்களில் கூட, இவனுக்குப் பங்காளியாய் விடுகிறாள். ஆனால், இவன் அவளை மணக்க மறுக்கிறான் ; இனி யொருவனை அவள் மணந்து கொள்வதையும் தடைசெய்து விடுகிறான் ; ஏனென்றால், அவளுக்கு இவனது சொத்திலிருக்கும் பாக உரிமையைக் கொண்டு அவளுடைய கணவன் தன் (இவனது) சொத்துக்குப் பங்காளியாய் விடுவானென்று அஞ்சி விடுகிறான் ; ஆதலினால், அவளை மணம்புரிய வொட்டாமலே இவன் தடை செய்து விடுகிறான்'' (ஷி). ஐய மில்லாமலே 4 : 127-ஆவது ஆயத் 4 : 3-ஆவது ஆயத்தின் வியாக்யானமா யிருக்கிறது ; ஆனால், ஆ'யிஷா பிராட்டியார் பின் ஆயத்துக்குக் கூறியுள்ள தாத்பரியம் முன் ஆயத்துக்குக் கூறியுள்ள தாத்பரியத்துக்கு முற்றும் மாற்றமா யிருக்கிறது. 4 : 3-ஆவது ஆயத்துக்கு ஓர் அநாதப் பெண்ணை அவளுடைய கார்டியன் மணக்கவிழைவதாகவும்,...ஆனால், அவன் அவ்வாறு அவளை மணப்பதினின்று தடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் வியாக்கியானம் கூறுகிறார் ; 4 : 127-ஆவது ஆயத்துக்கோ, அவர்கூறும் வியாக்யானப் பிரகாரம் அந்த கார்டியன் அவ்வநாதப் பெண்ணைத் தானும் மணக்க மறுக்கிறான் ; இனி யொருவனை மணந்து கொள்ள வொட்டாமலும் தடுக்கிறான்.

எனவேதான், வியாக்யான கர்த்தாக்கள் வேறு மூன்று தாத்பரியங்களை விளக்கி யுள்ளார்கள் : அவற்றுள்ளே முதலாவது, இவ்வாயத் (4 : 3) நான்குக்கு மேற்பட்ட மனைவியரை மணப்பதைத் தடைசெய்யவே வந்துள்ளது என்பதா யிருக்கிறது; என்னெனின், எண்ணிறந்த மனைவிகளை மணப்பதாயின், தங்கள் சொத்தைமட்டுங் கொண்டு அவர்களைப் பராமரிக்க முடியாது போய்விடின், தம்பாலுள்ள அனாதைகளின் ஆஸ்தியை அபகரிக்கத் தூண்டப்பெறுவார்கள். இரண்டாவது தாத்பரிய மாவது : அனாதைகளுக்கு உங்களால் நீதி வழங்க முடியாதென்று நீங்கள் அஞ்சுவீர்களேல், அநேக மனைவியருக்குங்கூட உங்களால் நீதி வழங்க முடியாதென்று அஞ்சக் கடவீர்கள். மூன்றா

வது தாத்பரிய மாவது: அனாதைகளுக்கு உங்களால் நீதி வழங்க முடியாதென்று நீங்கள் அஞ்சுவீர்களேல், 'ஜினா (வியபிசாரம்) என்னும் பெரும்பாபத்தைக் கண்டும் நீங்கள் அஞ்சவே வேண்டும்; எனவேதான், நான்கு மனைவியர் வரை உங்களுக்கு அனுமதிக்கப்பட் டுள்ளார்கள்.

இம் மூன்று விளக்கங்களும் ஆ'யிஷா பிராட்டியின் விரிவுரையைக் காட்டினும் அதிக அதிருப்தியுள்ளனவாயே யிருந்துவருவது கண்கூடு. உண்மையிலே இந்த 4 : 3-ஆவது ஆயத்தின் விளக்கமாகவே 4 : 127-ஆவது ஆயத் இருந்துவருகிறது: "இன்னம், அன்னவர்கள் பெண்மணிகளைக் குறித்து உம்மிடம் ஒரு தீர்ப்பைக் கேட்கிறார்கள். (அதற்கு நீர்) கூறுவீராக: அல்லா(ஹ்) அவர்களைக் குறித்துத் தன்னுடைய தீர்மானத்தை உமக்கு அறிவிக்கிறான்; இன்னம், எவர்களுக்கு நீங்கள் அவர்களுக்கு ஏற்படுத்தப்பட் டுள்ளதைக் கொடுக்கின்றீர்களில்லையோ, குழந்தைகளில் பலஹீனர்களுக்கும் (கூட நீங்கள் கொடுப்பது கிடையாது); அப்படிப்பட்ட மாதர்களின்— இவர்களை நீங்கள் மணக்கவும் மனங்கொள்வது கிடையாது— அநாதக் குழந்தைகளைக் குறித்து (இவ்)வேதத்திலே உமக்கு ஓதப்படுவதும் (உமக்கு அறிவிக்கப்படுகிறது). இன்னம், அனாதைகள்பால் நீதத்துடனே நீங்கள் நடந்து கொள்ளவேண்டுமென்றும்(உமக்கு அறிவிக்கப்படுகிறது.)" இதிலே, "(இவ்) வேதத்திலே உமக்கு ஓதப்படுவது" என்பது, இவ் வத்தியாயத்தின் மூன்றாவது ஆயத்தையே (4 : 3) குறிப்பிட்டுக் காட்டுகிற தென்பது வெளிப்படை. இன்னம், "எவர்களுக்கு நீங்கள் அவர்களுக்கு ஏற்படுத்தப்பட் டுள்ளதைக் கொடுக்கின்றீர்க ளில்லையோ அப்படிப்பட்ட மாதர்கள், குழந்தைகளில் பலஹீனர்களுக்கும் கூட..." என்பது அரபிகளிடத்தே அக்காலத்தில் காணப்பட்டு வந்த ஒரு கொடிய பழக்கத்தையே சுட்டிக் காட்டுகிறது. அவ்வஞ்ஞான அரபிகள் பெண்மணிகளுக்கும், சிறு பிள்ளைகளுக்கும் தங்கள் சொத்திலிருந்து பங்கு கொடுப்பது கிடையாது; என்னெனின், குதிரைமீது சவாரிசெய்து, போர்க்களம் சென்று எதிரிகளைத் தகைந்து துரத்துகிறவனுக்கே சகல சொத்துரிமையும் உண்டென்று சமாதானம் கூறுவார்கள். ஆகவே, அபலை ஸ்திரீகள் குழந்தைகளுடனே விதவைகளாய் விட்டால், அக் கைம்பெண்

களின் கதி அதோகதிதான். என்னெனின், அன்னவர் கட்குச் சொத்துரிமையு மில்லை; குழந்தைக ளுள்ள கைம்பெண்களை வேறு ஆடவர்களும் மறுமண முடித்துக் கொள்ள முன்வருவது மில்லை. எனவே, :குர். 4 : 3 வந்து இவ்வாறு கூறலாயிற்று: நீங்கள் சாதாரணமாக அநாதக் குழந்தைக ளிடத்து அன்பு பாராட்ட— அவர்கட்கு நீதி வழங்க— இயலாமற் போய்விடுவீர்க ளேல், அவ் வனுதை களின் அன்னைமார்களை மணந்து கொள்ளுங்கள். அப் பொழுது அவர்களுடைய நன்மையிலே நீங்கள் கவலை கொள்ளத் தலைப்பட்டு விடுவீர்கள்; இதற்காக நீங்கள் நான்கு தாரங்கள் வரைகூட மணந்துகொள்ள அனுமதி யளிக்கப்பெற் றுள்ளீர்கள். இதுதான் 4 : 3-ஆவது ஆயத் துக்குரிய சரியான தாத்பரியமா யிருக்கிறது.

இந்த 4-ஆவது அத்தியாயம் அருளப்பட்ட காலத்திலே இருந்துவந்த சூழ்நிலைகளின் கூரிய தன்மைகளை நோட்ட மிட்டுப் பார்த்தால், நாம் மேலே கூறிய முடிபே மிகமிகச் சரியானதாய்க் காணக்கிடக்கின்றது: அதுகாலை இருந்து வந்த அச்சிறு முஸ்லிம் சமுதாயம், அடிக்கடி எதிரிகளின் — அவர்களையெல்லாம் அடியுடன் வேர்கல்லி யெறிந்துவிட வேண்டு மென்னும் மாகொடிய திட்டத்துடனே வீறு கொண் டெழுந்துவந்த மக்கத்து மறமாக்களின்— பெரும் பெரும் படைக்கடலுடனே உயிருக்குமல்லாடிப் போர்புரிய வேண்டியவர்களாய்த் துன்புறுத்தப்பெற்று வந்தது. அது பொழு திருந்த ஆடவரெல்லாம்— கிழவர்களும், சிறுவர் களுமுட்பட அனைவரும்— போர்க்களம் புகவேண்டியவர் களா யிருந்தார்கள்; அந்த ஏறுமாறுன சண்டைகளில் அநேக குடும்பங்களின் போஷகர்களா யிருந்துவந்தவர்கள் மடிந்துபோய் விட்டமையால், பற்பல பெண்டுகளின் பிரிய நாயகர்களும், மிகப் பல குழந்தைகளின் அருமைப் பிதாக் களும் பிடுங்கப்பட்டு விட்டார்கள். ஆகையால், அக் கைம் பெண்களுக்கும் ஆதரவற்ற அனுதைகளுக்கும் உண்டி யளிக்கவும் உறையுள் அளிக்கவும் வேண்டுவது நபிபெரு மானுக்கு ஒரு முக்கிய கடமையாய்விட்டது. அவ்வநா தப் பெண்டுகளும் அநாதப் பிள்ளைகளும் அப்படியே கவனிக்கப்படாது விடப்பட் டிருந்தால், அவர்கள் மாண்டு மடிந்தே போய்விட் டிருப்பார்கள்; ஆகையால், அதுகாலை அச்சிறு சமுதாயத்தினரால் அவ் வன்பகைஞர்களை

எதிர்த்து நிற்பதென்பது— தற்காப்பு மன்றுட்ட மென்பது ஒருசிறிதும் இயலாமலே போய்விட்டிருக்கும். இத்தகைய சூழ்நிலையிலேதான் :குர். 4-ஆவது அத்தியாயம் தோன்றி, அம் முஸ்லிம்கள் ஒரு மனைவிக்கு மேலே நான்கு தாரம் வரை மணம்புரிந்து கொண்டு, அந்தத் திக்கற்ற விதவை களுக்கும் ஆதரவற்ற அனுதைகளுக்கும் ஒண்ட ஒரு நிழ லும் உண்பதற்கோர் உண்டியும் அளித்து உதவலாயிற்று. இப்பொழுது பாருங்கள், அந்த 4 : 3 என்ன செல்லுகிற தென்று : நீங்கள் அந்த அனுதைகட்கு நியதிவழங்க முடியாதென அஞ்சுவீர்களேல், (அவர்களுடைய மாதாக் களாய) மாதர்களை 4 வரை மணமுடித்துக் கொள்ளுங்கள்; அதற்கு வேண்டிய ஒரு முக்கிய நிபந்தனை, அவர்களெல் லாருக்கு மிடையே நீங்கள் நீதமாய் நடந்துகொள்ள வேண்டுமென்பதுதா னுகும். இங்கு "மாதர்கள்" என் பவர்கள், அவ் வநாதக் குழந்தைகளின் மாதாக்களாகவே இருந்து வருகிறுர்கள் என்பது இதற்கு முன்னே விளக்கப் பட்டதைப் போல, ஆயத் 127-ஆல் செவ்வனம் துலக்கப் பட் டிருக்கிறது.

ஒழுக்கவீனம் தடியப்படல் வேண்டும்.

கணவர்கள் தங்கள் தங்கள் மனைவியர்பால் அள விகந்த அபிமானமே பாராட்ட வேண்டுமென்று இஸ்லாம் வற்புறுத்தியுள்ளது வெளிப்படை ; * 'ஹரா மல்லாத எந்த வேலையையும் அந்தப்பெண் மணிகள் செய்யலாமென்றும் இம் மார்க்கம் அனுமதி யளித்திருப்பதும் பிரத்தியக்ஷம். ஆனுலும், அவர்கள் தங்கள் ஒழுக்கத்திலும், கற்பைக் காக் கும் கடமையிலும் கண்ணுங்கருத்துமா யிருந்துவருதல் வேண்டும். ஒழுக்கவீனத்தை இம் மார்க்கம் ஒருசிறிதும் இலேசான காரியமென விட்டுக்கொடுப்பது வழக்க மில்லை. பெண்களின் கற்பென்பது பெயர்போன "கோஹெநூரி" னும் பல்லாயிரம்பங்கு மேம்பட்டதாயே யிருந்துவருகிறது. எனவே, எவளொருத்தி தனது கற்பொழுக்கத்தில் இழிந்து

* "ஏ மகா ஜனங்களே ! உங்களுக்கு உங்கள் மனைவியர் மீது உரிமைகள் சில இருப்பதேபோல, உங்கள் மனைவியருக்கும் உங்கள்மீது உரிமைகள் சில உண்டு. ஆதலால், நீங்கள் நுங்கள் மனைவியரை அதிக பக்ஷத்துடனே நடத்தக் கடவீர்கள்" (ந. நா. வா.)

விடுகிறுளோ, அவள் தன் கணவனிடத் திருந்து கரிசனத்தையும் மரியாதையையும் கண்ணியத்தையும் ஒரு சிறிதும் எதிர்பார்க்க அருகதையற்றுவிடுகிருள். * நுஷூ‘ஜ் விஷயத்தில் கணவன் கடுமையான “நடவடிக்கை”யே எடுத்துக்கொள்ள வேண்டுமென எந் திருமறை அனுமதி யளித்திருக்கிறது ; நுஷூ‘ஜ் என்பது, “கணவனுக்கு விரோதமாய் மனைவி எதிர்த்துக்கிளம்புதல்” அல்லது, “அவளுடைய கிளர்ச்சியும் கலகமும்” என்று பொருள்படும் ; இதிலே, “கணவனை எதிர்த்துச் சண்டை செய்தலும்”, “அவனை வெறுத்தலும்”, “அவனைவிட்டு ஓடிவிடலும்” சாரும். வேறு சில வியாக்யானிகள் நுஷூ‘ஜை “மனைவி தன் கணவன தில்லத்தைவிட்டு, அவன் விரும்பாத வேறொருவன் வீட்டுக்குச் சென்றுவிடுதல்” என்று பொருள் கூறுவர் (ப’’ஹ்ருல்மு‘ஹீத்). இத்தகைய மனைவியை நடத்தவேண்டிய விதம் மூன்று வகையாகும் (:குர். 4 : 34): சாதாரண நுஷூ‘ஜா யிருந்தால், உதாரணமாக, கணவனை எதிர்த்து வாயாடுவது போன்றதா யிருப்பின், அவளைச் சிறிது கண்டித்து அறிவுறுத்துவதே போதும். அதற்கு மேலே, அவள் அவனை எதிர்த்துப் பேசுவதோடு நில்லாது, வெறுக்கவும் துவக்கினுல், அக் கணவன் தன் மனைவியைத் தனது படுக்கையைவிட்டு விலக்கித் தனியே படுக்கவைத்தல் வேண்டும். அப்பாலும் மீறி, அவள் தன் கணவன்வீட்டை விட்டு வெளியிற் சென்றுவிட்டால்,— அவளது நடக்கையும் ஐயத்திற்கு இடமளித்தால்,— அன்னவளுக்கு அவன் சிறிது சரீர சிக்ஷையும்— இலேசான அடியும்— கொடுத்து, அவளைத் திருத்தித் தன் கணவன் வீட்டுக்குத் திரும்பிவரச் செய்தல் வேண்டும். எல்லார் குடும்பத்திலும் இவ்வாறு “அடிதடி” நடைபெறுவ தில்லை; சமுதாயத்தில் கீழ்த்தர மாக்களும் இருப்பது வழக்க மாதலின், அத்தகை யிழிசனருக்குச் சிறிது அடிகொடுப்பது சிற்சில வேளைகளில் அவசியமாயே காணப்பட்டுத்தான் வருகிறது.

ஒரு மனைவி தன் கணவனை வெறுத்து வேற்றகம் புக்கு விடுங்கால், அவளது நடக்கையும் ஐயத்திற்கு இடங்கொடுத்து விடுங்காலே, அவளை இலேசா யடிக்கலா

---

* “தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர், நிலையின் இழிந் தக் கடை” என்ருன் வள்ளுவன்.

மென்று கூற 'ஹதீ':தின் ஆதாரமும் இல்லாது போய்விட வில்லை. "முஸ்லிம்" கிரந்தத்திலே இவ்வாறு ஒரு ந. நா. வாக்கியம் காணப்படாநின்றது: "இன்னம், பெண் மணிகள் விஷயத்திலே நீங்கள் அல்லா(ஹ்)வுக்கு அஞ்சிக் கொள்ளக் கடவீர்கள்; என்னெனின், அன்னவர்களை நீங்கள் அல்லா(ஹ்)வின் அமானத்தாகவே ஏற்றுக் கொண் டுள்ளீர்கள்......மேலுமவர்கள் உங்களுக்கு இந்தக் கடமை செய்யக் கட்டுப்பட் டுள்ளார்கள்: (அஃதா வது) நீங்கள் விரும்பாத ஒருவனை உங்கள் வீட்டுக் குள்ளே நுழைய அவர்கள் எவனொருவனுக்கும் அனுமதி யளிக்க மாட்டார்கள். அவர்கள் அவ்வாறு அனுமதியளித் தால், அப்பொழுது அவர்கட்கு— அப்பெண்டிர்க்கு— அவர் கள் மேனியிலே எத்தகைய அடையாளமும் (தடிப்பும் அல்லது வடுவும்) ஏற்படாத விதத்திலே (இலேசான) சரீர சிக்ஷை யளியுங்கள்" (முஸ். 15 : 19). இக் கட்டளை எம் பெருமானால் இறுதி 'ஹஜ்ஜின் பொழுது இடப்பட்டது. இவ்வாறு (இலேசான) அடி கொடுப்பதற்கு அவர்களுடைய ஒழுக்கத்திற்கு இழுக்கு ஏற்படுவதாய ஐயம் ஏற்படுதல் அவசியமா யிருக்கிறது. இவ்வாறு ஐயுறுமாறு மனைவி நடப் பதும், கணவன் அதற்காக அவளை அடிப்பதும் மேன் மக்கள் குடும்பத்திலே நடைபெற மாட்டா வென்றும் நபி பெருமானார் (சல்) நவின்றருளி யுள்ளார்கள். ஒரு சில பெண்மணிகள் தங்கள் கணவர்கள் தங்களைத் துன்புறுத் தியதாக நபிபெருமானிடம் சென்று முறையிட்டார்கள்; அதுகேட்டு, நபிகணாயகர் (சல்) அந்தக் கணவர்களுக்கு இவ்வாறு அறிவுறுத்தினார்கள்: "அநேகம் பெண்டுகள் தங்கள் கணவர்களைக் குறித்துக் குறைகூறி மு'ஹம்மதி'ன் இல்லத்திற்கு வந்துள்ளார்கள்; உங்களுக்குள்ளே இன்ன (கண)வர்கள் ஒரு விதத்தாலும் நல்லவர்களே யல்லர்" (அபூ'த'ா. 12 : 42). இதன் சார்பாக "பு'க'ாரீ" யில் காணப்படும் ஒரு 'ஹதீ':தில் இவ்வாறு அவ்விஷயம் அறை யப்பட் டிருக்கிறது: "உங்களில் ஒருவன் தன் அடிமைக் குக்கொடுக்கும் சரீரசிக்ஷையே போன்றதொரு சிக்ஷை யையே—(அஃதாவது, கடுமையான அடியைத்) தன் மனை விக்குக் கொடுக்கா திருக்கட்டும்; ஏனென்றால், அப்பால் அதி சீக்கிரத்திலே அவன் அவளுடனே சரச சல்லாபங் களைப் புரியவேண்டியவனா யிருக்கிறான்" (பு'க'ா. 67 : 94).

இன்னமொரு வேளையிலும் கணவன் தன் மனைவி மீது அதிகாரம் செலுத்த வேண்டியவனா யிருக்கிறான்; அதுவுங்கூட அவளது நடக்கை வெளிப்படையான ஒழுக் கக்கேட்டிலே இழிந்துவிடுங் காலேதான். "இன்னம், உங்கள் பெண்டுகளிலே பகிரங்க ஒழுக்க இழுக்கிலே ('பா'ஹிஷா) இழிந்துவிடும் அவர்கள்குறித் தென்றாலோ, உங்களுள் ளிருந்து நான்கு சாக்ஷிகளை அவர்களுக்கு விரோதமாய்(ச் சொல்ல) அழையுங்கள்; அதுபொழுது அவர்கள் (அவ்வாறு) சாக்ஷியங் கூறுவராயின், அவர்களை மரணம் (வந்து) தூக்கிக்கொண்டு செல்லுமட்டும், அல் லது அவர்களுக்கு அல்லா(ஹ்) ஒரு வழியைத் திறக்கு மட் டும் அவர்களை— (அப்பெண்மணிகளை)— வீட்டினுள்ளே தடுத்து நிறுத்தி வைக்கக் கடவீர்கள்" (:குர். 4 : 15). "அவர்களுக்கு அல்லா(ஹ்) ஒரு வழியைத் திறப்ப" தென்பது, அந்தப் பெண்கள் உண்மையான கழிவிரக்கம் — பச்சாத்தாபம்— காட்டுவதைக் குறிக்கும். இவ்வாயத்தில் காணப்படும் 'பா'ஹிஷா என்பது நிச்சயமாயே ஒரு பெண்ணின் வெளிப்படையான ஒழுக்க இழுக்காயே யிருக் கின்றது. இதற்குரிய தண்டனை அவளுடைய நடமாட் டங்களைத் தடைசெய்து நிறுத்துவதா யிருக்கிறது; இதன் பயனாய் அவள் சமுதாய மக்களிடையே எதேச்சையாய்த் திரிந்து வருவது நிறுத்தப்பட்டு விடும். இவ் வாயத்தை முற் கூறிய ஆயத் 34-உடனே சேர்த்துப் படிக்குங்கால்,* வீட்டினுள்ளே தடுத்து நிறுத்தி வைப்பது முதற் படியாய்க் காணப்படாநின்றது. அப்பா லவர்கள் அவ் வீட்டினுள்ளே தங்கள் தவற்றைத் திருப்பித் திருப்பிச் செய்வார்களாயின், அல்லது கணவர்களுக்கு அடங்கி நடவாது அவர்களை வெறுத்து வெளியேறிவிடுவார்க ளாயின், அன்னவர்கட்கு இலேசான அடி கொடுத்தல் வேண்டும்; இஃதொரு பற் கொம்பே போன்ற இலேசான குச்சியாலாய சிறு அடியாகும்.

---

*ஆயத் 4 : 34 என்பது, "இன்னம், எவர்கள் விஷயத்திலே நீங்கள் நுஷூஜை— (உங்களைவிட்டு ஓடிவிடுவார்க ளென்பதை) அஞ்சுகிறீர்களோ, அவர்கள்— அத்தகைய மனைவியர்— குறித் தென்றாலோ, அவர்கட்கு அறிவுறுத்துங்கள்; மேலும், உறங்கு மிடங்களில் அவர்களை(த் தனியாய்)ப் பிரித்துவிடுங்கள்; இன்னம், அன்னவர்கட்குச் சரீரசிக்ஷையும் அளியுங்கள்," என்பதா யிருக் கிறது.

இதனாலும் அத்துஷ்ட மனைவியர் சீர்திருந்தவில்லை யாயின், அப்பால் விவாக விமோசனம்—'தலா:க்தான்—தகுந்த மருந் தாகும். ஆனால், இஃது இறுதி ஏற்பாடா யிருக்கிறது. எனினும், பெண்மணிகளை ஆடுமாடுகளை அடிப்பதேபோல அடிப்பதற்குக் :குர்ஆனிலேனும், அல்லது 'ஹதீ':திலேனும் யாதோர் ஆதாரமும் காணப்படவே யில்லை யென்பது சரதமேயாகும். "அடியாத மாடு படியாது" என்னும் பழமொழி இஸ்லாமியர் இல்லங்களுக்கு உரியதன்று.

## அத்தியாயம்—4

# அடிமைகளை மணத்தல்

கள்ளப்புணர்ச்சி ஒழிந்து, கற்பு நிலை வற்புறுத்தப் பட்டது.

தீ'னுல் இஸ்லாம் தோன்று முன்னே சகல ஜாதியினரும் அடிமைகளை வைத்துக் கொண்டே யிருந்தனர்கள். இஸ்லாம்மார்க்கம் வந்தே அடிமைகளை உரிமை விடுதற்கு வேண்டிய அடிப்படைச் சட்டங்களை நிறுவுவதாயிற்று; எத்தகைய திட்டங்கள் சுயமே செழிப்புடன் வளரட்டுமென்று விடப்பட் டிருந்தால், அடிமை வியாபாரம் அடியுடனே கல்லியெறியப்பட்டுப் போயிருக்குமோ, அத்தகைய திட்டங்களையே இம் மார்க்கம் வகுத்து வைத்துச் சென்றது. பூவுலகு முழுதும் பரவிக் கிடந்த அக்கால அடிமை வியாபாரத்தை அறுத்தொழிப்பது ஒருநாள் வேலையா யில்லை. ஆகவே, அடிமை வியாபாரம் இத் தரணியில் இருந்துவரு மட்டும், அவ் வடிமைகளை நல்ல மனிதர்களாக— உரிமையுள்ள உயரிய மக்களாக— ஆக்கி வைத்தற்குரிய ஒழுக்க முறைகளை வகுக்க் வேண்டுவது ஒரு முக்கிய முதற் காரியமாகவே யிருந்துவந் திருக்கிறது. இஸ்லாத்துக்கு முன்னே அடிமைப் பெண்கள் தங்கள் எஜமானர்களின் மிருக இச்சையை, கடிய காமத்தைத் தணிக்க, அல்லது பகிரங்க வியபிசாரம் புரிந்து அவர்கட்குப் பொருளீட்டிக் கொடுக்க உபயோகிக்கப் பட்டு வந்தார்கள். இவ்விரு இழிதொழிலும் ஒரே வீழ்த்திலே குழிதோண்டிப் புதைக்கப்பட்டுப் போய் விட்டன; எவ்வாறெனின், அடிமைகளும் அல்லாதவர்களும், ஆண்களே யாயினும் பெண்களே யாயினும், மணமில்லா திருப்பது அறவே

கூடாதெனக் கடுமையான தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டு விட்டது: "இன்னமும், உங்களுள்ளே ஒன்றியா யிருப்பவர்களையும், உங்கள் ஆணடிமைகளுள்ளும் உங்கள் பெண்ணடிமைகளுள்ளும் தகுதி வாய்ந்தவர்களையும் மண முடித்துக் கொடுங்கள். மேலும், உங்கள் பெண்ணடிமைகளை, அவர்கள் பதிவிரதைகளா யிருக்க விழையுங்கால், இத்தாழுலக வாழ்க்கைக்குரிய அற்பப் பொருள்களைத் தேடுவான் வேண்டி, வியபிசாரத்துக்குக் கட்டாயப் படுத்தாதீர்கள்" (:குர். 24 : 32, 33). இவ்வாயத், ஆண்டிமைகளும் பெண்ணடிமைகளும் மணமுடித்துக் கொண்டே இல்லற வாழ்க்கையில் இருந்துவர வேண்டு மென்று வற்புறுத்துவதோடு, பெண்ணடிமைகளை வியபிசாரத்திலே இறக்கக்கூடா தென்றும் தடை யுத்தரவு பிறப்பித்துவிட்டிருக்கிறது; அஃதாவது, இஸ்லாத்துக்கு முன்னே அரப்நாட்டில் அடிமைப் பெண்களை மணமுடிக்காது வைத்திருந்ததனல் விளைந்துவந்த இருபெருந் தீமைகளை ஒரே வீழ்த்தில் இத்திருவாக்கியம், அவர்களை மணமுடித்துக் கொடுக்கச் சொல்லி, ஒழித்துவிட்டது கண்கூடு. இவ்வாறு அடிமைப் பெண்களை மணமுடித்துக் கொடுத்துவிட வேண்டு மென்று இவ் வாயத்தில் கூறப்பட்டுள்ள கடுமையான கட்டளைக்கு விலக்குவிதி (புறநடை) யொன்றும் :குர்ஆனி லேனும் 'ஹதீ':தி லேனும் காணப்படவேயில்லை யென்பது முற்றிலும் சரதமே. அடிமைப் பெண்கள் மூன்று விதமாய் மணமுடிக்கப் படலாம்: 1. ஓரடிமை ஆணுக்கு ஓரடிமைப் பெண்ணைக் கல்யாணம் முடித்து வைக்கலாம்; 2. ஓரடிமைப் பெண்ணை ஒரு சுயேச்சையுள்ள மனிதனுக்குத் திருமண முடித்து வைக்கலாம்; 3. ஓரடிமைப் பெண்ணை அவளுடைய சொந்த எஜமானனே நேரில் மணம் புரிந்து கொள்ளலாம். இம் மூன்று வகைகளே யல்லது, நான்காவதாக வேறு விதத்திலே அடிமைப் பெண்களை ஓராடவன் தீண்ட ஏதொரு 'ஹலாலான வழியும் கிடையவே கிடையாது.

இக்காலத்தில் இந்நாகரிக உலகில் அநேகமாக எல்லா நாடுகளிலும் அடிமை வியாபார மென்பதே இல்லாது போய் ஒழிந்துவிட் டிருப்பதால், முதலிருவித அடிமை மணங்குறித்து அதிகமாக ஒன்றுங் கூறத் தேவையில்லை; ஆனல், மூன்ருவது விதங்குறித்து, அஃதாவது, ஓரடிமைப்

பெண்ணை— (விலைகொடுத்து வாங்கிய ஒரு நங்கையை)* அவளுடைய எஜமானனே "வைப்"பாக வைத்துக் கொள்ளலா மென்னும் எண்ணங் குறித்து ஈண்டுச்சிறிது விரித்தெழுத வேண்டுவதா யிருக்கிறது; என்னெனின், இஸ்லாத்தில், :குர்ஆன் அனுமதிகொண்டு "வெள்ளாட்டி" —(பட்டவர்த்தனமாய்ச் சொல்ல வேண்டு மாயின், "வைப்பாட்டி") வைத்துக்கொள்ள இடமிருக்கிற தென இற்றை நாளிலுங்கூட ஒரு சிலர் நம்பியும் கடுமையாய் விவாதித்தும் வருகின்றனர். அந்தோ! ஐயகோ!! அநியாயமே!!!

இஸ்லாத்தில் "வெள்ளாட்டி"க்கு இடமில்லை.

"வெள்ளாட்டி" வைத்துக் கொள்ளல் என்பது, மணந்து கொள்ளாது ஒரு மங்கையை "வைப்"பாக வைத்து, 'ஜிநா— வியபிசாரம் புரிவதாயே யிருந்துவருகிறது; அஃதாவது, மண முடிக்காமலே ஒருத்தியை மனைவியைப் போலே மதித்து, வீடுகூடிக்குலவிக் கொஞ்சுவதா யிருக்கிறது. பொதுவாகவே ஒருபல முஸ்லிம்க ளுள்ளத்திலே, இஸ்லாம் இம் மாதிரியான "வெள்ளாட்டி"களை— அதுவும், எத்தனை ஆயிரக்கணக்கிலே வேண்டு மாயினும் அத்தனை ஆயிரக்கணக்கான அடிமைகளை †— வைத்துக் கொள்ள அனுமதியளித் திருக்கிற தென்னும் ஒரு தவறான எண்ணம் குடிபுகுந்து கொண்டிருக்கிறது; இதற்குரிய ஒரே நிபந்தனை, அந்த "வெள்

---

* இஸ்லாத்தில் போர்க்களக் கைதிகளே "அடிமை"க ளென அழைக்கப்படுகிறார்கள்; எனவே, இவர்களையன்றி, ஏனையடிமைகளை இஸ்லாம் அங்கீகரித் திலது. காசுகொடுத்து வாங்கும் அடிமைகளைக் :குர்ஆன்மஜீத்' குறித்துக் கூறவில்லை. மாமலக்கத் ஐமானுக்கும்—" உங்கள் வலக்கரங்கள் சுதந்தரித்துக் கொண்டது"— என்று :குர்ஆனிலே காணப்படுவது 'போர்க்களக்கைதிகளை'யே குறித்துக் காட்டுவதா யிருக்கிறது. வலியார் எளியார்களை வேட்டையாடிப் பிடித்து, நகரச்சந்தைக்குக் கொண்டுபோய்க் காசுக்கு விற்பதைக் :குர்ஆன்மஜீத்' என்றும் எங்குமே அனுமதித்தது கிடையாதென் றறியக் கடவீர்கள்.

†நாட்டான் மகளாயிருந்தால்— எதேச்சா ஸ்திரீயாயிருந்தால் தான் 4 தாரமே கொள்ளலா மென்றும், காட்டான் மகளாக (காசுகொடுத்து வாங்கிய அடிமைகளாக) இருந்தால் கணக்கில்லை யென்றும் கூறுவர் வெள்ளாட்டிப் பிரியர். (பா. தா.)

ளாட்டி''கள் போர்க்களக் கைதிகளாக, அல்லது காசுகொடுத்து வாங்கிய அடிமைகளாக இருந்திடுதல் வேண்டுமென்பதுதா னாகும். '' வைப்பாட்டி '' வைத்துக்கொள்ளும் வழக்கம், இஸ்லாத்திற்கு முற்பட்டகால அஞ்ஞான அரப் நாட்டிலே அ'மலில் அதிகம் இருந்தே வந்திருக்கிறது. முன்னே கூறப்பட்டுள்ள திருவாக்கியங்கள் (24 : 32, 33) அருளப்படு முன்னே (ஹிஜ்ரீ 5 - க்கு முன்னே) முஸ்லிம்களிலும் ஒரு சிலர் அவ்வாறு வெள்ளாட்டிகளை வைத்துக் கொண் டிருந்திருக்கலாம்; ஆயின், இவ் வாயாத்கள் வந்து, அவ்வெள்ளாட்டி (வைப்பாட்டி) வைத்துக்கொள்ளும் வழக்கத்தை அடியுடனே தடுத்து நிறுத்திவிட் டிருப்பது கண்கூடு. இவ் வாயாத்துக்குப் பின்னே ஆணடிமைகளும் பெண்ணடிமைகளும் மணமுடித்தே வைக்கப்பட வேண்டுவது ஒரு தடுக்கமுடியாத சட்டமாய் விட்டது. இப்பாலே, '' நாட்டான்மகளா யிருந்தால், நாலுசெய்துகொள்; காட்டான் மகளா யிருந்தால், கணக்கில்லாமலே வைத்துக்கொள்,'' என்னும் தத்துவத்துக்கு இஸ்லாம் இடமளித் திலது. என்வே, இவ்வாயாத்துக்குப் பிறகு எவனேனும் அடிமைப் பெண்ணை ''வைப்''பாக வைத்துக்கொள்ளத் துணிந்தால், அது :குர்ஆன்ஷரீ'பின் நேரான கட்டளையை மீறி நடந்த குற்றச் செய்கையாகவே போய்முடிவது சரதம். எஜமானர் மட்டும் தங்கள் சொந்த அடிமைப் பெண்களை '' வைப்பு '' வைத்துக் கொள்ளலா மென்று கூறக் :குர்ஆன் ஷரீ'பிலேனும், 'ஹதீ':து ஷரீ'பிலேனும் யாதோர் ஆதாரமும் காணப்படவே யில்லையென்பது திண்ணமேயாம்; இதற்கு மாருக, நந்திருமறை எஜமானர்மீது ஒரு பெருங் கடமையைச் சுமத்திவைத் திருக்கிறது: அவர் தாமே அவ்வடிமைப் பெண்ணை மணந்துகொள்ளா விடின், அவளை ஒரு நல்ல மாப்பிள்ளைக்கு மணமுடித்து வைத்தல் அத்தியாவசியமேயாம். ஆகவே, அவளை மணமுடித்தே கொடுக்கவேண்டுமென்று எஜமானருக்குக் கடுமையான கட்டளை :குர் ஆனிலே பிறந்திருக்குங்கால், அவர் எவ்வாறு அவ் வடிமைப்பெண்ணைத் தாமே வைப்பாக வைத்துக்கொள்வதென்பது 'ஹலாலா யிருப்பது சாலும்? ஒருவன் மேற்கூறிய கடிய தடையுத்தரவை யறியாமலோ, அல்லது வேண்டுமென்றே அதனை உதாசினத்துடன் உல்லங்கனம் செய்தோ ஓரடிமைப் பெண்ணை வைப்பாகவைத் தனுபவிப்பா னயின், அது சட்டப்படி செல்லத்தக்கதாக ஆய்விட

மாட்டாது. நெற்றிக்கண் படைத்தவன் செப்பினாலும், குற்றம் குற்றம்தானே ?

:குர்ஆன்ஷரீ'பிலே காணப்படும் ஒரு சில பிரயோகங்களை ஆதாரமாய்க் கொண்டு ஒரு பலர், "வெள்ளாட்டி வைத்துக் கொள்வது 'ஹலாலே'' என்ற முடிபிற்கு வந்திருக்கலாம் ; அத்தகைய பிரயோகங்களுள் ஒரு முக்கிய வாக்கியம் 23-ஆவது அத்தியாய மாகிய சூரத்துல் **மூமினூனிலும்**, 70-ஆவது அத்தியாயமாகிய சூரத்துல் **மஆ'ரிஜிலும்** காணப்படுகிற கீழ்க்கண்ட ஆயாத்களாகும்:

وَالَّذِيْنَ هُمْ لِفُرُوْجِهِمْ حٰفِظُوْنَ ۝ اِلَّا عَلٰٓى اَزْوَاجِهِمْ اَوْ مَا
مَلَكَتْ اَيْمَانُهُمْ فَاِنَّهُمْ غَيْرُ مَلُوْمِيْنَ ۝

**"வல்ல'தீனஹும் லி'புரூஜிஹிம் ஹா'பிளூ'ன இல்லா 'அலா அ'ஜ்வாஜிஹிம் அவ் மாமல(க்)கத் அய் மானுஹும் 'ப இன்னஹும் 'கய்ருமலூமீன்''**

என்று இருமுறை வருகிற ஆயாத்துகளுக்கு * (23 : 5,6 ; 70 : 29, 30) இதுதான் சரியான மொழிபெயர்ப்பாகும் :— [பக்கம் 98 பார்க்க.]

---

* இவ்விரு ஆயாத்களுக்கும், :குர்ஆன்ஷரீ'ப ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ள பிரதான முஸ்லிம் அறிஞர்களின் வார்த்தைகளும், அவ் வறிஞர்கள் தந்துள்ள வியாக்கியானங்களும் இவைதாம் :—

I. லாஹூர் மௌலானா முஹம்மதலீ இப்படி மொழிபெயர்த்திருக்கிறார் :—

"5. And who guard their private parts,

6. Except before their mates or those whom their right hands possess, for they surely are not blameable."

II. அல்லாமா யூசு'பலீயின் (ஐ. ஸீ. எஸ்.) மொழிபெயர்ப்பும், வியாக்கியானமும் :—

"5. Who abstain from sex,†
"6. Except with those joined
To them in the marriage bond
Or (the captives) whom
Their right hands possess,—
For (in their case) they are
Free from blame;"

† The Muslim must guard himself against every kind of sex abuse or sex perversions......But even the natural and lawful exercise of sex is restricted to the marriage bond, under which the rights of both parties are duly regulated and maintained.

மேலே எடுத்துக் காட்டியிருக்கும் யூசு'பலீயின் ஆங்கில மொழிபெயர்ப்புக்கும், ஆங்கில வியாக்கியானத்துக்கும் சரியான தமிழ் மொழிபெயர்ப்பு இதுதான் :— "5. ஆண் பெண்ணி(ன் ஒழுக்க இழிக்கத்தி) னின்று** நீங்கியிருப்பவர்கள், 6. "அவர்களுடனே விவாக பந்தத்தில் இணைக்கப்பட்டவர்களுடனே, அல்லது அவர்களுடைய வலக்கரங்கள் சொந்தமாக்கிக்கொண்ட (போர்க் கைதிகளாய)வர்களுடனே யன்றி,— என்னெனின், (அன்னவர் விஷயத்தில்) அவர்கள் நிந்திப்பினின்று நீங்கியவர்களா யிருக்கிறார்கள்;"

** முஸ்லிம், ஒவ்வொருவித ஆண்-பெண் ஒழுக்கவீனத்தினின்றும், அல்லது ஆண்-பெண் தவற்றொழுக்கத்தி னின்றும் தன்னைத் தற்காத்துக்கொள்ள வேண்டியவனு (அல்லது வேண்டியவளா) யிருக்கிறான் (அல்லது இருக்கிறாள்)......ஆனால், ஆண் பெண் (சேர்க்கை) விஷயத்தில் இயற்கையாயும் சட்ட நியதியாயுமுள்ள காரியங்கூட விவாக பந்தத்துக்குக் கட்டுப்பட்டதாயே யிருக்கிறது ; இ(ப் பந்தத்)தின் கீழே (கணவன் மனைவி) இருதிறத்தாரின் உரிமைகளும் நல்லவித மாகவே ஒழுங்குசெய்து நிலைநிறுத்தப்பெற் றுள்ளன.

III. ஆங்கில நவ்முஸ்லிமாகிய அல்லாமா மார்மடியூக் பிக்தால் வரையும் மொழிபெயர்ப்பு இதுதான் :—

"5. And who guard their modesty —

"6. Save from their wives or (the slaves) that their right hands possess, for then they are not blame worthy."

IV 'குலாம் ஸர்வர் (சிங்கை) என்பவரின் மொழிபெயர்ப்பு:—

"5. And those who restrain their appetites

"6. Except in company of their mates or what their right hands possess,

Then surely they are not to be blamed."

"இன்னம், தங்கள் ஜோடிகளின், அல்லது தங்கள் வலக்கரங்கள் சொந்தமாக்கிக் கொண்டவர்களின் முன்னேயன்றி, (ஏனையவர் முன்னிலையில்) தங்கள் மர்மஸ்தானங்களைத் தற்காத்துக் கொள்கிறவர்கள்; என்னெனின், (அது பொழுது) அன்னவர்கள் நிந்திக்கப்பட மாட்டார்கள்"—(23 : 5, 6 ; 70 : 29, 30). இது மெய்யான மூமினீன்களின் உண்மையான இலக்ஷணமா யிருக்கிறது : இன்னம், இது மூமினான ஆடவருக்கும், மூமினான பெண்டிருக்கும் பொருத்தமுள்ள பொதுவான இலக்ஷணமென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. இஸ்லாமிய ஆடவருக்குச் சொந்தமாயுள்ள எல்லா நல்ல சுகுணங்களும் இஸ்லாமிய பெண்டிருக்கும் உண்டென்பது விளக்கமாயே நந்திருமறையில் துலக்கப்பட்டிருப்பது வெள்ளிடை விலங்கலேயாம் (33 : 35). *

மேலே கூறப்பட்டுள்ள பிரயோகம் :குர்ஆன் ஷரீ'பிலே இரண்டே முறைதான்— இரண்டுக்கு மேலில்லை—(23 : 5, 6 ; 70 : 29, 30) வழங்கப்பட்டிருக்கிறது ; இவ்விரு திருவாக்கியங்களைக் கொண்டு, ஆண்கள் தங்கள் பெண்ணடிமைகளுடனே தாராளமாய் வீடுகூடலாமென்று விவாதிக்கக் கூடுமாயின், அவ்வாறே பெண்களும் தங்கள் ஆணடிமைகளுடனே சர்வதாராளமாயே சரசசல்லாபம்— (வீடுகூடல்)

---

* "நிச்சயமாக, அடிமுடிசாய்க்கும் ஆடவரும் அடிமுடி சாய்க்கும் பெண்டிரும், ஈமான் கொண்டுள்ள ஆடவரும் ஈமான் கொண்டுள்ள பெண்டிரும், (அல்லாஹ்வுக்கு) வழிபடும் ஆடவரும் வழிபடும் பெண்டிரும், சத்திய சந்தர்களாய ஆடவரும் சத்திய சந்தர்களாய பெண்டிரும், பொறுமையாளர்களாய ஆடவரும் பொறுமையாளர்களாய பெண்டிரும், (அல்லாஹ்வுக்கு) அஞ்சிப் பணியும் ஆடவரும் (அவ்வாறு) அஞ்சிப் பணியும் பெண்டிரும், தானதர்மஞ் செய்யும் ஆடவரும் தானதர்மஞ் செய்யும் பெண்டிரும், நோன்பு நோற்கும் ஆடவரும் நோன்பு நோற்கும் பெண்டிரும், தங்கள் மர்மஸ்தானங்களைத் தற்காத்துக் கொள்ளும் ஆடவரும் (அவற்றினைத்) தற்காத்துக் கொள்ளும் பெண்டிரும், அல்லா(ஹ்)வை அதிகம் தியானிக்கும் ஆடவரும் (அவ்வாறு அதிகம்) தியானிக்கும் பெண்டிரும்— (ஆகிய) அன்னவர்கட்கு (எல்லாம்) மன்னிப்பையும் மகத்தான சம்மானத்தையும் அல்லா(ஹ்) சித்தம் செய்து வைத்துள்ளான்" (:குர் 33 : 35). இன்னமல் மூமினூன இக்'வா— "ஈமான் கொண்டவர்களெல்லாம் (ஏக) சகோதரர்களே" (49 : 10) என்பதும் நோக்க.

புரியலாமென்று கொள்வதிலே என்ன இடையூறு இருந்திடுதல் கூடுமோ? ஆயின், மேற்கூறிய பிரயோகங்களிலிருந்து (23 : 5, 6 ; 70 : 29, 30) எவரும் இத்தகைய உரிமை இஸ்லாமிய பெண்மணிகளுக்கும் உண்டென்று ஒத்துக் கொள்வது வழக்க மில்லை. அந்த இரு ஆயாத்திலும் வழங்கப்பட்டுள்ள "மர்மஸ்தானங்கள்" என்பதற்குரிய அரப் வார்த்தை '**புரூஜ்** (இது '**பர்ஜ்** என்பதன் பன்மைச் சொல்லாகும்) என்பதா யிருக்கிறது; '**பர்ஜ்** என்னுஞ் சொல், "வெளியிலே திறந்து காண்பிப்பதற்கு அஸப்பியமாயுள்ள சரீரப் பகுதி" என்றே பொருள் கொள்ளும். எனவே, '**ஹி'ப்ளு**'ல் '**பர்ஜ்** என்பது, ஆண்-பெண் கூட்டரவினின்று தவிர்ந்து கொள்ளுதல் என்று மட்டுமேதான் கருத்துக் கொள்வ தென்பது கிடையாது; வெளியில் திறந்து காண்பிக்க அஸப்பியமாயுள்ள சரீரப் பகுதியை இனியொருவர்பால் திறந்து காண்பியாததுகூட '**ஹி'ப்ளு**'ல் '**பர்ஜ்** என்றேதான் கொள்ளப்பட்டு வருகிறது. இந்த இரண்டாவது கருத்திலே மூமினான ஆடவரும் மூமினான பெண்டிரும் தங்கள் தங்கள் அடிமைகள் முன்னே ஒரு சிறிது இலேசாய் நடந்துகொள்ள அனுமதியளிக்கப் பெற்றிருக்கிறார்கள்; என்னெனின், ஆண், பெண் அடிமைகள் தங்கள் எஜமானர், அல்லது எஜமானியர் அருகினிலே அனவரதமும் அண்மியிருக்க வேண்டியவர்களா யிருக்கிறார்கள். "அஸப்பியம்", "அருவருப்பு" என்னுஞ் சொற்களுக்கு வெவ்வேறு மனிதர் வெவ்வேறாய கருத்துக் கொள்ளலாம்; எனவே, இற்றைநாளுலகில், நாகரிகம் நிரம்பித்ததும்பிப் பொங்கி வழிந்தோடுவதாய்க் கருதப்படும் பற்பல நாடுகளில் "நிர்வாணசங்கங்கள்" ஏற்பட்டிருப்பதை எல்லாருமே அறிவர்; இச்சங்கக் கொள்கைப்படி ஒரு பாலார் நிர்வாணமாய் எதிர் பாலார் முன்னே செல்வதென்பது அஸப்பியமாக, அல்லது அருவருப்பாகக் கொள்ளப் படுவது கிடையாது. சிற்சில அம்மணக் கழக அங்கத்தினர்கள்—ஆண்களும் பெண்களும் — பகிரங்க ஸ்தலங்களில் நிர்வாணமாய் நிற்பதுடனே திருப்தியடையாது, பொதுஜன ஊர்வலங்களையும் நடாத்திச் செல்லுகின்றார்கள். இவை யெல்லாம் முழு அஸப்பிய மென்றே இஸ்லாம் எண்ணி யிருக்கிறது; இதுமட்டுமா? ஐரோப்பியர் "ப(b)ால்" ஆடும் இடங்களிலும், நாடக வரங்கங்களிலும், சினிமாப் படங்களிலும் பெண்கள் திறந்து நடிக்கும்

அவ்வளவு அவயவத் தோற்றங்கூட இஸ்லாத்தினால் அரு வருப்புடனேதான் கருதப்பட்டு வருகிறது. மேற்கூறிய இரு அத்தியாயங்களின் ஈராயாத்களும் (23 : 5, 6; 70 : 29, 30) முஸ்லிம்கள் அடிமைகளை விவாகமின்றி வெறுமனே வைப்பாக வைத்துக்கொள்ள அனுமதி யளித்துள்ளன வென்று வாதத்துக்காகவேனும் ஏற்றுக்கொள்வதா யிருப் பினும், அவ்விரு அத்தியாயங்களும் ஹிஜ்ரத்துக்கு முன்னே மக்கா வாழ்க்கையின் ஆரம்ப காலத்திலே அருளப் பட்டன வென்பதும், அதுபொழு தெல்லாம் இஸ்லாம் தன் சீர்திருத்துங் காரியத்தைத் தொடங்கவில்லை யென்பதும் நன்கு ஞாபகத்தில் பதிந்திருத்தல் வேண்டும்; எனவே, எவரேனும் ஹிஜ்ரத்துக்கு முன்னே அடிமைப் பெண்களை வைப்பாக வைத்திருந்தனரென வாதாடத் துணிவரேல், அவர், ஹிஜ்ரத்துக்குப் பின்னே மதீனாவிலே அத் தீய பழக்கம் அடியுடனே அழித்தொழிக்கப் பட்டுப்போய் விட்ட தென்பதை (24 : 32, 33) நிதானித்துப் பார்க்கக் கடவர்; அந்தச் சீர்திருத்தம் வந்து, அடிமைப் பெண்கள் எல் லாருமே மணமுடித்து வைக்கப்பட வேண்டு மென்று கடுமையான — விலக்குவிதி யென்பதே யில்லாத — கட்டளையை நம்மெல்லார் மீதும் விதித்து வைத்துவிட்டது. அடிமைப் பெண்களெல்லாம் மணம் முடித்தே வைக்கப்பட வேண்டு மென்று ஆண்டவன் கூறிய பின்னர் எஜமானர் மட்டும் தம்முடைய சொந்த அடிமைப் பெண்களை வைப்பாக— விவாகமில்லாமலே— வைத்துக்கொள்ளலாம் என்பதற்கு எங்கிருந்து அனுமதி கிட்டிடல் கூடும்?

:குர்ஆன் ஷரீ'ப் முழுதையும், 'ஹதீ':து ஷரீ'ப் முழு தையும் புரட்டிப் புரட்டித் துருவிப்பாருங்கள். எந்த ஓரிடத் திலும், எஜமானன் தன் பெண்ணடிமைகளை மண முடிக்காது பெண்டாளலாமென்று கொள்ளுதற்கு எதேச் சா ''லைஸென்ஸ்'' கொடுக்கப்பட் டிருப்பதாய் ஏதொன்றும் (அனுமதி) காணப்பட வில்லை யென்பது சரதமே. ஒரு பெண்ணை ஒரு மனிதன் அடிமையாய்க் கொண்டிருக்கும் ஒரே காரணத்தால் அவளது கற்பைக் கெடுக்க அவனுக்கு அதிகாரம் கிடைத்து விட்டதாய்க் கொள்வது கூடாதன்றே! காசு கொடுத்து வாங்கியதால், கற்பழிக்கவும் அனுமதி கிடைத்துவிட்டதா யெண்ணுவது சட்டவிரோதமே யாகும்; காசு கொடுத்தது வேறு விஷயம்; கற்பழிப்ப தென்பது

வேறொரு காரியமாம்.* திருமணமில்லாது எவளையும் தீண்ட இஸ்லாம் இடமளித் திலது; கல்யாணமே களவொழுக்கத்தைக் கற்பொழுக்கமாய்ச் செய்யவல்லதா யிருக்கிறது; என்னெனின், இவ் வொப்பந்தத்தால் இருவரும்—கணவனும் மனைவியும்— ஒருவர் இனியொருவர்பால் காட்ட வேண்டிய கடமைகளையும், அவரவருக்கு வாய்த்துள்ள உரிமைகளையும் நன்குணர்ந்து, அவற்றினுக் கேற்றவாறு அவரவரும் நடந்துகொள்ளக் கட்டுப்பட் டுள்ளார்கள். அக் கணவன் தன் மனைவிக்கு மாப்பிள்ளை யென்னும் பொறுப்பையும், தன் (அவள் வயிற்றில் பிறக்கும்) பிள்ளைகளுக்குத் தகப்ப னென்னும் ஜவாப்தாரித் தனத்தையும் அறிந்துணர்ந்து, அதற்கேற்றவாறு நடந்துகொள்கிறான். எனவேதான், இவன் அவளுக்குக் கல்யாணக்கட்டண மென்னும் மஹ்ரும் கொடுக்கிறான்; இப் பொறுப்பனைத்தையும் கணவனும் மனைவியும் மீறி நடவாதிருக்க அவ் வொப்பந்தம் சாக்ஷிகள் முன்னே நிறைவேற்றப் படுகிறது. இன்னம், அந்தரங்கத்திலன்றி அதிகபகிரங்கமாகவே அத் திருமணம்

---

* அல்லாமா யூசு‘பலீ தமது ஆங்கில (:குர்ஆன்) மொழி பெயர்ப்பு, அத்தி. 4, ஆயத் 25-இன் கீழே, அடிக்குறிப்பு 540-இல் இவ்வாறு எழுதியுள்ளார்:

“Your right hands” does not mean necessarily that she (a female war-captive) has been assigned to you, or is your property. All captives in war belong to the community; they are “yours” in that sense. If you seek such a person in marriage, do it from no lesser motive. Safeguard your faith, and see that she too does believe.”

இதன் தமிழ் மொழி பெயர்ப்பு: “உங்கள் வலக்கரங்கள்” என்பது, அவள் (பெண்போர்க்கைதி) உங்கட்கு ஒப்புக் கொடுக்கப் பட்டுவிட்டாள், அல்லது உங்கள் உடைமையா யிருக்கிறாள் என்று அவசியமாய்ப் பொருள் கொள்வது கிடையாது. போரில் அகப்படும் அத்தனை கைதிகளும் (முஸ்லிம்) சமுதாயத்துக்கே சொந்தமா யிருக்கிறார்கள்; அக் கருத்திலே அவர்கள் “உங்களுடைமை”யா யிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒருத்தியை நீங்கள் மணமுடிக்க நாடுவீர்களேல், கயமையான நோக்கத்துடனே அதனைச் செய்யாதீர்கள். நீங்கள் உங்க ளீமானைத் தற்காத்துக் கொள்ளுங்கள்; அவளும் (அவ்வாறே) ஈமான் கொள்ளப் பாருங்கள்.

நடைபெறுவதா யிருக்கிறது. ஆதலினால், ஓராண் பிள்ளை ஒரு பெண்பிள்ளையைத் தீண்டற் குரிய 'ஹலாலான மார்க்கம் கல்யாணம் ஒன்றே யென்றுதான் இஸ்லாம் இயம்பிக்கொண் டிருக்கிறது. ஆகவே, 'ஹலாலான முறையா லன்றி, வேறு குயுக்தி முறையால் ஒரு பெண்ணைத் தொடுவது 'ஹராமான 'ஜினா வென்றே கருதப் பட்டு வருகிறது. ஆதலினால்தான், "ஆண்பிள்ளைக்கு என்னடி? மலத்தைக் கண்டால் மிதிப்பான்; ஜலத்தைக் கண்டால் கழுவுவான்," என்று இலேசாய்க் கூறப்பட்டு வரும் ஓரிழிய பழமொழிக்கு இஸ்லாத்திலே இடமே இல்லை யென்று சொல்லப்பட்டுவருகிறது.

ஆகவே, ஓர் எதேச்சா புருஷன் ஓர் எதேச்சா ஸ்திரீயை மணமுடிக்காது எவ்வாறு தீண்டுவது தகாதோ, அவ்வாறே தான் ஒரு மனிதன் தன்னுடைய சொந்த அடிமைப் பெண்ணையும் மணமுடிக்காது தொடுவது தகாது என்று அறியக்கிடக்கிறது: "இன்னம், உங்களுள்ளே எவனொரு வனுக்குத் தனது சக்தியில் சுயேச்சையுள்ள மூமினான பெண்ணை மணக்க (ப் போதிய) விரிவான உபாயமில்லையோ, (அவன்) உங்களுடைய மூமினான அடிமைப் பெண்களி னின்று உங்கள் வலக்கரங்கள் சொந்தமாக்கிக் கொண்டிருப் பவர்களிலிருந்து(மணந்துகொள்ளலாம்); இன்னம், அல்லா (ஹ்) உங்கள் ஈமானை (சமய உறுதியை) நன்கறிகிறான்; மேலும், நீங்கள் ஒருவர் இனியொருவரிலிருந்து (தோன்றி) இருக்கிறீர்கள்; ஆகையால், அவர்களை அன்னவர்களின் எஜமானரின் அனுமதியின்மீது மணந்து கொள்ளுங்கள்; மேலும், (அவர்கள்) கள்ளப் புணர்ச்சி செய்யாமலும், சோர நாயகர்களை வரிக்காமலும் கற்புடனே இருக்கு நிலையிலே, அவர்கட்கு அன்னவர்கட்குரிய மஹ்ரை நீதத் துடனே கொடுத்து விடுங்கள்........இஃது உங்களுள்ளே தீமையுள் வீழ்ந்துவிடக் கூடுமென அஞ்சுகிற அவனுக்கே யாம்" (4 : 25). இவ் வாயத்திலுள்ள நிபந்தனைகளைக் கூர்ந்து நோக்குவீர்களேல், இவை யனைத்தும் ஒரு சுதந்தர மாதுக் குரிய நிபந்தனைகளையே நிகர்த்து நிற்பது கண் கூடாய்க் காணப்படும்; ஆனால், அடிமைப் பெண்ணை மணப்பதில் அதிகப்படியான நிபந்தனையொன்று தோன்று வது தெளிவாகும்: எதேச்சா ஸ்திரீ யொருத்தி தன் சம்ம தத்தின் மீதேமட்டும் ஒரு புருஷனுக்கு வாழ்க்கைப்பட்டு

விடலாம்; ஆனால், அடிமைப் பெண்ணுக்கு அவளது சொந்த சம்மதத்துடனே அவளுடைய எஜமானனது சம்மதமும் தேவைப் படுகிறது. மஹ்ர் விஷயத்திலும் வேறுபா டொன்றும் காணப்பட வில்லை; ஒருகால், சுதந்தர மாதைவிட அடிமைப் பெண்ணின் மஹ்ர் சிறிது இலேசா யிருக்கலாம். இன்னம், :குர்ஆன் 4 : 3-இலும் அடிமைப் பெண்ணை மணக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது நோக்க; மேலே சென்று, 4 : 25-இல் விளக்கப்பட் டிருப்பதே போல், அடிமையேயாயினும், மணமுடித்த பின்னரே அன்னவளை மனைவியாத் தீண்டலாம்.*

---

* ஆயத் 4 : 3 முதலிலே, அவசியமான அசந்தர்ப்பங்களில் ஒன்றுக்குமேலே 4 மனைவியர் வரை ஒரு முஸ்லிம் மணந்து கொள்ளலா மென அனுமதி யளித்துள்ளது; அப்பாலே, அவர்கட் கிடையே நியதியுடன் நடந்துகொள்ள இயலாதென அஞ்சு வனேல், அவன் ஒருத்தியையே மணந்துகொள்ள வேண்டுமென வற்புறுத்தி யுள்ளது. இவ்வாறு மணந்துகொள்ள ஒரு சுதந்தர மாது கிட்டவில்லை யாயின், அவன், " உங்கள் வலக் கரங்கள் சொந்தமாக்கிக் கொண்டிருக்கும் " பெண்டுகளை— அடிமைப் பெண்களை— மணமுடித்துக் கொள்ளலாம். கீழே வரும் இந்த

وَإِنْ خِفْتُمْ أَلَّا تُقْسِطُوا فِي الْيَتَامَىٰ فَانكِحُوا مَا طَابَ لَكُم
مِّنَ النِّسَاءِ مَثْنَىٰ وَثُلَاثَ وَرُبَاعَ فَإِنْ خِفْتُمْ أَلَّا تَعْدِلُوا
فَوَاحِدَةً أَوْ مَا مَلَكَتْ أَيْمَانُكُمْ ذَٰلِكَ أَدْنَىٰ أَلَّا تَعُولُوا ۝

4:3 அரப் மூலத்தைப் பரிசீலனை செய்வீர்களேல், வா'ஹித'(த்)தன் (ஒருத்தி) என்பதும், மாமலக(த்)கத் ஐமானு(க்)கும் (உங்கள் வலக்கரங்கள் சொந்தமாக்கிக் கொண்டிருப்பது) என்பதும் அன்கி'ஹூ—மணமுடித்துக் கொள்ளுங்கள்—என்னும் வினை முற்றுக்குரிய செயப்படுபொருள்களா யிருந்துவருவது நன்கு விளங்கும். எவ்வாற்றானும், அடிமைப் பெண்களை மணமுடிக்காது தொடுவது கூடாது; இதிலும் 4 தாரங்களுக்கு மேலே செல்வது கூடாது. " நாட்டான் மகளே " யாயினும், " காட்டான் மகளே " யாயினும், ஏககாலத்தில் நான்கு மனைவியருக்கு மேலே மணப்பது தகாது; தகாது. எல்லாரும் சேர்ந்து நான்கே தான். இந்தப் " பாரத் " பூமியிலே ஒரு மாபெரும் " முஸ்லிம் ராஜ் பிரமுக் "

இதன் சார்பாய் ஆராய்ச்சி செய்யவேண்டிய ஆயத் இனியொன்றே எஞ்சியிருக்கிறது: "ஏ நபீ! எவர்கட்கு நீர் அவர்கட்குரிய மஹ்றர்களைக் கொடுத்துவிட்டீரோ (அந்த) உம்முடைய மனைவிகளையும், அல்லா(ஹ்) நுமக்குப் போர்க் கைதிகளாக அளித்திருப்பவர்களி னின்று உம்முடைய வலக்கரம் சொந்தமாக்கிக் கொண்டவர்களையும் நாம் நுமக்கு 'ஹலாலாக்கி யுள்ளோம்...இது நுமக்காகமட்டுமே; மூமினனவர்க ளுள்ளே மற்றையவர்களுக் கன்று. நாம் அவர்களுக்கு அவர்களுடைய மனைவியரையும் அவர்க ளுடைய வலக்கரங்கள் சொந்தமாக்கிக் கொண்டிருப்பவர் களையுங்குறித்து என்ன ஏற்பாடு செய்துள்ளோ மென்பதை நாம் (நன்கு) அறிவோம்" (33 : 50); இவ் வாயத்திலே விளக்கப்பட் டிருப்பது என்ன வெனின், நபி பெருமா னுடைய எல்லாப் பிராட்டிமாரும், அவர்கட்குப் போர்க் கைதிகளாக அளிக்கப்பட் டிருப்பவர்களினின்று அவர்களது வலக்கரம் சொந்தமாக்கிக் கொண்டவர்களும் அப் பெருமா ளுருக்குப் பிரத்தியேகமாய் 'ஹலாலாக்கப்பெற் றுள்ளார்கள் என்பதுதா னுகும். இவ் வாயத்தை 4 : 3-ஆவது ஆயத் துடனே சேர்த்துப் படித்தல் வேண்டும். அவ் வாயத்திலே, ஒரு மூமின் நான்கு மனைவியருக்கு மேலே எவரையும் ஏககாலத்தில் மணந்துகொள்வது கூடாதென்னும் கட் டளை கடுமையாய்ப் பிறப்பிக்கப்பட் டிருப்பது கண்கூடு. அத் திருவாக்கியம் அருளப்படு முன்னே 4 தாரங்களுக்கு

---

இருக்கிருர். இவருக்குச் சுமார் 400 மனைவியர் வரை உண்டென்ப. ஒரு பெண்ணின் பெற்ருேருக்கு இந்த ராஜ்பிரமுக் ஒரு தொகையை யீந்து, அப்பெண்ணை வரித்து மணமுடித்துக் கொள்வராம். இவ்வாறு சுமார் 400 வரை மணந்துள்ளா ரெனச் சொல்லப்படு கிறது. காசு கொடுத்து வாங்கிய அடிமைகளை வெறுமனே வெள்ளாட்டிகளாகக் கணக்கில்லாது வைத்தனுபவிக்கலாமென்றும், அவர்கட்கு உரிமை யளித்து விட்டால், நான்குக்கு மேலே நி(க்)கா 'ஹ் செய்து கொள்ளக் கூடாதென்றும் 'பி:க்ஹ் மஸ்அலா பேசும் சாஹிப் (சாஸ்திரி)க ளிடத்தே அந்த ராஜ்பிரமுக்கின் செய்கைக்கு ஆதாரம் யாதெனக் கேட்டுத் தெளிவீர்களாக.

அல்லாமா யூசு'பலீ, மார்மடியூக் பிக்தால், 'குலாம் ஸர்வர் ஆகிய அனைவருங்கூட அடிமைகளை மணம் புரிந்து கொள்ள வேண்டுமென்னுங் கருத்துப்படவே 4 : 3-க்கு மொழி பெயர்ப்புச் செய்துள்ளார்கள்.

மேலே மணந்திருந்தவர்க ளெல்லாரும் அப்பாலே தங்கள் மனைவியரை 4 என்னும் எண்ணிக்கைக் குள்ளே (:தலா:க் முறையால்) இறக்கிக் குறைத்துக்கொண்டு வந்துவிடுமாறு கட்டளையிடப் பெற்றுர்கள்; ஆயின், நபிபெருமானுக்கு மட்டும் ஒரு பிரத்தியேக அனுமதி யளிக்கப்பட்டது; அஃதென்ன வெனின், இப்பெருமானாரின் பிராட்டிமார்களும், இவர்கட்குப் போர்க்கைதிகளா யளிக்கப்பட்டவர்களினின்று இவர்களது வலக்கரம் சொந்தமாக்கிக் கொண்டவர்களும் அதுகாலை நான்குக்கு மேலாயிருந்தும், அவர்க ளனைவரையும் அப்படியே நிறுத்திவைத்துக் கொள்ளுமாறு ஒரு பிரத்தியேக உத்தரவை அளிக்கப்பெற்றுர்கள் என்பதேயாம். ஏனை முஸ்லிம்களால் :தலா:க் சொல்லி விலக்கப்பட்ட எல்லாப் பெண்மணிகளும் வேறு முஸ்லிம்களை மறு மணம் புரிந்துகொள்ள அனுமதி யளிக்கப்பெற் றிருந்தார்கள்; ஆனல், நபிகட் டிலகத்தின் (சல்) பிராட்டிமார் சிஷ்ய முஸ்லிம்களுக்குக் "குருமகான் பத்தினிமார்" என்னு முறையிலே 'ஹராமாக்கப்பட் டிருந்தனர்; என்னெனின், ஞாநுசிரியர் மனைவியர் சிஷ்யகோடிகளுக்கு ஞானப்பாலூட்டும் தாயைப்போ லல்லவா இருந்து வருகிருர்கள்? இந்நிலையில் நான்குக்கு மேலேயிருந்த நபி பிராட்டிமார் :தலா:க்கால் விலக்கப்பட்டு விட்டால், அவர்களது கதி யாதாய்ப் போய்முடியுமென்று எண்ணுகின்றீர்கள்? எனவே தான், அக் குருபத்தினிகள் தெருவிலே துரத்திவிடப்படக் கூடாதென்று எல்லாம் வல்ல இறைவன் இனிய ஏற்பாடு செய்துள்ளா னென்று அறியக்கடவீர்கள்.

போர்க்கைதி பிராட்டிமார்.

இங்கு நாம் கவனிக்க வேண்டிய முக்கிய விஷயம் ஒன் றிருக்கிறது: "போர்க்கைதிகளி னின்று நபிபெருமானுக்கு அளிக்கப்பட்டவ ருள்ளிருந்து அவர்களது வலக்கரம் சொந்தமாக்கிக் கொண்டிருந்தவர்கள்"— அத்தகைய பிராட்டிமார் —யாரென உசாவுதல் வேண்டும். அவர்கள் மணமுடிக்கப்பட்ட மனைவியரா? அல்லது நபிகணயகர் தங்களுக்குச் சொந்தமான அடிமைப்பெண்க ளென்னு முறையாலே, தாங்களே எஜமான ரென்னும் உரிமையைக் கொண்டு அவர்களுடனே விவாகமில்லாது வீடுகூடிக்கொண் டிருந்தார்களா? என்பதும் ஒரு முக்கிய பிரச்சினையேயாம். நபிகணதர் (சல்) இல்லத்திலே எந்த ஒரு பிராட்டியும்

மணமுடிக்காத "வெள்ளாட்டி"யாக இருந்ததேயில்லையென்பதுதான் சரியான சரித்திரம் கூறும் சான்ருயிருக்கிறது.*

போர்க்கைதிகளாய் வாய்த்தவர்களுள் இருவரே— யூத (எஹூதி) இனத்தைச் சார்ந்த ச'பிய்யாவும், ப'னீ முஸ்தலி:க் குலத்தைச் சார்ந்த ஜுவைரியாவுமே— நபி பெருமானுடைய பிராட்டிமாரா யுய்ரும் பெருமை பெற்று விளங்கலாயினர். இவ் விருவரும் வெள்ளாட்டிகளாக வைக்கப்பட் டில்லை; ஆனால், அதற்கு மாருக, இவர்கள் ஏனைப் பிராட்டிமார்களே போலக் கல்யாணம் செய்து கொள்ளப்பட்ட கவுரவக் கட்டழகியராகவே திகழ்ந்து

---

*மிஸ்ர் (எகிப்து) மன்னரால் நபிபெருமானுக்குச் சம்மானமாயனுப்பப்பட்ட மாரியா :கிப்'தியாவென்னும் மங்கையை நம் பெருமான் (சல்) திருமணமுடிக்காது தீண்டினர்களென அறியாத மாக்கள் அறைவ துண்டு. இவ் வபசாரக் கூற்றை மறுத்து, அல்லாமா ஷிப்லீ நுஃமானீ தங்கள் " சீறத்துன் னபீ "யில் இவ்வாறு எழுதியுள்ளார்கள் :

اس واقعہ کو اس حیثیت سے دیکھنا چاہیئے کہ یہ خاتونیں لونڈیاں نہ
تھیں اور اسلام قبول کر چکی تھیں اس لئے آنحضرت صلعم نے
ماریہ سے نکاح کیا ہوگا نہ کہ لونڈی کے حیثیت سے وہ آپ کے
حرم میں آئیں۔

" இவ் விஷயத்தை இந்த முறையிலே பார்க்க வேண்டும்: அஃதாவது, இந்தப் பெண்மணி (மாரியா—றலி) அடிமை (லவுண்டி)யா யில்லை; மேலும், (இவர்) இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு விட்டார். இக் காரணத்தால் நபிபெருமான் (சல்) அவர்கள் மாரியா (றலி) உடனே நி(க்)கா'ஹ் (திருமணம்) முடித்திருப்பார்கள்; (ஆயின், இவ்வாறு) இல்லை; அஃதாவது, அடிமையென்னு முறையிலே அவர் (மாரியா—றலி) அவர்களது (நபி பெருமானது) அந்தப்புரத்துள் வந்து நுழைய வில்லை ".— அல்லாமா ஷிப்லீ நுஃமானீ வரைந்துள்ள " சீறத்துன் னபீ "— ஜில்த்' அவ்வல்— (வால்யூம் I) பக்கம் 434. கண்ணுடையோர் கண்டு தெளிக. (பா. தா.)

வந்தார்கள். உண்மையிலே அவர்கட்கும் இவ்விருவர் கட்கும் இடையிலே ஏதேனும் வேற்றுமை காணப்பட்ட தெனின், அது கீழ்க்காணப் படுவதாயே யிருந்து வந்த தெனல் வேண்டும் : இவ்விரு பிராட்டிமாருக்கும் உரிமை யளிக்கப்பட்டதே இவர்கட்குரிய மஹர்களாய் மதிக்கப்பட்டு விட்டது. இவ் வாயத்தை (33 : 50) நபிக ளுயகரின் வாழ்க்கைச் சரிதையுடனே ஒப்பு நோக்கிக் காண்போ மாயின், **மா மல(க்)கத் ஐமானு(க்)கும்**— "உங்கள் வலக்கரங்கள் சொந்தமாக்கிக்கொண் டிருப் பவர்கள்"— என்று :குர்ஆன் ஷரீ'பிலே கூறப்பெற் றிருப் பவர்கள் எவர்கள் தாம் என்னும் விஷயத்திலே எழும் ஐயத்தினை அடியுடனே அகற்றி யெறிந்து விடக்கூடிய தெளிவை நாம் நன்கு பெற்றுக் கொள்வோம். "வலக் கரங்கள் சொந்தமாக்கிக்கொண் டிருப்பவர்கள்" என்ப வர்கள் போர்க்களக் கைதிகளாகவே யிருக்கிறுர்கள்; இவர்கள் கல்யாணம் பண்ணப்பட்டால்தான் 'ஹலாலான மனைவிய ராவார்கள். ஆயின், அ'ஜ்வாஜ் (மனைவியர்) என்பவருக்கும், **மா மல(க்)கத் யமீனு(க்)க** (உனது வலக்கரம் சொந்தமாக்கிக்கொண் டிருப்பவர்கள்) என்ப வர்களுக்கும் இடைநடுவே வேற்றுமை ஏதும் காணப்படின், அது பின்காணப்படுவதாயே யிருந்துவருகிறது : "மனைவி யர்" என்பார் மணவினைக் காலத்தில் சுதந்தர மாதர்களா யிருக்கிறுர்கள் ; "உனது வலக்கரம் சொந்தமாக்கிக் கொண்டவர்கள்" என்பார்களோ, கல்யாண காலத்தில் போர்க்களக் கைதிகளா யிருந்து வருகிறுர்கள். இருதிறத் தாரும் கட்டிய பிராட்டிமாரே. எனவே, எவரையும் எம் பெருமானுர் (சல்அ'ம்) கல்யாணம் செய்யாது கை தொட்டது கிடையாதென் றறியக்கடவீர்கள்; சுதந்தர மாதர்களும், போர்க் கைதிகளும் 'ஹலாலான கல்யாணத் துக்குப் பின்னரே நபிபெருமானது மணவறையுட் பிரவேசிக்க லாயினுர்கள்.

முன்னம் கூறிய ஆயத்தில் (33 : 50) **மா மல(க்) கத் ஐமானு(க்)கும்** என்னும் பிரயோகம், எல்லா மூமினுனவர்களைக் குறித்தும் பொதுப்படையாயே மடக் கிக் கூறப்பெற் றிருக்கிறது : "நாம்...அவர்களுக்கு அவர்களுடைய வலக்கரங்கள் சொந்தமாக்கிக் கொண் டிருப்பவர்களையுங் குறித்து என்ன ஏற்பாடு செய்துள்ளோ

மென்பதை நாம் (நன்கு) அறிவோம்.'' இதிலிருந்து என்ன விளக்கமாகின்றது? மூமினனவர்கட்கு இதற்கு முன்னரே, அவர்களுடைய மனைவியரைக் குறித்தும், அவர்களுடைய வலக்கரங்கள் சொந்தமாக்கிக் கொண்டிருப்பவர்களைக் குறித்தும் :குர்ஆன் மஜீதி'ல் கட்டளையொன்று பிறந்திருக்கிற தென்னும் உண்மை விளங்கக் கிடக்கின்றது. :குர். 4:3-இலே மனைவியரைக் குறித்துள்ள கட்டளை காணப்படுகிறது; இன்னம் சில இடங்களிலும் இதற்குரிய சட்டம் காணப்பட்டே வருகிறது. ஆனால், **மாமல(க்)கத் ஐமானு(க்)கும்** குறித்துள்ள கட்டளை 4 : 25-ஆவது ஆயத்திலேதான் காணக் கிடக்கின்றது; அதில் போர்க்களக் கைதிகள் மணம் புரியப்பட வேண்டிய நிபந்தனைகள் காணப்படா நின்றன. இன்னம், :குர். 24 : 32-இலே காணப்படும் இனியொரு கட்டளையன்றி, வே றெத்தகைய உத்தரவும் அடிமைப் பெண்களைக் குறித்து நம் :குர்ஆன் ஷரீ'பிலே காணப்பட வில்லை. அந்த 24 : 32-இல், அடிமைப் பெண்களையும் போர்க்களக் கைதிகளையும் வைத்திருக்கும் எஜமானர்கள் அவர்களை மணமுடித்தே கொடுக்கவேண்டுமென வற்புறுத்தப்பட்டுள்ளார்கள். எனவே, இத்தகைய அடிமைகளையும், போர்க்களக் கைதிகளையும் எவரேனும் தீண்ட விழைவராயின், கல்யாணம் செய்துகொண்டே 'ஹலாலான முறையாலேயே அன்னவர்கள்பால் தங் கரத்தை நீட்டக் கடவர்.

ஒருவன்வயமுள்ள ஓரடிமைப் பெண்ணை ஓரயல் மனிதன் மணப்பதற்கும், அந்தச் சொந்தக்காரனே தன் பெண்ணடிமையை மணப்பதற்கும் (மணமில்லாது அவளை அவன் தொடக் கூடாதே!) ஒரேயொரு வேறுபாடுதான் காணப்படாநின்றது: அஃதாவது, அயலவன் அவளுடைய எஜமானனது அனுமதி பெற்றே அவளை மணக்கக் கட்டுப்பட் டுள்ளான்; ஆனால், எஜமானனே தன் சொந்த அடிமைப் பெண்ணை மணப்பதற்கு வேறெவனது அனுமதியும் கோரத் தேவையில்லை. எனினும், இவனும் 'ஹலாலான கல்யாணமில்லாது அவளைக் கைதொடுவது கூடாதென் றறிக. நபிபெருமானது திருஷ்டாந்தத்தைப் பார்க்கப் போனால், அப்பெருமானார் தங்கள் இரு போர்க்களக் கைதிகளையும் மனைவியரந்தஸ்திற்கு உயர்த்தியக்கால், அவர்களுக்கு உரிமையும்— சுயேச்சையும்— அளித்து விடுதலை

செய்து விட்டார்களென்பது தெரியக் கிடக்கிறது; அவ் விருவருக்கும் அளிக்கப்பட்ட சுயேச்சையே அவர்களுக் குரிய மஹ்ர்களாய்க் கணிக்கப்பட்டது. எனவே, போர்க் கைதிகளை—அடிமைப் பெண்களை—எவ்வாறு மணப்பதென் பதற்கு எம்பெருமானார் காட்டிய வழி— ஸுன்னத்— இது வாயே யிருக்கிறது. இப் பெருமானார் செய்து காண்பித்த வழியே ஏனை யெல்லா முஸ்லிம்களும் பின்பற்றி யொழுக வேண்டிய நல்வழியா யிருக்கிறது. எனவேதான், எல்லா மூமினனவர்களும் நம் நபிகணயகரவர்களைத் தங்களுக்கு வேண்டிய முன்மாதிரியாய்க் கொண்டு நடக்குமாறு ஏவப் பட்டிருக்கிறார்கள் (:குர். 33 : 21). ஆகையால், அவர் களையே யாம் அனைவேமும் அவலம்பித்து அடியொற்றி நடக்கக் கடமைப்பட்டுள்ளேம். அப் பெருமானார் (சல்) தங்களுக்கென்று அல்லா(ஹ்) வினல் பிரத்தியேகமா யருளப்பட்ட :குர்ஆன் ஆயத்திற்கு (33 : 50) அவர்களே செய்துள்ள வியாக்கியானப் பிரகாரமே ச'பிய்யாவையும் ஜுவைரியாவையும் உரிமையளித்து மணமுடித்துள்ளார் கள். ஆகவே, அனைத்து முஸ்லிம்களும் அடிமைப் பெண் களைத் தீண்டுவதில் அப் பெருநபியின் விரிவுரையையே பின்பற்றியொழுகக் கட்டுப்பட்டுள்ளார்கள். தங்கள் வலக் கரத்துக்கு சொந்தமா யிருந்த பெண்டிரை எவ்வாறு நெருங்குவதென ஆண்டவ னருளிய வ'ஹீயின் உதவி கொண்டே அப் பெருமானார் அவ்வாறு செய்து காட்டி யுள்ளார்கள். ஆதலினல், எவனேனு மொருவன் அல்லா (ஹ்)வின் திருத்தூதரைப் பின்பற்றாது, தன் சொந்த இச்சையையே பின்பற்றி யொழுகுவ னயின்,—அஃதாவது, தன் அடிமைப் பெண்ணை மணக்காது தீண்டத் துணிவ னயின்— அவன் அல்லா(ஹ்)வின் வ'ஹீயையே— வேதக் கட்டளையையே— உல்லங்கனம் செய்து, 'ஹராமான துறையிலே சுயமே இழிந்துவிட்டவ னய்விடுகிறான்.

அதைப் பார்க்கினும் இனியொரு விஷயமும் இருக் கின்றது: நபிகள் திலகம், அடிமைப் பெண்களுக்குக் கல்வி கற்றுக்கொடுத்து, அவர்களுக்கு உரிமை யளித்து, அன்னவர்களை மணமுடித்துங் கொடுத்திடுமாறு அவர்களுடைய சொந்தக் காரர்களுக்கு அறிவுறுத்தி யுள்ளார்கள்:

அடிமைப் பெண்களை ஆளாக்கி விடுதல்.

" நபி பெருமானார் (சல்அ'ம்) நவின்றருளி யுள்ளார்கள்: ' இருவகைச் சம்மானம் பெறக்கூடியவர்கள்

மூவ்வித மனிதர்களா யிருக்கிறார்கள் : அஹ்லுல் கி(த்)தாப்' இனத்தைச் சார்ந்த ஒரு மனிதன் தனக்குரிய நபியின் மீது விசுவாசங் கொண்டு, மு'ஹம்மதி'ன் மீதும் ஈமான் கொள்ளுகிறான் ; ஒருவனுக்குச் சொந்தமாயுள்ள அடிமை அல்லா(ஹ்)வுக்குச் செலுத்த வேண்டிய கடமைகளையும், தன் எஜமானனுக்குச் செலுத்த வேண்டிய கடமைகளையும் செவ்விதாய்ச் செய்து முடிக்கிறான் ; தன்னிடத்தே ஓரடிமைப்பெண்ணை ஒரு மனிதன் வைத்துக்கொண் டிருக்கிறான் ; அவளுக்கு நல்லொழுக்கங்களைக் கற்றுக் கொடுக்கிறான் ; மேதை மரியாதைகளையும் நன்கு பயிற்றுவிக்கிறான் ; இன்னம், அன்னவளுக்குக் கல்வி கற்பிக்கிறான் ; அதுவும் நல்ல கல்வியாகவே கற்றுக் கொடுக்கிறான் ; இறுதியாக அப் பெண்மணிக்கு உரிமையளித்துத் திருமணமும் புரிந்து வைக்கிறான் ; இ(ப்படிப்பட்ட)வனுக்கு இரண்டு பங்கு இறைமுண்டு' '' (பு'க'ா. 3 : 31 ; 49 : 14, 16 ; 56 : 145 ; 60 : 48 ; 67 : 13 ; முஸ். 16 : 14 ; அபூ'த'ா. 12 : 5 முதலியன). இந்த 'ஹதீ':து ''பு'க'ாரீ''யில் ஆறு முறைக்குக் குறையாமலே பொறிக்கப்பட்டுள்ளது ; இன்னமிது எல்லா (ஆறு) நம்பத்தக்க 'ஹதீ':து கிரந்தங்களிலும் காணப்படுவதி லிருந்து, இஃதொரு தீர்மானமாய உறுதியுள்ள ந. நா. வாக்கிய மென்பதில் சிறிதும் சந்தேகமில்லையென்பது தெற்றெனப் புலப்படக் கிடக்கின்றது. இஃதொரு கட்டாய 'ஹதீ':தல்ல வென்றும், அவரவர் விருப்பத்துக்கே விடப்பட்ட ந. நா. வாக்கிய மென்றும் கொள்ளக் கூடுமாயினும், இதனால் நபிபெருமானார் (சல்) அடிமைகளைச் சீர்திருத்தி யுயர்த்தும் காரியத்திலே எத்தகைய ஏற்பாடுகளையெல்லாம் ஏற்படுத்தி வைத்துள்ளார்க ளென்பது செவ்வனம் புலப்படக் கிடக்கின்ற தென்னலாம் ; இதனுடனே அப் பெருநபியின் சொந்த நடக்கையையும் சேர்த்துப் பார்க்கு மிடத்து, அவற்றால் விளையும் முடிபு இதுவாயே யிருந்துவருகிறது : என்னவெனின், அம் மஹானுபாவரின் முடிவான நோக்கம், அடிமைப் பெண்களே யாயினும், அவர்களெல்லாரும் இறுதியிலே சுதந்தர மாதர்களின் சரிசமான அந்தஸ்திற்கு உயர்த்திவிடப்படல் வேண்டும் என்பதாயே காணப்படாநின்றது என்பதுதா னாகும். உண்மையிலே, நபிகள் திலகத்தின் சி'பாரி ஷென்பது ஒரு கட்டாயச் சட்டமே போலத்தான் கருதப்பட வேண்டுவதா யிருந்து வருகிறது. வேதத்தை யருளப் பெற்ற

ஓரன்னிய மதத்தினன் மு'ஹம்மத்' நபி (சல்அ'ம்) மீதும் ஈமான் கொள்ள வேண்டுமென்று கூறப்பெற்றுள்ளான்; இதனால், அவனுக்கு விருப்பமில்லாவிடின், இந்த இறுதி நபிமீது ஈமான் கொள்ளாமலும் இருக்கலாமென்று கருத்துக் கொள்வது கூடாதன்றே! இவ்வாறே அடிமையொருவன் தன் எஜமானனுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செவ்வனே செய்துமுடித்துவிட்டு, ஆண்டவனுக்குச் செய்யவேண்டிய கடமைகளை அவன் விருப்பம்போலே விட்டுவிடுவது கூடாது. மேற்கூறப்பட்ட இருவரும் தத்தமக்குரிய இவ்விரண்டு காரியங்களையும் செம்மையாய்ச் செய்துமுடித்தால், அவர்களுக்கு இருவகைச் சம்மானங்கள் உண்டென்றறிக. என்னெனின், இன்னவர்கள் பெரும் பெரும் சோதனைகளை எதிர்த்து நின்று வெற்றிபெற வேண்டியவர்களாயிருக்கிறார்கள். ஒரு நபியின் மீது ஈமான் கொள்கிற ஒரு மனிதன் அஃதொன்றே தனக்குப் போதுமென்று எண்ணத் துணிந்துவிடலாம். இது சரியன்று; இம் மனிதன் இறுதி நபி மு'ஹம்மத்' (சல் அ'ம்) அவர்கள் மீதும் ஈமான்கொள்ள வேண்டும்; என்னெனின், இத்தகைய விசுவாசியே ஏனை நபிமார்கள் மீதும் ஈமான் கொள்கிறான். இவ்வண்ணமாயே அடிமையொருவன் தன் சொந்தச் சிறிய எஜமானனுக்குரிய கடமைகளை மட்டுமே செய்துவிட்டுத் தன்னைப் படைத்துக் காத்து ரக்ஷிக்கும் அந்தப் பெரிய எஜமானனுக்குச் செலுத்தவேண்டிய கடமைகளை அலக்ஷியம் செய்து விட்டுவிடுவது கூடாது. என்னெனின், சர்வலோக ரக்ஷகன் அந்த அல்லாஹுத் தஆ'லாவாகவே இருந்து வருகிறான். இவ்வாறாக, ஓரடிமைப் பெண்ணின் சொந்தக்காரன் அந் நங்கைக்கு நல்ல கல்வியும் நன்னடக்கைகளும் கற்றுக் கொடுப்பது மட்டுமே போதாது; அவன் அவளுடன் கூட்டுறவை விழைவனாயின், அவளுக்கு உரிமையளித்து, 'ஹலாலான முறையிலே திருமணமும் புரிந்து கொள்ளுதல் வேண்டும்; இதனால் அவள் ஒரு சுதந்தரமுள்ள கவுரவ மனைவியாக உயர்ந்துவிடுகிறாள். இதுவேதான் நபிபெருமானார் (சல்) செய்தது; எனவே, இஃதொன்றேதான் அப்பெருமானாரின் சரியான ஸுன்னத்தாயிருந்துவருகிறது.

ஆகையால், இப்பொழுது அறியக்கிடப்பது யாதாயிருக்கிறது? :குர்ஆன் மஜீதை'க் கொண்டும், 'ஹதீ':து

ஷரீஅ'பக் கொண்டும் நபிபெருமான் (சல்) நடக்கையைக் கொண்டும்— ஆகிய அனைத்தையுங் கொண்டு— அடிமைப் பெண்கள் திருமணம் முடிக்கப்பெற்றே தீண்டப்பட வேண்டுமென்று நாம் நன்கு ஐயமறத் தெளிந்துகொள்ளு கிறோம். அந்நங்கையை விழைபவன் அடிமையே யாயினும், சுதந்தர புருஷனே யாயினும், சொந்தக்கார எஜமானனே யாயினும், அவளை மண முடிக்காது தொடுவது 'ஹராமாகவே காணப்பட்டுவருகிறது ; இவர்களில் எவருக் குமே விலக்குவிதி யென்பது அளிக்கப்பட் டில்லை. ஆனா லும், 'பி:க்ஹ் சட்டப் பேராசிரியர்கள் வேறு அபிப்பிராயங் கொண்டு நிற்பதாய்க் காணப்பட்டு வருகிறார்கள் : அடிமைப் பெண்களின் சொந்த எஜமானர்கள், அன்னவர் கள்மீது இன்னவர்கட்கு இருக்கும் "சொந்தம்" என்னும் உரிமையைக் கொண்டு அவர்களுடன் வீடுகூட லாம் என்று 'பி:க்ஹ் சட்டம் அனுமதியளித் துள்ளது. ஆயின், அந்த 'பி:க்ஹும் இவ்வாறு எஜமானன் தன் சொந்த அடிமைப் பெண்ணுடனே "சம்சர்க்கம்" புரிய லாமென்று அனுமதி யளிக்குங்காலும், அவளொரு விவாக மனைவியா யேற்கப்பெறுவதா யிருப்பின், என்னென்ன நிபந்தனைகளெல்லாம் நிறைவேற்றப்பட வேண்டுமோ, அப் படிப்பட்ட நிபந்தனைகளனைத்தும் இவ்வடிமைப் பெண் சார் பாயும் நிறைவேற்றப்பட் வேண்டு மென்றே வற்புறுத்திக் கூறி யிருக்கின்றது. உதாரணமாக, அவளொரு மண முடிக்கப்பெறாத மங்கையா யிருந்துவருதல் வேண்டும் ; மேலுமவள் ஒரு முஸ்லிமான, அல்லது அஹ்லெ கி(த்)தாப்' இனத்தைச் சார்ந்த மங்கையா யிருத்தல்வேண்டும். இவை யெல்லாம் ஒரு சுதந்தர மாதுக்குரிய— அவளது திருமணத் துக்கு வேண்டிய— நிபந்தனைகளா யிருந்துவருதல் கண் கூடு. எதேச்சா மனுஷிகளுக்குத் தடையுத்தரவு இருப்பதே போன்று, இந்த அடிமைகளும்— ஏககாலத்தில் இரு சகோ தரிகள் ஒரே புருஷனுக்கு— வீடுகூடுந் தொழிலில் ஈடு படுவது கூடாது. இன்னம், எந்த எந்தப் பெண்கள் ஏக காலத்தில் ஒரே கணவனுக்கு இருமனைவியரா யிருப்பது 'ஹராமெனத் தடுக்கப்பட் டிருக்கிறார்களோ, அந்த மாதிரி யான உறவுமுறையி லுள்ள அடிமைப் பெண்களை அவ் வெஜமானன் ஒரே காலத்தில் இரு "வெள்ளாட்டி"களாக வைத்தனுபவித்தல் கூடாதெனத் தடையுத்தரவு பிறப்பிக்கப் பட் டிருக்கிறது. எனவே, 'பி:க்ஹ் சட்டங்கூட, அடிமைப்

பெண்களைச் "சொந்தம்" என்னும் உரிமையால் எஜமானன் தன்னடிமைகளுடனே வீடுகூடலாமென அனுமதியளித் திருப்பினும், இந்த "ஸம்ஸர்க்கத்தினை"க் கல்யாணம் செய்யப்பட்ட மனைவியருடன் கலக்கும் "மண வாழ்க்கை"க்கு நிகராயே மதித்திருக்கிற தென்பது வெள்ளிடை விலங்கலேயாம்.

## அத்தியாயம் — 5

# இஸ்லாத்தில் :தலா:க் — திருமண முடிவு

## :குர்ஆன் மஜீதி'ன் பிரகாரம் முடிவான :தலா:க்குக்கு 3 மாதங்களேனும் வேண்டும்

தீனுல் இஸ்லாத்தின் பிரகாரம் திருமண மென்பது ஒரு "ஸிவில் காண்ட்ராக்ட்"— ஒப்பந்தமாயே யிருந்து வரினும், அதனு லேற்படும் உரிமைகளும் கடமைகளும் மன்பதையின் நன்மைக்கு மிகவும் முக்கியமானவையா யிருந்து வருகின்றமையால், அம் மணவினை யொப்பந்தத் துக்கு அதிகமான பரிசுத்தமிக்க புனிதத் தன்மையே அளிக்கப்பட் டிருக்கிறது. இஸ்லாம் இத்திருமணத்துக்கு எத்துணை யதிக முக்கியத்துவத்தை யளித்துப் புனிதத்தையும் நல்கி யிருப்பினும், அவசியமான அசந்தர்ப்பங்களில் அத் தம்பதிகளின் மணமுடிச்சை அதிக சிரமமில்லாது அவிழ்த்து, அக்கல்யாண சம்பந்தத்தை ரத்'து'செய்துவிட வேண்டு மென்னும் அத்தி யாவசியத்தையும் அறிந்துணராது போய்விடவில்லை. இத் தரணியிலே, அநேகமாக "ஹிந்துலா" ஒன்றைத் தவிர்த்து, ஏனையெல்லாச் சமய (மத)ச் சட்டங்களும் அத்தகைய திருமணமுடிவை—விவாக விமோசனத்தை— ஒத்துக்கொண்டே யிருக்கின்றன. யூதர் சட்டப்படி எல்லாத் :தலா:க் குரிமையும் கணவனுக்கே யுண்டு; ஆதலின், அவன் அவ் வுரிமையைத் தன் சுய விருப்பமேபோல் எதேச்சையாக உபயோகித்துக் கொள்ளலாம். கிறிஸ்தவர் சட்டப்படி அவர்கள் கற்பிலே இழுக்கு ஏற்பட்டுவிட்டால் மட்டுமே விவாக விமோசனம் செய்து கொள்ள இடமிருக்கிறது; ஆயின், ஒரு முறை :தலா:க்கால் பிரிந்துவிட்ட கணவனும் மனைவியும் மறுபடியும் தமக்குள்ளே மறுமணம் முடித்துக்கொள்வது கூடாது. வைதிக

ஹிந்துலாபிரகாரம் ஒரு முறை இறுக்கப்பட்ட மணமுடிச்சு அப்பால் எப்பொழுதுமே தறிக்கப்படுவது சாலாது. ஆனால், இஸ்லாம் வந்து, :தலா:க் சட்டத்தில் பற்பல நல்ல சீர்திருத்தங்களை நுழைத்துவைத் திருக்கிறது. இம்மார்க்கச் சட்டப்படி மனைவிக்குத் :தலா:க் கோரும் உரிமை ஏற்பட் டிருப்பதுடனே, கணவனுக்குள்ள எதேச்சா பிரியமும் மட்டுப்படுத்தப்பட் டுள்ளது.

அத்தியாவசிய அசந்தர்ப்பங்களிலே :தலா:க்குக்கு அனுமதி யளிக்கப்பட் டுள்ளது.

விவாக விமோசனத்துக்கு அரபு மொழியில் :தலா:க் கென்று பெயர் கூறுவர்; இதன் அசல் தாத்பரியம், "ஒரு முடிச்சை விடுவித்து, அல்லது அவிழ்த்து விடுவது" என்பதாகும். இஸ்லாமிய சட்ட பரிபாஷையில் " :தலா:க்" மனைவியாலே விழையப்படுங்கால் கு'ல்ஃ' (ஒரு வஸ்துவை ஒற்றி, அல்லது விலக்கி வைப்பது) என்று அழைக்கப் படுகிறது. :குர்ஆன் மஜீதை'க் கொண்டும் 'ஹதீ':து ஷரீஃ'பக் கொண்டும் கொள்ளப்படும் உண்மையான (சரியான) கருத்து யாதெனின், அத்தியாவசிய அசந்தர்ப்பங்களில் மட்டுமேயே :தலா:க்கென்னும் விவாக விமோசனத்தின்பக்கல் முஸ்லிம் தம்பதிகள் முகந்திரும்ப வேண்டியவர்களா யிருக்கிறார்கள் என்பதாயே யிருந்து வருகிறது. "ஆண்டவன் :தலா:க்கைக் காட்டினும் தனக்கு அதிக வெறுப்பான தொன்றை எப்பொழுதுமே அனுமதித்தது கிடையாது" (அபூ'த'ா. 13 : 3) என்று நபிபெருமானார் (சல்) நவின்றருளியுள்ளார்கள்; இப்'னுஉ'மரின் சொற்படி அப்பெருமானார், "அல்லா(ஹ்)வி னிடத்தே, அனுமதிக்கப் பட்டுள்ள எல்லாவற்றினும் அதிகம் வெறுக்கப்படத் தக்கது :தலா:க்கே யாம்," என்று இயம்பி யுள்ளார்கள் (ஷெஷெ). 'ஜய்து'க்கும் (றலி) அவர் மனைவி 'ஜய்னபு'க்கும் நெடுகலுமே மனஸ்தாபம் முற்றிக்கொண்டே வந்திருந்தும், அவர் தம் மனைவிக்குத் :தலா:க் கொடுக்கவேண்டா மென நபிகட்டிலகம் (சல்) தடைசெய்து வந்ததை ஆண்டவனும் அங்கீகரித் துள்ளான்: "இன்னம், எவனுக்கு இறைவன் கருணைகூர்ந் துள்ளானோ, எவனுக்கு நீரும் கருணைபுரிந் துள்ளீரோ, அவனுக்கு, 'உன் மனைவியை (நிறுத்தி) வைத்துக்கொள்;—(அஃதாவது, அவளை நீ :தலா:க் சொல்லி விலக்கிவிடாதே.) அல்லா(ஹ்)வுக்கு உனது கடமையில்

ஜாக்கிரதையா யிருந்துகொள்வாயாக!' என்று நீர் கூறி யக்கால்,'' (33 : 37) என்பது :குர்ஆன் ஆயத். இதில், :தலா:க்கினின்று விலகியிருப்பது 'த:க்வா — ஆண்டவ னுக்கு அஞ்சிநடக்கும் சன்மார்க்கம்— என்று இயம்பப் பட்டுள்ளது. இனியோரிடத்தில் :தலா:க் இவ்வாறு தடுக்கப் பட் டுள்ளது: ''அவர்களை— (உங்கள் மனைவிமார்களை) நீங்கள் வெறுப்பீர்களேல், ஒரு பொருளை அதிலே ஆண் டவன் அதிகமான நன்மையைப் பொதித்து வைத்திருக்க, நீங்கள் விழையா திருப்பதா யிருக்கலாம்'' (4 : 19). கூடு மானவரை :தலா:க் நேராது தம்பதிகளை நீடித்து வாழ வைக்க உபாயமும் கூறப்படாது போகவில்லை: ''இன்னம், அன்னவ ரிருவருக்கு (கணவன் மனைவிக்கு) இடையே முறி வினையை அஞ்சுவீர்களேல், அதுபொழுது அவனுடைய ஜனங்களிலிருந்து ஒரு நீதிமானையும், அவளுடைய ஜனங் களிலிருந்து ஒரு நீதிமானையும் ஏற்படுத்துங்கள்; அவர்கள் (அத்தம்பதிகளுக்கிடையில்) இணக்கத்தை விழை வார்களாயின், அன்னவ ரிருவருக்கிடையே ஆண்டவனும் இணக்கத்தையே ஏற்படுத்தி வைப்பான்'' (4 : 35). :குர்ஆன் மஜீதி'ல் காணப்படும் இப்படிப்பட்ட ஆண்டவ னுணைகளைக் கொண்டே நபிபெருமானாரும், அனுமதிக்கப் பட்டுள்ள— 'ஹலாலான— காரியங்களி லெல்லாம் அல்லா (ஹ்)வுக்கு அதிக வெறுப்பை யளிக்கவல்லது :தலா:க்கா யிருக்கிறதென்று நவின்றருளி யுள்ளார்கள். இக்காரணத்தி னாலேதான், கிறிஸ்தவ நாடுகளில் காணப்பட்டு வரும் :தலா:க் கேஸ்களைவிட மிகமிகக் குறைவான வியாஜ்யங் களே இஸ்லாமிய தேசங்களில் நிகழ்வுற்று வருகின்றன. முஸ்லிம்கள் மணவினையால் வரக்கூடிய இல்லற இன்ப சுகங்களுடன் கூடிக் குடும்பத்தொல்லைகளும் பல கலந்தே விளையு மென்பதை முன்னறிந்தே, அந்த முட்களுடன் கூடிய ரோஜா மலரை நுகரத் தலைப்படுகிறார்கள். ''இல்லறமல்லது நல்லறமன்''றென்பது எல்லா முஸ்லிம் களுக்கும் செவ்வனம் அறியப்பட்டேகிடக்கிறது; எனினும், இதில் தொல்லைகளும் பலப்பல நிரம்பியுள்ளன வென்பதும் தெரியவரும். எனவேதான், பொறுக்கமுடியு மட்டும் பொறுத்துப் பார்க்கிறார்கள்; சமாதானமும் மிகவாய்ச் செய்து பார்ப்பார்கள். இறுதியிலே எதுவும் இயலாது போய்விடுங் காலே, ஒரு முஸ்லிம் அத்தியாவசியத்தி னிமித்தமே :தலா:க்கின் பக்கல் தலை திருப்புகிறான்.

'தலா:க்கின் தத்துவம்.

மேலே கூறப்பட் டிருப்பதிலிருந்து, 'தலா:க்குக் போதுமான—சரியான—காரணம்மட்டும் இருப்பதே போதா தென்பதும், இந்த இறுதியான "நட வடிக்கை"யை எடுக்கத் துணியுமுன்னே அத் தம்பதிகளுக்கிடையே சமரசத்தை ஏற் படுத்த எல்லாவித நல்ல முயற்சிகளும் எடுக்கப்பட் டிருத் தல் வேண்டுமென்பதும் செவ்விதிற் புலனாகாது போய்விட மாட்டா. ஒரு முஸ்லிம் தன் மனக்குரங்கு போனபோக் கிலே தன்னுடைய மனைவியைத் 'தலா:க் சொல்லி நீக்கிவிடு வானென்று குற்றங்கூறுவோர் வேண்டுமென்றே பொய்க் குற்றம் கற்பிப்பவராகவே யிருக்கிறார்கள். 'தலா:க்குக் குரிய சிற்சில காரணங்களைக் :குர்ஆன் ஷரீ'ப் கூறியிருப் பினும், அவையே விவாக விமோசனத்துக்கு வேண்டிய சகல காரணங்களாகவும் இருந்துவருகின்றன வென்றும், அவையல்லாத வேறு தக்க காரணங்களுக்காகத் 'தலா:க் கூறப்படக்கூடாதென்றும் வரையறுக்கப்பட்டு விட்டதாய்க் கருதிவிடற்க. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலு முள்ள பல்வேறு நாட்டு மக்களெல்லாரும் உண்மையிலே ஒரே (கிறிஸ்து) மதத்தையே பின்பற்றி வருகிறார்கள்; நடை யுடை நாகரிகத்திலும் அநேகமாய் ஒரே உயர்தர அந்தஸ்தி லேயே யிருந்து வருகிறார்கள்; முன்னேற்றத்திலும் முன் னணியிலேயே வந்துநிற்கிறார்கள்; சமூகாசாரத்திலும் ஒழுக்காசாரத்திலும் ஒரே மாதிரியான மனப்போக்கையே உடையவர்களா யிருக்கிறார்கள்; இப்படிப் பட்டவர்களே விவாக விமோசனத்து (divorce)க்கு வேண்டிய காரணங் கள் இன்ன இன்னவை யென்று நிர்ணயிப்பதில் ஒத்துப் போக வியலாது, பெரும் பெரும் அபிப்பிராய பேதங்க ளெல்லாம் கொண்டு பிளவுபட்டு நிற்கிறார்கள். உண்மை அவ்வா றிருக்க, இஸ்லாம்— எல்லா ஜாதி மக்களுக்கும், எல்லாக் காலத்துக்கும், எல்லாத் தேயத்துக்கும், அதிபாத லத்துள் ஆழ்ந்து தாழ்ந்துபோய்க்கிடக்கும் அடிமட்டத்தி லுள்ள அநாகரிக மாக்களுக்கும், மிகமிக உச்சத்தை யெட்டியுள்ள மகாநாகரிக முற்போக்குள்ள முஸ்லிம்களுக் கும் ஆகிய அனைவர்க்கும் பொதுவாகவும் பொருத்தமாக வும் அமைந்துள்ள இச் சன்மார்க்கம்— காலதேச வர்த்தமா னங்களும் மானிட சமுதாயமும் அடிக்கடி மாறிமாறி வரும் இப் பிரபஞ்சத்திலே இன்ன இன்ன காரணங்களுக் காகத்தாம் 'தலா:க் சொல்லப்படலாம், அல்லது கோரப்பட

லாம் என்று எவ்வாறு வரையறுத்து வைத்திடுதல் சாத்திய மாகும்?

:குர்ஆனெ கரீம் அநேகமாக எல்லா முக்கியமான ‛தலா:க்குக் காரணங்களையும் எடுத்தோதி யிருப்பினும், இந்தத் ‛தலா:க்குக்குரிய முக்கிய தத்துவம் யாதெனின், இறுதியாகத் தம்பதிகள் இனிமேல் கணவனும் மனைவியு மாய் ஒரு கணமும் ஒத்துவாழ இயலாமற் போய்விடுவ தாயே யிருந்துவருகிறது. உண்மையிலே திருமணமென் பது ஒரு "ஸிவில் காண்ட்ராக்ட்"— ஓராணும் ஒரு பெண் ணும் கணவனும் மனைவியுமாய் ஒத்துவாழ்வதென ஒப்புக் கொண்ட ஒப்பந்தமாயே யிருந்துவருகிறது. எனவே, இவ்வாறு இனிக் கணவனும் மனைவியுமாய் ஒன்றித்து வாழ முடியா தென்னும் முடிபிற்கு ஒருவருமோ அல்லது இரு வருமோ வந்துசேர்ந்து விடுவராயின், அதற்கப்பாலே அந் தக் கல்யாண முடிச்சுக் கத்தரிக்கப்பட வேண்டுவதுதானே இயற்கை நியதியாகும்? தவளை தண்ணீருக் கிழுக்க, ஓணன் வேலிக்கிழுக்க, இவ்விரண்டையும் இனி எவ்வாறு பிணித்துப் பிணைத்துவைத்தல் இயலக்கூடிய செயலாகும்? "காத லிருவர் கருத்தொருமித்(து) ஆதரவு பட்டு" இனி இன்பமனுபவித்தல் எங்ஙனம் சாத்தியமாகும்? உடைந்த சங்கு இனிமேல் ஊத்துப்பறியாதே. என்றாலும், ஓரொரு சிறு சிறு குடும்பக் கலகமும் ஊடற்பிணக்கும் ‛தலா:க்கிலே தான் வந்துமுடிய வேண்டுமென்பது ஒன்றும் கட்டாயச் சட்ட மில்லை. இனியொரு கணமும் கணவனும் மனைவியு மாய் ஒத்துவாழ முடியாதென்னும் முட்டுக்கட்டையில் வந்து மோதிக்கொண்டு விட்டால், அப்பால் ஓரங்குலமும் "இல்வாழ்க்கை யென்னும் இயல்புடைய வான்சகடம் செல்லாது தெற்றிற்று நின்று"விடு மன்றோ? அதுகாலை அச் சிக்கலைக் களைந்தெறிய அவர்கட்கிடையி லுள்ள திரு மண முடிச்சைத் தறித்துவிட்டுத்தானே ஆகவேண்டும்? அப்பொழுதும், "கல்லென்றாலும் கணவன், புல்லென்றா லும் புருடன், அம்மா!" என்று வேதாந்தம் ஓதலாமா?

இனியொருகணமும் கணவனும் மனைவியுமாய் ஒத்து வாழ முடியாதென்னும் இறுதிப்பிணக்கு இஸ்லாமிய திரு மறையில் ஷி(க்):கா:க் கென்று அழைக்கப் படுகிறது; இதன் தாது ஷ:க் (ஒன்றை இரண்டாய்ப் பிளத்தல்) என் பதா யிருக்கிறது. இப்படிப்பட்ட "ஷி(க்):கா:க்"குங்கூட,

எல்லாச் சமரசத்துக்கு முரிய எல்லா ஏற்பாடுகளும் எடுத்துப்பார்த்து, ஒன்றும் பயனளிக்காது போய்விட்டபின்னரே, ':தலா:க்குக்குக் கொண்டுபோய்ச் சேர்க்குமென்றறிக. எனவே, ':தலா:க்குக்கு முன்னே எடுக்கவேண்டிய ஒரு முக்கிய ஏற்பாடு இதுவா யிருக்கிறது: " இன்னம், அன்னவ ரிருவருக்கு— (கணவன் மனைவிக்கு) இடையே பிளவை [ஷி(க்):காக்:கை] அஞ்சுவீர்களேல், அதுபொழுது அவனுடைய ஜனங்களிலிருந்து ஒரு நீதிமானையும், அவளுடைய ஜனங்களிலிருந்து ஒரு நீதிமானையும் ஏற்படுத்துங்கள்; அவர்கள் (அத்தம்பதிகளுக் கிடையே) இணக்கத்தை விழைவார்க ளாயின், அன்னவரிருவருக் கிடையே ஆண்டவனும் இணக்கத்தையே ஏற்படுத்தி வைப்பான்; நிச்சயமாக, ஆண்டவன் அறிவு மிக்கவனாக, நுணுகியறிகிறவனாக இருக்கிறான்" (4 : 35). மேலே சென்று நம் :குர்ஆன் கூறுகிறது: " இன்னம், அன்னவர்கள் பிரிந்து விடுவ ராயின், ஆண்டவன் தனது விஸ்தீரணத்தைக் கொண்டு அவ்விருவரையும் தேவையினின்று விடுவித்து வைப்பான்; மேலும், ஆண்டவன் அதிகம் கொடுப்பவனாக, விவேகம் மிக்கவனாக இருக்கிறான்" (4 :130).

*அபிப்பிராய பேதம் வந்து விடுங்கால், இருதர'ப்'பினரும் சரி சரியான அந்தஸ்திலேயே யிருக்கின்றார்கள்.*

மீக்கூறிய ஆயத்திலே, ':தலா:க்குக்கு இறுதிக் காரணம் **ஷி(க்):கா:க்**— தம்பதிகள் இனியொருகணமும் கணவனும் மனைவியுமாய் ஒத்துவாழ முடியாதென்னும் முறிவு—தான் என்பது அறியக் கிடக்கிறது; இன்னம், அவ்வாயத் கூடிய மட்டும் இரு சாராரையும் சமரசப்படுத்தி வைத்தற்குரிய மார்க்கத்தையும் விளக்கிக் காட்டுகிறது. இவ் விஷயத்தில் இருகக்ஷியினரும் சரிசமமான அந்தஸ்திலேயே இருத்தாட்டப்பட் டிருக்கின்றார்கள்.* " அன்னவ ரிருவருக் கிடையே பிளவு" என்பது, கணவன் மனைவி இருவருள் கணவனேனும், அல்லது மனைவியேனும் இனி ஒத்துவாழ முடியா தென்னும் முடி

---

* இந் நாட்டிலே மாப்பிள்ளை வீட்டாரெல்லாம் மேலானவர்களென்றும், பெண்வீட்டாரெல்லாம் கீழானவர்களென்றும் எண்ணப்படும் தவறான கருத்தொன்று இருந்து வருகிறது. இது முற்றிலும் இஸ்லாத்தின் தத்துவத்துக்கு நேர்முரணா யிருந்து வருகிறது. (பா. தா.)

வுக்கு வந்து விட்டாரென்னும் செய்தியையே அறிவிப்பதா யிருக்கிறது; எனவே, இருவரும் இனிமேல் ஒரு கணமும் ஒத்துவாழ இயலாதெனும் எல்லையை எட்டி விடுங்கால், இருவருள் ஒருவர்— கணவனோ மனைவியோ— விவாக விமோசனம் கோரலாம்.* இதில் இருவருக்கும் சரிசம உரிமையே யிருக்கிறது. இறுதியான 'தலா:க் சொல்லப்படு முன்னே சமரசத்துக்காக அவ்விருதர'ப்'பாரின் பிரதிநிதிகளும்—இரு நீதிமான்கள்—சரிசமமான அந்தஸ்தி லிருந்தே சம்பாஷணம் புரிவார்கள்; இவ் விருவரும் ஒருவருக் கொருவர் மேன்மை தாழ்மையென்ப தில்லாமலே சரிசமமாய்க் குந்தி, அத் தம்பதிகளின் பிணக்கைநீக்கி ரா'ஜி யுண்டுபண்ணப் பெரிதும் பாடுபடுவார்கள்; இவ்விரு நீதிமான்களின் மெய்யான முயற்சியனைத்தும் விழலுக்கிறைத்த நீரேபோல் வீணாய் விடுமாயின், அதன் பின்னர்த் 'தலா:க் சொல்லி அவ் விருவரையும் பிரித்துவிட வேண்டும். இஃது இறுதியாய ஏற்பாடே யாம்.

முன்னமே சொன்னவாறு, 'தலா:க்குக் குரிய முதன்மையான, மிகவு முக்கியமான ஒரு பெரு நிபந்தனை யாதெனின், கணவன்-மனைவி இருவருள்ளே ஒருவர் மற்றவருடனே இனியொரு நிமிஷமும் ஒத்துவாழ இயலாதவாறு அத்துணைப் பெரிய அபிப்பிராய பேதத்தில், பிளவிலே வந்து முட்டிக் கொள்ளுதல் அத்தியாவசியமாய்ப் போய் விடல் வேண்டும். எடுத்துக் காட்டாகப் பாருங்கள்: கணவன் முழுநபுஞ்சகனாகி, அல்லது மனைவி தீராத மலடியாக, அல்லது கணவனோ மனைவியோ இல்லற மண வாழ்க்கைக்கு லாயி:க்கில்லா நிரந்தர நோயால் வருந்துவதாக மாறி விடுங்காலே, அன்னவரின் மணமுடிச்சுத் தறிக்கப்பட்டு விடலாம்; இப்படிப்பட்ட சூழ்நிலையிலும் எதிர்த்தர'ப்'பினர் 'தலா:க் கோரினால் மட்டுமே அவ்வாறு விவாக விமோசனம் நிகழ்வுறலாம். ஆயின், எத்தகைய சந்தர்ப்பத்திலும் எதிர்க்கக்ஷியார் 'தலா:க் கோராது, இருவரும் ஈருடலும் ஒருயிருமாய் மணியும் ஒளியும்போலே மகிழ்ந்திருந்து ஒன்று கூடிவாழ உடன்படுவராயின், அப்பால் இத்தரணியிலுள்ள

* கணவனும் மனைவியும் தம்முள்ளே பிளவுபடுவதே பிரிவினைக்கு முக்கிய காரணமல்லது, வேறு மாமனார் மாமியார் மீதுள்ள மனஸ்தாபத்தால் கணவனோ மனைவியோ 'தலா:க்குக்கு முடுகுவது இஸ்லாமிய நியதியாக மாட்டாது. (பா. தா.).

எந்தச் சக்தியும் அந்த நகமும் சதையும் போன்ற நல்ல ஜோடியைத் துண்டித்து விடுவது முடியாது; முடியாது. அதற்குமாருக, கணவனேனும் மனைவியேனும் தம் மனைவியுடனே கணவனுடனே ஒத்துவாழ உடன்படாது போய் விடுங்காலே அன்னவரின் இல்லற வாழ்க்கையில் "ஷி(க்):கா:க்"— பிளவு— ஏற்பட்டதாய் விடுகிறது; இவ்வாறே, கணவன் பித்துக்கொள்ளியாய் விடுகிருன்; அல்லது ஜன்மக்கைதியாக, அல்லது நீண்டகாலச் சிறைவாச சிக்ஷையடைந்தவனுக ஆய்விடுகிருன்; அல்லது கணவன் காணுமற்போய், அவன் செய்தி அறியப் படாமலே போய் விடுகிறது; அல்லது அவன் ஆயுள் நோய்வாய்ப்பட்டு, அல்லது கைகால் குறைக்கப்பட்டு, மனைவியைச் சம்ரக்ஷிக்க இயலாதவனுய் விடுகிருன். இப்படிப்பட்ட சூழ்நிலையில் மனைவி கணவனுடனே ஒத்துவாழ இணங்கா விடின், "ஷி(க்):கா:க்" ஏற்பட்டுவிடுகிறது; அவள் குறைகூரு விடின், 'தலா:க்குக்கு அவசியமே ஏற்படமாட்டாது. மனைவிக்கு ஏற்படும் அசந்தர்ப்பங்களாய சந்தர்ப்பங்களில் கணவன் தன் மனைவிக்குத் 'தலா:க் சொல்லாமலே இனியொருத்தியை மணந்து கொள்ளலாம்; முதல் மனைவியை நீக்கிவிடத் தான் வேண்டுமென்பது கட்டாயச் சட்டமில்லை.

கணவன்-மனைவிக் கிடையே "ஷி(க்) :கா:க்" ஏற்படுவதற்கு அவ்விருவரின் ஒழுக்க இழுக்கும் காரணமா யிருக்கலாம்; எடுத்துக் காட்டாக, அவனோ, அவளோ, தனதொழுக்கத்திலே இழுக்குறுமாறு நடப்பது ஒரு காரணமாகலாம்; அல்லது அவன் மனைவிக்கோ அவள் கணவனுக்கோ எப்பொழுதுமே கொடுமை— பொறுக்க முடியாக் கொடுமை— விளைத்துவருவது ஒரு காரணமாகலாம்; அல்லது, இன்னஞ் சில வேளைகளில் நிகழ்வுறுவதே போன்று, புருஷன்-பெண்ஜாதிக் கிடையில் சுமுகமாய்க் குடும்பம் நடத்த இயலாதவாறு அன்னவரின் குணக்கேடு அவ்விருவரையும் நாயும் பூனையும்போலே நலிவுற நடந்து கொள்ளுமாறு மாற்றியமைத்து விடுதலுங் கூடும். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில், "ஷி(க்):கா:க்" கென்பது வெளிப்படையாயே புலப்பட்ட போதினும், 'தலா:க்கால் தறித்துக் கொண்டு போய்விடுவதும், இன்றேல் இனிமேலும் கூடிக் குலவி வாழ்வதும் அத்தம்பதிகளின் சுமுக (பரஸ்பர) விருப்பத்தையே பொறுத்து நிற்கிறது. பொறுத்துப் போனல்,

இருவருக்கும் புண்ணிய முண்டு; பொறுக்க வியலாது 'தலா:க் வேண்டினுல், அதனை வீணே முயன்று தடுப்பதால் புண்ணிய மொன்றும் விளைய மாட்டாது. ஆனுல், குண (மன)ப் பொருத்தமில்லாக் கேஸ்களி லெல்லாம் 'தலா:க் சொல்லிவிட அனுமதியளித்துவிட்டால், அப்பால் குடும்பம் நடப்பதெப்படி? சமுதாயம் நிலைப்பதெப்படி? என்று ஒரு சிலர் வினவத் துணியலாம். குணப் பொருத்தம் இல்லாது போய்விடின், அப்பால் மனப்பொருத்தம் ஏது? மன வொருமை இல்லையேல், இல்லற இன்பம் இனிது முளைப்ப தெப்படி? "காதலிருவர் கருத்தொருமித்(து) ஆதரவு பட்டதே யின்பம்" என்பவாகலின், மனமொத்து, இனமொத்து, குணமொத்து, இடமொத்துக் கூடிவாழ இயலாத தம்பதி களை மேலும் மேலும் பிணைத்துப் பிணித்து வைப்பதால் என்ன நற்பயன் விளைந்திடுதல் கூடும்? எனவே, இனப் பொருத்தம், மனப்பொருத்தம், குணப்பொருத்தம், இடப் பொருத்த மற்ற கணவன்-மனைவியை, இருவரின் இல்லற நலனையுன்னியும், இவர்கட்குப் பிறந்துள்ள குழந்தைகளின் எதிர்கால நன்மையை யுன்னியும், சமுதாயத்தின் பொது வாய நலனை யுன்னியும் இனியும் சேர்த்துவைக்காது பிரித்துவிடுதலே சாலவும் பொருத்த முடையதாய்க் காணப் படாநின்றது. இவ்வா றின்றி, இனியும் மொட்டைத் தலை யையும் முழங்காலையும் இணைத்து முடிபோடுவதால், அனை வர்க்கும் சகிக்க முடியாச் சங்கடமே வந்து லபிப்பது சரதம். சுமுகமான சுகசந்துஷ்டியுள்ள குடும்பமே "இல் லற தர்மத்"துக்கு இன்றியமையாத இடமா யிருக்கும்; ஏனையில்ல மெல்லாம் நல்லறத்துக்குரிய துறக்கலோகமா யில்லாது, தொல்லை நிரம்பிய புல்லறத்துக்குரிய நரகலோக மாகவே இருந்துவரு மென்பது சரதமேயன்றே? கணவன்-மனைவிக் கிடையில் "தெய்விகக்காதல்" என்னப்படுவது ஒரு சிறிதும் இல்லையாயின், அப்பால் அவர்களது மணந் தான் என்ன மணம்? அஃதோர் எவ்வித மணமுமற்ற எருக்கம்பூ வாழ்க்கையேயாம். எனவே, குணப் பொருத்த மேனும் மனப்பொருத்த மேனும் இல்லாத தம்பதிகளைத் தறித்து விடுவதே மெத்த உத்தமமாகும். இதனுல் சமூ கத்துக்கு நன்மையே யல்லது, தீமையென்பது ஒருசிறிதும் கிடையாது. திருமண மென்பது தம்பதிகளின் பரஸ்பர அபிமானத்தின்—இருதலைக்காதலின்—மீதே முடியப் பெறு கிறது; இஃதின்றேல், என்றும் குன்ரு அபிமானத்துடனே

அவர்கள் உயிர்வாழ்வ தெங்ஙனம்? "மருவிய காதல் மனை யாளும் தானும், இருவராய்ப் பூண்டீர்ப்பின் அல்லால்— ஒருவரால், இல்வாழ்க்கை யென்னும் இயல்புடைய வான் சகடம், செல்லாது தெற்றிற்று நின்று."

மீக் கூறிய :குர்ஆன் திருவாக்கியங்களி லிருந்து, ஆண்டவன் ஆடவரையும் பெண்டிரையும் ':தலா:க் விஷயத்தில் சரிசமான அந்தஸ்திலேயே அமைத்து வைத்துள்ளான் என்பது வெள்ளிடை விலங்கலே யாம். இவ்வுண்மை 'ஹதீ':து ஷரீ'பால் இன்னம் நன்ருய் விளங்கக் கிடக்கிறது: நபிகள் திலகம் (சல்) உமைமா அல்லது இப்'னத்துல் ஜௌன் என்னும் நாமம் புனைந்து நின்ற ஒரு மாதை மணந்து கொண்டார்கள்; அம் மண மாதை நபி பெருமானார் நண்ணிய பொழுது, அந்த உமைமா அவர்களை விட்டு அல்ல(ஹ்)வின் பாலே அடைக் கலம் தேடியதாய்க் கூறினர்; அஃதாவது, அப்பெருமானார் தம்மைத் தீண்டு முன்னமே ':தலா:க் கோரினர். அக் கணமே அப்பெரு நபியவர்கள் (சல்) அம்மாதுக்குத் ':தலா:க் கொடுத்துச் சில சம்மானங்களும் வழங்கி யனுப்பிவிட் டார்கள் (பு'க'ா. 68 : 3). இனியோ ருதாரணம் :தாபி'த் இப்'னு :கய்ஸ் என்பவர் சம்பவமாகும்: இவருடைய மனைவி நபி பெருமானிடம் நண்ணி, "யாரஸூலல்லா(ஹ்)! யான் :தாபி'த் இப்'னு :கய்ஸின் குணத்திலோ, காத லிலோ யாதொரு குற்றமும் காணவில்லை. ஆயினும், அவ ருடன் கூடி (மனைவியாய்) வாழ எனக்கு விருப்பமில்லை," என்று கூறினள். அது செவியேற்று, நபி பெருமானார், "அவர் உனக்கு (மஹ்ராய்)க் கொடுத்திருந்த கனிவர்க்கத் தோட்டத்தை அவர்பால் நீ திருப்பிக் கொடுத்துவிடு கிருயா?" என்று வினவினர்கள். இதற்கந்த மாது சம்ம தித்த படியால், நபிகளுதர் :தாபி'த்தை வரவழைத்து, அத் தோட்டத்தைப் பெற்றுக்கொண்டு, அவருடைய மனை விக்குத் ':தலா:க்கைக் கொடுத்துவிடுமாறு கூறினர்கள்*

':தலா:க்குக் கேட்க மனைவிக் குள்ள உரிமை.

---

* இதைக் கொண்டு ஒரு கணவனே அல்லது ஒரு மனைவியோ தக்க காரணம் ஒன்று மில்லாது ':தலா:க் கொடுத்து விடலாம், அல்லது பெற்றுவிடலாம் என்று விவாதிக்கத் துணிவது வீண் வாதமே யாகும். (பா. தா.)

(பு'க'ா. 68 : 11). இவ்விரு எடுத்துக்காட்டி லிருந்தும் விளக்கமாவது யாது? ஒரு கணவன் தன் மனைவி தனக்குப் பிடிக்கவில்லை யென்னுங் காரணத்தால் எவ்வாறு அவன் அவளுக்குத் :தலா:க் கொடுக்க முன் வருவானோ, அவ்வாறே அதே சுதந்தரத்துடனேயே ஒரு மனைவியும் தன் கணவ னிடத்திருந்து :தலா:க் கோர உரிமைபெற் றிருக்கிருள் என்பதுதா னகும்.

மனைவியர் தங் கணவன்மா ரிடத்திருந்து :தலா:க் கேட்க உரிமை பெற்றுள்ளா ரென்னும் உண்மை, :குர்ஆன் ஷரீ'பாலும் 'ஹதீ':து ஷரீ'பாலும் ஒத்துக்கொள்ளப்பட் டிருப்பதுடன்கூட 'பி:க்ஹ் (மார்க்க சட்ட) கிரந்தங்க ளாலும் அங்கீகரிக்கப்பட்டே யிருக்கிறது. மனைவி தான் பெற்றுள்ள மஹ்ரைத் திரும்பக் கொடுத்துப் பெறவிரும்பும் :தலா:க் கு'ல்ஃ' என்று அழைக்கப்படுகிறது. இவளுக் குள்ள இந்த இயற்கை யுரிமை மேலே காட்டியுள்ள 'ஹதீ':துகளால் நன்கு நிலைபெறுகின்றது ; இதற்கு வேண் டிய :குர்ஆன் திருவாக்கியமும் இதுவா யிருக்கிறது : "':தலா:க் இருமுறை கூறப்படலாம் ; அப்பால் அவர்களை நல்ல ஞேயத்திலே வைத்துக் கொள்ளுங்கள் ; அல்லது அவர்களைப் பக்ஷத்துடனே போய்விட விடுங்கள். இன்னம், அன்னவர்க ளிருவரும் அல்லா(ஹ்)வின் வரையறைக் குள்ளே தாங்கள் இருக்க வியலாதென் றஞ்சினு லல்லது, நீங்கள் அவர்கட்கு (அம் மனைவியர்க்கு) அளித்திருப்பதி னின்று ஏதொரு பகுதியையும் எடுத்துக்கொள்வது உங்க ளுக்கு அனுமதிக்கப்பட் டில்லை; அப்பால், அவர்களிருவரும் அல்லா(ஹ்)வின் வரையறைகட் குள்ளே இருக்க இயலார் களென நீங்கள் அஞ்சுவீர்களேல், எதைக்கொண்டு (கொடுத்து) எதேச்சையடைய விழைகிருளோ அவள் (அவ் வாறு) கொடுப்பதி (லிருந்து பெறுவதி)ல் அவர்கள் மீது குற்ற மில்லை'' (2 : 229). "அல்லா(ஹ்)வின் வரையறை கட்குள்ளே'' இருப்ப தென்பது, இங்கே திருமண நோக் கத்தை நிறைவேற்றி வைப்பது, அல்லது திருமண ஒப்பந் தத்தால் அத் தம்பதிகள்மீது சுமத்தப்பட் டுள்ள அவரவர் கடமைகளை நன்கு முடித்து வைப்பது என்பதையே குறித் துக் காட்டுவதா யிருக்கிறது. மஹ்ரென்பது :தலா:க்கை விரும்பும் ந'பர்மீது ஒரு தடையா யிருக்கிறது. :தலா:க் கைக் கொடுப்பவன் கணவனு யிருப்பின், மனைவிக்கே

அவள் மஹ்ர் சொந்தமாய்விடும்; ஆயின், அவளே அதனைக் கோரின், அம்மனைவி அம்மஹ்ரைக் கணவன்பால் திருப்பிக் கொடுத்துவிடல் வேண்டும். ஆனால், :குர். 4 : 35-இல் கூறப்பட்டுள்ள நீதிமான்கள்— இவ்விடத்தில், "அவர்களிருவரும் அல்லா(ஹ்)வின் வரையறைகட்குள்ளே இருக்க இயலார்களென" அஞ்சும் நீங்கள்— கணவன் மனைவியருள்ளே எவர் ':தலா:க்கை வற்புறுத்துகிறார் என்றும், எனவே எவருக்கே அந்த மஹ்ர்த்தொகை சேரவேண்டுமென்றும் தீர்மானித்தல் வேண்டும்.*

இஸ்லாத்தில் ':தலா:க் சம்பந்தமாக வழக்கத்தி லிருக்கும் சட்டம் திருப்திகரமா யில்லை.

***கணவன் ம'ப்:கூது'ல் க'ப'ர்***— காணப்படாதவன்— என்று ஏற்பட்டு விடுவானாயின், அதுபொழுதும் அவன் மனைவி ':தலா:க் கோர அனுமதி பெற்றுள்ளாள்; அஃதாவது, அவன் காணுமல்— இருக்கு மிடமே தெரியாமல்— மறைந்து விட்டால், அவள் ':தலா:க் கேட்கலாம். இந்தக் கேஸில் "ஷி(க்):கா:க்"குக்கு இடமில்லாது போயினும், கணவன் தன் மனைவிக்குச் சம்ரக்ஷணம் புரியவோ, கணவனுக்குரிய கடமைகளை நிறைவேற்றவோ இயலாதவனாய் விடுகிறான். இத்தகைய சூழ்நிலையிலே ஒரு மனைவி எத்துணைக் காலம் தன் கணவனை எதிர்பார்த்து நிற்றல் வேண்டுமென்று நிச்சயமாய்க் கூறக் :குர்ஆன் மஜீதி'லேனும் 'ஹதீ':து ஷரீ'பிலேனும் ஒன்றும் விளக்கமான ஆதாரம் துலக்கமாய்க் காணக் கிடைக்க வில்லை. இவ் விஷயத்தில் 'ஹன'பீ சட்டம் மிகவும் குழப்பத்தை யுண்டுபண்ணத் தக்கதா யிருக்கிறது. ஏனென்றால், காணமற் போய்விட்ட கணவனுடைய மனைவி 120 அல்லது 100 வருட காலம் வரை எதிர்பார்த்துக் காத்துக்கொண் டிருக்கவேண்டுமென்று இமாம் அபூ''ஹனீ'பா (ரஹ்) அவர்களும், அபூ' யூஸு'பும் முறையே அறைந்துள்ளார்கள் (ஹித'ா. I, பக். 598, 599). ஷா'பிஈ' சட்டப்படி அந்த மனைவி

*மஹ்ருக்கென்று குறித்துச் சொல்லி, மனைவிக்குக் கொடுக்கப்படும் ஆபரணமும் ஆஸ்தியுமே மஹ்ருக்கு ஈடாகக் கணிக்கப்படும். இவ்வாறின்றி, எத்தனை ஆபரணமும் ஆஸ்தியும் மனைவிக்குக் கொடுபட்டாலும், அவற்றிலே ஒன்றுகூடப் பின்னால் மஹ்ருக்கு ஈடென்று வீண்வாது கூறமுடியாது. (பா. தா.)

ஏழாண்டுகள் வரை எதிர்பார்த்திருத்தல் வேண்டும்; மாலிக் இமாமோ, நான்காண்டுகளே போதுமெனத் தமதபிப்பிராயத்தைத் தெரியப்படுத்தி யிருக்கின்றார் (ஹித'ா. I, பக். 597). இந்த இமாம் மாலிக்கின் அபிப்பிராயத்தைத் தழுவியே இமாம் அ'ஹ்மத்' இப்'னு ஹன்ப'லும், ஷீஆ' இமாம்களும் வரையறுத் துள்ளார்கள். இதுவே பகுத்தறிவுக்கும் பொருத்தமா யிருக்கிறது. ம'ப்:கூத்' சம்பந்தமாக பு'க'ாரீயில் ஓரத்தியாயம் காணப்படா நின்றது (68 : 21). அதில் காணமற் போய்விடும் கணவன் சம்பந்தமாக நபி பெருமானது திருவாக்கொன்றும் நேரடியாய்க் காணப்படவில்லை ; ஆனால், இப்'னுல் முஸய்யபி'ன் அபிப்பிராயமொன்றே கூறப்பட் டிருக்கிறது ; அதன்படி, ஒரு கணவன் போர்க்களச் சண்டையிலே ம'ப்:கூத'ாய்ப் போய்விடுவனாயின், அவன் மனைவி ஓராண்டு மட்டும் காத்திருத்தல் வேண்டும். இவ் விஷயத்துடன்கூட இப்'னு மஸ்ஊ'தி'ன் (றலி) இனியொரு செய்தியும் சேர்க்கப்பட் டுள்ளது : இப்பெரியார் தம்முடைய வேலைக்காரியின் காணமற் போய் விட்ட (சண்டையி லன்று, சாதாரணமாய்க் காணமற் போய்விட்ட) கணவனுக்காக ஓராண்டு வரை காத்துப் பார்த்தார். அதுவரை அவன் செய்தி ஒன்றுமே தெரியாமையால், அவன் ம'ப்:கூத'ாய்ப் போய்விட்டா னென்று இப்'னு மஸ்ஊ'த்' தீர்மானம் செய்துவிட்டார். தந்தியும், கம்பியில்லாத் தந்தியும், தபாலும், கப்பலும், ரயிலும், ஏர்மெய்லும், ரேடியோவும், ஆகாய விமானமும் மிக மலிவாய்விட் டிருக்கும் இற்றைநாளில் ஒரு கணவனை ம'ப்:கூதெ'னத் தீர்மானித்தற்கு ஓராண்டே போதுமானதா யிருக்கிறது.

*'தலா:க் சொல்வதற்குள்ள கணவனதுரிமை இரு நீதிபதிகளின் தீர்ப்பிற்குக் கட்டுப்பட் டுள்ளதே.*

இறுதியாய்த் 'தலா:க்கை உச்சரிக்க வேண்டிய பொறுப்புக் கணவனையே சார்ந்து நிற்பினும், அவனுக் குள்ள உரிமை ஒரு வகைச் சட்டத்திற்குக் கட்டுப்பட்டதாயே யிருந்து வருகிறது. கீழ்க்காணும் நடைமுறை எந் திருமறையில் மிக விளக்கமாயே துலக்கப்பட் டிருக்கிறது : " இன்னம், அன்னவ ரிருவருக்கு— (கணவன் —மனைவிக்கு) இடையே பிளவை அஞ்சுவீர்களேல், அதுபொழுது அவனுடைய ஜனங்களி

லிருந்து ஒரு நீதிமானையும், அவளுடைய ஜனங்களி லிருந்து ஒரு நீதிமானையும் ஏற்படுத்துங்கள்; அவர்கள் (அத் தம்பதிகளுக் கிடையே) இணக்கத்தை விழைவார்களா யின், அன்னவ ரிருவருக்கிடையே ஆண்டவனும் இணக் கத்தையே ஏற்படுத்திவைப்பான்'' (:குர். 4 : 35); ''இன்னம், அன்னவர்கள் பிரிந்துவிடுவராயின், ஆண்டவன் தனது விஸ்தீரணத்தைக் கொண்டு அவ்விருவரையும் தேவையி னின்று விடுவித்து வைப்பான்'' (4 : 130). கணவன்–மனைவிக் கிடையே பிளவை யுண்டுபண்ணத்தக்க பிணக் குக்கள் ஏற்படுந்தோ றெல்லாம் அவனுடைய ஜனங் களிலிருந்தும் அவளுடைய ஜனங்களிலிருந்தும் ஒவ்வொரு நீதிமான் நியமிக்கப் பெறுதல் வேண்டும் என்பது இறைவனது கட்டளை; இவ்விரு நீதிபதிகளும் அக் கணவன்-மனைவிக் கிடையே சமூக சமரசத்தை நிலை நிறுத்தப் பாடுபடுவார்கள்; இது முடிவுபெறாது போய் விடின், அதற் கப்பாலே விவாக விமோசனம் ஏற்பட்டு விடும். இறுதியிலே 'தலா:க் கூறவேண்டியவன் கணவனே யாயினும், அவனும் அவளைப் போலவே அவ்விரு நீதிபதி களின் தீர்மானத்துக்குக் கட்டுப்பட்டே நடத்தல்வேண்டும். இதனால் விளக்கமாவது யாது? **கணவனென்பான் தன திஷ்டம் போலே, மனம்போன போக்கிலே தான் கட்டியகிழத்தியை விலக்கி விவாகத்தை ரத்'து'செய்து விடுவது சாலாது** என்பதுதா னாகும். அபிப்பிராய பேதங் கொண்டுள்ள கணவன்–மனைவியின் வியாஜ்யம் இரு நீதி பதிக ளிடத்தே ஒப்படைக்கப்படல் வேண்டும்; இன்னவர் களின் தீர்ப்பிற்கு அன்னவர்கள் அவசியமாய்க் கட்டுப் படுதல் அத்தியாவசிய மாகும். 'ஹ'ஜ்ரத் அ'லீ(றலி)யின் ஆட்சியின் பொழுது, ஒரு கணவன் தனக்கே 'தலா:க் கூறும் அதிகாரம் எதேச்சையா யுண்டென்று வாதாடினான்; ஆனால், அ'லீ (றலி) அவர்கள், அந்த 4 : 35-ஆவது ஆயத் தின் கீழே நியமிக்கப்பட்டுள்ள இரு நீதிபதிகளின் தீர்ப் பிற்கு அக்கணவன் கீழ்ப்படியக் கட்டுப்பட் டுள்ளவனே யென்று வற்புறுத்தி விட்டார்கள்—(ரா'ஜீயின் **அத் த'ப்ஸீர்** III, பக். 320). நபிபெருமான் காலத்தில் ஒரு கணவன் அவசரப்பட்டுத் தன் மனம்போன போக்கிலே தன்னுடைய மனைவிக்குத் 'தலா:க் கூறிவிட்டான்; அது தெரிந்து, நபி கட்டிலகம் (சல்) அதில் தலையிட்டு, அந்தத் 'தலா:க்கை ரத்'து' செய்து, அவர்கள் மணவாழ்க்கையை முறித்து

விடாது, முன்போலே உறுதிப்படுத்தி வைத்தார்கள் (பு'க'ா. 68 : 1, 2). ஈதெல்லாம் அ'மல் நடத்தும் நடைமுறையே யாகும். :குர்ஆன்ஷரீ'பில் (4:35) :தலா:க்குக்கு—அதற்கு முன்னே நடைபெற வேண்டிய ரா'ஜிக்கும் சேர்த்து—அவசியமான சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அப்பால் அதனை அ'மல் நடத்த வேண்டுவதே எஞ்சி நிற்கிறது. ஆகையால், கணவன்-மனைவியின் பிணக்கில்— பிளவிலே —அரசாங்க அதிகாரம் குறுக்கிட்டுத் தலையிடும் உரிமைபெற்றிருக்கிறது என்பது வெளிப்படை; இதனை எவரும் மறுப்பதோ, மீறி நடப்பதோ இயலாது; இயலாது. இஸ்லாமிய ராஜ்யத்தில் அவ் வரசாங்கம் தலையிட்டு நீதி வழங்கும்; ஆனால், முஸ்லிம் ராஜ்யம் இல்லாத இடங்களில் வாழும் முஸ்லிம்கள் என்செய்வ தென்பதே இங்கு நாம் ஆராய வேண்டிய ஒரு முக்கிய விஷயமா யிருக்கிறது.

அன்னிய அரசாங்கத்தில் முஸ்லிம்களுக் கென்று ஒரு :கா'ஜீ யென்பார் ஏற்படுத்தப்பட வில்லையாயின், அங்குள்ள முஸ்லிம் சமுதாயத்தினரே தங்களுக் குள்ளே ஒரு '':கா'ஜீ''யை நியமித்துக் கொண்டு, அவர் பின்பற்றி நடக்கவேண்டிய நடைமுறைச் சட்டங்களையும் இம் முஸ்லிம்களே வகுத்துக் கொள்ளலாம். இப்படிப்பட்ட ஒருவரை ஏற்படுத்தாவிடினும், முஸ்லிம் சமூகத்தவரே— அந்த மஹல்லாவுக்குரிய ஜமாஅ'த்தவரே— ஊர் ஒப்புரவின் ஒழுங்கைப் பின்பற்றி, இரண்டு மூன்று மத்தியஸ்தர்களை ஏற்படுத்தி, ஒவ்வொரு :தலா:க் கேஸையும் ஃ'பசல் செய்து முடிக்கலாம். எனவே, முஸ்லிம் அரசாங்கமோ, அவ்வரசாங்கம் இல்லாத இடத்தில் முஸ்லிம் சமுதாயமோ, :குர்ஆன்ஷரீ'பில் :தலா:க் சம்பந்தமாய்க் கூறப்பட்டுள்ள மூலக் கொள்கைக்கு முரணில்லா முறையிலே அனுஷ்டான சட்டங்களை ஏற்படுத்தி, கணவன்மார் கண்ட கண்டபடியெல்லாம் கண் மூடித்தனமாகத் தங்களுக்குள்ள :தலா:க் சொல்லும் உரிமையைத் துர்வினியோகப் படுத்தக்கூடாத விதத்திலே கட்டுப்படுத்தி வைத்தால், அஃது இஸ்லாத்தின் மேன்மைக்கும் முஸ்லிம்களின் நன்மைக்கும் உகந்ததாகவே இருந்துவரு மென்பது ஒருதலை.

இஸ்லாமல்லாத ஏனைச் சில சமயங்களில் மாதவிடாய் ஒரு மாபெருந் தீட்டாகவே மதிக்கப்பட்டு, அதற்குரிய

காலத்தில் அந்தப் பெண்பிள்ளைகள், ஹிந்து ஸ்திரீகளே போலும் யூதஸ்திரீகளே போலும், தீண்டப் படக் கூடாத துடக்குடையவர்களாயே ஒரு மூலையில் ஒதுக்கப்பட்டு, உலக்கையைத் துணைக்கொண்டு கிடப்பார்கள். :குர்ஆன் ஷரீ'பில் மாதவிடாயென்பது ':தலா:க்குக் குத் தோற்றுவாயாய்க் கூறப்பெற் றுள்ளது. மாதவிடாயின் காலத்திலே அந்தப் பெண்மணியுடன் வீடு கூடுவது கூடா தென்று :குர்ஆன்ஷரீ'ப் முழுத் தடை விடுத்துள்ளது; என்னெனின், அச்செய்கை "தீங்கு" விளக்கு மென்று அறையப்பட் டிருக்கிறது (2 : 222). இவ்வாறு தாற்காலி கமாய்ச் சில தினங்களுக்கு "மருவிய காதல் மனையாளும் தானும்" மண வாழ்க்கையுள் ளிறங்காமல் முற்றும் தடுக்கப் பட் டிருத்தலினாலேதான் அதுபொழுது ':தலா:க் சொல்லக் கூடாதெனத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட் டுள்ளது; ஏனென்றால், "ஊடுதல் காமத்திற்(கு) இன்பம் அதற்கின் பம், கூடி முயங்கப் பெறின்," என்றாங்கு, சமரசம் ஏற்பட்டு அத் தம்பதிகள் சல்லாபித்துச் சரசமாய்ச் சப்ரமஞ்சத் திலே கூடிச் சந்துஷ்டியடைய இடமில்லாமலே போய் விடு கிறது மாதவிடாயின் பொழுது. இப்'னு உ'மர் தம் மனைவிக்கு மாதவிடாயின் காலத்திலே ':தலா:க் கொடுத்து விட்டார்; அது தெரிந்து, நபிகணாயகர் (சல்அ'ம்) அந்தத் ':தலா:க் செல்லத்தக்க தன்றென்று கூறி, நிராகரித்துவிட் டார்கள். ஆகையால், அந்த இப்'னு உ'மர் தம் மனைவியை இல்லக் கிழத்தியாய் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் ஏவினார்கள் (பு'க'ா 68:1). எனவேதான், மனைவி ':துஹ்ர் (மாதவிடாயில்லாது சுத்தமாயிருக்கும்) நிலையிலிருக்கும் போது சொல்லப்படும் ':தலா:க்கே செல்லத்தக்க தென்று கொள்ளப்படுகிறது; இன்னம், அம்மனைவி மாதவிடாய் நின்று ':துஹ்ரின் நிலையை எய்திய பின்னர் அவளுடனே அவளுடைய கணவன் இல்லப்புணர்ச்சி இழைத்திடா திருந்திருத்தல் வேண்டும். இது, தாராளமாய்த் ':தலா:க் கில் இறங்கத் துணியும் எதேச்சையைத் தடுப்பதற்குரிய ஒரு தடைக்கல்லா யிருந்துவருகிறது.

மாதவிடாயின் காலத்திலே ':தலா:க் கூறுவது தகாது.

இன்னம், பல்வகையாலும் கணவனும் மனைவியும் தங்கள் விவாக பந்தத்தைவிட்டு விரைவிலே விடுவித்துக் கொள்ள எளிய வழியில்லாது தடைமுறைகள் ஏற்படுத்தப்

பட் டுள்ளன ; ‛தலா:க் சொல்ல வேண்டிய அளவுக்குப் பிளவு முற்றிவிட்டபோதினும், கணவனும் மனைவியும் மீட்டும் ஒன்றுசேர்ந்து இணங்கி வாழ்ந்து இன்புறுதற்கு எல்லா ஏற்பாடும் எடுக்கப்பட்டே யிருக்கின்றன.

இ'த்'த'ா அல்லது மூன்று மாதத் தாமதம்.

ஒவ்வொரு ‛தலா:க்குக்குப் பின்னும் ஒரு குறிப்பிட்ட காலம்வரை மனைவி இ'த்'த'ாவிலே தனித்திருப்பது அவசியமாகும்: "ஏ நபீ ! நீர் ஸ்திரீகளை விவாக விலக்குச் செய்வீரேல், அவர்களுடைய இ'த்'த'ாவுக்கு (இடங்கொடுத்து) விலக்கிவைக்கக் கடவீர்" (:குர். 65: 1). இவ்வாறு தனித்துத் தாமதித் திருக்கவேண்டிய காலம் (இ'த்'த'ா) சற்றேறக் குறைய மூன்று மாதங்களாகும்: "மேலும், ‛தலா:க் சொல்லப்பெற்ற மாதர்கள் மூன்று மாதவிடாய்கள் (:குரூ) மட்டும் இ'த்'த'ாவி லிருத்தல் வேண்டும்" (2: 228). ஒரு :குர்‘உ வென்பது—(:குரூவின் ஒருமை :குர்‘உ) ‛துஹ்ரி (சுத்தநிலையி)லிருந்து மாதவிடாயுள் நுழைவதாகும். சாதாரண (சரீரவாகுள்ள) பெண்மணிகட்கு நான்கு வாரத்துக்கு (28 நாட்களுக்கு) ஒரு முறை மாதவிடாய் வெளியாகும் ; ஆனால், இக்கணக்குத் தவறியுள்ள ஸ்திரீகளுக்கும், மாதவிடாய் நின்றுவிட்ட பேரிளம் பெண்டுகளுக்கும் இ'த்'த'ாவுக்குரிய காலம் மூன்று மாதங்களாம் (:குர். 65 : 4). கர்ப்பிணிகளுக்கு இத் தாமதகாலம் அக் குழந்தை பிறக்குமட்டுமேயாம் (ஷெ). இத்தகைய இ'த்'த'ாவிலே ஏனை நோக்கங்கள் பல நிரம்பி யிருப்பினும், கணவனும் மனைவியும் சமரசத்துடனே ரா‘ஜியாய்ப் போய்விடுதற்கும் ஏதுவில்லாது போகவில்லை. ‛தலா:க் சொல்லப்பட்டாலுங்கூடக் கணவனும் மனைவியும் (இ'த்'த'ா முடிவுறுமட்டும்) இன்னம் ஒரே இல்லத்திலேயே இருந்துவருகிறார்கள். மனைவி தன் கற்பொழுக்கத்திலே தவறிவிட்டா லன்றிக் கணவன் அன்னாளை அவள் வாழ்ந்து வசித்திருந்த வீட்டைவிட்டு வெளியேற்றக் கூடாதென வெளிப்படையாய்த் தடுக்கப்பட் டுள்ளான் ; மனைவியும் அவ் வில்லத்தை விட்டு வெளியேறத் தேவையில்லை யென அறிவுறுத்தப்பெற் றிருக்கிறாள் (65 : 1). இதன் நோக்கம் யாதெனின், அத் தம்பதிகளுக் கிடையிலுள்ள அபிப்பிராய பேதம் அதிகரித்துவிடாது, இருவரும் மீட்டும் நெருங்கிச் சமரசப்பட்டு நேசப்பான்மையுடன் ரா‘ஜியாய்விடவேண்டு மென்பதேதா னாகும். கணவனும் மனைவியும் ஒரே

இல்லத்திலே பேசாது சிலகாலம் தணத்தல் முறையால் பிரிந்துறையுங்கால், அத் தம்பதிகட்கு இடைநடுவே ஏதேனும், இன்னம் சிறிது பண்டைக் காதலின் சிறுபொறி யொன்று எஞ்சி யொளித்திருக்குமேல், அந்தத் தீப்பொறி இந்தத்தணத்தல்—இ'த்'த'ாவிலே பிரிந்திருத்த லென்னும்—நேரத்திலே பஞ்சுடன் பட்டுப் பற்றி, இருவரும் மறுபடியும் ஈருடலும் ஓருயிருமாய் இணங்கி, மலரும் மணமும் போலே மகிழ்ந்துறவாடி மாண்புறலா மன்றோ? என்னே அழகிய பரிசுத்த இஸ்லாமிய ஏற்பாடு! "கூடிப் பிரியேல்!" என்றார் அவ்வையாரும்.

இருமுறை கூறப்பெறும் :தலா:க்கிலே ரா'ஜிக்கு இடமிருக்கிறது.

உண்மையிலே, இ'த்'த'ாவைக்குறித்துக் கூறுமிடத்தே நம் :குர்ஆன் மஜீத்' அத்தம்பதிகளுக் கிடையிலே ரா'ஜி ஏற்பட வேண்டுமென்றே சி'பாரிஷ் செய்கின்றது: "இன்னம், அன்னவர் (ஒரு :தலா:க் சொல்லப்பெற்ற மனைவியர்)களின் கணவன்மார், அதற் கிடையில், அவர்கள் இணங்கி ரா'ஜியாய்ப் போய்விட விழைவார்களாயின், அவர்களை (தம்மனைவியரை)த் திரும்ப ஏற்றுக்கொள்ள அதிக உரிமை பெற்றுள்ளார்கள்" (2 : 228). ஒவ்வொரு :தலா:க்கும் தனது ஆரம்பத்திலே தணத்தல் (இ'த்'த'ா) முறையைக் கொண்டு, அத் தம்பதிகளுக்கிடையே இன்னம் ஏதேனும் சிறிது பழங்காதலுக்குரிய " ஒட்டுப்பற்று " எஞ்சியிருக்கிறதா வெனப் பரிசோதனை செய்துபார்ப்பதாயே அமைந்து கிடக்கிறது; மனைவியின் இ'த்'த'ா காலத்தில் அவள் தன்கணவன் இல்லத்திலேயிருக்கவேண்டு மென்று ஆண்டவன் செப்பியிருப்பதன் அந்தரங்க நோக்கமும், அவ்வாறு அவ்விருவரும் "காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவு" பட்டு மென்றே கொள்ளத் தக்கதாகத்தான் இருந்துவருகிறது. அந்த இ'த்'த'ாவின் காலத்திற் குள்ளே இருவரும் இணங்கி ரா'ஜியாய் விடலாம்; அந்த இ'த்'த'ா முடிவுற்ற பின்பு இருவரும் மறுமணம் புரிந்துகொள்ளலாம்: "இன்னம், நீங்கள் ஸ்திரீகளுக்குத் :தலா:க்கூறி, அவர்கள் தங்களுக்குரிய இ'த்'த'ா காலத்தைக் கழித்துவிட்டும் இருக்குங்கால், சட்டபூர்வமான ('ஹலாலான) முறையிலே அவர்கள் தங்களுக் குள்ளே இணங்கிவிடும்பொழுது, அவர் (அம்மாதர்)கள் தங்கள் கணவர்களை (மறு)மணம் புரிந்துகொள்வதை

நீங்கள் தடைசெய்யாதீர்கள் ; மேலும், உங்களிலே எவரொருவர் அல்லா(ஹ்)வைக் கொண்டும் இறுதி நாளைக் கொண்டும் ஈமான் கொள்கிறரோ, அவருக்கு இஃது அறிவுறுத்தப்படுகிறது ; இஃதுங்களுக்கு அதிக லாபகரமாகவும் அதிக பரிசுத்தமாகவும் இருக்கிறது ; நீங்கள் (இதை) அறியமாட்டீர்கள் ; ஆயின், ஆண்டவன் அறிகிறன்'' (2 : 232). ஒரு'தலா:க் சொல்லப்பட்ட மனைவியும் அவளுடைய கணவனும் இ'த்'த'ாவுக்குப் பின்னர் மறுமணம் புரிந்துகொள்வது அவர்களுக்கு ''அதிக லாபகரமாகவும் அதிக பரிசுத்தமாகவும் இருக்கிறது'' என்னுங் காரணத்தால் நல்லதென்றே அதிகம் சி'பாரிஷ் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு இ'த்'த'ாவுக்குப் பின்னே அத் தம்பதிகள் ஒன்று யிணங்கி மணந்துகொள்வது ஒரே முறைக்குத்தான் என்று எண்ணிவிட வேண்டாம் ; இரண்டாமுறை 'தலா:க் சொல்லி இ'த்'த'ா கழிந்த பின்னரும் அக்கணவன் - மனைவியர் மறுமணம் புரிந்து கொள்ளலாம்: '''தலா:க் இரு முறை கூறப்படலாம் ; அப்பால் அவர்களை நல்ல ரேயத்திலே வைத்துக்கொள்ளுங்கள் ; அல்லது அவர்களைப் பக்ஷத்துடனே போய்விடவிடுங்கள்'' (2 : 229). இவ்வாறு மறுமணம் புரிந்துகொள்ள இடமளிக்கும் 'தலா:க்— **'தலா:க்கெ ரஜ்யீ'**— இருமுறை கூறப்படலாம்.

முடிவான 'தலா:க்— முத் 'தலா:க்.

ஒருமுறை 'தலா:க் சொல்லப்பட்டால், இ'த்'த'ா கழியுமுன்னே இருவரும் இணங்கி ரா'ஜியாய் விடலாம்; அல்லது அந்த இ'த்'த'ா கழிந்த பின்னர் அக்கணவனும் மனைவியும் மறுமணம் புரிந்து கொள்ளலாம். இரண்டா முறை 'தலா:க் சொல்லப்பட்ட பின்னரும் முன்போலவே— முதல் 'தலா:க்கை யடுத்துச் செய்தது போலவே— செய்யலாம் ; அஃதாவது, இ'த்'த'ாவின் காலத்திலே இணங்கி ரா'ஜியாய் விடலாம் ; இ'த்'த'ாவுக்குப் பின்னே மறுமணம் புரிந்து கொள்ளலாம். ஆனால், மூன்ருவது 'தலா:க்கோ, முடிவான, முறிக்கமுடியாத் 'தலா:க்காகும். இஸ்லாத்துக்கு முன்னே, அந்த அஞ்ஞான காலத்தில், பெண்மணிகட்குத் 'தலா:க் விஷயத்தில் எத்தகை யுரிமையும் இருந்ததே யில்லை; ஆனால், எல்லா உரிமையும் பெற்றிருந்த கணவன் எத்தனை முறை வேண்டுமானலும் தன் மனைவிக்குத் 'தலா:க் கொடுத்

துக் கொடுத்து, எத்தனை முறை வேண்டுமாயினும் இ'த்'த'ாவின் காலத்திலே இணக்கிக் கொள்வான்; அதற்குத் தடைமுறை யொன்றும் அக்காலத்திலே இருந்தது கிடையாது; (ரா'ஜீயின் **அத் த'ப்ஸீர்** II, பக். 372). என்னெனின், அந்தப் பெண்மணிகள் அற்றை நாளில் ஆடு மாடுகளே போலத்தாம் நடாத்தப்பட்டு வந்தார்கள். இதனால் திருமண மென்பதற்கு எத்தகை மதிப்பும் இல்லாது போய், சமுதாய வாழ்க்கையே சீர்குலைந்து, ஆசாரக் கட்டற்றுக் கிடந்து வந்தது. இஸ்லாம் இவ் வவனியிலே தோன்றிற்று; நாரிமணிகளை நவமணிகளா யுயர்த்திவிட்டு, இவர்கட்கும் 'தலா:க் கேட்கும் உரிமையை உண்டாக்கி யளிக்கலாயிற்று; இதனுடனே கணவனுக் கிருந்துவந்த பழங்கால எதேச்சா ''லைஸென்ஸை'' யும் மட்டுப்படுத்தி, இருமுறைக்கு மேலே 'தலா:க் சொல்லப்பட்டவளை அவள் கணவன் மீட்டும் சேர்த்துக் கொள்ளக் கூடாதென எல்லையும் வகுத்து விட்டது : '''தலா:க் இருமுறை கூறப்படலாம்; அப்பால் அவர்களை நல்லஞேயத்திலே வைத்துக் கொள்ளுங்கள்; அல்லது அவர்களைப் பக்ஷத்துடனே போய்விட விடுங்கள் '' (:குர். 2 : 229) என்பதே, இஸ்லாமிய சட்டம். இருமுறை 'தலா:க் கூறிய பின்னர் இருமுறை அத்தம்பதிகள் இணங்கி ரா'ஜியாய் விடலாம்; அல்லது இ'த்'த'ாவுக்குப் பின்னே இருமுறை மறுமணம் புரிந்துகொள்ளலாம் என்று இஸ்லாம் அனுமதி யளித்துள்ளது. அதன் பின்னர் அக் கணவனும் மனைவியும் இனியொரு பொழுதும் பிரிவதில்லை யென்று, அல்லது ஒரேயடியாய்ப் பிரிந்துவிடுவ தென்று தீர்மானம் பண்ணிக்கொள்ளக் கடவார்கள். ''கூடிப் பிரியேல்!'' என்பது உத்தமவாழ்க்கைதான்; இனியும்—மூன்ரு முறையும்—பிரிந்துவிட்டால், அப்பால் ஒன்று சேர்வது சிரம சாத்தியமாய்விடும். மூன்ரு முறையாகவும் 'தலா:க் சொல்லப்பட்டு விட்டால், அது மீற முடியாத முடிவான மீளவியலாத முத் 'தலா:க் காகிவிடும். இஃது இஸ்லாமிய சட்டக் கலையில் **'தலா:க்கெ ப'ாயின் என்று** கூறப்பெறும்.

இஸ்லாமிய சட்ட கலா சாஸ்திரிகள் மூன்று விதத் 'தலா:க்கை அங்கீகரித் துள்ளார்கள் : ஒரு கணவன் சில வேளைகளில் ஒரேமுறையில் தன்மனைவிக்கு மூன்று 'தலா:க்கையும் ஒருசேரச் சொல்லி விடுவான் ; இது மூன்று முறை சொல்லப்பட்ட மூன்று 'தலா:க்காகவே பாவிக்கப்படும்.

இது 'தலா:க்கெ பி'த்'ஈ' (நபிபெருமான் காலத்துக்குப் பின்னர் நுழைக்கப்பட்ட நூதனத் 'தலா:க்) என்று அழைக்கப்படுகிறது. இனியொரு கணவன் தன்மனைவிக்கு ஒரு 'துஹ்ரின் காலத்தில் ஒரு 'தலா:க் கொடுக்கிறான்; அவள் அதுகேட்டு, இ'த்'த'ாவுள் நுழைகிறாள்; மறுமாதத் 'துஹ்ரிலே அவன் இரண்டாவது 'தலா:க் கொடுக்கிறான்; அடுத்த மாதத் 'துஹ்ரிலே அடுத்துள்ள மூன்றாவது 'தலா:க்கும் கொடுத்து விடுகிறான். அஃதாவது, ஒரே இ'த்'த'ாவுக்குள்ளே மூன்று முறை மூன்று'தலா:க்கும் சொல்லிமுடித்து விடுகிறான்; இது 'தலா:க்கெ 'ஹஸன் (நல்ல—அழகான — 'தலா:க்) என்று இயம்பப்படுகிறது. இனி மூன்றாவது விதத் 'தலா:க், 'தலா:க்கெ அ'ஹ்ஸன் (உத்தமோத்தமத் 'தலா:க்) என்று எழுதப்பட்டுள்ளது; இதில், ஒரு 'துஹ்ரில் ஒரு 'தலா:க் சொல்லப்படுகிறது; உடனே இ'த்'த'ா ஆரம்பமாய் விடுகிறது; இந்த இ'த்'த'ாவுக்குள்ளே இனி யொரு 'தலா:க் சொல்லப்பட மாட்டாது. (ஹித'ா. I, பக். 333). இந்த இறுதிவிதத் 'தலா:க் கொன்றே :குர்ஆன் ஷரீ'பில் கூறப்பட் டுள்ளதாகும்: "ஏ நபீ! நீர் ஸ்திரீகளை விவாகரத்'து' செய்வீரேல், அவர்களுடைய இ'த்'த'ாவுக்கு (இடமளித்தே) விவாக விலக்குச் செய்யக் கடவீர்; மேலும், கணிக்கப்பட் டுள்ள நாட்களின் கணக்கை எண்ணக்கடவீர்; இன்னம், உம்முடைய ரக்ஷகனுகிய ஆண்டவனுக்குரிய உமது கடமையில் ஜாக்ரதையா யிருக்கக் கடவீர்" (65 : 1). இத் திருவாக்கியத்தின் பிரகாரம், ஒரு 'துஹ்ரில் ஒரே முறை 'தலா:க் சொல்லப்படும்; அக்கணமே அம்மனைவி இ'த்'தா'வுக் குள்ளே சென்று விடுவாள். அந்த இ'த்'த'ா கழியு முன்னே அத் தம்பதிகள் ஒன்றுசேர்ந்து ரா'ஜியாய் இணங்கி விடலாம்; அல்லது இ'த்'த'ா கழிந்த பின்னர் இருவரும் மறுமணம் புரிந்து கொள்ளலாம். இஃதொன்றே நம்:குர்ஆனில் கூறப்பட்டுள்ளது; ஏனைய வெல்லாம் :குர்ஆன் ஷரீ'பிலும் 'ஹதீ':து ஷரீ'பிலும் காணப்படாத புதிய விஷயங்களேயாம்; நூதன பி'த்'அ'த்தே யாகும்.

ஒரே முறையிலே மூன்று 'தலா:க் கூறுவது :குர்ஆனுக்கே முரணாகும்.

மேலே கூறி யாங்கு, :குர் ஆன் ஷரீ'ப் ஒரே விதமாய 'தலா:க்கையே ஆமோதித்திருக்கிறது; அதுதான் 'தலா:க் :குல் ஸுன்னு, அல்லது 'தலா:க்கெ அ'ஹ்ஸன் என்று

அழைக்கப் படுகிறது. "':தலா:க்கெ பி'த்'ஈ'' அல்லது "':தலா:க்கெ 'ஹஸன்'' என்பது குறித்துக் :குர்ஆன்மஜீதி'லும் 'ஹதீ':து ஷரீ'பிலும் யாதொரு சிறு குறிப்பும் காணப்படவே யில்லை. எனவே, நபிகட் டிலகத்துக் கிப்பாலே நுழைக்கப்பட்டுள்ள இவ்விருவித நூதனத் ':தலா:க்குக்களும் மாற்றக்கூடிய ':தலா:க்கை மாற்றமுடியாத, முறிக்க முடி யாத, முடிவான ':தலா:க்காய்ச் செய்துவிடக் கொண்டுவரப் பட்டுள்ள தந்திர யுக்திகளாகவே— வீண் சூழ்ச்சிகளாகவே — அமைந்து கிடக்கின்றன. இவ்வாறு தந்திரயுக்தி செய் யப்பட்ட தென்னும் சூழ்ச்சி நபிபெருமான் (சல்) காலத் திலேயே காணப்பட்டுவருவது கண்கூடு : இஸ்லாத்திற்கு முற்பட்ட காலத்தில் ஒரே "தடவை"யில் இடையீடில்லாது மூன்று ':தலா:க்கையும் ஒருங்கே கூறுவது ஒரு மாகொடிய வழக்கமா யிருந்துவந்தது; அதற்கேற்ப ஒரு முஸ்லிம் தன் மனைவிக்கு ஒரே முறையில், ஒரே மூச்சிலே முத்':தலா:க்கை யும் செப்பி முடித்துவிட்ட செய்தி கேட்டு, நபிகளுதைர் பெருங் கோபங்கொண்டு விட்டார்கள் (ஸுனன் 27 : 6). இவ்வாறு சொல்லப்பட்ட ':தலா:க்கை அப்பெருமானார் (சல்) நிராகரித்து விட்டார்கள்—(முஸ்னத்' I, பக். 265). இனி யொரு செய்தியின்படி, உ'மர்(றலி)காலம்வரை அம்மக்கள் மூன்று ':தலா:க்கையும் ஒன்றாகவே ஒரே முறையிலே சொல்லிவந் திருக்கிறார்கள்; ஆனாலும், அவையெல் லாம் ஒரே ':தலா:க்காகவே கணிக்கப்பட்டுவந் துள்ளன. (முஸ்னத்'I, பக். 314).

':தலா:க்கெபி'த்'ஈ'யும், ':தலா:க்கெ'ஹஸனும் :குர்ஆனுக்கு நேர் மாறான வையே.

இப்படிப்பட்ட, இஸ்லாத்துக்கு முற்றும் மாற்றமான— ஒரேதடவையில் முத் ':தலா:க்கையும் ஒருங்கே சொல்லி விடும்— கெட்டவழக்கத்தை விட்டொழிப்பான் வேண்டி, நல் லெண்ணத்துடனே அவ்வாறு ஒரே மூச்சிலே மூன்று ':தலா:க்கையும் ஒருவன் கூறிவிட்டால் அம் மூன்றும் விட்டுவிட்டுச் சொல்லப்படும் மூன்று தனித் தனியான ':தலா:க்கே போலத்தான் கணிக்கப்படுமென அந்த உ'மர்(றலி) கட்டளையிட்டு விட்டார்கள்; ஆயின், அதனால் விளையுமென்று எதிர்பார்க்கப்பட்ட நன்மைக்கு மாறாகத் தீமையே மிகவாய் வந்து முளைக்கத் தலைப்பட்டு விட்டது. என்னெனின், ஆத்திரத்தாலும் க்ஷாத்திரத்

தாலும் அவசரத்தாலும், அடங்காக் கோபத்தாலும் சிறிதும் சிந்தியாது, சட்டென ஒருவன் முத் :தலா:க்கையும் ஒரே மூச்சிலே முன்கோபத்தால் மொழிந்துவிடுவ ஞயின், அவனது அவசரச் செய்கை, அப்பாலவன் எத்தனைதான் இரங்கி வருந்திடினும், அவனைவிட்டு அவனுடைய ஆருயிர் மனைவியைப் பிரித்துவிடுவதாயே யிருந்துவருகிறது. அஃ தாவது, நபி பெருமானுல் ஒன்றென்றே கணிக்கப்பட்டு, மாற்றக்கூடிய :தலா:க்கா யிருந்துவந்தது, 'ஹ'ஜ்ரத் உ'மர் (றலி) அவர்களால் மாற்றமுடி யாத முடிவான :தலா:க்காகவே கருதப்படுவதாய்ப் போய்விட்டது. இஃது, உண்மையிலே இஸ்லாத்தினுல் ஏற்படுத்தப்பட்டுள்ள :தலா:க்கின் தத்துவத் தையேமுற்றிலும் மாற்றியமைத்துவிட்டதெனல் வேண்டும். இஸ்லாத்தில் :தலா:க்கென்பது அனுமதிக்கப்பட் டிருப்பி னும், இத்தகைய விவாக விமோசன மென்னப் படும் திருமண முறிவினையால் சமூக சுமுகவாழ்க்கை மிகவும் கலக்கமுற்று விடுகின்றமையால், அந்தத் :தலா:க்கென்பது அதிக உற்சாகத்துடனே ஊக்கிவிடப்படுவது கூடாததா யிருக்கிறது ; எடுத்ததற் கெல்லாம், "பிடி சாபம்!" எனத் :தலா:க் கூறிவிடுவது கூடாது. இனியொரு கணமும் ஒத்துவாழ இயலா தென்னும் முடிவான உச்சத்துக்கு முற்றி வந்துவிட்டா லன்றி, கணவனேனும் மனைவியேனும் :தலா:க்கின்பக்கல் திரும்பிப் பார்ப்பது தகாதன்றே! எனவே, இத்தகைய இறுதியுச்சத்தை எய்திவிட்ட பின்னரும், ஒரு :தலா:க்கூறி இ'த்'த'ாவிலே அந்த மனைவி இருந்து வருங்கால், அத் தம்பதிகள் இருவரும் இணங்கி ரா'ஜியாய் விடலாம் ; அப்பாலும், அந்த இ'த்'த'ா முடிந்தபின்னரும் இருவரும் தமக்குள்ளே மறுமணம் புரிந்துகொள்ளலாம் ; ஒருமுறைமட்டு மன்று ; இவ்வாறு **இருமுறை** நிகழ்த்த லாம். இவ்வா றெல்லாம் செய்ய**லாம்** என்பதுமட்டுமா யில்லை ; இவ்வாறே செய்ய**வேண்டும்** என்றும் ஆண்ட வனே ஆணை — ஆக்ஞை — யிட்டுள்ளான். :குர்ஆன் ஷரீ'பால் கொடுக்கப்பட்டுள்ள இவ் வுரிமையை, அல்லா ஹுத் தஆ'லாவினுலே அளிக்கப்பட்டுள்ள இந்தச் சுதந் தரத்தை இனியிரண்டு :தலா:க்கும்—**பி'த்'ஈ'**, **'ஹஸன்** என்றழைக்கப்படும் இரண்டும்—பறித்துவிட்டிருக்கின்றன. எனவேதான், இவ்விரண்டும் :குர்ஆன்ஷரீ'புக்கே நேர் மாறுனவை யென்று கொள்ளக் கிடக்கின்றன. ஆகையால், இவ் விரண்டும் அல்லா(ஹ்)வுக்கும் அவனுடைய ரசூ

லுக்கும் நேர்முரணுன பி'த்' அ'த் தென்பது மிகத்தெளிவே. இவ்விரு :தலா:க்கும், மாற்றக்கூடிய :தலா:க்கை— **:தலா:க்கெ ரஜ்ஈ'யை**— மாற்றமுடியாத் :தலா:க்காக— **:தலா:க்கெ ப'ாயின்** என்பதாக—மாற்றியமைத்துவிட்டிருக்கிறது. இது :குர்ஆன் கட்டளேக்கே, அல்லா(ஹ்)வின் ஆணைக்கே முற்றிலும் மாற்றமா யிருக்கிறது; இதனுல், :தலா:க் முறைக்கு இஸ்லாம் அளித்துள்ள இதம்— நன்மை — என்பது இல்லாமலே ஒழிந்துபோய் விடுகிறது. அல்லா(ஹ்)வும் ரசூலும் இலேசாக்கி வைத்திருந்ததை இப்பால் தோன்றிய பெரியார்கள் மிக்க கடினமாக்கி வைத்து விட்டார்கள். நபி பெருமான் (சல்) அபிப்பிராய பிரகாரம், ஒரேமூச்சில் சொல்லப்படுவது முத் :தலா:க்கே யாயினும், முந்நூறு :தலா:க்கேயாயினும், அவையனைத்தும் சேர்ந்து ஒரே :தலா:க்காகத்தான் கணிக்கப்பட்டு வந்தன. இதுதான் நேர்மையானதுங்கூட; எனவே, இது மாற்றப் படக்கூடிய :தலா:க்கே யாம்.

மாற்றமுடியாத் :தலா:க்கால் விளையும் பயன்.

மேலே இதுகாறும் கூறப்பட்டதி லிருந்து, :குர்ஆன் ஷரீ'பின் பிரகாரம், மாற்றமுடியாத, முடிவான இறுதித் :தலா:க் முஸ்லிம்களிடத்துச் சாதாரணமா யேற்படுவது மிகமிக அரிதினும் அரிதே யென்பது சொல்லாமலே விளங்கக் கிடப்பது வெள்ளிடை விலங்கலேயாம்; ஆயின், **பி'த்'ஈ'**, **'ஹஸன்** என்னும் இருவித நூதனத் :தலா:க் முறையாலே அநேகமநேக மாற்றப்படக்கூடிய :தலா:க் கேஸ்களெல்லாம் மாற்றப்பட முடியாத :தலா:க் முடிவுகளாகவே வந்து இதுகாலை மூண்டுவிடுகின்றன. அந்தோ! அந்தோ!! :குர்ஆன்மஜீதி'ன்படியும், ரசூலுல்லா(ஹ்)வின் திருச்செயல், சொல்லின்படியும் மூன்ருவது :தலா:க்குக்கு ஒரு கணவனும் மனைவியும் சென்று சேர்வது மகா அபூர்வமேயாம் என்ருேம். என்னெனின், இறுதித் :தலா:க்குக்கு வந்துசேரு முன்னே இருமுறை அத் தம்பதிகள் பரீக்ஷிக்கப்படுகிருர்கள்: இரண்டு :தலா:க்கிலும் அவர்கள் இணங்கி ஒன்று சேர இடமளிக்கப்பட் டிருக்கிறது; அவர்கள் இ'த்'த'ா முடியு முன்னே ரா'ஜியாய் விடலாம்; இ'த்'த'ா முடிந்தபின்னரும் மறுமணம் முடித்துக்கொள்ளலாம். இவ்வாறு இருமுறை பரீக்ஷிக்கப்பட்டு, இருமுறை ரா'ஜியாய், அல்லது நி(க்)கா'ஹாய் முடிந்தபிறகு மூன்ரு

முறையாகவும் அத் தம்பதிகள் கணவன் மனைவியாய், ஈருடலும் ஒருயிருமாய் ஒத்துவாழ இயலாது பிய்த்துக் கொண்டு போய், மூன்றுவது :தலா:க்குக்கு (முடுகிச்) சேர் வராயின், அப்படிப் பட்ட ஒழுங்கனயும் தவளேயையும் அப் பாலும் ஒன்றுசேர்த்துப் பிணைப்பது உசித மன்றே! இரு பரிசோதனைகளுக்கு இப்பாலும் அவர்கள் ஒன்றுசேர்ந்து வாழ ஒவ்வாது மூன்றும் :தலா:க்கை முடுகிவிடுவ ராயின், அப்பால் அத் தம்பதிகளை அடியுடனே பிரித்து விலக்கி விடுவதே சாலச் சிறந்த தர்மமாகும். எனவேதான், எமது திருமறை மூன்றுவது :தலா:க்குக்குப் பின்னே ரா'ஜிக்கோ, மறுமணத்துக்கோ இடமில்லை யெனத் தடுத்து நிறுத்தி விட் டிருக்கிறது. ஆனல், அப்பாலும் அத் தம்பதிகள் தமக்குள்ளே ஒருமிக்க இடமில்லையா? இல்லையேயில்லை யென் றறிக; ஆனாலும், இதற்கொரே யொரு பரிகாரந்தான் உண்டென்று அல்லா(ஹ்) தன் திருமறையிலே அறைந் திருக்கிறுன்: " ஆகவே, அவன் அவளே— (தன்மனைவியை மூன்றுமுறையாய்)த் :தலா:க் கூறிவிடுவாஞயின், அப்பால் அவள் இனியொரு கணவனை மணந்துகொள்ளு மட்டும் அவனுக்கு—(அம்முதற்கணவனுக்கு) 'ஹலாலாக(மணந்து கொள்ளச் சட்ட உரிமை பெற்றவளாக) மாட்டாள்; அப்பாலே அவன் — (அந்த இரண்டாவது கணவன்) அவளேத் :தலா:க் சொல்லி விடுவாஞயின், (அல்லது இறந்துவிடுவா ஞயின்) அவர்கள் (அந்த மனைவியும் அவ ளுடைய முதற் கணவனும்) அல்லா(ஹ்)வின் வரையறை களுக் குள்ளே தங்களால் தரித்திருக்க முடியுமென்று எண்ணுவார்களாயின், (மறுமண முடித்துக்கொண்டு) அவ் விருவரும் ஒருவரிடத் தொருவர் மீள்வராயின், அவ்விருவர் மீதும் தவறென்று மில்லை" (:குர். 2 : 230). ஆகவே, முத் :தலா:க்கும் சொல்லி முடிவுற்றுவிட்ட பின்னர் அந்தக் கண வனும் மனைவியும் மீட்டும் மணந்துகொள்ள விழைவ ராயின், அவள் வேறொரு கணவனுக்கு வாழ்க்கைப் பட்டு, அவனிடத்திருந்தும் (வாழவியலாது) :தலா:க் பெற்று (அல்லது கைம்பெண்ணாய்ப் போய்) விடுதலை யடைந்து, எதேச்சா ஸ்திரீயாய்விட்ட பிறகே அவ்வாறு மறுமண முடித்துக் கொள்ளலாம். மூன்றும் :தலா:க்கும் கொடுக்க நாடுகிற ஒருவனுக்கு இதிலொரு படிப்பினை இருக்கிறது: இவன் மீட்டுமொருகால் தன் மனைவியை மணந்துகொள்ள விழைந்தால், அதற்கிடையில், எத்துணைப் பெரிய கஷ்டம்—

பரமசங்கடம்— மனச்சஞ்சலமெல்லாம்— ஏற்படவேண்டியிருக்கிறதென்று எண்ணிப்பார்த்து, இவன் பெருந்திகில் கொண்டுவிடுகிருன் ; இவன் மனைவியும் ‘தலா:க் மூன்றும் சொல்லிவிட்ட தன் கணவனை மறுமுறையும் மணக்க நாடினுல், மேலே கூறியுள்ள கடின பிராயச்சித்தத்தைச் செய்து கழுவாய் தேடவேண்டியவளாயே யிருந்து வருகிருள். எனவே, ஒரு கணவனும் மனைவியும் தமக்குள்ளே ஒத்து வாழ முடியாது மூன்ருவது ‘தலா:க்கை முடுகி விடுவராயின், அத்தம்பதிகள் பின்னுல் விளையப் போவதை யுன்னி, எத்துணைப் பெரிய திகிலுடனே சர்வ ஜாக்கிரதையாயிருக்க வேண்டுமென்பதை நீங்களே நினைத்துப்பாருங்கள். மனம் “ஒத்தால் வாழலாம், எத்தாய் வாழலாம்,” என்னும் முதுமொழி ஈண்டுக் கவனிக்கற்பால தாம். :குர்ஆன் ஷரீ‘பில் கூறப்பட்டுள்ள வண்ணம் நம் முஸ்லிம்கள் ஒழுங்காய் ஒழுகிவருவார்க ளாயின், மூன்ருவது ‘தலா:க்கென்னும் முறிக்கமுடியா இறுதித் ‘தலா:க்கெல்லையை எட்டுவது மிக்க அபூர்வமாயே யிருந்துவரும் ; இன்னம், அன்னவர்கள் மூன்ருவது ‘தலா:க்குக்குப் பின்னேயும் மீட்டும் ஒன்று சேர விரும்பினுல், அதற்குள்ள (பிராயச்சித்தத்) தண்டனையை நினைத்துப் பார்ப்பார்களாயின், முறிக்கமுடியா மூன்ருவது ‘தலா:க்கைக் கனவிலும் கருதமாட்டார்கள். அவ்வாறு அபூர்வத்தினும் மகா அபூர்வமாய மூன்ரும் ‘தலா:க்கை எட்டி விட்ட தம்பதிகள் மீட்டும் மணந்து கொண்டு ஒன்று சேர விழைவராயின், அதற்கும் ஒருவழி :குர்ஆனில் கூறப்பட்டுள்ளது ; அதுதான் மேலே காட்டியுள்ள திருவாக்கியமா யிருக்கிறது (2:230).

‘த‘ஹ்லீல் அல்லது ‘ஹலாலா.

“·த‘ஹ்லீல்,” அல்லது “‘ஹலாலா” என்பது— அஃதாவது, ஒரு காரியத்தை ‘ஹலாலாகச் (சட்டபூர்வமாயுள்ளது என்று) செய்து விடுவது—இஸ்லாத்துக்கு முன்னேயிருந்த ஓர் அஞ்ஞான கால அட்டூழியப் பழக்கமேயாம் : ஒரு கணவன் தன் மனைவிக்கு முத் ‘தலா:க்கும் கொடுத்து முடித்துவிட்ட பிறகு, அவளை அவன் மீட்டும் மணந்துகொள்ள நாடுவ னயின், அவள் வேருெரு கணவனுக்கு, இவன் அவளுடன் வீடுகூடிய பின்னர்த் ‘தலா:க் கொடுத்துவிட வேண்டுமென்னும் கட்டாய நிபந்தனையின் மீது மணமுடிக்கப்பெற்று, இன்னவனுல் விடிந்து ‘தலா:க்

கொடுத்து முடிக்கப்பட்ட பின்னுல், மறுமண முடித்துக் கொள்வான். இதனை அவ்வஞ்ஞான கால அரபிகள் '**ஹலாலா** என்றழைத்து வந்தார்கள். இந்த " 'ஹலாலா" நி(க்)கா'ஹைக் :குர்ஆன்மஜீதி'ல் (2 : 230-இல்) கூறப்பெற்றுள்ள கல்யாணத்துடனே கலந்து குழப்பத்தை விளைவித்துக் கொள்வது அறவே கூடாதென் றறியக் கடவீர்கள். என்னெனின், " 'ஹலாலா" என்பது, தன் முதற் கணவனை மீட்டும் மணந்துகொள்ள நாடும் ஒரு மனைவிக்கு அவமானத்தை விளைக்கவேண்டு மென்னும் ஒருவித சிக்ஷையாகவே அந்த '**ஜினு**வென்னும் வியபிசாரம் விதிக்கப்பட்டு வந்தது; ஆயின், :குர். 2 : 230-இலே கூறப்பட்டுள்ள திருமணம் அப்படிப்பட்ட தன்று ; இதில், இடையில்வரும் கணவன் அவளுடனே வீடு கூடிய பின்னே, வீடு கூடாமலேயோ, :தலா:க் கொடுத்துவிடவேண்டு மென்னும் நிபந்தனையின்மீது இவனுக்குத் தாற்காலிகமாக நி(க்)கா'ஹ் செய்யப்படுவது கிடையாது. இந்த இரண்டாவது (இடைக்) கணவன் தன் மனைவிக்குத் :தலா:க்கூறிவிட வேண்டுமென்னும் கட்டாயமொன்று மில்லை ; அவ்வாறு இப்புருஷன் சொல்லவு மாட்டான். ஒருகால், வெகு அபூர்வமாக, இவ்விடைக் கணவன் :தலா:க் சொல்ல நேர்ந்தால், (இவ்வாறு நிகழ்வது சாதாரணமாய்ச் சாத்தியமில்லை) அப்பாலே அம் முதற் கணவனும் இம் மனைவியை மறுமணம் புரிந்து கொள்ளலாம். எனவே, இது " 'ஹலாலா " ஆக மாட்டா தென்பது தெள்ளத்தெளிவே யாம். இக்காரணத்தினுலே தான், நபிகள் திலகம் (சல்) அந்த 2 : 230—ஆவது ஆயத்துக்குப் பின்னே " ' ஹலாலா " நி(க்)கா'ஹ் நிகழ்த்தியவர்களைக் கடுமையாய்க் கண்டித் துள்ளார்கள் : " 'ஹலாலா செய்கிற மனிதன் மீதும், எவனுக்காக இந்த ' ஹலாலா செய்யப்படுகிறதோ அம்மனிதன் மீதும் அல்லா(ஹ்)வின் சாபம் (முனிவு) இழியக் கடவது " (திர்மிதீ 9:25). 'ஹ'ஜ்ரத் உ'மர் (றலி) அவர்களும், தங்கள் முன்னே 'ஹலாலாவில் பங்கெடுத்துக் கொண்ட இரு மனிதர்கள் கொண்டுவரப் படுவார்களாயின், தாங்கள் அவ்விருவரையும் '**ஜாணி** (வியபிசாரகர்)க ளென்றே கருதுவதாய்க் கூறி யுள்ளார்கள். :குர்ஆனெ கரீமில் கூறப்பட்டுள்ளாங்கு நடப்பதாயின், முறிக்கமுடியா முடிவாய மூன்ருவது :தலா:க் மகா அபூர்வமாயே இத்தரணியில் காணப்படு மென்ருேம் ; இது மெய்தான். என்னெனின், ஒவ்வொரு

':தலா:க்குக்கும் இடைநடுவே நெடுங்காலம் பிடிக்குமன்றோ? எனவே, இவ்வுதாரணத்தைப் பாருங்கள்: ரு(க்)கானு என்பவர் தம் மனைவிக்கு முதன்முறையாக நபி பெருமானார் காலத்திலே ':தலா:க் கூறினார்; பிறகு அவளை மணந்து கொண்டு, 'ஹ'ஜ்ரத் உ'மரின் ஆட்சியின் காலத்திலே இரண்டாமுறையாகத் ':தலா:க் கூறினார்; அப்பாலும் அவளை மணந்து வாழ்ந்து, மூன்றாவது க'லீ'பா உ':துமான் (றலி) ஆட்சிக்காலத்திலே மூன்றாமுறையாகத் ':தலா:க் கொடுத்து முடித்து விட்டார் ('ஜாது'ல் மஆ'த் II, பக்.258).

':தலா:க் சொல்லும் விதம்.

':தலா:க் வாய்மொழியால் சொல்லப்படலாம்; அல்லது எழுத்து மூலமா யறிவிக்கப்படலாம்; ஆனால், அது சாக்ஷிகள் முன்னிலையில் நடைபெறல் அவசியமாயிருக்கிறது: "ஆகவே, அவர்கள் அவர்களுக்குரிய குறித்த காலத்தை எட்டிவிடுங்கால், அதுகாலை அன்னவர்களைப் பக்ஷத்துடனே நடத்தக்கடவீர்கள்; அல்லது அவர்களைப் பக்ஷத்துடனே விலக்கிவிடக் கடவீர்கள்; மேலும், உங்களுள்ளிருந்து இரு நீதிமான்களைச் சாக்ஷிக்கழையுங்கள்; இன்னம், நீங்கள் அல்லா(ஹ்)வுக்காக நேரியசாக்ஷ்யங் கொடுக்கக் கடவீர்கள்" (:குர். 62 : 2). ':தலா:க் கூறும் வசனங்கள் என்னவா யிருப்பினும், அவை, அக்கணவன் உள்ளபடியே தன் மனைவியைத் ':தலா:க் சொல்லி, அவள் தனக்கினி மனைவியா யிருக்கத் தேவையில்லை யென்பதை யுணர்ந்து கூறும் வார்த்தைகளா யிருத்தல் அத்தியாவசிய மாகும். எந்த எந்த மாதிரியில், எந்த எந்தச் சூழ்நிலையிலே சொல்லப்படும் ':தலா:க் செல்லத்தக்கது, அல்லது செல்லத் தகாதது' என்னும் விஷயத்தில் வெவ்வேறு பிரிவின் சட்டநிபுணர்களுக் கிடையே வெவ்வேறு அபிப்பிராயமே இருந்து வருகிறது. ஆயின், மணமுடிச்சின் காலத்தில் அக்கணவன் எவ்வாறு மனமார உள்ளத்துணர்ச்சியுடனே தனதபிப்பிராயத்தைத் தெரிவிக்கிறானோ, அவ்வாறே அத்திருமண முடிச்சுத் தறிக்கப்படுங் காலத்திலும் அவன் மனமார உள்ளுணர்ச்சியுடனேயே ':தலா:க்கை உச்சரித்து முடித்தல் வேண்டும். நிர்ப்பந்தத்தின், அல்லது வேறு விதச் செல்வாக்கின் கீழே, அல்லது குடிமயக்கின் (மதுபான மஸ்தின்) கீழே அல்லது பரிகாசத்திலே, அல்லது தவறுதலிலே, அல்லது ஆத்திரத்திலே, அல்லது அறியாத்தனத்

திலே யிருந்து ஒருவன் கூறும் :தலா:க் செல்லமாட்டாதென ஒரு சில சட்டகலா சாஸ்திரிகள் சாற்றியிருக்க, வேறு சில பண்டிதர்கள், மேற்கூறிய சந்தர்ப்பங்களில் சிலவற்றைச் செல்லு மென்றும், இன்னஞ் சிலவற்றைச் செல்லா வென்றும் அபிப்பிராயம் அறிவித்துள்ளார்கள். 'ஹன'பீ சட்டப்பிரகாரம், :தலா:க்குக்குரிய வார்த்தைகள் விளையாட்டாக, அல்லது வேடிக்கையாக, அல்லது மதுமயக்கி லிருந்தே சொல்லப்பட்டாலும், அக்கணவன் மனமாரவோ அல்லது கட்டாயத்தின் மீதோ அந்தத் :தலா:க்குக் குரிய வசனங்களைச் செப்பிவிடுவா னாயின், அந்த விவாகபந்தம் முறிந்துவிடுவதா யிருக்கிறது. ஆனால், ஷா'பிஈ' இமாம் இதற்கு நேர்மாறுயுள்ள அபிப்பிராயத்தையே கொண்டுள்ளார்கள் (ஹித'ா.I, பக். 337). 'ஹன'பீ சட்டம் :குர்ஆன்ஷரீ'பின் கருத்துக்கு முரணா யிருப்பது வெளிப்படை; என்னெனின், :தலா:க்கென்பது ஒரு "பாரதூரமான" காரிய மென்றே :குர்ஆன் மஜீத்' கருத்துக்கொண்டிருக்கிறது; எனவே, இதற்கென்று நடைமுறைச் சட்டத்தையும் நன்கு வகுத்துவைத் திருக்கிறது. :தலா:க் கென்பது கணவன் கைவசமுள்ள எளிய கிள்ளுகீரை யன்று.

*ஈலாவையும், ளி'ஹாரையும் இஸ்லாம் ரத்'து' செய்து விட்டது.*

"ஈலா(வ்)", "ளி'ஹார்" என்பன இஸ்லாத்துக்கு முன்னே அந்த அரபிகளிடத்துக் காணப் பட்டு வந்த இரு பெருங் கொடிய பழக்கங்களா யிருந்து வந்தன; இத் தீய பழக்கங்களால் ஒரு மனைவி அநேக சமயங்களில் ஆயுள் முழுதுமே "திரிசங்கில்" இருக்குமாறு செய்யப்பட்டு விடுவாள். ஈலா(வ்) (அசலில் "சத்தியம் செய்தல்" என்று பொருள்படும்) என்பது, ஒரு கணவன் தன் மனைவியை நெருங்குவ தில்லை யென்று சத்தியம் செய்து கொள்வதா யிருந்தது. இஸ்லாம் வருமுன்னே அவ் வஞ்ஞானகால அரபிகள் அவ்வாறு அடிக்கடி சத்தியம் செய்து கொள்வார்கள்; இதற்கொரு கால எல்லை யென்பது இல்லாமலே இருந்தமையால், அந்த "ஈலாவில்" சிக்கிய மனைவியர் தமதாயுள் முழுதுமே திரிசங்கு சுவர்க்கத்திலே தொங்கி ஊசலாட வேண்டியவர்களா யிருந்துவருந்துவார்கள். இப்படிப்பட்ட திரிசங்கு ஸ்திரீகள் தங்கணவரிடத்து மனைவியராகவும் வாழ்வது முடியாது; :தலா:க் பெற்ற

மங்கையரைப் போல் மறுமணம் புரிந்து கொள்ளவும் சுயேச்சை பெறுமலே "இருந்து மங்கி எல்லையிலே (சாவாமற்) சாவார்கள்." இத் தீய ஈலா(வ்) பழக்கம் இஸ்லாத்தினுல் அகற்றப்பட்டுவிட்டது; ஈலா(வ்) கூறிய கணவன் 4 மாதங்களுக்குள்ளே தன்மனைவியை மன்னித்துத் தன் பள்ளியறையுள்ளே அன்புடன் அழைத்துக் கொள்ளல் வேண்டும்; இன்றேல், அவளுக்குத் 'தலா:க் அளித்து விலக்கிவிடக் கட்டுப்பட்டுள்ளான்: "தங்கள் மனைவியரிடத்து நெருங்குவதில்லை யென்று சத்தியம் செய்துகொள்ளும் மனிதர்கள் விஷயத்தில், (அம் மனைவியர்) காத்திருக்கவேண்டிய காலம் நான்கு மாதங்களாகும்; அப்பா லவர்கள் (தங்கள் மனைவியரிடத்தே) மீள்வார்க ளாயின், நிச்சயமாக ஆண்டவன் மன்னிப்பவனுக, கருணை மிக்கவனுக இருப்பான். இன்னம் அன்னவர்கள் 'தலா:க் கொடுப்பதெனத் தீர்மானிப்ப ராயின், அதுகாலை ஆண்டவன் நிச்சயமாகக் கேட்பவனுக, அறிந்தவனுக இருக்கிருன்" (2:226, 227). இவ்வாறு கூறிக் :குர்ஆனெகரீம் ஈலா(வ்) பழக்கத்தை இல்லா தொழித்துச் சீர்திருத்தி விட்டது.

**ளி'ஹார்** என்பது **ள'ஹர்** (முதுகு) என்பதிலிருந்து தோன்றி யிருக்கிறது. பண்டைய நாட்களில் அரபிகள் தங்கள் மனைவியரைப் பார்த்து, **"அன்'தி அ'லய்ய க ள'ஹ்ரி உம்மீ"**—"நீ என்முன் என் மாதாவின் முதுகு போலே யிருக்கிருய்," என்று கூறுவார்கள். இப்பழக்கம் அக்காலத்தில் **ளி'ஹார்** என்று இயம்பப்பட்டு வந்தது. இந்த"ளி'ஹார்" உச்சரிக்கப்பட்ட வுடனே அந்த மனைவி 'தலா:க் சொல்லப்பெற்ற பெண்பிள்ளையேபோல மூலையில் போய்க் குந்தி விடுவாள். அவள் தன் கணவன் இல்லத்தை விட்டு வெளியில் சென்றுவிட அனுமதிக்கப்பட மாட்டாள்; அவ் வீட்டுக்குள்ளே கிடந்து, ஒதுக்கப்பட்டவளே போல் மங்க வேண்டியவளே யாவாள். அவ்ஸ் இப்'னு ஸாமித் தென்னும் முஸ்லிம் தம் மனைவி க'வ்லாவுக்கு ளி'ஹார் சொல்லிவிட்டார். அதனுல் வேதனைப்பட்ட அம் மனைவி நபிபெருமானிடம் வந்து, தன் கணவன் இழைத்துவந்த கொடுமைகளைக் குறித்துக் குறை கூறினுள். அது செவியேற்று, நபிகணுயகர் (சல்) தங்களா லொன்றும் அதிலே அதுகாலைத் தலையிட முடியாதென்று கூறிவிட்டார்கள்;

அதுகேட்டு, க'வ்லா மிகவும் ஏமாற்ற முற்றவளாய்த் திரும்பிச் சென்ருள். அப்பால் அல்லாஹுத் தஆ'லா இவ்வாறு அறிவித்து வைத்தான்: "தன் கணவனைக் குறித்து உம்மிடத்தே குறைகூறி, கடவுளிடத்தும் குறை கூறுகிறவளது குறை முறையை உண்மையிலே ஆண்டவன் அறிந்துளான்; இன்னம், அவ் வாண்டவனே அறிந்துளான் உங்களிருவரின் வாத பிரதிவாதங்களையும்; நிச்சயமாக, அல்லா(ஹ்) கேட்கிறவனுகை, பார்க்கிறவனுகை இருக்கிருன். உங்களுள்ளே, தங்கள் மனைவிமார்களைத் தங்களுடைய தாய்மார்களின் முதுகுகளுக்கு நிகராக்கி வைப்பது கொண்டு அவர்களை விலக்கி வைப்பவர்கள் குறித் தென்ருலோ, அவர்கள்— (அம்மனைவியர்) அவர்களுடைய (அக் கணவர்களுடைய) தாய்மார்களா யில்லை; அவர்களை ஈன்றெடுத்தவர்களை யன்றி, ஏனையெவர்களும் அவர்களுடைய மாதாக்களாகார்கள்; மேலும், நிச்சயமாயே, அன்னவர்கள் வெறுக்கத்தக்க வார்த்தையையும், பொய்யையுமே செப்புகிருர்கள்" (:குர்ஆன். 58 : 1, 2). இவ்வாறு ளி'ஹார் சொல்லுகிறவன் ஓரடிமையை விடுதலை செய்தல் வேண்டும். அவ்வாறு உரிமைவிட முடியவில்லை யாயின், இரு மாதங்களுக்குத் தொடர்ச்சியாய் நோன்பு நோற்றல் வேண்டும். இதுவும் இயலவில்லை யாயின், 60 ஏழைகளுக்கு அன்னமளித்திடல் வேண்டும்— (58 : 3, 4).

புருஷனே பெண்ஜாதியின் வியபிசாரத்தை நேரிலே காணுங்கால்.

**லிஆ'ன்** என்னுஞ் சொல் **லஃ'ணத்** (சாபம்) என்பதிலிருந்து தோன்றியிருக்கிறது; எனவே, **லிஆ'ன்** அல்லது **முல்ஆ'ஞ** என்பது, அசலிலே "பரஸ்பரமாய்ச் சபித்தல்" என்று கருத்துக் கொள்ளும். இஸ்லாமிய சட்ட கலையில் இவை ஒருவித தம்பதி பிரிவினையைக் குறித்துக் காட்டக் கூடியனவா யிருக்கின்றன. இத்தகைய கேஸில், கணவன் தன் மனைவியின்மீது வியபிசாரக் குற்றத்தைச் சுமத்துகிருன்; அதற்கு வேறு சாக்ஷியத்தை அவனுல் கொண்டுவர இயல்வ தில்லை. ஆனுல், அவன் மனைவியோ, அக் குற்றச்சாட்டை மறுக்கிருள். 'ஜிஞ (வியபிசாரம்) என்பது மக்கள் சமுதாயத்தின் அடிப்படையையே கல்லியெறியக் கூடிய தீச்செயலாயிருத்தலின், அக் குற்றம் மிகக்கடினமாய்த் தண்டிக்கப்

பட வேண்டுவதா யிருக்கின்றது. :குர்ஆன் ஷரீ‘ப் ‘ஜினுவுக்குச் சிக்ஷையளிப்பதே போலத்தான், ‘ஜினு வென்னுங் கேஸைக் கொணர்ந்து, அதற்கு வேண்டிய சரியான சாக்ஷியத்தை ஆ‘ஜிர் செய்யத் தவறிவிடுகிற வருக்கும் சிக்ஷையளிக்கச் சொல்லுகிறது. இது, சமுதாயத் தில் வீண் அவதூறு பரவுவதைத் தடுக்கவே அவசியமா யிருக்கிறது. வீணான— பொய்யான— அவதூறு தடுத்து நிறுத்தப்படா விடின், ஒரு குற்றமுமற்ற நல்ல மனிதர் களின் குடும்பவிவகாரமும் அம்பலத்துக்கு வந்து, ஊரார் சிரிப்புக்கு இலக்காகிவிடும்; ஒருவனது “குடும்ப ஜோலி” யில் இனியொருவன் துருவித் தலையிடுவது சமுதாய நன்மைக்கு அழகன்று. ஆனால், ஒரு மனிதன் தன் மனைவி செய்த ‘ஜினுவை நேரிலே கண்டுவிடுவது வேறு விஷயம்; நேரிலே காணாவிடினும், பலமான சாக்ஷ்யத்தைக் கொண்டு அவளது ‘ஜினுவை நம்பவேண்டியவனாய் விடுகிறான். இத்தகைய வியாஜ்யத்தில் அந்தக் கணவனை யும் மனைவியையும் பிரித்துவிட **லிஆ’ன்** கொணரப்படு கிறது. இதில் கணவன் கொண்டு வந்த கேஸ் மெய்யே யாயினும், பொய்யேயாயினும், ஒருமுறை அவன் அவள் மீது வியபிசாரக் குற்றத்தைக் கொண்டு வந்து சுமத்தி விட்டமையால், இனிமேல் இருவரையும் பிரித்துவிடுவதே அத் தம்பதிகள் இரண்டு பேருக்கும் நன்மையா யிருக்கும். இதற்குரிய :குர்ஆன் திருவாக்கியம் இதுவா யிருக்கிறது: “இன்னம், தங்கள் மனைவியர்மீது (‘ஜினுக்) குற்றஞ் சுமத்தி, தங்களைத் தவிர்த்து வேறு சாக்ஷிகளைக் கொண்டு வர முடியாதவர்கள் குறித்தென்றாலோ, அவர்களி லொரு வனது சாக்ஷியம் தான் மெய் கூறுகிறவர்களுள்ளே ஒருவ னென்று சத்தியம் செய்கிற நிலையிலே நான்கு முறை எடுக்கப்படல் வேண்டும்; இன்னம், ஐந்தா முறையிலே, அல்லா(ஹ்)வின் சாபம், தான் பொய் கூறுகிறவர்க ளுள்ளே ஒருவனாயிருந்தால், தன்மீது இறங்கக்கடவதென்று (அவன் சொல்லவேண்டும்). இன்னம், அன்னவன் பொய்யர்களிலே ஒருவனென்று ஆண்டவன்மீது சத்தியம் செய்து அவள் நான்கு முறை சாக்ஷியம் கூறிவிடுவ ளாயின், அஃது அவளை விட்டுச் சிக்ஷையை விலக்கி வைத்துவிடும்; இன்னம், ஐந்தா முறையிலே, அவன் மெய் கூறுகிறவர் களுள்ளே ஒருவனா யிருந்தால், ஆண்டவன் சாபம் தன் மீது இறங்கக்கடவதென்று (அவள் சொல்ல வேண்டும்)”

(:குர். 24 : 6—9). இவ்வாறு அவ்விருவரும் சத்தியம் செய்து விட்டால், அப்பால் அக்கணவனும் மனைவியும் பிரித்து விடப்பட்டு விடுவர். இதில், அவன் அவளைச் சபிப்பதோ, அவள் அவனைச் சபிப்பதோ இல்லை யென்பது தெளிவு. பரஸ்பர சாபத்திற்கு மாறாக, இந்தக் கேஸில் கணவனோ, மனைவியோ, தான் சொல்வதே மெய்யென்றும், தான் கூறுவது பொய்யாயும் எதிரி கூறுவது மெய்யாயும் இருக்குமேல், தன்மீதே அல்லா(ஹ்)வின் முனிவு இழியு மென்றும் வலுவிலே வருத்திக் கொள்வதா யிருக்கிறது.

:தலா:க்கிலே தாராளபுத்தி காட்டிடல் வேண்டும்.

கணவனேனும் மனைவியேனும் ஒழுக்கத்தில் இழுக் கில்லாது ஒழுங்குடனே நடந்துவருங்காலத்தும், காலதேச வர்த்தமானங்களும் மானிட இனத்தின் உள்ளக்கிடக்கையும் ஒரே நிலையிலே நில் லாது மாறுபட்டுவருங் காரணத்தால், மண வாழ்க்கையிலே மனமுரண் விளைந்து, அம் மணத்திற்குரிய முடிச்சு அவிழ்த்து விடப்படவேண்டிய அவசியமும் அடிக்கடி இக் குவலயத்தில் ஏற்பட்டுவருவது சகஜமாயே யிருந்துவருகிறது. மானிட வாழ்க்கையில் :தலா:க் நிகழவேண்டுவது அத்தியாவசியமே யாயினும், :குர்ஆன் மஜீத்' இந்தத் :தலா:க் விஷயத்தில் அதிக தாராள புத்தியையே காண்பித் திருக்கிறது: விவாகத் தின் காலத்தில் பெண்மணிகள்மீது எத்துணைப் பெரிய பக்ஷம் பாராட்டப்படுகிறதோ, அத்துணைப் பெரிய பக்ஷமே விவாக விமோசன காலத்திலும் பாராட்டப்பட வேண்டு மென்பது :குர்ஆனெ கரீமின் கருத்தா யிருக்கிறது. எனவேதான், அடிக்கடி :தலா:க் பெறும் பெண்களுக்குக் காண்பிக்கப்பட வேண்டிய பக்ஷங்குறித்து அத்திருமறை அழுத்தி யழுத்திக் கூறிக்கொண் டிருக்கிறது: "தலா:க் இருமுறை கூறப்படலாம்; அப்பால் அவர்களை நல்ல ஞேயத்திலே வைத்துக் கொள்ளுங்கள்; அல்லது பக்ஷத் துடனே (இ'ஹ்ஸானுடனே) அவர்களைப் போக விட்டு விடுங்கள்" (2 : 229). "இன்னம், நீங்கள் பெண்டு களுக்குத் :தலா:க் சொல்லி, அவர்களும் தங்களுக்குரிய குறிப்பிட்ட கால எல்லையை எட்டிவிடுங்கால், அப்பால் நீங்கள் அவர்களை நல்ல ஞேயத்திலே நிறுத்தி வைத்துக் கொள்ளுங்கள்; அல்லது தாராளத்துடனே அவர்களை எதேச்சையாய் விட்டுவிடக் கடவீர்கள்"

(2 : 231). " ஆகவே, அவர்கள் தங்களுக்குரிய குறிப்பிட்ட கால எல்லையை எட்டி விடுங்கால், அப்பால் நீங்கள் அவர்களைப் பக்ஷத்துடனே நிறுத்தி வைத்துக் கொள்ளுங்கள்; அல்லது பக்ஷத்துடனே அவர்களைப் பிரித்துவிடக் கடவீர்கள் " (65 : 2).

எனவே, மனைவி தன் கணவனுடனே சகலவித சுகதுக்கங்களிலும் பங்கெடுத்து இல்லக்கிழத்தியா யிருப்பினும், அல்லது அவனிடத்திருந்து அவசியத்தி னிமித்தம் பிரிந்து செல்வதா யிருப்பினும், எப்பொழுதுமே அன்னைப் பெரும் பக்ஷத்துடனும் தாராள மனசுடனுமேதான் நடத்துதல் வேண்டும். 'தலா:க் சொல்லிய ஸ்திரீகளை எக்காரணங் கொண்டும் இன்னல்களுக்கும் இடையூறுகளுக்கும் ஆளாக்கி இம்சைக்குள் ளாக்குவது கூடாது; கூடாது. என்னெனின், கணவன் மனைவியருக் கிடையே சாதாரண— ஆனல், உண்மையான— அபிப்பிராய பேதம் உண்டாவதே போலத்தான், 'தலா:க்கிலும் அசாதாரண— ஆனல், மெய்யேயான— அபிப்பிராய பேதம் உண்டாய் விடுகிறது. இதனல் கணவன், தன் **மனைவியா யிருந்தவளைத்** 'தலா:க் கூறிய காரணத்தால் துன்புறுத்துவது தகாது. எனவேதான், எம்பெருமானர் (சல்அ'ம்) உமைமாவுக்குத் 'தலா:க் சொல்லியனுப்பிய பொழுது சம்மானங்களும் தாராளமாய்க் கொடுத்தனுப்பினர்கள்; :குர்ஆன் ஷரீ'பும் 'தலா:க் கூறிய மனைவியரிடத்துத் தாராளமாய் நடந்து கொள்ளுமாறே நமக்கெல்லாம் நல்லறிவு கொளுத்திவிட் டிருக்கிறது.

**முற்றும்**



# விஷய சூசிகை


பக்கம்

அக்பாஉக்குள்ளே திருமணத் தொடர்பு ... 77
அடிமைப் பெண்களை ஆளாக்கி விடுதல் ... 109
அத்தியாவசிய அசந்தர்ப்பங்களிலே தலாக்குக்கு அனுமதி யளிக்கப்பட்டுள்ளது ... 114
அபிப்பிராயபேதம் வந்துவிடுங்கால் இருதரப்பினரும் சரிசரியான அந்தஸ்திலே யிருக்கிருர்கள் ... 118
அலுவல்கள் வரையறுக்கப்படுவதன் நோக்கம் ... 26
ஆணுக்குப் பெண் தாழ்ந்தவ ளல்லள் ... 15
இத்தா அல்லது மூன்றுமாதத் தாமதம் ... 129
இந்தியாவின் மஹ்ர் ... 59
இருமுறை கூறப்பெறும் தலாக்கிலே ராஜிக்கு இடமிருக்கிறது ... 130
இல்லற வாழ்க்கையே இஸ்லாமிய நாகரிகத்துக்கு அடிப்படை ... 1
இஸ்லாத்திலே பெண்டுகள் எதேச்சா ஸ்திரீகளே ... 4
இஸ்லாத்தில் தலாக் சம்பந்தமாக வழக்கத்திலிருக்கும் சட்டம் திருப்திகரமா யில்லை ... 124
இஸ்லாத்தில் மனைவிக்குரிய தனித்தியங்கும் தன்மை ... 12
இஸ்லாத்தில் வெள்ளாட்டிக்கு இடமில்லை ... 94
இஸ்லாத்தின் திருமணம் மனிதனை ஒழுக்கத்தில் உயரச் செய்யும் ... 7
ஈலாவையும் ளிஹாரையும் இஸ்லாம் ரத்து செய்துவிட்டது ... 141
ஐரோப்பிய மேனாடுகளின் கற்பும், பலதார மணமும், சமூக பிரச்சினைகளும் ... 19
ஒரே சத்தான ஈரியற்கைகள் ஒன்றுயிணைவதே திருமணமாம் ... 30
ஒரே முறையிலே மூன்று தலாக் கூறுவது குர்ஆனுக்கே முரணாகும் ... 133
ஒழுக்கவீனம் தடியப்படல் வேண்டும் ... 88
கள்ளப் புணர்ச்சி ஒழிந்து, கற்புநிலை வற்புறுத்தப்பட்டது 92
தலாக்கிலே தாராள புத்தி காட்டிடல் வேண்டும் ... 145
தலாக்கின் தத்துவம் ... 116
தலாக்குக் கேட்க மனைவிக்குள்ள உரிமை ... 122
தலாக்கெ பித்ஈயும் தலாக்கெ ஹஸனும் குர்-ஆனுக்கு நேர் மாருனவையே ... 134
தலாக் கென்னும் விவாக விமோசனம் ... 16

| | | பக்கம் |
|---|---|---|
| தலாக் சொல்லும் விதம் | ... | 140 |
| தலாக் சொல்வதற்குள்ள கணவன துரிமை இரு நீதிபதிகளின் தீர்ப்பிற்குக் கட்டுப்பட்டுள்ளதே | ... | 125 |
| தஹ்லீல் அல்லது ஹலாலா | ... | 138 |
| தாற்காலிக திருமணம் தடுக்கப்பட்டுள்ளது | ... | 32 |
| திருமண ஒப்பந்தத்திற்கு முக்கிய அம்சங்கள் | ... | 53 |
| திருமணக் கடுத்தம் | ... | 67 |
| திருமணக் காலத்தில் விதிக்கப்படும் நிபந்தனைகள் | ... | 80 |
| திருமணத்திற்குக் கோரிக்கை | ... | 49 |
| திருமணத்திற்கு முன்னே | ... | 46 |
| திருமணத்தின் அவசியம் | ... | 28 |
| திருமணத்தின் வாயிலாய் மானிட இனப் பெருக்கம் | ... | 31 |
| திருமணப் பருவம் | ... | 50 |
| நிக்காஹில் குத்பா | ... | 62 |
| பலதார மணம் | ... | 81 |
| பலதார மணமென்பது ஒரு விலக்குவிதியே | ... | 83 |
| புருஷனே பெண்சாதியின் வியபிசாரத்தை நேரிலே காணுங்கால் | ... | 143 |
| மணமுடிக்கத் தகாத (ஹராமான)வர்கள் | ... | 39 |
| மணவினை பிரகடனப்படுத்தப் படல் | ... | 61 |
| மஹ்ர் என்னும் திருமணக் கட்டணம் | ... | 55 |
| மாதவிடாயின் காலத்திலே தலாக் கூறுவது தகாது | ... | 128 |
| மாற்ற முடியாத் தலாக்கால் விளையும் பயன் | ... | 136 |
| முடிவான தலாக் — முத்தலாக் | ... | 131 |
| முஸ்லிம் முஸ்லிம் அல்லாதார் கலப்பு மணம் | ... | 43 |
| வலீமா என்னும் திருமண விருந்து | ... | 68 |
| விவாகத்தில் கார்டியன் நுழைதல் | ... | 69 |
| ஷிகார் திருமணம் | ... | 60 |

# ஷாஜஹான் புக்டெப்போ

## 460, திருவல்லிக்கேணி ஹைரோட்,

## சென்னை–5

### நபிகள் நாயக மான்மியம் (முதற் பாகம்)

**ஹி. ஆருவதாண்டு அஹ்ஜாப் யுத்தம் முடிய**

உலகோர் போற்றும் உத்தம நபி முஹம்மத் (சல்) அவர்களின் விளக்கமான வாழ்க்கைச் சரித்திரம் முதல் பாகம் வெளி வந்து விட்டது. மௌ. ஷிப்லீ நுஃமானீ எழுதியுள்ள சீரத்துன்னபீ என்னும் பரிசு பெற்ற கிரந்தத்தின் அரிய மொழி பெயர்ப்பு. இந்த முதல் பாகத்தில் 29 அதிகாரங்கள் இருக்கின்றன. எங்கள் முன் பதிப்பில் இருந்ததைவிட 9 அதிகாரங்கள் அதிகம். கிரவுன் 1 × 4 அளவில், சுமார் 600 பக்கங்களில் நேர்த்தியான காகிதத்தில் கண்ணைப் பறிக்கும் வண்ணம் அச்சிடப்பட்டு, வனப்புடன் கூடிய பைண்டு செய்யப்பட்டது. பல வர்ணப் படங்கள் நிறைந்தது. இம்மாதிரியான அழகிய அபூர்வ நூல் தமிழில் இதுவரை வெளி வரவே இல்லை. உங்கள் தேவைக்கு உடனே எழுதுக.

விலை ரூ. 12/-. தபாற் செலவு ரூ. 1–6–0 வேறு.

### இஸ்லாம் (சித்திரப் படங்களுடன்)

**தக்க ஆதார கிரந்தங்களைக்கொண் டெழுதப்பட்டது ; படங்கள் பல நிறைந்தது ; முழுதும் திருத்திப் புதிப்பித்து விரித்தெழுதியுள்ள 9-ஆம் பதிப்பு**

ஹனபீ, ஷாபிஈ, இருதிறத்தாருக்கும் அத்தியாவசியமானது.

இது முஸ்லிம்க ளெல்லாருக்குமே அத்தியாவசியமான ஒரு மிகச் சிறந்த தமிழ்நூல். இதில் இஸ்லாத்தின் ஐந்து பர்ல்களும் (கடமைகளும்) மிகத் தெளிவாகவும் விளக்கமாகவும் புத்திக்கும் யுக்திக்கும் மிகமிகப் பொருத்தமாகவும் விவரிக்கப்பட் டிருக்கின்றன. ஒவ்வொரு கடமையின் சார்பாய தத்துவமெல்லாம் (மஸ்அலாக்களுடன்) விஸ்தரிக்கப்பட் டிருப்பதுடன், அனுஷ்டானத்திற்கு வேண்டிய விவரங்களனைத்தும் சாங்கோபாங்கமாய்க் கூறப்பட் டிருக்கின்றன. பல புதிய ஆப்டோன் படங்கள் இந்த ஒன்பதாம் பதிப்பில் சேர்க்கப்பட்டுப் பல பக்கங்கள் அதிகப்படுத்தப்பட்டு, கண் கவரும் பான்மையாய்ச் செய்யப்பட்டிருக்கிறது.

விலை ரூ. 2-8-0. தபாற் செலவு அணு 9.

## அம்மயத் ஜுஜு (30-ஆம் பாகம்)

அரபியிலேயே ஆயாத்துக்களைத் தலைப்பில் போட்டு, அதன் கீழே பெரிய எழுத்தில் அதன் அர்த்தம் மட்டும் எழுதி, அழகான கிளேஸ் பேப்பரில் அச்சிட்டிருக்கிறோம். அது பள்ளி மாணவர் களுக்குப் பெரிதும் பயன்படக் கூடியது. மேலும், அரபு ஓதத் தெரியாதவர்களின் நன்மையைக் கோரி, இறுதி 15 அத்தியாயங் களையும் எப்படி அரபில் ஓதுவதென்பது—தமிழில் உச்சரிப்பு அச்சிடப்பட்டிருப்பதைக் கண்டுகொள்வீர்கள். விலை ரூ. 1–8–0. தபாற் செலவு அணா. 7.

## அல்ஹம்துதப்ஸீர்-சூரத்துல்பாத்திஹா விரிவுரை

அல்ஹம்து சூராவுக்குத் தப்ஸீர். "அல்ஹம்துசூரா" :குர் ஆன் ஷரீபின் தோற்றுவாயேயாயினும், இதுவே அவ்வேதத்தின் முழுக்கருத்தின் சுருக்கமாக (உம்முல் :குர்ஆனாக) இருக்கிறது. எனவே, இந்த அல்ஹம்தின் முழுக்கருத்தையும் அறிந்தால், குர் ஆன் ஷரீபின் பூரா தாத்பரியத்தையும் உணர்ந்தது போலாகும். ஆகையால், குர்ஆனின் கருத்தையுணரு முன்னே அல்ஹம்தின் ஆழிய கருத்தினை அறிந்துணருதல் அவசியமேயாம். இன்னம், இச்சிறு நூலில் பல்வேறு மதங்களுக்கும் தக்க ரத்து கூறப்பட் டிருக்கிறது. அனைவரும் ஆவலுடனே அறிந்துணரல் அத்யா வசியமே. மிகத் தெளிவாய், முத்துப் போன்ற எழுத்தால், அரப் ஆயாத்தும் அர்த்தமும் "கொட்டை யெழுத்தால்" அழகிய தாளில் நேர்த்தியாய் அச்சிட்டுப் பூர்த்தியான பைண்டும் செய்யப் பட்டுள்ளது. மலிவான விலை ; தெளிவான உரை. விலை ரூ. 1-0-0.

## மஹான் முஹம்மத் நபி (சல்) இரண்டாம் பதிப்பு

நபிகள் நாயகம் முஹம்மத் நபி (சல் அம்) அவர்களின் (சரித் திர) சம்பந்தமான பூர்விகமானதும் சரியானதும் உண்மையானது மான சரித்திரம் சுருக்கமாகவும் விளக்கமாகவும் விரிவாகவும் வரையப்பட்டுள்ள அழகிய நூல். இவ்விரண்டாம் பதிப்பில் பல தலைவர்களின் அபிப்பிராயங்கள் சேர்க்கப்புட்டு விரிக்கப்பட்டிருக் கின்றன. நேர்த்தியான அச்சு. கிளேஸ் காகிதம். விலை ரூ. 1-12-0.

## அபூபக்ர் சித்தீக் (ரலி) இரண்டாம் பதிப்பு

குலபாயெ ராஷிதீன் என்றழைக்கப்படும் முதல் நான்கு கலீபாக்களுள் முதல்வராய் விளங்கிவரும் ஹஜ்ரத் அபூபக்ர் சித்தீக் அவர்களுடைய ஜீவிய சரித்திரம் தக்க ஆதாரங்களுடன் மிக்க விளக்கமாகவும் விரிவாகவும் எழுதப்பட்டிருக்கிறது. நபிகள் நாயகத்தின் சரித்திரத்துக்குப் பின் இதுதான் தொடர்ச்சியான இஸ்லாமிய சரித்திரமாகும். திக் கிளேஸ் காகிதம். விலை ரூ. 2-0-0.

## உமரே பாரூக் (ரலி) இரண்டாம் பதிப்பு

குலபாயெ ராஷிதீன் என்றழைக்கப்படும் முதல் நான்கு கலீபாக்களுள் இரண்டாவதாய் விளங்கிவரும் ஹஜ்ரத் உமரே பாரூக் அவர்களுடைய ஜீவிய சரித்திரம் தக்க ஆதாரங்களுடன் மிக்க விளக்கமாக எழுதப்பட்டிருக்கின்றது. நல்ல முத்துப் போன்ற எழுத்தில் 253 பக்கம் ; நல்ல திக் காகிதத்தில் மிக்க அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. விலை ரூ. 2-4-0.

## உதுமான்(ரலி) அலீ(ரலி) சரிதை

குலபாயெ ராஷிதீன் என்றழைக்கப்படும் முதல் நான்கு கலீபாக்களுள் மூன்ருவது நான்காவதாய் விளங்கிவரும் ஹஜ்ரத் உதுமான் (ரலி), அலீ(ரலி) சரிதை தக்க ஆதாரங்களுடன் மிக்க விளக்கமாக எழுதப்பட்டிருக்கிறது. காகிதப் பஞ்சம் மிக்குள்ள இக்காலத்தில் நல்ல முத்துப் போன்ற எழுத்தில் நல்ல கிளேஸ் காகிதத்தில் அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. விலை ரூ. 2-0-0.

## இஸ்லாமிய ஞானபோதம்

(அஞ்ஞானத்தைப் போக்கவல்லது)
(சுஞ்ஞானத்தைத் தரவல்லது)

[மதங்களின் பெரும் மகாநாட்டில் முதற்பரிசு பெற்ற புத்தகம்]

மேனாடுகளில் இஸ்லாத்தின் போதனைகள் தீவிரமாய்ப் பரவுவதற்கு இப்புத்தகத்திலுள்ள விஷய ஞானங்களே உதவியளித்திருக்கின்றன வென்பதில் சிறிதும் ஐயமில்லை. இந்நூலின் கண்ணே இஸ்லாத்தின் பல்வேறு உண்மைத் தத்துவச் சிறப்புக்கள் தூய்மையாக விளக்கப்பட் டிருப்பதுடன், சிருஷ்டி கர்த்தா ஒருவன் இருக்கிருனென்று இதில் மெய்யாக ருஜுப்பிக்கப்பட்டுள்ளது. ஆஸ்திகரா யிருப்பவருக்கும், கடவுளே இல்லையென்று கூறிக்கொண்டு நாஸ்திகராய்த் திரிபவருக்கும், ஒவ்வொரு முஸ்லிம் ஹிந்து கிறிஸ்தவருக்கும் இந்நூல் பகுத்தறிவுக்கொத்த நன்னூலாகும். விலை ரூ. 4-0-0.

## நாயகத்தின் நற்குணங்கள்

நபிகள் திலகத்தின் குணாதிசயங்களும் நன்னடக்கைகளும் இப்படி இருந்தனவென்று அறிந்துகொள்ள இஃதொரு முதன்மையான நூல். இதனை எல்லா முஸ்லிம்களும் வாசித்தறிதல் வேண்டும். அப்பெருமானாரைப் பின்பற்றி யொழுக விரும்பும் சன்மார்க்கர்களுக் கெல்லாம் அத்தியாவசியமானது. இந்நூல் எம்பெருமானாரை உள்ளபடியே உணர்ந்துகொள்ள விழையும் ஒவ்வோர் ஏனை மதத்தினருக்கும் அத்தியாவசியமானதாகும். இதன் விலை ரூ. 1-8-0.

## நாயக வாக்கியம் 451 (புதிய பதிப்பு)

நபிகள் நாயகம்(சல்) அவர்கள் மனிதகோடிகளின் நன்மையைக் கோரித் திருவாய்மலர்ந்தருளிய 451 திருவாக்கியங்களும் (ஹதீது ஷரீபுகளும்) அச்சிடப்பட் டிருக்கின்றன. இவ்வாக்கியங்கள் சிறந்த சன்மார்க்கத்தைப் போதிக்கக் கூடியவைகள். இப் புத்தகத்தைப் படிப்பதனுல் சகல முஸ்லிம்களும் நாயகமவர்களின் திருவாக்கியங்களின் உண்மைக் கருத்துக்களை அறிந்து அவற்றின் படி நபிகள் நாயகத்தைப் பின்பற்றி நடத்தற்கேது உண்டாகும். சஹீஹ் புகாரீ என்னும் கிரந்தத்தில் காணப்படும் ஹதீதுகளெல்லாம் வியாக்யானங்களுடன் விரிவாக வெளியிடப்பட்டுள்ளவை. ஆனுல், இந்நூலில் காணப்படும் 451 ஹதீதுகளும் பிழிந்தெடுக்கப்பட்ட அமுதம் போன்ற சாராம்சமாகும். ரசூலுல்லாவின் திருவாயினின்று உதிர்ந்த முத்துக்களின் கோவையாகிய இச் சிறு நூல் அவசியம் ஒவ்வொரு முஸ்லிம் ஆண் பெண் கரத்திலும் எப்போதும் இருக்கவேண்டும். இப்புத்தகம் சட்டைப் பைக்குள் அடங்கும் விதமாக அச்சிடப்பட்டிருக்கிறது. விலை ரூ. 1-8-0.

## குத்பா பிரசங்கம்

(ஜுமுஆவில் ஓதக்கூடியது)

நெடுநாட்களாக, நாமே இத்தகைய குத்பாக் கி(த்)தாபொன்றைத் தாய்மொழியில் எழுதி வெளிப்படுத்த வேண்டு மென்று நம்முடைய நண்பர்கள் பலரும் கேட்டுக்கொண்டதி னிமித்தம் எமது குர்ஆன் மொழிபெயர்ப்பு வேலைக்கிடையில் இதனையும் அதிக சிரமத்துடன் வெளியிடலாயிற்று. குத்பாவில் எங்கெங்கெல்லாம் அரபு இருக்க வேண்டுமோ, அங்கங்கெல்லாம் அரபு மேற்கோள்களுடன் மிக்க நல்லமாதிரியாய்த் தையார் செய்யப்பட் டிருக்கிறது. இதில் வருஷ முழுமைக்கு முள்ள 52 ஜுமுஆ குத்பாக்களும், இரண்டு பெருநாளுக்கு 2 ஈது குத்பாக்களும் இரண்டாவது குத்பா 1-ம், நபிகள் நாயகம் குபாயில் செய்த முதல் குத்பாவும் சேர்ந்து, மொத்தம் 56 குத்பாக்கள் இதில் வெளியாகியுள்ளன. ஒவ்வொரு குத்பாவுக்கும் முகவுரையும் முடிவுரையும் (ஹம்தும் ஸலவாத்தும்) அரபே ; ஜுமுஆ, ஈதின் இரண்டாவது குத்பா முழுதும் அரபே.

இந்நூலை ஒவ்வொரு பள்ளியிலும் ஓத ஒவ்வொரு கிராமத் தலைவரும் முயற்சிப்பார்களாக. இப்பொழுது பல பள்ளிவாயில்களில் இந்நூலையே படித்துப் பிரசங்கம் புரிந்து வருகிருர்கள். திக் கிளேஸ் காகிதத்தில் 355 பக்கங்களில் அச்சிடப்பட்டு அழகிய பைண்டுடன் ஆர்ட்ஜாக்கெட் போர்த்தப்பட்டது.

விலை ரூ. 2-12-0. தபாற் செலவு அணு 9.

விரிவான கேட்லாக் வேண்டுவோர் எழுதினுல்,
இனமாக அனுப்பபட்டும்.